வெளியீடு 14-5-1988 Issued 14-5-1988

2984

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

529/AL/88

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 30, 1987-தொகுதி 42-எண் 1
Thursday, the 30th April 1987 Volume 42-No 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009**

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

2984

T.N.L.A. Debates

Official Report

Vol 42 NO 1

30th April 1987

D 1
V211,31 N87
N87.42
'36529

N87.42.1
N87.42.1

தமிழ்நாடு ஆவணக்காப்பக நிலையம்
136529
சென்னை-600 008.

உள்ளடக்கம்.

30—4—1987.


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் (Personnel of the Government of Tamil Nadu) | i—iii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | v—viii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி). .. .. .. | ix—xvii |
| 1 வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிடாத வினாக்கள் .. .. .. | 1—32 |
| 2 அரசினர் தீர்மானம்:— | |
| பேரவை அலுவலில் மாற்றம் | 33 |
| 3 அறிவிப்பு — | |
| அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல். | 33—34 |
| 4 வரவு-செலவுத் திட்டம், 1987–88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி.) | 43—176 |
| (அ) கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகம். | |
| (ஆ) கோரிக்கை எண் 25—சின்கோனா .. .. | |
| (இ) கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை .. | |
| (ஈ) கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல். | |
| (உ) கோரிக்கை எண் 56—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. | |
| மாண்புமிகு திரு. வி. வீரசுவாமிநாதன் .. | 34, 35, 36 37, 38, 157—174 |
| திரு. ஆர். தியாகராசன் .. .. .. | 38—50 |

2984


| | பக்கங்கள் |
|---|---|
| திரு. எஸ். பாலசுப்பிரமணியன் .. .. | 50—57 |
| திரு. எஸ். ரெத்தினராஜ் .. .. .. | 57—66 |
| *திரு. சோ. கலிதீர்த்தான் .. .. .. | 66—73 |
| திரு. எம். செல்லமுத்து .. .. .. | 73—81 |
| *திரு. வை. பாலசந்திரன் .. .. .. | 81—92 |
| திரு. எம். இராசரத்தினம் .. .. .. | 92—98 |
| *திரு. எஸ். பி. மணவாளன் .. .. .. | 99—104 |
| திரு. ச. சங்கரலிங்கம் .. .. .. .. | 104—108 |
| *திரு. பொ. உத்திராபதி .. .. | 108—118 |
| *திரு. சா. ஞானசுந்தரம் .. .. .. | 118—123 |
| திரு. ந. சிவஞானம் .. .. .. .. | 124—129 |
| திரு. சி. சுப்புராயர் .. .. .. .. | 129—133 |
| *திரு. இரா. சண்முகம் .. .. .. .. | 133—138 |
| திரு. கே. உச்சி .. .. .. .. | 138—141 |
| திரு. ஏ. தங்கராசு .. .. .. .. .. | 141—144 |
| திரு. எச். ஜி. ஆறுமுகம் .. .. .. | 144—147 |
| திரு. க. பாரமலை .. .. .. .. | 147—157 |
| 5 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 177—178 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் : திரு. சுந்தர் லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர். .. | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன். |
| 2. நிதி அமைச்சர். .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். |
| 3. உணவு அமைச்சர். | மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். |
| 4. தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. க. இராசாராம். |
| 5. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம். |
| 6. கல்வி மற்றும் சட்ட அமைச்சர். | மாண்புமிகு திரு. சி. பொன்னையன். |
| 7. போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. |
| 8. வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. |
| 9. சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீன்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். |
| 10. மதிய உணவு, சமூக நலம் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன். |
| 11. வணிக வரித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. த. இராமசாமி. |
| 12. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எ. அருணாசலம். |
| 13. பொதுப்பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன். |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR: THIRU SUNDAR LAL KHURANA

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. The Chief Minister. .. | Hon. Dr. M. G. Ramachandran. |
| 2. The Minister for Finance. | Hon. Dr. V. R. Nedunchezhian. |
| 3. The Minister for Food. | Hon. Thiru S. Ramachandran. |
| 4. The Minister for Industries and Agriculture. | Hon. Thiru K. Rajaram. |
| 5. The Minister for Health, | Hon. Thiru P. U. Shanmugam. |
| 6. The Minister for Education and Law. | Hon. Thiru C. Ponnaiyan. |
| 7. The Minister for Transport. | Hon. Thiru S. Muthusamy. |
| 8. The Minister for Housing and Handlooms. | Hon. Thiru S. Thirunavukkarasu. |
| 9. The Minister for Tourism, Prohibition and Electricity. | Hon. Thiru V. V. Swaminathan. |
| 10. The Minister for Noon Meal, Social Welfare and Khadi. | Hon. Thiru R. Soundararajan. |
| 11. The Minister for Commercial Taxes. | Hon. Thiru T. Ramasamy. |
| 12. The Minister for Adi Dravidar Welfare. | Hon. Thiru A. Arunachalam. |
| 13. The Minister for Public Works. | Hon. Thiru K. K. S. S. R. Ramachandran. |

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

**(அகர வரிசைப்படி)**

| | |
|---|---|
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ., பி.ஏ., பி.எல். | கூடுதல் செயலாளர் |
| பத்மநாப நம்பியார், திரு. பி.எம்., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்.ஸி. | முதுநிலை குழு அலுவலர் |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜானகிராமன், திரு. செ. சு. பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| சீனிவாசன், திரு. கு. அ., பி.ஏ., .. | குழு அலுவலர் |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கனகசபாபதி, திரு. பெ.ச., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| கேசவராம், திரு. பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| பாலகிருஷ்ணன், திரு. ப., பி.காம். | சார்புச் செயலாளர் |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| ஜான், திரு. வ.சா., பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| ஜோசப், திரு. மா.கு., பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. சின்னராசு

டாக்டர் கே. சமரசம்

திரு. கே. குப்புசாமி

திரு. செ. செம்மலை

திரு. டி. ஆர். வேங்கடரமணன்

செயலாளர்

திரு. இ. கு. இராமசாமி

| | | |
|---|---|---|
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. | .. | தலைமை நிருபர் (குழுக்கள்). |
| நம்பி ஐயங்கார், திரு. எஸ். | .. | தலைமை நிருபர் (பேரவை) |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| **அ** | | |
| 1. அண்ணாதாசன், திரு. எம். | | திருவரம்பூர் |
| 2. அப்துல் சமத், திரு. ஆ.கா.அ. | | திருவல்லிக்கேணி |
| 3. அப்துல் மஜீத், திரு. எச். | | வாணியம்பாடி |
| 4. அரங்கநாயகம், திரு. செ. | | தொண்டாமுத்தூர் |
| 5. அரிக்குமார், திரு. இரா. | | பெரணமல்லூர் |
| 6. அருணாசலம், திரு. இரா. | | நாமக்கல் (செ.வ.) |
| 7. அருணாசலம், திரு. எ. | | வரகூர் (செ.வ.) |
| 8. அன்பழகன், திரு. கே. | | ஓமலூர் |
| 9. அன்பழகன், திரு. தி. | | ட்ராம்பள்ளி |
| 10. அன்பழகன், திரு. பொ. | .. | ளயான்குடி |
| **ஆ** | | |
| 11. ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி, திரு. | | ஆண்டிமடம் |
| 13. ஆறுமுகம், திரு. அ. | .. | வந்தவாசி |
| 14. ஆறுமுகம், திரு. எச்.ஜி. | .. | பென்னாகரம் |
| 15. ஆறுமுகம், திரு. ஆர்.எஸ். | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ. |
| 16. ஆறுமுகம், திரு. எ.எஸ்.ஏ. | .. | விருதுநகர் |
| 17. ஆறுமுகம், திரு. மு. | .. | சேலம்-2 |
| 18. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | .. | பூந்தமல்லி |
| 19. ஆனந்தன், திரு. மு. | .. | உளுந்தூர்பேட்டை |
| **இ** | | |
| 20. இரகுபதி, திரு. கோ. | .. | காட்பாடி |
| 21. இரத்தினம், திரு. எம்.வி. | .. | பொள்ளாச்சி |
| 22. இரத்தினவேலு, திரு. செ. | .. | முசிறி |
| 23. இராசமாணிக்கம், திரு. ஆர். | .. | அரூர் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி யின் பெயர் (2) |
|---|---|
| **இ—தொடர்ச்சி.** | |
| 24. இராசமாணிக்கம், திரு. எல்ல... | தாம்பரம் |
| 25. இராசரத்தினம், திரு. எப்.எம். | கொளச்சல் |
| 26. இராசரத்தினம், திரு. எம். .. | விழுப்புரம் |
| 27. இராசாங்கம், திரு. மு. .. | திருவிடைமருதூர் |
| 28. இராசாம்பாள், திருமதி. த. .. | தலைவாசல் (செ.வ.) |
| 29. இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 30. இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம் |
| 31. இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி |
| 32. இராமச்சந்திரன், டாக்டர் எம்.ஜி. | ஆண்டிப்பட்டி |
| 33. இராமச்சந்திரன், திரு. கே.எஸ்.எம். .. | போடிநாயக்கனூர் |
| 34. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. | சாத்தூர் |
| 35. இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி |
| 36. இராமச்சந்திரன், திரு. சோ.மா. | அண்ணா நகர் |
| 37. இராமச்சந்திரன். திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 38. இராமசாமி, திரு. எஸ்.என். .. | சாத்தான்குளம் |
| 39. இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம் |
| 40. இராமலிங்கம், டாக்டர் கே.பி. | ராசிபுரம் |
| 41. இளங்கோவன், திரு.ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம் |
| **ஈ** | |
| 42. ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| **உ** | |
| 43. உச்சி, திரு. கே. .. | கூடலூர் |
| 44. உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| **எ** | |
| 45. எத்திராசன், திரு. கி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **க** | |
| 46. கணபதி, திரு. கே.ஆர். .. | சிதம்பரம் |
| 47. கதிர்வேலு, திரு. மா. .. | ராணிப்பேட்டை |
| 48. கந்தசாமி, திரு. கா.வே. .. | கிணத்துக்கடவு |
| 49. கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர் |
| 50. கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம் |
| 51. கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 52. காளிமுத்து, டாக்டர் கா. .. | மதுரை கிழக்கு |
| 53. கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. .. | ஆயிரம் விளக்கு |
| 54. கிருஷ்ணசாமி, திரு. வி. இரா... | அணைக்கட்டு |
| 55. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. .. | கும்பகோணம் |
| 56. கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1 |
| 57. குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம் |
| 58. குப்புசாமி, திரு. வே. .. | செய்யாறு |
| 59. குமரகுருபர ராமநாதன், திரு. ச. | விளாத்திகுளம் |
| 60. குமரி அனந்தன், திரு. .. | ராதாபுரம் |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. .. | கிள்ளியூர் |
| 62. கோமதி சீனிவாசன், திருமதி .. | வலங்கைமான் (செ.வ.) |
| 63. கோவிந்தசாமி, திரு. ஆர். .. | குடியாத்தம் |
| 64. கோவிந்தசாமி, திரு. ச. .. | எடப்பாடி |
| 65. கோவேந்தன், திரு. எம்.ஆர். .. | பேராவூரணி |
| **ச** | |
| 66. சங்கரலிங்கம், திரு. ச. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 67. சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |
| 68. சண்முகம், திரு. என். .. | சோளிங்கர் |
| 69. சண்முகம், திரு. ப.உ. .. | மேல்மலையனூர் |
| 70. சண்முகையா பாண்டியன், திரு. எம். | ஆலங்குளம் |
| 71. சந்திரசேகரன், திரு. ஆ. .. | சோழவந்தான் |
| 72. சந்திரசேகர், திரு. மு. .. | முகையூர் |
| 73. சம்சுல் ஆலம், திரு. வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை |
| 74. சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டினம் |
| 75. சரோஜா, திருமதி இரா. .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| 76. சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ.வ.) |
| 77. சித்தன், திரு. என்.எஸ்.வி. .. | திருமங்கலம் |
| 78. சிந்தன், திரு. வி. பி. .. | வில்லிவாக்கம் |
| 79. சிவக்குமார், திரு. ஆர். .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 80. சிவக்குமார், திரு. எம். .. | சூலூர் (செ.வ.) |
| 81. சிவஞானம், திரு. ந. .. | திருவோணம் |
| 82. சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 83. சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம் |
| 84. சிவராஜ், திரு. சு. .. | ரிஷிவந்தியம் |
| 85. சின்னக்குழந்தை, திரு. மு. .. | ஆரணி |
| 86. சின்னசாமி, திரு. வே.கு. .. | பவானிசாகர் |
| 87. சின்னராசு, திரு. க. இரா. ... | கிருஷ்ணகிரி |
| 88. சின்னராசு, திரு. மா. .. | மேட்டுப்பாளையம் |
| 89. சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு |
| 90. சுப்பராயன், திரு. கே. .. | திருப்பூர் |
| 91. சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 92. சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |
| 93. சுப்பிரமணியன், திரு. வீ. .. | கண்டமங்கலம்(செ.வ. |
| 94. சுப்புராயர், திரு. சி. .. | கம்பம் |
| 95. சுவாமிநாதன், திரு. வி.வி. .. | புவனகிரி |
| 96. செங்காளியப்பன், திரு. ஆர். .. | சிங்காநல்லூர் |
| 97. செங்கோட்டையன், திரு. கு.அ. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 98. செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை |
| 99. செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 100. செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 101. செல்லப்பா, திரு. வி.கோ. .. | கடலூர் |
| 102. சேகர், திரு. கே.பி.கே. .. | பொன்னேரி (செ.வ.) |
| 103. சொர்ணலிங்கம், திரு. கா. .. | திருவாடானை |
| 104. சோலைராசு, திரு. க. .. | மருங்காபுரி |
| 105. சௌந்திரராஜன், திரு. ஆர். .. | ஸ்ரீரங்கம் |
| 106. சௌமிராஜன், டாக்டர் கே. .. | தியாகராய நகர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **ஞ** | |
| 107. ஞானசுந்தரம், திரு. சா. .. | மன்னார்குடி |
| **ட** | |
| 108. டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம் |
| **த** | |
| 109. தங்கமணி, திரு. மு. .. | மாயூரம் |
| 110. தங்கமணி, திரு. கே.எம். .. | திண்டிவனம் |
| 111. தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி |
| 112. தங்கராசு, திரு. செ. .. | மங்களூர் (செ.வ.) |
| 113. தங்கவேல்ராஜ், திரு. பி.எம். .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 114. தங்கவேலு, திரு. வி. .. | வால்பாறை (செ.வ.) |
| 115. தமிழ்மணி, திரு. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 116. தமிழரசன், திரு. கு. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 117. தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 118. தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 119. தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம் |
| 120. திருஞானம், திரு. பி.ஆர். .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 121. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 122. திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. .. | உடுமலைப்பேட்டை |
| 123. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி... | மொரப்பூர் |
| 124. தீர்த்தராமன், திரு. ப. .. | பாலக்கோடு |
| 125. துரை அன்பரசன், திரு. .. | நெல்லிக்குப்பம் |
| 126. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. .. | தஞ்சாவூர் |
| 127. துரை கோவிந்தராசன், திரு. .. | திருவையாறு |
| 128. துரைசாமி திரு. சைதை சா. | சைதாப்பேட்டை |
| 129. துரைராசு, திரு. எஸ்.பி. .. | காரைக்குடி |
| 130. துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |
| 131. தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை சென்ட்ரல் |
| 132. தேவராஜ், திரு. வி.எம். .. | வேலூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ந | |
| 133. நடராசன், திரு. ஆ. | .. | பேரூர் |
| 134. நரசிம்ம பல்லவன், திரு. க. | .. | உத்திரமேரூர் |
| 135. நரசிம்மன், திரு. பூ.மு. | .. | பள்ளிப்பட்டு |
| 136. நல்லமுத்து, டாக்டர் க. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 137. நல்லுசாமி, திரு. என். | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 138. நாச்சிமுத்து, திரு. கே.பி. | .. | மேட்டூர் |
| 139. நாராயணன், திரு. பு.கோ. | .. | பவானி |
| 140. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | | ஆத்தூர் |
| | ப | |
| 141. பஞ்சவர்ணம், திரு. வி.எஸ். | .. | அருப்புக்கோட்டை |
| 142. பட்டாபிராமன், திரு. செ. | .. | திருவள்ளூர் |
| 143. பரமசிவம், திரு. பா.ந. | .. | பல்லடம் |
| 144. பழனி, திரு. த. | .. | ஆற்காடு |
| 145. பழனிச்சாமி, திரு. கா.செ. | .. | காங்கேயம் |
| 146. பழனிமுத்து, திரு. சி. | .. | ஆத்தூர் |
| 147. பாண்டியன், திரு. பி.எச். | .. | சேரன்மாதேவி |
| 148. பாண்டுரங்கன், திரு. மு. | .. | கலசப்பாக்கம் |
| 149. பாப்பா, சுப்பிரமணியன் திரு. | .. | குத்தாலம் |
| 150. பாரதி, திரு. ஜி.கே.ஜெ. | .. | திருவொற்றியூர் |
| 151. பாரமலை, திரு. க. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 152. பாலகிருஷ்ணன், திரு. ச. | .. | மொடக்குறிச்சி |
| 153. பாலகிருஷ்ணன், திரு. வி. | .. | சிவகாசி |
| 154. பாலச்சந்திரன், திரு. வை. | .. | பத்மநாபபுரம் |
| 155. பாலசுப்பிரமணியன், திரு. க. | .. | சீர்காழி (செ. வ.) |
| 156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | | அம்பாசமுத்திரம் |
| 157. பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி.பி. | | வேடசந்தூர் |
| 158. பாலாஜி, திரு. கே. | .. | காஞ்சிபுரம் |
| 159. பாலுச்சாமி, திரு. ஏ. | .. | பரமக்குடி (செ.வ.) |
| 160. பாலுசாமி, திரு. அ. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ப—தொடர்ச்சி. | |
| 161 பிரணவநாதன், திரு. அ. | .. | கடலாடி. |
| 162 பிரேம்குமார், திரு. ஆ. | .. | திண்டுக்கல். |
| 163 புருசோத்தமன், திரு. எஸ். | .. | அரியலூர். |
| 164 புஷ்பராசு, திரு. த. | .. | திருமயம். |
| 165 பெரியசாமி, திரு. அ. | .. | தாராபுரம் (செ.வ.). |
| 166 பெரியசாமி, திரு. ரா. | .. | தொட்டியம். |
| 167 பெருமாள், திரு. தெ. | .. | கடையநல்லூர். |
| 168 பெருமாள் பிள்ளை, திரு. கோ. | | கன்னியாகுமரி. |
| 169 பொன் முத்துராமலிங்கம், திரு. | | மதுரை (மேற்கு). |
| 170 பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | | பழனி (செ.வ.). |
| 171 பொன்னுசாமி, டாக்டர் அ. | .. | பெருந்துறை. |
| 172 பொன்னையன், திரு. சி. | .. | திருச்செங்கோடு. |
| | ம | |
| 173 மணவாளன், திரு. எஸ். பி. | | திருப்பத்தூர். |
| 174 மணிமாறன், திரு. மா. | .. | நன்னிலம் (செ.வ.). |
| 175 மலர்மன்னன், திரு. அ. | .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 176 மனோகரன், திரு. கி. | .. | புரசைவாக்கம். |
| 177 மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | .. | திருநாவலூர். |
| 178 மாசிலாமணி, டாக்டர் ந. | .. | ஜெயங்கொண்டான. |
| 179 மாதவன், திரு. செ. | .. | திருப்பத்தூர். |
| 180 மாதையன், திரு. யு. பி. | .. | அந்தியூர் (செ.வ.). |
| 181 மாரிமுத்து, திரு. த. | .. | குளத்தூர் (செ.வ.). |
| 182 மாரிமுத்து, திரு. மு. | .. | திருப்பரங்குன்றம். |
| 183 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | .. | வேதாரணியம். |
| 184 முகம்மது கனி, திரு. ஜே. | .. | புதுக்கோட்டை |
| 185 முகம்மது சலீம், டாக்டர் த. | .. | பெரியகுளம். |
| 186 முசிறிபுத்தன், திரு. பி. | .. | குளித்தலை. |
| 187 முத்துசாமி, திரு. க. | .. | ஈரோடு. |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ம—தொடர்ச்சி. | |
| 188 முத்துராமலிங்கம், திரு. பி. கே. எம். | | உசிலம்பட்டி. |
| 189 முத்துவேல், திரு. கே. | .. | முதுகுளத்தூர். |
| 190 முத்தையா, திரு. இரா. | .. | சேடப்பட்டி. |
| 191 முருகானந்தம், திரு. டி. என். | | செஞ்சி. |
| 192 முனிரத்தினம், திரு. இரா. சா. | | கும்மிடிப்பூண்டி. |
| | ய | |
| 193 யசோதா, திருமதி டி. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| | ர | |
| 194 ரகுமான்கான், திரு. அ. | .. | சேப்பாக்கம். |
| 195 ரமணி, திரு. கு. | .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 196 ரவீந்திரன், திரு. ஏ. எஸ். | .. | திருவண்ணாமலை. |
| 197 ராமஜெயம், திரு. ம. நா. | .. | வானூர் (செ.வ.). |
| 198 ராமன், திரு. கி. | .. | ராஜபாளையம் (செ.வ.). |
| 199 ராஜாபாபு, திரு. ஜெ. | .. | போளூர். |
| 200 ரெங்கசாமி, திரு. ஆர். | .. | கோவில்பட்டி. |
| 201 ரெத்தினராஜ், திரு. எஸ். | .. | நாகர்கோவில். |
| | ல | |
| 202 லட்சுமி, திருமதி. பி. | .. | அவினாசி (செ.வ.). |
| | வ | |
| 203 வடிவேல், திரு. கு. | .. | கரூர். |
| 204 வளர்மதி, திருமதி. பா. | .. | மயிலாப்பூர். |
| 205 விஜயபாலன், திரு. என். | .. | பூம்புகார். |
| 206 விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | | வீரபாண்டி. |
| 07 வீரானம்பலம், திரு. க.வெ. | .. | மேலூர். |
| 08 வீரய்யன், திரு. கோ. | .. | நாகப்பட்டினம். |
| 09 வீரப்பன், திரு. ஆர். எம். | .. | திருநெல்வேலி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | வ—தொடர்ச்சி. | |
| 210 வீராசாமி, திரு. தா. | .. | ஒரத்தநாடு. |
| 211 வெங்கடரெட்டி, திரு. ட. | .. | ஒசூர். |
| 212 வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி. |
| 213 வெங்கடாசலம், திரு. கி. | .. | லால்குடி. |
| 214 வெங்கடாசலம், திரு. டி. எம். | | பரகூர். |
| 215 வேங்கடரமணன், திரு. டி. ஆர். | | தென்காசி. |
| 216 வேணுகோபால், திரு. எஸ். | | டாக்டர் ராதாகிருஷ்ண நகர். |
| 217 வேணுகோபால், திரு. கே. வி. | | தல்லி. |
| 218 வேலு, திரு. கூடலூர் இ. வி. | | தண்டராம்பட்டு. |
| | ஜ | |
| 219 ஜகதீசன், திரு. ஆனூர் பு.கோ. | | செங்கல்பட்டு. |
| 220 ஜான் வின்செண்ட், திரு. மு. | | நாங்குநேரி. |
| 221 ஜெகதீசன், திரு. சு. | .. | அரவக்குறிச்சி. |
| 222 ஜெயச்சந்திரன், திரு. சா. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 223 ஜெயராமன், திரு. வே. இரா. | | தேனி. |
| | ஹ | |
| 224 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு. |
| 225 பிரான்சிஸ், திரு. ஜி. கே. | .. | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்.

| | | |
|---|---|---|
| திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1987, ஏப்ரல் 30, வியாழக்கிழமை.**

**சித்திரை 17, பிரபவ:—திருவள்ளுவர் ஆண்டு 2018.**

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். **பாண்டியன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*'' வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு*
*யாண்டும் இடும்பை இல.''*

*விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.*

### *1.* வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிடாத வினாக்கள்

#### பாப்பாக்குடி ஒன்றிய கிராம மக்களுக்கு மயானப் பாதை வசதி.

*1—வினா 1544*—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. **பாலசுப்பிரமணியன்** *(பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியம், குத்தப்பாஞ்சான் கிராமம், ஆள்வான் துலுக்கப்பட்டி, கோதை சேரி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர், வெங்கடாம்பட்டி, நெல்லையப்பபுரம் ஆகிய இப்பகுதிவாழ் மக்களிடமிருந்து மயானத்திற்குப் பாதை வசதி செய்துத் தரக் கோரி மனு ஏதேனும் வந்துள்ளதா?*

***(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?***

[1987 ஏப்ரல் 30

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஒன்றியம், குத்தப்பாஞ்சான் கிராமம், ஆள்வான் துலுக்கப்பட்டி, கோதைச் சேரி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர், வெங்கடாம்பட்டி, நெல்லையப்பபுரம் ஆகிய இப்பகுதிவாழ் மக்களிடமிருந்து மயானத்திற்குப் பாதை வசதி தரக்கோரி மனு ஏதும் வரவில்லை.

(ஆ) கடையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெங்கடாம்பட்டி, நெல்லையப்பபுரம், தெற்கு மடத்தூர் ஆகிய கிராமங்களுக்கு மற்ற திட்டங்கள் மூலம் வேலைகள் ஆரம்பிக்கும் போது மயான வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். குத்தப்பாஞ்சான், ஆள்வான் துலுக்கப்பட்டி ஆகிய பகுதிகளுக்கு மயானப் பாதை வசதி செய்து கொடுக்க இடவசதி இல்லை. எனவே அப்பகுதி மக்கள் போதிய நிலம் வாங்கித் தருவதாகக் கூறியுள்ளார்கள். நிலம் வாங்கித் தந்த பின்பு, மயானப் பாதை வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## தர்மபுரி மாவட்டத்தில் வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்ட ஆதி திராவிடர் அருந்ததியர்கள் எண்ணிக்கை.

2—வினா 2230—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1977 முதல் தருமபுரி மாவட்டத்தில் ஆதி திராவிடர் அருந்ததியர்களுக்கு எவ்வளவு பேருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது—தாலுக்கா வாரியாக ?

விடை—

| வரிசை எண்ணும் வட்டமும். | 1976—77. | 1977—78. | 1978—79. | 1979—80. | 1980—81. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 தருமபுரி .. .. | 198 | .. | 204 | 136 | 579 |
| 2 அரூர் .. .. | 74 | 212 | 465 | 290 | 387 |
| 3 ஊத்தங்கரை .. | 14 | 148 | 129 | 189 | .. |
| 4 பாலக்கோடு .. | 41 | 269 | .. | .. | .. |
| 5 கிருஷ்ணகிரி .. .. | 33 | 122 | 439 | 118 | 539 |
| 6 ஓசூர் .. .. | 84 | .. | 264 | 58 | .. |
| 7 தென்கனிக்கோட்டை. | 31 | 116 | .. | 61 | .. |
| 8 பென்னகரம் .. | .. | 59 | .. | .. | .. |
| மொத்தம் .. | 475 | 926 | 1,501 | 852 | 1,505 |



1987 ஏப்ரல் 30]

| வரிசை எண்ணும் வட்டமும். | 1981—82. | 1982—83. | 1983—84. | 1984—85. |
|---|---|---|---|---|
| (1) | (7) | (8) | (9) | (10) |
| 1 தருமபுரி .. .. | 373 | 453 | .. | .. |
| 2 அரூர் .. .. | .. | 293 | .. | 414 |
| 3 ஊத்தங்கரை .. | .. | .. | .. | 30 |
| 4 பாலக்கோடு .. | .. | 26 | .. | 19 |
| 5 கிருஷ்ணகிரி .. .. | 144 | 902 | .. | 84 |
| 6 ஓசூர் .. .. | .. | 165 | .. | .. |
| 7 தென்கனிக்கோட்டை. | .. | .. | 84 | .. |
| 8 பென்னாகரம் .. | .. | 64 | .. | 97 |
| மொத்தம் .. | 517 | 1,903 | 84 | 644 |

## போலி ரேஷன் கார்டுகளைத் தடுக்கும் நடவடிக்கைகள்.

3—வினா 3092—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போலி ரேஷன் கார்டுகளைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) 1983–84, 1984–85 ஆம் ஆண்டுகளில் மாவட்ட வாரியாக எத்தனை போலி ரேஷன் கார்டுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன ?

விடை—

(அ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) விவரங்கள் பின்வருமாறு—

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | நீக்கம் செய்யப்பட்ட போலி குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை. 1983-84 ஆம் ஆண்டு | 1984-85 ஆம் ஆண்டு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 சென்னை நகரம் .. .. | 40,760 | 24,290 | 65,050 |
| 2 செங்கல்பட்டு .. .. | 162 | 192 | 354 |
| 3 தென்னாற்காடு .. | 216 | 263 | 479 |
| 4 வடாற்காடு .. .. | 2,581 | 1,848 | 4,429 |
| 5 தர்மபுரி .. .. | 814 | 1,236 | 2,050 |
| 6 பெரியார் .. .. | 85 | 462 | 547 |
| 7 சேலம் .. .. .. | 568 | 583 | 1,151 |
| 8 கோயம்புத்தூர் .. .. | 2,766 | 4,666 | 7,432 |
| 9 நீலகிரி .. .. .. | 1,190 | 2,259 | 3,449 |
| 10 திருச்சிராப்பள்ளி .. | 199 | 225 | 424 |
| 11 தஞ்சாவூர் .. .. | 569 | 183 | 752 |
| 12 புதுக்கோட்டை .. | 437 | 395 | 832 |
| 13 பசும்பொன் முத்துராமலிங்கம். | .. | 31 | 31 |
| 14 இராமநாதபுரம் .. | 509 | 274 | 783 |
| 15 மதுரை .. .. | 953 | 475 | 1,428 |
| 16 அண்ணா .. .. | 229 | 241 | 470 |
| 17 காமராஜ் .. .. | 3,053 | 795 | 3,848 |
| 18 திருநெல்வேலி .. .. | 7.367 | 9,754 | 17,121 |
| 19 கன்னியாகுமரி .. .. | 751 | 2,146 | 2,897 |
| மொத்தம் .. | 63,209 | 50,318 | 1,13,527 |



## தமிழ்நாட்டிலுள்ள நூலகங்கள்.

4—வினா 3220—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் எத்தனை நூலகங்கள் உள்ளன ?

(ஆ) அவற்றில் அரசியல் கட்சிகள் சார்ந்த பத்திரிகைகள் வாங்கப்படுகின்றனவா ?

(இ) அவை யாவை ?

விடை—

(அ) 1,532 நூலகங்கள்.

(ஆ) கட்சி கண்ணோட்டமில்லாமல் பத்திரிகைகள் வாங்கப் படுகின்றன.

(இ) தமிழ் நாளிதழ்கள் :

1. அண்ணா
2. தினத்தந்தி
3. தினமலர்
4. தினமணி
5. மக்கள் குரல்
6. மாலை மலர்
7. மன்ற முரசு
8. பொன்மனம்
9. தின இதழ்
10. தினசரி

ஆங்கில நாளிதழ்கள்:

1. இந்து
2. இண்டியன் எக்ஸ்பிரஸ்
3. எக்னாமிக்ஸ் டைம்ஸ்
4. டைம்ஸ் ஆப் இந்தியா
5. பைனான்சியல் எக்ஸ்பிரஸ்
6. நேஷனல் எரால்ட்
7. நியூஸ் டுடே

[1987 ஏப்ரல் 30

### புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டம்.

5—வினா 5026—திரு. த. புஷ்பராசு ; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்க்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம் எங்கெங்கு செயல்படுத்தப்படுகின்றது ?

விடை—

(1) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டம் கீழ்க்கண்ட இடங்களில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் மூலம் செயல்படுத்தப்படுகிறது :—

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | பாப்பானவிடுதி | 40 |
| 2. | காட்டுநாவல் | 40 |
| 3. | வளவம்பட்டி | 40 |
| 4. | வயலோகம் | 35 |
| 5. | பேராம்பூர் | 12 |
| 6. | சவிநாடு | 14 |
| 7. | கண்டிச்சங்காடு | 56 |
| 8. | செங்கமேடு | 30 |
| 9. | மேலமேலநிலை | 30 |
| 10. | அத்தாணி | 36 |
| 11. | முத்துப்பட்டினம் | 10 |
| 12. | ஏனகம் | 15 |

(2) ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடுகட்டும் திட்டம் கீழ்க்கண்ட இடங்களில் புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்படுகிறது :—

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | தம்மளப்பட்டி | 20 |
| 2. | சீரணிப்பட்டி | 25 |
| 3. | மெய்யகவுண்டன்பட்டி | 20 |
| 4. | ஏதினிப்பட்டி | 20 |
| 5. | ஆரணிப்பட்டி | 25 |
| 6. | சினையப்பட்டி | 25 |
| 7. | வெள்ளகுடி | 40 |
| 8. | கண்ணனூர் | 25 |
| 9. | வேப்பம்பட்டி | 19 |
| 10. | தொண்டமாநல்லூர் | 25 |
| 11. | மருதம்பட்டி | 20 |
| 12. | சோத்துப்பாலை | 50 |
| 13. | குழந்தைவிநாயகர்கோட்டை | 45 |
| 14. | அரியாண்டி காஞ்சிராங்கொல்லை | 45 |
| 15. | கல்லுப்பட்டி | 45 |
| 16. | வெள்ளூர் | 45 |
| 17. | செவந்தகாடு | 41 |
| 18. | மாத்தூர் இராமசாமிபுரம் | 40 |





### ஒட்டப்பிடாரம் தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம்.

6—வினா 5130—திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

''நெல்லை மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியில் நடப்பு ஆண்டில் ஆதி திராவிட மக்களுக்கு எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது ?

விடை—

நெல்லை மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியில் 1985—86 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிட மக்களுக்கு கவர்னாகிரி மற்றும் சங்கரப்பேரி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த கிராமங்களில் ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலம் 54 வீடுகளும், புதூர் பாண்டியபுரம் மற்றும் வேப்பலோடை ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த கிராமங்களில் என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலம் 25 வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் பலராமப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் மூலம் 7 வீடுகள் கட்டிக் கொடுக்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 30

## அம்பாசமுத்திரம் தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டம்.

7—வினா 5669—**திரு. எஸ். பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீடுகட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) நடப்பு நிதி ஆண்டில் எத்தனை வீடுகள் எங்கெங்கு கட்ட திட்டமிடப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதியில் பின் கண்ட ஊராட்சி ஒன்றியங்களின் கிராமங்களில் என். ஆர். இ. பி. மற்றும் ஆர். எம். இ. ஜி. பி. திட்டங்களின் கீழ் 1985–86 ஆம் நிதி ஆண்டில் கீழ்க்கண்டவாறு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஒன்றியத்தின் பெயர். (1) | ஊராட்சியின் பெயர். (2) | திட்டத்தின் விவரம். (3) | வீடுகளின் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| அம்பாசமுத்திரம் | பாப்பாங்குளம் | என்.ஆர். | 7 |
| | கௌதமபுரி | இ.பி. | 10 |
| | சங்குமுத்துநகர் | | 8 |
| கடையம் | திருமலையப்பபுரம் | என்.ஆர். | 7 |
| | கீழ ஆம்பூர் | இ.பி. | 6 |
| அம்பாசமுத்திரம் | சிங்கம்பட்டி | ஆர்.எல்.இ. | 25 |
| கடையம் | அயந்தன்கட்டளை | ஜி.பி. | 25 |
| | மொத்தம் | .. | 88 |



1987 ஏப்ரல் 30]

## சென்னை பொது மருத்துவ மனையிலுள்ள ஆம்புலன்ஸ் ஊர்திகள்.

8—வினா 5779—**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பொது மருத்துவ மனைக்கு ஆம்புலன்ஸ் வண்டிகள் எத்தனை உள்ளன ?

(ஆ) புதிதாக ஆம்புலன்ஸ் வழங்கும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா ?

விடை—

(அ) மொத்தம் ஒன்பது வண்டிகள் உள்ளன.

(ஆ) இல்லை. மொத்தமுள்ள 9 ஆம்புலன்ஸ் ஊர்திகளில் 4 ஊர்திகளை பயனற்றதென ஏற்கெனவே கழிவு செய்யப்பட்டிருந்தது. அவற்றிற்குப் பதிலாக 4 புதிய ஆம்புலன்ஸ் ஊர்திகள் வாங்கப்பட்டன. அவை 1–4–86 முதல் செயல்படுகின்றன.

## குனியமுத்தூர் பேரூராட்சியில் கட்டப்பட்டுள்ள கழிப்பிடம்.

9—வினா 6195—**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி குனியமுத்தூர் பேரூராட்சி 8-வது வார்டில் கட்டப்பட்டுள்ள கழிப்பிடத்தின் மதிப்பீடு யாது ?

(ஆ) அக்கழிப்பிடம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(இ) கட்டப்பட்டு பயன்படுத்தாமலே பழுதடைந்துள்ளதால் சம்பந்தப்பட்டவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ரூ. 19,000.

(ஆ) ஆம்.

(இ) இக்கழிப்பிடத்திற்கென கட்டப்பட்ட தண்ணீர்த் தொட்டியில் கசிவு ஏற்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரரின் முதலீடு தொகை பறிமுதல் செய்யப்பட்டு பழுது சரி செய்யப்பட்டுள்ளது. கழிப்பிடம் தற்பொழுது பொது மக்களின் உபயோகத்திற்கு விடப்பட்டுள்ளது. மேலும் குறைபாட்டிற்கான காரணங்களையும் ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சியாளரால் எடுக்கப்பட்டு வருகின்றன.

[1987 ஏப்ரல் 30

### காவல் துறையினரின் நடைமுறைகளை திருத்தி அமைக்கும் திட்டம்.

10—வினா 6587—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் துறையினரின் நடைமுறைகளை இன்றைய தேவைக்குப் பொருத்தமான முறையில் திருத்தி அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

நம்மை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளை சமாளிக்கும் வகையில் மாறிவரும் காலத்திற்கேற்றாற்போல் தமிழக காவல் துறை முன்னமே ஆயத்தமாய் உள்ளது. விஞ்ஞான ரீதியான குற்ற விசாரணை முறைகள், குற்றத் தடுப்பு மற்றும் கண்டு பிடித்தல், கலவரம், கட்டுப்பாடு, மனித திறன்பாடு மேலாண்மை முதலியவை பற்றிய விவரங்கள் காவல் துறையினருக்கு பணியில் சேரும்போது அளிக்கப்படும் பயிற்சிகளிலேயே போதிக்கப்படுகின்றன. மேலும் காவல்துறை பணியாளர்கள் பயிற்சி குறித்த ''கோரே குழுவின்'' பரிந்துரைகள் சிக்கலான பிரச்சினைகளை அணுகும் முறை விபரத்துடன் பயிற்சி பாடத்தில் இணைக்கப்பட்டுள்ளன. காவல்துறையினர்—பொது மக்கள் நல்லுறவு குறித்த பொருள் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது.

(2) இந்திய காவல்படைகளை நவீனப்படுத்தும் மத்திய அரசின் திட்ட உதவி தமிழக காவல்துறையில் பெருத்த மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. தொடர் நிலையிலேயே, விசாரணையை மேற்கொள்ளும் கம்ப்யூட்டர் வசதிமூலம், எந்த ஒரு குற்றவாளியின் குற்ற நடைமுறையையும், கம்ப்யூட்டரில் சேகரிக்கப்பட்ட விபரத்துடன் ஒப்பிட்டு, உடன் விபரம் அறிய ஏதுவாகின்றது. இதற்கென 41,000 குற்றவாளிகளின் கை ரேகை விபரங்கள் இதில் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே முதன் முதல் தமிழ்நாட்டில் இத் திட்டம் செயல் படுத்தப்பட்டது.

(3) தமிழக காவல்துறையின் செய்தித் தொடர்பு வசதியும் பெருத்த மாறுதல்களுக்குட்பட்டுள்ளது. அதிவேக நுண்ணலை தொடர்பு (வி.எச்.எப்.) மூலமாக அனைத்து மாவட்ட தலைமையிடங்களுக்கும் மாநில காவல் தலைமையகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இதற்கென அமைக்கப்பட்ட நுண்ணலை தொலைபேசியகம் மூலமாக எந்த ஒரு காவல் நிலையத்தையும் எளிதில் தொடர்புகொள்ள இயலும். செய்தித் தொடர்பில் ஏற்பட்ட இந்த முன்னேற்றம் காரணமாக செய்திகள் அனுப்புவது மற்றும் பெறுவதில் ஏற்படும் காலதாமதம் பெருமளவில் நீக்கப்பட்டுள்ளது. மேலும், ரகசியம் பாதுகாக்கப்படுவதுடன், விரைந்து செயல்படவும் ஏதுவாகின்றது.



1987 ஏப்ரல் 30]

(4) ஆடியோ, வீடியோ கருவிகள், பொய் கண்டு பிடிப்பு, உலோகம் கண்டு பிடிப்பு கருவி, விசாரணை கருவிகள் அமைந்த பெட்டி, அல்ட்ரா, வயலட் விளக்குகள் போன்ற நவீன கருவிகள் தமிழக காவல்துறையினை நவீனமயமாக்கும் திட்டத்துடன் வாங்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

(5) மாவட்டங்களில் உள்ள குற்ற காவல் வட்டங்கள் சீரமைக்கப்பட்டு, புதிய காவல் வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றின் பணியாளர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பணி வழியில் பிரிக்கப்படாமலிருந்த சட்டம், ஒழுங்கு காவல் வட்டங்களின் பணிப்பளு பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாகுபாடு காவல்துறையின் திறமையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாது பொது மக்களுக்கு அவர்கள் சிறந்த முறையில் சேவையாற்றவும் வழி செய்துள்ளது.

(6) அவ்வப்போது ஏற்படும் தேவையைக் கருத்தில் கொண்டும், நிகழும் சட்டம், ஒழுங்கு, குற்றங்கள், நிலப்பரப்பு மற்றும் இதர தொடர்புடைய காரணங்களையும் பொறுத்து, அரசு தமிழக காவல் துறையின் படைபலத்தை அதிகரித்துக் கொண்டுள்ளது.

(7) மாறிவரும் கொள்கைகளை புதிய கண்ணோட்டத்துடன் நோக்கி தகுந்த அணுகு முறையுடன் செயல்பட அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை எடுத்த நடவடிக்கைகள், எடுக்கப்பட உள்ள திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் தற்போது உள்ள தேவையின் அடிப்படையில் செயலாற்றுதல்தான் காவல்துறையின் முக்கிய குறிக்கோளாகும்.

### கவுண்டன்புதூரில் வாய்க்கால் வெட்டுதல்.

11—வினா 6915—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், சாணார்பட்டி யூனியன், ராகுலாபுரம் பஞ்சாயத்து, கவுண்டன்புதூரில் அடிபைப் போட்டுள்ள இடத்தில் நீர் தேங்காமல் ஓடுவதற்கு 100 மீட்டர் தூரம் வாய்க்கால் வெட்டித்தர அரசு முன் வருமா ?

விடை—

அண்ணா மாவட்டம், சாணார்பட்டி ஒன்றியம், இராகுலாபுரம் ஊராட்சியிலுள்ள கவுண்டன்புதூரில், கையிறைப்பான் அமைந்துள்ள இடத்தைச் சுற்றி மேடையும், 10 அடி தூரத்திற்கு கழிவு நீர் வாய்க்காலும் அரசு விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ளது. 100 மீட்டர் தூரத்திற்கு கழிவு நீர் வாய்க்காலமைத்துக்கொள்ளுமாறு இராகுலாபுரம் ஊராட்சிக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 30

## தமிழக தென்னை விவசாயிகளுக்கு தென்னை அபிவிருத்தி வாரியம் வழங்கிய மானியத் தொகை.

12—வினா 7424—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னை வளர்ச்சிக் கழகத்தின் கொச்சின் அலுவலகத்தில் தமிழக தென்னை விவசாயிகளுக்காக 1983–84, 1984–85 ஆண்டுகளில் ஆண்டு வாரியாக ஒதுக்கப்பட்ட மானியத் தொகை எவ்வளவு ?

(ஆ) எவ்வளவு சதவிகிதத் தொகை பெற்று தமிழக தென்னை விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டது ?

விடை—

(அ) தென்னை அபிவிருத்தி வாரியத்திடம் இருந்து 1983–84, 1984–85ஆம் ஆண்டுகளில் கீழ்க்கண்ட நிதியுதவி பெறப் பட்டுள்ளது :—

| | 1983–84. ரூ. | 1984–85. ரூ. |
|---|---|---|
| 1. புதிய பரப்பளவில் தென்னை பயிர் செய்யப்படும் திட்டம். | 4,38,125 | 6,09,061 |
| 2 வாடல் நோய் தாக்கப்பட்ட மரங்களை அகற்றும் திட்டம். | .. | 1,55,429 |
| 3 மாநில தென்னை நாற்றுப் பண்ணை அமைத்தல். | .. | 2,36,000 |
| 4 தமிழ் நாட்டில் உயரிய தென்னை நாற்றங்கால்கள் மற்றும் 12 முன்னோடி உயரிய விதை ஆய்வு நிலையங்கள் அமைத்தல். | 3,20,600 | 2,07,767 |
| 5. அரசு தென்னை நாற்றங்கால்களுக்கு பாசன வசதி மேம்பாட்டுத் திட்டம். | 3,50,800 | இல்லை. |
| 6 தஞ்சை மாவட்டத்தில் தென்னை அபிவிருத்தித் திட்டம். | 2,34,100 | 2,39,983 |
| 7 நெட்டை குட்டை மற்றும் குட்டை நெட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகத் திட்டம் (நவ்லாக்.) | 5,08,132 | 8,20,211 |



1987 ஏப்ரல் 30]

(ஆ) தென்னை அபிவிருத்தி வாரியம், அதனால் வழங்கப்படும் மொத்த உதவித் தொகையில் எத்தனை சதவிகிதம், மற்ற மாநிலங்களோடு ஒப்பு நோக்குகையில் தமிழ்நாட்டிற்கு வழங்குகிறது என்ற விவரம் எதுவும் குறிப்பதில்லை. பொதுவாக பல மாநிலங்களுக்கும் தென்னை அபிவிருத்தி திட்டங்களுக்கு அந்தந்த மாநிலங்களின் மதிப்பிடப்பட்ட தேவை மற்றும் உள்ளாற்றல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நிதியுதவி அளிக்கிறது. எனவே, இந்த நிதியுதவி மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். மேலும் தென்னை அபிவிருத்தி நிதி கொடுப்பதற்கு மூலமான முக்கிய வருமானம் ஒவ்வொரு மாநிலத்திலும் உற்பத்தி செய்யப்படும் ஆலைக் கொப்பரையின் மீது விதிக்கப்படும் வரி (Cess) மூலம் கிடைப்பதாகும். இதில் ஒரு முக்கியமான விஷயம் என்னவெனில் நம் நாட்டில் மதிப்பிடப்பட்டுள்ள உற்பத்தியான மொத்த ஆலைக் கொப்பரையான 3,87,000 மெட்ரிக் டன்னில் கேரளாவில் மட்டும் 3,42,000 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் கொப்பரை உற்பத்தி மிக மிக குறைவு என்பதுடன் அது தன்னுடைய மாநிலத்தில் உள்ள ஆலைகளுக்கு தேவையான கொப்பரையை கேரள மாநிலத்தில் இருந்துதான் பெற்றுக் கொள்கின்றது. மேலே சொல்லப்பட்ட காரணங்களினால், தென்னை அபிவிருத்தி வாரியம் எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான நிதியுதவி அளிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது இயலாததாகும்.

## திருநெல்வேலி பேருந்து நிலையம் அருகே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு தனிப் பேருந்து நிலையம்.

13—வினா 7744—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி பேருந்து நிலையம் அருகே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குத் தனியாக பேருந்து நிலையம் கட்ட செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போதுள்ள பொது பேருந்து நிலையத்தில் போதுமான இட வசதியில்லாததால், தகுதியான நிலம் கையகப்படுத்தப்பட்டு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தனியாக பேருந்து நிலையம் கட்டும் முயற்சி நடை பெற்று வருகிறது.

[1987 ஏப்ரல 30

### கோபாலசமுத்திரம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி.

14—வினா 7747—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபாலசமுத்திரம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் பால வேலை எந்த அளவில் உள்ளது ?

(ஆ) காலதாமதத்தின் காரணம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்படும் பாலப்பணி தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு அங்கே வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. பணி 30–6–1987-க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பெருஞ்சேரி கிராம ஆதி திராவிட மக்களுக்கு வேறு இடத்தில் குடியிருப்புகள் கட்டுதல்.

15—வினா 7952—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், பெருஞ்சேரி கிராமத்தில் தாழ்வான பகுதியில் வசித்துவரும் ஆதி திராவிட மக்கள் ஒவ்வொரு வருடமும் புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்படுவதை கருத்தில் கொண்டு வேறு இடத்தில் குடியிருப்புகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

### குடவாசல் ஒன்றிய சாலையை கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றல்.

16—வினா 7955—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேங்காலிபுரம், திரியம்பகபுரம், மதுரமாணிக்கம் சாலையை கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



1987 எப்ரல் 30]

விடை—

வினாவில் குறிப்பிடப்படும் சாலையின் மொத்த நீளம் 5.0 கி.மீ, அதில் தற்போது கி. மீ. 0/0—2/0 வரை சிவப்பு கப்பி சாலையாகவும் கி. மீ. 2/0—3/5 வரை மண் சாலையாகவும், கி. மீ. 3/5—5/0 வரை கருங்கல் ஜல்லி சாலையாகவும் உள்ளது. இச் சாலையில் கி. மீ. 0/0—3/5 வரை கருங்கல் ஜல்லி சாலையாக மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.4.00 இலட்சம் தேவைப்படுகிறது. இச்சாலையின் மேம்பாட்டுப் பணிகள் எவ்வித அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்கீழும் இடம் பெறவில்லை. அரசின் குறுகிய நிதி வசதியின் காரணத்தால் மேற்படி சாலையின் பணியினை உடனடியாக மேற்கொள்ள இயலாது. இருப்பினும் எதிர் வரும் ஆண்டுகளில் பாகம் 2 திட்டத்தின்கீழ் அரசின் நிதிவளம், பணியின் முக்கியத்துவம் ஆகியவைகளை அனுசரித்து சாலைப் பணியினை மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

### வடமட்டம் சாலையில் அரசலாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம்.

17—வினா 7982—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், கூந்தனூர், வடமட்டம் சாலையில் அரசலாற்றில் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பணியை ரூ. 30.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### கானூர் கால்வாயின் மீது பாலம் கட்டுதல்.

18—வினா 8185—திரு. க. பாரமலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"பசும்பொன் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், திருப்புவனம்—கானூர் சாலையிலிருந்து பெத்தானேந்தல் கிராமத்திற்குச் செல்லும் கானூர் கால்வாயின் மீது ஒரு பாலம் கட்ட நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

அரசின் நிதி வசதிக்கேற்ப மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்படி பணியினை ரூ. 31.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**நெல்லை—தென்காசி சாலையை இருவழித்தட சாலையாக விரிவுபடுத்துதல்.**

22—வினா 8962— **திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நெல்லை—தென்காசி சாலையில் இரட்டைச் சாலை (டபுள்ரோடு) யாக்க வேண்டிய நீளம் எவ்வளவு?

(ஆ) திட்டம் எப்போது முடிவடையும் ?

விடை—

(அ) 10.7 கி.மீ. நீளம்.

(ஆ) தற்போது 2.8 கி.மீ. நீளத்திற்கு இருவழித்தட சாலையாக விரிவுபடுத்தும் பணி 1986—87 ஆம் ஆண்டில் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் மதிப்பீடு அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியான 7.9 கி.மீ. சாலையை இருவழித்தட சாலையாக விரிவுபடுத்தும் பணி இனிவரும் ஆண்டுகளில் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டின்கீழ் சிறுகச் சிறுக எடுத்துச் செய்யப்படும்.

**1985-86 ஆம் ஆண்டில் தாட்கோ மூலம் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை.**

23—வினா 8975—**திரு. த. பழனி :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தாட்கோ மூலம் 1985—86 ஆம் ஆண்டு எடுத்துக் கொண்ட வீடுகளின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அதில் கிராமப்புறங்களில் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை—மாவட்ட வாரியாக?



விடை—

(அ) தாட்கோ மூலம் 1985—86 ஆம் ஆண்டுக்கு எடுத்துக் கொண்ட வீடுகளின் எண்ணிக்கை 3,222 ஆகும்.

(ஆ) அதில் மாவட்ட வாரியாக கிராமப்புறங்களில் கட்டப்படவேண்டிய வீடுகளின் விவரம் பின்வருமாறு :—

| மாவட்டம். | கிராமப்புறங்களில் கட்டப்படவுள்ள வீடுகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| (1) இராமநாதபுரம் .. .. .. | 98 |
| (2) தஞ்சாவூர் .. .. .. | 100 |
| (3) அண்ணா .. .. .. | 87 |
| (4) தர்மபுரி .. .. .. | 50 |
| (5) பசும்பொன் முத்துராமலிங்கம் .. .. | 25 |
| (6) மதுரை .. .. .. | 311 |
| (7) தென்னாற்காடு .. .. .. | 165 |
| (8) புதுக்கோட்டை .. .. .. | 60 |
| (9) வடாற்காடு .. .. .. | 45 |
| (10) காமராசர் .. .. .. | 25 |
| (11) பெரியார் .. .. .. | 20 |
| (12) திருச்சிராப்பள்ளி .. .. .. | 1,697 |
| (13) சேலம் .. .. .. | 305 |
| (14) நீலகிரி .. .. .. | 41 |
| (15) கன்னியாகுமரி .. .. .. | 36 |
| (16) செங்கல்பட்டு .. .. .. | 45 |
| (17) கோயம்புத்தூர் .. .. .. | 44 |
| (18) திருநெல்வேலி .. .. .. | 68 |
| மொத்தம் .. | 3,222 |

**திருவேங்கடம் அருகில் ஓடும் ஆற்றில் பாலம் கட்டும் திட்டம்.**

24—வினா 9009—**திரு. ஆர். ரெங்கசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குருவிக்குளம் ஒன்றியம் திருவேங்கடம் அருகில் ஓடும் ஆற்றில் திருவேங்கடத்திற்கும் ஆவுடையாபுரத்திற்கும் இணைப்பு ஏற்படுத்த பாலம் கட்டும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பென்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): இதுபற்றிய செயற்குறிப்பேதும் அரசிடம் இல்லை.

**களியல் கிராமத்தில் திற்பரப்பு ஆற்றின் தெற்பக்கடலின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.**

25—வினா 9050—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா களியல் கிராமத்தில் திற்பரப்பு ஆற்றின் தெற்பக்கடலின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எப்போது தொடங்க உள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்படும் பாலம் கட்ட வேண்டிய இடத்திற்கு வெகு அருகாமையில் கோதை ஆற்றின் மேல் படுகையில் பாலம் அமைத்திருப்பதால், இப்பணியினை உடனடியாக எடுத்துச் செய்ய வேண்டிய அளவிற்கு போதிய முக்கியத்துவம் பெறவில்லை.

**நூலக ஊழியர்களுக்கு அளிக்கப்படும் விடுப்பு.**

26—வினா 9173—திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நூலக ஊழியர்களுக்கு வாரத்தில் இரண்டு நாட்கள் விடுப்பு மற்ற அரசு ஊழியர்கள் போல் கொடுக்கப்படுமா?

(ஆ) இல்லையெனில் சிறு விடுப்பு இருபது நாட்கள் கொடுக்கப்படுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இல்லை.





**கடையநல்லூரில் நெசவுத் தொழிலாளர்களுக்காக காசநோய்ப் பிரிவு அமைத்தல்.**

27—வினா 9189—திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூரில் நெசவுத் தொழிலாளர்கள் அதிகமாக வாழ்வதால் ''காசநோய்'' பிரிவு ஒன்று அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் ஆய்வுகள் முடிந்து விட்டதா?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) அதற்கான பணிகள் எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

(அ) கடையநல்லூரில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் காசநோய் அலகு நிலையம் (Sub-Centre) ஒன்று இயங்கி வருவதாலும், அங்கு நெசவுத் தொழிலாளர்களுக்கு இலவசமாக பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்கப்படுவதாலும் கடையநல்லூரில் நெசவுத் தொழிலாளர்களுக்கென தனியாக ஒரு காசநோய்ப் பிரிவு அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ), (இ) மற்றும் (ஈ): இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**கன்னிமாரா நூலகத்திற்கு குளுமை வசதி செய்தல்.**

28—வினா 9229—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னிமாரா நூலகம் முழுவதும் குளுமை வசதி செய்யப்படுமா?

விடை—

தற்போது கருத்து ஏதுமில்லை.

[1987 ஏப்ரல் 30

## பொது நூலகங்களுக்கு வாங்கப்பட்ட தமிழ் நூல்கள்.

29—வினா 9224—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு பொது நூலகங்களுக்கு வாங்கப்பட்ட தமிழ் நூல்கள் எவ்வளவு?

(ஆ) மரபுக் கவிதை, புதுக்கவிதை எவ்வளவு?

விடை—

(அ) 1,849 தமிழ் நூல்கள் வாங்கப்பட்டன.

(ஆ) நூல்களின் தலைப்புகளை மரபுக் கவிதை, புதுக் கவிதை மற்றும் வேறு பொருள் பற்றிய நூல்கள் என தனித் தனியே வகைப்படுத்தி வாங்கப்படுவதில்லை. எனவே மரபுக் கவிதை நூல்கள் எத்தனை மற்றும் புதுக்கவிதை நூல்கள் எத்தனை என்ற விவரம் இல்லை.

## தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் விநியோகம்.

30—வினா 9236—திரு. எல். இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தாம்பரம் அரசு மருத்துவமனையில் 2.5 கே.வி,ஏ. மின் சத்தியுடைய (எளிதில் எடுத்துச் செல்லதக்க) ஒரு மின் உற்பத்தி இயந்திரம் 16—4—1986 அன்று நிறுவப்பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 30]

## காவேரி டெல்டா பகுதியில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்.

31—வினா 9258.—திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985—86-ல் காவேரி டெல்டா பகுதிகளில் அரசு கொள்முதல் செய்த நெல் எவ்வளவு?

(ஆ) குவிண்டாலுக்கு ரூ. 35 வீதம் கொடுக்கப்பட்ட இடுபொருள்களுக்கான கூடுதல் தொகை 31—3—1986 வரை எவ்வளவு?

விடை—

(அ) 1985 ஆம் ஆண்டு குறுவையில் கொள்முதல் செய்த நெல் 3,42,804 மெ. டன்களாகும். 1986 ஆம் ஆண்டு சம்பா 24—4—1986 முடிய கொள்முதல் செய்யப்பட்ட நெல் 8,63,662 டன்களாகும்.

(ஆ) குறுவையில் வழங்கப்பட்ட கூப்பன்களின் மதிப்பு ரூ. 11,62,33,160.50 ஆகும். 31—3—1986 முடிய சம்பாவில் வழங்கப்பட்ட கூப்பன்களின் மதிப்பு ரூ. 16,77,21,530.65 ஆகும்.

## நம்புதாளையிலுள்ள மீனவர் அரசு குடியிருப்பிற்கு மின் இணைப்பு.

32—வினா 9273—திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானை ஒன்றியம், நம்புதாளையில் கட்டப்பட்டு இருக்கும் மீனவர் அரசு குடியிருப்பில் 15 ஆண்டுகளாக மின் இணைப்பு இல்லாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

[1987 ஏப்ரல் 30

விடை—

(அ) மற்றும் (ஆ) : திருவாடானை ஒன்றியம் நம்புதாளையில் கட்டப்பட்டு இருக்கும் மீனவர் அரசு குடியிருப்புக்கு மின் இணைப்பு கோரி மனு ஏதும் பெறப்படவில்லை.

**திருவாரூரிலிருந்து தலைஞாயிறு வரை நகரப் பேருந்து விடல்.**

33—வினா 9413—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரில் இருந்து எட்டுக்குடி வரை வரும் நகரப் பேருந்தை தலைஞாயிறு வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின்படி ஒரு நகரப் பேருந்தின் வழித்தட நீளம் 30 கி.மீ.-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

திருவாரூர்-தலைஞாயிறு வழித்தடத்தின் தூரம் ஒரு நகரப் பேருந்து இயக்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள 30 கி.மீ.-க்கு அதிகமாக இருப்பதால் திருவாரூரிலிருந்து எட்டுக்குடி வரை இயங்கும் நகரப் பேருந்தை தலைஞாயிறு வரை நீட்டித்து இயக்க இயலாது.

**வேதாரணியம்—தலைஞாயிறு வரை பேருந்து விடல்.**

34—வினா 9414—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரணியத்திலிருந்து நாகக்குடையான் வரைவரும் பேருந்தை தலைஞாயிறு வரை நீட்டிக்க அரசு முன் வருமா ?

(ஆ) விவரமென்ன ?



1987 ஏப்ரல் 30]

விடை—

(அ) மற்றும், (ஆ) தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின்படி ஒரு நகரப் பேருந்தின் வழித்தட நீளம் 30 கி.மீ.க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

வேதாரணியம்-தலைஞாயிறு வழித்தடத்தின் தூரம் நகரப் பேருந்து இயக்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச நீளமான 30 கி. மீக்கு அதிகமிருப்பதாலும், அவுரிக்காடு சாலை பிரிவிலிருந்து தலைஞாயிறு வரை உள்ள 6 கி. மீ. சாலை பேருந்து இயக்குவதற்கு தகுதியற்றதாக இருப்பதாலும், வேதாரணியத்திலிருந்து நாகக்குடையான் வரை இயக்கும் நகரப் பேருந்தை தலைஞாயிறு வரை நீட்டித்து இயக்க இயலாது.

**நாகை—தலைஞாயிறு வரை நகரப் பேருந்து விடல்.**

35—வினா 9415—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகையிலிருந்து வேட்டைக்காரனிருப்பு வரை வரும் நகரப் பேருந்தை தலைஞாயிறு வரை நீட்டிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரமென்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ் நாடு மோட்டார் வாகன விதிகளின் படி ஒரு நகரப் பேருந்தின் வழித்தட நீளம் 30 கி.மீக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

நாகையிலிருந்து தலைஞாயிறு வரை உள்ள வழிதடப் பகுதியின் தூரம் ஒரு நகரப் பேருந்து இயக்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள அதிகபட்ச நீளமான 30 கி.மீக்கு அதிகமாயிருப்பதால், நாகை-வேட்டைக்காரனிருப்பு பேருந்தை நீட்டித்து இயக்க இயலாது.

**ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சை அரங்கை விரிவுபடுத்தும் திட்டம்.**

36—வினா 9431—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் அரசு மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை அரங்கை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) 1985–86ஆம் ஆண்டில் எத்தனை அறுவை சிகிச்சை நடைபெற்றது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) பெரிய அறுவை சிகிச்சை .. இல்லை.
சிறிய அறுவை சிகிச்சைகள் .. 31

குடும்ப நலம்.

| | |
|---|---|
| ஆண்களுக்கான அறுவைச் சிகிச்சை | 840 |
| பெண்களுக்கான டியூபெக்டமி | 246 |
| லாபராஸ்கோப் | 3,715 |
| எம்ட்டிப்பி | 1 |

### கோவை மாவட்ட நீதிமன்றத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

37—வினா 9490—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட நீதிமன்றத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

கோவையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு (Construction of Combined court buildings) அரசின் பரிசீலனையில் உள்ளது.

### செவிலிமேடு உயர்நிலைப் பள்ளிக்கு புதியக் கட்டிடம்.

38—வினா 9494—திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சி தாலுக்கா, செவிலிமேடு பேரூராட்சிக்குட்பட்ட உயர்நிலைப் பள்ளிக்கு புதியதாகக் கட்டிடம் கட்ட அரசு உத்தர விட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை.

39—வினா 9523—திரு. சா. ஜெயச்சந்திரன் மற்றும் திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை 1985-86-ல் எத்தனை பேர் ?

(ஆ) 1986-87-ல் பயிற்சிக்கு எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்கள் ?

விடை—

(அ) 1985-86ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பு பயிற்சி பெற்றவர்கள் எண்ணிக்கை 12,537. இதே வருட முடிவில் பயிற்சியில் இருந்தவர்கள் எண்ணிக்கை 2,714.

(ஆ) 1986-87-ல் 13,230 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள்.

### ஆரணியில் புதிய நூலகக் கட்டிடம் கட்டும் திட்டம்

40—வினா 9577—திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியில் புதியதாக நூலகக் கட்டிடம் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில் கட்டப்படவிருக்கிறது

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆரணி கோட்டை வெளி மைதானத்தில் தபால் தந்தி அலுவலகத்தினை அடுத்துள்ள இடத்தில் கட்டப்படவிருக்கிறது.

**பென்னாகரத்தில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை ஏற்படுத்தும் திட்டம்.**

41—வினா 9683—**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரத்தில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை ஏற்படுத்திடும் திட்டம் அரசிடம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

டை—

(அ) ஆம்.

(ஆ) தகுதியான நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் பணிமனை கட்டப்படும்.

**மயிலாடுதுறை வட குப்பத்திற்கு நகரப் பேருந்து விடல்.**

42—வினா 9730—**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழன் போக்குவரத்துக் கழகம் மூலம் மயிலாடுதுறை எஸ். புதூர் செல்லும் நகரப் பேருந்தை நீட்டித்து மயிலாடுதுறை வட குப்பம் வரை செல்லும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

வினாவில் குறிக்கப்பட்டுள்ள வட குப்பம் என்னும் கிராமம் எஸ். புதூர் அருகிலோ சுற்று வட்டாரத்திலோ இல்லை எனத் தெரிய வந்துள்ளது. ஆனால் எஸ். புதூரிலிருந்து ஐந்து கி.மீ. தொலைவில் வடமட்டம் என்னும் கிராமம் உள்ளது. மேற்படி பேருந்தை வட மட்டம் வரை நீட்டித்து இயக்கினால் அவ்வழித்தடத்தின் தூரம் ஒரு நகரப் பேருந்து இயக்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உச்ச கட்ட தூரமான 30 கி. மீக்கு அதிகமிருப்பதால், மயிலாடுதுறை—எஸ். புதூர் வழித் தடத்தில் இயக்கும் நகரப்பேருந்தை வடமட்டம் வரை (சட்டமன்ற வினாவில் கேட்டுள்ள கிராமம் வட மட்டமாக இருக்குமேயானால்) நீட்டித்து இயக்க இயலாது.



**மயிலாடுதுறை தொகுதியில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்படாத கிராமங்கள்.**

43—வினா 9776—**திரு. மு. தங்கமணி :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதியில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படாத கிராமங்கள் இன்னும் எத்தனை உள்ளன ?

விடை—

மயிலாடுதுறை தொகுதியில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படாத கிராமங்கள் கீழே குறிப்பிட்டுள்ள எட்டு ஆகும் :—

1. பட்டவர்த்தி.
2. அருண்மொழித்தேவன்.
3. தலைஞாயிறு.
4. வெள்ளாலகரம்.
5. ஆணைமேலகரம்.
6. உருத்துக்குப்பை.
7. பட்டமங்கலம்.
8. சித்தர்க்காடு.

**செட்டியாபட்டியில் நியாயவிலைக் கடை துவங்குதல்.**

44—வினா 9789—**திரு. ஜே. முகமதுகனி :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம் செட்டியாபட்டியில் நியாயவிலைக் கடை துவங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

[1987 ஏப்ரல் 30

விடை—

(அ) ஏற்கெனவே துவங்கப்பட்டு விட்டது.

(ஆ) செட்டியாபட்டி கிராமத்தில் வடவாளம் வேளாண்மைச் சேவை கூட்டுறவுச் சங்கம், 335 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாயவிலைக் கடையை 24-7-1986 முதல் நடத்தி வருகிறது.

**நீலகிரி மாவட்டத்திற்கு கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை**

45-வினா 9886—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1986-87ஆம் ஆண்டிற்கு நீலகிரி மாவட்டத்திற்கு கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

(ஆ) இது என்னென்ன வழிகளில் செலவிடப்படும்?

விடை—

(அ) ரூ. 6,81,07,000.

(ஆ) பல்வேறு மேலாண்மைகளின் கீழ் உள்ள தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களின் ஊதியங்கள், பயணச்செலவுகள், அலுவலக செலவினங்கள், வாடகைக் கட்டண விகிதங்கள், வாகனங்கள் பராமரிப்பு, மதிய உணவு, சீருடை, பாடப் புத்தகங்கள், கரும்பலகைகள் விநியோகம் ஆகிய இனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செலவிடப்படுகிறது.

**நீலகிரி மாவட்டத்திலுள்ள கிளை நூலகங்களுக்கு புதிய கட்டிடங்கள்.**

46-வினா 9908—திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில், வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும், கிளை நூலகங்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில் அந்த நூலகங்களுக்கு, அரசு புதியக் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுத்துள்ளதா?



1987 ஏப்ரல் 30]

விடை—

(அ) ஆம்.

(ஆ) கூடலூரில் உள்ள கிளை நூலகத்திற்கு மட்டும் சொந்தமாக புதியக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**ஜெயங்கொண்டம் தொகுதியிலுள்ள கூட்டுறவு தீப்பெட்டித் தொழிற்சாலைகள்.**

47—வினா 9936.—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் கூட்டுறவு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(ஆ) தற்பொழுது எத்தனை யூனிட்கள் இயங்குகின்றன?

விடை—

(அ) மற்றும் (ஆ): தற்சமயம் ஒன்றுமில்லை.

2. ஜெயங்கொண்டத்தில் ஒரு சிறு தீப்பெட்டி உற்பத்தி சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம் 28-12-1979 இல் துவக்கப்பட்டது. அது தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. மேலும், அச்சங்கத்தைத் தொடர்ந்து நடத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை. ஆகவே மேற்படி சங்கத்தைக் கலைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**ஜெயங்கொண்டம்— வெண்மான்கொண்டன் கிராமத்திற்கு நகரப் பேருந்து விடல்.**

48—வினா 9943—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயம்கொண்டம் நகரிலிருந்து வெண்மான்கொண்டன் கிராமத்திற்கு நகரப் பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

ஜெயம்கொண்டம் நகரத்திலிருந்து வெண்மான்கொண்டன் கிராமத்திற்கு நகரப் பெருந்து விடும் செயற் குறிப்பு தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தினரின் ஆய்வில் உளளது.

காஞ்சீபுரம் தேர்வு நிலை நகராட்சியை சிறப்புநிலை நகராட்சியாக உயர்த்தும் திட்டம்.

49—வினா 10054—திரு. கே. பாலாஜி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரம் தற்போது தேர்வுநிலை நகராட்சியாக இருப்பதை சிறப்பு நிலை (ஸ்பெஷல் கிரேடு) நகராட்சியாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) எந்தத் தேதியிலிருந்து அவ்வாறு உயர்த்தப்படும்?

விடை—

(அ) தற்போது தேர்வு நிலையில் உள்ள காஞ்சீபுரம் நகராட்சியை, சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்துவது தொடர்பான பிரேரணை ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

புதுக்கோட்டை நகர் தெருக்களில் சோடியம் வேப்பர் விளக்குகள் போடுதல்.

50—வினா 10123—திரு. ஜே. முகமது கனி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகர் கீழராஜ வீதி, மேல ராஜவீதி, வடக்கு ராஜவீதி, தெற்கு ராஜவீதி, சத்தியமூர்த்தி சாலை, சேஷையா சாஸ்திரி சாலைகளில் 250 மெர்குரி அல்லது சோடியம் வேப்பர் விளக்குகள் போடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) திட்டம் ஏதுமில்லை.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]



## 2. அரசினர் தீர்மானம்.

### பேரவை அலுவலில் மாற்றம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 1 "வினாக்கள்—விடைகள்" மற்றும் இனம் 2 "அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து கவன ஈர்ப்பு" ஆகியவற்றை ஒத்திவைத்து, இனம் 3—1987-88 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும், வாக்கெடுப்பும் மட்டும் எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

## 3. அறிவிப்பு.

### அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவையில் (Senate) ஏற்பட்டுள்ள மூன்று வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

இம்மூன்று வெற்றிடங்களுக்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களிடமிருந்து வேட்புத் தாள்கள் வரப்பெற்று, அனுமதிக்கப் பெற்றுள்ளன:—

1. திரு. சா. ஞானசுந்தரம்
2. திரு. துரை அன்பரசன்
3. திரு. சு. சிவராஜ்
4. டாக்டர் ந. மாசிலாமணி
5. திரு. எஸ். ஜெயச்சந்திரன்

[1987 ஏப்ரல் 30

[பேரவைத் தலைவர்]

எனவே, இவ்வைந்து வேட்பாளர்களிலிருந்து மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு 5—5—1987 செவ்வாய்க் கிழமை காலை 10-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை, முன்னாள் சட்டமன்ற மேலவை மண்டப கிழக்கு வளாகத்தில், பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றை மாற்று வாக்கின் மூலம் தேர்தல் நடைபெறும்.

4. வரவு-செலவுத் திட்டம், 1987—88, வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்துசமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,48,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி, நத்தம் கோவில்பட்டியில் உள்ள புராதன ஆலயமான அருள்மிகு கைலாசநாதர் ஆலயத்தில் திருப்பணி செய்ய திருப்பணிக் குழு ஒன்று அரசுத் துறை ஆணை செ.மு.நக. 1456/82-22, நாள் 17—10—1981-ன் படி அமைக்கப்பட்டும் இதுவரை 15 ஆண்டுகளாக திருப்பணி நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,48,63,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரிலுள்ள ராஜ வாய்க்காலை பொது மக்கள் நலனுக்காக ரோடு போடுவதைத் தடுத்து ரோட்டிற்குரிய



1987 ஏப்ரல் 30] [திரு. கே. சுப்பராயன்]

இடத்தைத் திருப்பூர் குலாலர் விநாயகர் கோவில் நிர்வாகம் ஆக்கிரமித்துள்ளதை மீட்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்-சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,48,63,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 25—சின்கோனா.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,70,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,70,89,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்கோனா தோட்டங்களில் பணிபுரியும் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு நிரந்தரம் செய்வதும், ஏனைய காபி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் சம்பளம், போனஸ் மற்ற சலுகைகள் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்தும் விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,70,89,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1987 ஏப்ரல் 30

(இ) கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,58,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், நிலவாரப்பட்டி அஞ்சல், சூரியூர் பள்ளக்காட்டில் 10 ஆண்டுகளாக விவசாயம் செய்துவரும் நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகளின் விளைச்சல் பயிரையும், வீட்டையும் வன இலாகா அதிகாரிகள் தீ வைத்துக் கொளுத்திய நடவடிக்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 16,58,50,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,45,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நிருபர்கள் சங்கத்திற்கு (Madras Reporters Form-2 சொந்தக் கட்டடம் கட்டிக் கொள்வதற்கு இலவச மனை வழங்கப்பட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



1987 ஏப்ரல் 30] [திரு. கே. சுப்பராயன்]

"மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,45,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நிருபர்கள் சங்கத்திற்கு பல ஆண்டுகளாகச் சொந்தக் கட்டிடம் கட்டிக்கொள்ள இலவசமனை வழங்கப்படும் என்று அறிவித்தும் இன்னமும் நிறைவேற்றப் படாமல் இருப்பதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக்கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,45,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(உ) கோரிக்கை எண். 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,60,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 22,60,23,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூறவிரும்பினால் கூறலாம்.

[1987 ஏப்ரல் 30

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கோரியுள்ள பல்வேறு மானியக் கோரிக்கைகளைப்பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் * * அச்சடிக்கப்பெற்று, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்தவுடன் இறுதியாக நான் என்னுடைய பதிலைத் தெரிவிக்கிறேன்.

**திரு. ஆர். தியாகராசன்:** மாண்புமிகு மரியாதைக்குரிய சபாநாயகர் அவர்களே, மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம், 1987-88 பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்து மதம் என்பது, உலகத்திலேயே மிக முன்காலத்திலே, யுக காலத்திற்கு முன்பே தோன்றிய மதமாகும். இந்து மதம் என்பது இந்து மதம், இந்து நாடு, இந்துக்களின் கலாச்சாரம், இந்துக்களின் மொழி, இந்திய நாடு என்ற அடிப்படையிலே பண்டைய காலத்திலே ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அமைப்பால் உருவானது ஏற்கெனவே சமஸ்கிருத மொழியிலே சாமி பூசைகளையெல்லாம் அய்யர்கள் நடத்திவந்தார்கள். பல நாட்களுக்குப் பிறகு சமஸ்கிருத மொழியை விட்டுவிட்டு இப்போது நம்முடைய மதிப்பிற்குரிய இராமச்சந்திரனார் ஆட்சிக் காலத்திலே தமிழிலே சாமியைப் பூஜிப்பது என்பது நடைமுறைக்கு வந்து தமிழிலே மக்கள் எல்லாம் அதைக் கேட்டு மகிழும் அளவுக்கு அறநிலையங்கள் வளர்ந்திருக்கின்றன. அறநிலையம் தமிழகத்தினைப்போல வேறு எங்கும் எந்த மாநிலத்திலேயும் இல்லை. அந்த அளவுக்கு அறத்திலே நம்பிக்கை உடையவர்கள், உயர்ந்த கோபுரங்கள், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், பல்லாயிரக்கணக்கான தர்ம சொத்துக்கள், பல்லாயிரக்கணக்கான கோயில்கள் அமைந்திருப்பது இந்தத் தமிழ்நாடு.

மற்ற மாநிலங்களிலே கிறித்தவ மதம், இஸ்லாமிய மதம் தோன்றியபோது அங்காங்கே மத அடிப்படையில்தான் கோயில்கள் அமைக்கப்பட்டனவே தவிர தமிழர்களைப் போல

* * 179—321 ஆம் பக்கங்களில் இணைப்புகள் I, II, III, IV and V ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



1987 ஏப்ரல் 30] [திரு. ஆர். தியாகராசன்]

தமிழ் வழிபாட்டைப்போல் தமிழ்க் கலாச்சாரத்திற்கு ஒப்ப அந்தக் கோயில்கள் அமைக்கப்படவில்லை. அப்படிப்பட்ட பெரிய நிர்வாகம் உள்ள தமிழ்நாடு அறக்கட்டளைகளுக்கு இருக்கக்கூடிய சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும். பல சட்டங்களைப் போட்டும் பல திருடர்களைக் கண்டுபிடித்தும், சிலைத் திருடர்களைக் கண்டுபிடித்தும் பல இடங்களிலே அறநிலையங்களைப் பாதுகாக்க முடியாமல் இருக்கிறது. பலர் சாமி கும்பிடப் போவதாக சொல்லிக்கொண்டு, அங்கே எவ்வளவு நகை இருக்கிறது? அவற்றை எப்படி, எப்படி எடுத்துக் கொள்ளலாம் என்பதைப் பார்ப்பதற்காக வேண்டியே செல்கிறார்கள்.

(முற்பகல் 10-10)

அடுத்து, நமது நாட்டிலே, பெண்கள் சாமி கும்பிடக் கூடியவர்கள், மத நம்பிக்கை உடையவர்கள். அவர்கள் எல்லாம் கட்டாயமாக கோயிலுக்குப் போவார்கள். நம்முடைய இந்து மதத்திலேயே பெரும்பாலும் பெண்களைக் குறிப்பிட்டு அஷ்டலட்சுமி என்று குறிப்பிடுவார்கள். அதுபோல், ஆதி பராசக்தி போன்று சக்தி வாய்ந்த தெய்வங்கள் பெண்கள்; உருவத்திலும் அப்படித்தான். மீனாட்சி, விசாலாட்சி என்று வைத்து, இந்து மதத்திலே பெண்களுக்கே முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பெண்கள் சாமி கும்பிட கோவிலுக்குச் செல்லும்போது, சாமி கும்பிடுவதைப் போல் சில பேர்கள் அவர்களைக் கேலி செய்கிறார்கள்; அவர்களைப் பார்த்து சேட்டை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சாமி கும்பிடச்செல்கிறார்களோ, இல்லையோ, இந்தமாதிரி காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இத்தகையவர்களிடமிருந்து பாதுகாப்பதற்கு அமைச்சர் அவர்கள் பெரிய ஸ்தலங்களில், பெரிய கோவில்களில், நல்ல பாதுகாப்பு ஏற்பாடு செய்து தர வேண்டும். உளவுத் துறையினரைப் போட்டு, உண்மையிலேயே சாமி கும்பிட வருகிறார்களா, பெண்களைப் பார்க்க வருகிறார்களா, நகையைத் திருட வருகிறார்களா என்று தெரிந்து கொள்ள வேண்டும். உளவுத் துறையினரை சாமி கும்பிட வருகிறவர்களைப்போல போட்டு, கண்காணிக்க வேண்டுமென்று அறநிலையத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். தியாகராசன்] [1987 ஏப்ரல் 30

அறநிலையத் துறையிலே பல கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்கள் இருக்கின்றன. 20, 30 ஆண்டுகளாக கோயில் நிலத்தை வைத்து பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் குத்தகை கொடுப்பதில்லை. குத்தகை கொடுக்காவிட்டால், அந்தக் கோவில் நிர்வாகத்தை எப்படிச் சமாளிக்க முடியும்?

விருத்தாசலத்தை எடுத்துக் கொண்டால் 400 ஏக்கர் நிலம் பாத்தாலீஸ்வரர் கோவிலுக்கு இருக்கிறது. ஆனால், வருவாய் 40 கலம்கூட வருவதில்லை. இப்போதுள்ள பொதுவுடமைக் கட்சிக்காரர்கள் என்ன எண்ணுகிறார்கள்? குறிப்பிட்ட நிலத்தை அவர்களுக்கு விட்டு விட வேண்டும்; குத்தகைக்குவிட வேண்டும்; சில காலங்களில் குத்தகையை வசூல் செய்யக் கூடாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அறநிலையங்களைப் பாதுகாக்க வேண்டி, குறிப்பிட்ட ஒரு சட்டம் நிறைவேற்ற வேண்டும்; அறநிலைய சொத்துக்களிலே எந்தவிதமான வில்லங்கமும் இருக்கக் கூடாது; 1 ஏக்கருக்கு 10 மூட்டை கிடைப்பதாக இருந்தாலும் கட்டாயமாகக் கொடுக்கவேண்டும். ஓராண்டு கொடுக்காவிட்டால், அந்த இடத்தை அதிகமாக ஏலம் கேட்கக்கூடியவருக்கு ஏலம் விடவேண்டும். இன்றைக்கு 40 சதவீதம் கொடுத்தால்கூட, 400 ஏக்கருக்கு வரக்கூடிய வருமானம் போதும். அந்த வகையிலே கோவில் சொத்தைப் பாதுகாக்க சட்டம் நிறைவேற்ற வேண்டும்.

அதிகமான பணம் இருக்கும் கோவில்களிடமிருந்து ,எடுத்து பள்ளிக்கூடம் கட்டுங்கள், கல்லூரி கட்டுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. யாரோ எடுத்துக் கொண்டு போகிறார்கள். தேங்காய் உடைக்கமுடியவில்லை; கற்பூரம் கொளுத்த முடியவில்லை; ஆராதனை செய்ய முடியாத நிலையேற்றப்படுகிறது. ஆகவே, அறநிலையச் சொத்துக்களை பாதுகாக்க சட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டிலே இந்து மதத்தைப்பற்றித்தான் குறை சொல்லப்படுகிறது. கிறிஸ்தவ மதம் 2,000 ஆண்டுகளாக உள்ளது; இஸ்லாம் மதம் ஆயிரம் ஆண்டுகளாக உள்ளது. ஆனால், பல யுகங்களாக உள்ள மதம் இந்து மதம். நமது நாட்டில் இந்து மதம்



1987 ஏப்ரல் 30] [திரு. ஆர். தியாகராசன்]

தான் சிறந்தது என்று உங்களுக்குத் தெரியும். அப்பேர்ப்பட்ட நாட்டில் இந்த இந்துமதச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த மதத்திலேயே இருந்து கொண்டு, இந்த மதத்தைக் குறை சொல்லக்கூடாது. இஸ்லாம் மதத்திலே இருந்து கொண்டு, அம்மதத்தை யாராவது குறை சொன்னால், அவர்களை அப்புறப்படுத்தி விடுவார்கள். அதேபோல் கிறிஸ்தவ மதத்தில் வைத்திருக்கிற கட்டுப்பாடு காரணமாக, அந்த மதத்தில் உள்ளவர்கள், அந்த மதத்தைப் பற்றி குறை சொன்னால், அவர்களை அந்த மதத்திலிருந்தே நீக்கி விடுவார்கள். ஆனால், இந்து மதத்திலுடைய தலைவிதி யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் இறைவனைக் கிண்டல் பண்ணலாம், அம்மனைக் கிண்டல் பண்ணலாம். அதற்கு உரிமையுண்டு. இது ஜனநாயக நாடு. இநத நாட்டிலே ஜனநாயகத்தை நாம் அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். இந்து மதத்திலே பிறந்தவர்கள். இந்துக்கள். இந்த இந்து மதத்தை, அல்லது இந்து கலாசாரத்தைக் குறை கூறிப் பேசினாலும், அல்லது அதை இழிவுபடுத்திப் பேசினாலும், அவர்கள்மீது இந்து மதச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க புதியதாக ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நான் சபாநாயகர் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் இந்து மதத்தை நாம் பாதுகாக்க முடியும். கலாசாரத்திலே, கலையிலே நம்மைவிட மிஞ்சக்கூடியவர்கள் இந்த உலகத்திலே யாரும் கிடையாது. அந்த அளவிற்கு நம்முடைய நாட்டிலே தலைவர்கள் தோன்றியிருக்கிறார்கள். நமது நாட்டிலே தோன்றிய தலைவர்களை எடுத்துக் கொண்டால், உங்களுக்கு எல்லாம் தெரியும், பெரிய பெரிய ஞானிகள் எல்லாம் பிறர்த நாடு இந்த நாடு.

இன்றைக்கு சமண மதத்தை எடுத்துக் கொண்டால், உலகத்திலே உள்ள அனைவரும் பாராட்டும் அளவிற்கு மிகப் பெரிய புகழ் பெற்ற ஞானி மகாவீரைப் பெற்ற நாடு. அதேபோல் புத்தரை எடுத்துக் கொண்டால், நம்முடைய நாட்டிலே கோவில்கள் இல்லை என்று சொன்னாலுங்கூட, இன்றைக்கு சீனாவிலேயும், இலங்கையிலேயும், ஜப்பானிலேயும் புத்தர்களுடைய கோவில்கள் இருக்கின்றன.

அதேபோல், பெரும் தலைவர்களை எடுத்துக்கொண்டால், காந்தி மகான், நேரு, அண்ணா, ராஜாஜி போன்ற இப்படிப்பட்ட பெரிய தலைவர்கள் எல்லாம் பிறந்த இந்த இந்திய

நாட்டிலே, இந்து மதத்தைப் பாழ்படுத்திவிட்டார்கள். இந்து மதத்தைக் கெடுப்பதற்கு என்றே இந்த நாட்டிலே நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் திட்டமிட்டு, நம்மை இழிவுபடுத்த, இந்து மதத்தைக் கேவலப்படுத்தி, அந்தச் சொத்துக்களை அழித்து, இப்படி எல்லாம் செய்து கொண்டு இருப்பதை சரியான முறையில் நாம் தடுத்து நிறுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மரியாதைக்குரிய இராமபிரானுடைய வரலாற்றை நான் சொல்ல விரும்புகிறேன். மரியாதைக்குரிய இராமச்சந்திர பிரபு அவர்கள், தன்னுடைய நாட்டை ஆள்கின்ற சமயத்திலே, பல இன்னல்களுக்கு ஆளாகியுங்கூட, தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டு, நாடு கடந்து, வனம் கடந்து, பாவங்களைப் போக்கி, அக்கிரமங்களை அழித்து, நீதியை நிலைநாட்டித் தன்னுடைய குடும்பத்தினரை பறிகொடுத்தவர். அப்படிப் பட்ட இராமபிரானுடைய ஆட்சி இங்கே நடக்கிறது. இந்த நேரத்திலே நீதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சாமியைக் கேவலப்படுத்தி, இந்து மதத்தைக் கேவலப்படுத்தி இந்த மதத்தை அழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு நடப்பவர்களைக் கட்டாயமாகத் தண்டிப்பதற்கு தேவையான சட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று நான் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வன இலாகாவிற்கு வருகிறேன். மரியாதைக் குரிய சபாநாயகர் அவர்கள் மூலமாக நான் தெரிவிக்க விரும்பு வது, நீங்கள் எல்லாம் வனங்களை ஆராய்ச்சி செய்து, நிறைய மரங்கள் எல்லாம் அழிக்கப்பட்ட காரணத்தாலே, மழை பெய் வது குறைந்துவிட்டது என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு மரங்களை வளர்க்கவேண்டும் என்ற எண்ணத்திலே நமது அரசாங்கம் ஒரு கன்றுக்கு 2 ரூபாய் வீதம் பணம் கொடுத்து, உதவி செய்து, மரங்களை நடுகின்ற அளவிற்கு வன இலாகா அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறது. ஆனால், நாம் என்னதான் செய்தாலுங்கூட, நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், ஒரு மரத்தினுடைய பருவகாலத்திற்குக் குறைவாக அதை வெட்டினால் அப்படி வெட்டு பவர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும். ஒரு புளிய மரம்





இருக்கிறது என்று சொன்னால், அது ஆயிரம் ஆண்டுகளுக்கு பலன் அளிக்கக்கூடிய மரம். அப்படி பலன் அளிக்கக்கூடிய மரத்தை, ஆயிரம் ஆண்டுகாலம் வரை இருக்கக்கூடிய மரத்தை, வளர்க்க ஆரம்பித்த ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, அது கைக்கு சைசாக வந்தவுடன், யாராவது வெட்டிவிடுகிறார்கள். இது மாதிரி பலன் தரக்கூடிய மரங்களை, பழம் தரக்கூடிய மரங்களை, நிழல் தரக்கூடிய மரங்களை, சிறிய கன்றுகளாக இருக்கும்போதே வெட்டினால், அதற்குத் தண்டனை அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வன இலாகா திருடர்களைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். வனத்திலே மரத்தை திருடுபவர்கள், இன்றைக்கு அதற்காக திட்டமிடுபவர்கள்—அரசாங்கத்தினுடைய காவல்களை எல்லாம் அப்புறப்படுத்திவிட்டு—கை எப்படியோ ஓங்கிக் கொண்டே இருக்கிறது. எனவே வன இலாகாவிலே இருக்கிற அதிகாரிகளை எல்லாம் கடுமையாகக் கண்டித்து, தக்க நடவடிக்கையை அவர்கள் மீது எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் உத்தரவு இல்லாமல் எந்த மரமும் காணாமல் போவதற்கு வாய்ப்பில்லை. எனவே இவற்றை எல்லாம் கண்டுபிடிப்பதற்கு வன இலாகா மிகுந்த அக்கறை காட்டவேண்டும்.

அதேபோன்று சினிமா, இந்த சினிமாத் துறைக்கும் அமைச்சராக இருக்கின்ற திரு. சுவாமிநாதன் அவர்கள், உலகத்திலே இருக்கிற சாமிக்கு எல்லாம் நாதன். இந்த திரு. சுவாமிநாதன். சினிமாவிலே உங்களைக் கேவலப் படுத்து கிறார்கள், எம்.எல்.ஏ.-யைக் கேவலப்படுத்துகிறார்கள். அமைச்சர் களைக் கேவலப்படுத்துகிறார்கள், ஜாதி, சமயங்களை எல்லாம் கேவலப்படுத்துகிறார்கள். பெண்களை இழிவுபடுத்துகிறார்கள். இப்படி எல்லாம் படம் எடுப்பதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டுமா? இதை நீங்கள் பரிசீலனை செய்யவேண்டும். இந்த சினிமாக் கதையை எல்லாம் நீங்கள்தான் பார்க்கிறீர்கள். அவற்றை நீங்கள்தான் சரி பார்க்கிறீர்கள். அப்படிப் பார்க்கிற போது, இவற்றை எல்லாம் கட்டாயமாக வெட்டி விடவேண்டாமா?

நம்முடைய நாகரீகம் மிகவும் உயர்ந்த நாகரீகம். ஒரு ஜோடி புறாவைப் பார்த்தால் கூட தெரியும். அது தன்னுடைய மனைவியை விட்டு போவதில்லை. இரண்டும் ஜோடியாக வாழும்.

[திரு. ஆர். தியாகராசன்] [1987 ஏப்ரல் 30

நம்முடைய இந்து மத அமைப்புதான், உலகத்திலேயே ஓரே கணவன், ஓரே மனைவி என்று சொல்லக்கூடிய தத்துவத்தைக் கொண்டது. அப்படிப்பட்ட இந்து மதத்திலே பிறந்த ஒரு பெண்ணை, இன்றைக்கு சினிமாவிலே எந்தெந்த அளவிற்கு, எப்படியெப்படி காட்டி, கேவலப்படுத்த வேண்டுமோ, கற்பழிக்க வேண்டுமோ, அப்படியெல்லாம் செய்கிறார்கள். யார் சினிமாவிலே கற்பழிக்கிறார்கள் என்றால் எம்.எல்.ஏக்கள்

(முற்பகல் 10-20)

கற்பழிக்கிற மாதிரி வருகிறது. 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்று சொல்வார்கள். அந்த மாதிரி இந்த எம்.எல்.ஏ., எம்.பி., மந்திரிகள் எல்லாம் இவர்களிடம் மாட்டிக்கொண்டு முழிக்கிற முழி, எந்தவொரு சினிமாவிலும் எங்களை ஒரு ஷோ காட்டாமல் அவர்களால் இருக்க முடியவில்லை. தண்ணீர் இல்லாவிட்டால், தண்ணீர் இல்லை, தண்ணீர் எங்கே? இதற்கு சிலபேர் இங்கே' இருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், எடுத்த எடுப்பிலேயே நாட்டிலே எல்லா அமைப்புகளும் வந்துவிட முடியாது. இந்தியாவைப் பொறுத்தவரையில் படிப்படியாக முன்னேற்றங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அன்றிருந்த நிலை இல்லை இன்று. இந்த நிலையைச் சொல்ல எல்லோரும் மறுக்கிறார்கள். அன்றைக்கு நாம் வேட்டி கட்டிக்கொண்டிருந்தோம். ஆனால் இன்றைக்கு, துண்டு போடுகிறோம்; சட்டைப் போடுகிறோம்; பாடி போடுகிறோம்; வாச் கட்டுகிறோம்; சூட் போடுகிறோம்; கோட் போடுகிறோம்; இந்த அளவிற்கு இன்றைய நிலை வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆங்காங்கே சிறு குறைகள் இருக்கலாம்; இல்லையென்று சொல்லவில்லை. குறை கூறுவதற்கென்று ஒரு கூட்டமா? குறை சொல்லிக்கொண்டிருப்பது அவர்களுடைய வாடிக்கையா? எந்த நல்லது செய்தாலும் அதற்கு ஒரு கலாட்டா. நல்லது செய்வதைப் பாராட்டினால்தான் பொது மக்களுக்கு நல்லது செய்ய முடியும். ஆகவே அப்படிப்பட்ட சினிமாக்களை தடை செய்யவேண்டும். அப்படிப்பட்ட சினிமாக்களைப் பார்க்கக்கூடாது. சினிமா உலகத்திற்கென்று கட்டாயமாக நாம் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இப்படிப்பட்ட சினிமாக்கள் திரையிடுவதை தடுப்பதற்கு நீங்கள் எல்லாம் சட்டசபையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள். இப்பேர்ப்பட்ட சினிமாக்களை திரையிடும் சினிமாத் தியேட்டர்களுக்கு எப்படி அனுமதி கொடுக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களிடம் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.எல்.ஏ. மற்றும் அமைச்சர்கள் போன்றவர்களை கேவலப்படுத்தக்கூடிய வகையில் வரும் சினிமாப் படங்களை தடை செய்வது மத்திய அரசினுடைய கையிலே இருக்கிறது. நம்முடைய கையிலே இல்லை (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சினிமாக் கொட்டகைகள் உங்கள் கண்ட்ரோலில் இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்**: திரைப்படங்கள் சென்சார் செய்யப்பட்டு சர்டிபிகேட் கொடுத்துவிட்டால், அதை தடுக்க நம்மால் முடியாது. வேண்டுமானால் இங்கே தீர்மானம் போடலாம். இந்த மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து தீர்மானம் போடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இப்பேர்ப்பட்ட படங்களைக் காட்டினால் என்.ஓ.சி. கிடையாது. அப்படியில்லையென்றால் உரிமை நீக்கப்படும் என்று சொன்னால் நிச்சயமாக. ஒழுங்காக இருப்பார்கள்.

**திரு. ஆர். தியாகராசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தைத் தந்தார்கள்; நன்றி. மத்திய அரசாக இருந்தால் என்ன? மத்திய அரசாங்கத்திற்கு நீங்கள் சிபாரிசு செய்யுங்கள். இங்கே இந்தச் சட்டமன்றத்திலே கூட தீர்மானம் கொண்டு வாருங்கள்; நாங்கள் ஆதரிக்கிறோம். ஆதரித்த அந்தத் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்புங்கள். திட்டுவது என்றால், அவர்கள் நம்மை மட்டுமா திட்டுகிறார்கள்? இல்லை. அவர்களையும் சேர்த்துதான் திட்டுகிறார்கள்.

[1987 ஏப்ரல் 20

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். பெரியவர் நல்ல ஒரு உணர்வினை இங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றை வேண்டுகோளாக வைக்கிறேன். டெலிவிஷனிலே 'அடல்ட்ஸ்' என்று சொல்லப்படுகிற 'ஏ' சர்டிபிகேட் பெற்ற படங்கள் இப்போது வெளியிடப்படுகின்றன மத்திய அரசாங்கத்தால். அது தமிழகத்திலே இருக்கக்கூடிய குடும்பங்களின் தன்மைகள் இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்ட நிலையிலே இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு அரசு முன் வருமா? மத்திய அரசுடன் போராடுமா? காங்கிரஸ் கட்சி இதுபற்றி தீர்மானம் நிறைவேற்றுமா? இதை நீங்கள் எதிர்ப்பீர்களா என்பதற்கான உங்களுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆர். தியாகராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஒரு திட்டத்தை இங்கே கூறினார்கள். ஆனால், மத்திய அரசாங்கமாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும் நான் கேட்கிறேன்; நான் மதப் பிரச்சினையைப் பற்றித்தான் பேசுகிறேன். நான் காங்கிரஸ்காரனாக இருந்தாலும், மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே என்னுடைய கருத்து. மாநில அரசு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். நாமும் நம்முடைய மதத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறோம். அங்கே 4 பெண்களைத் திருமணம் செய்துகொள்வதற்கு அவர்களுடைய மதத்திலே சட்டம் இருக்கிறது. நீ ஏன்டா கட்டிக்கொள்கிறாய் என்று நாம் கேட்கிறோமா? நாம் ஒரே ஒரு பெண்டாட்டியோடு வாழவேண்டுமென்பது விதி. வட நாட்டிலே இருப்பவன் கட்டிக்கொள்வான். அது அவன் இஷ்டம். நம் நாட்டிலே என்ன செய்கிறோம்?

**திரு. கு. ராமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய தியாகராசன் அவர்கள் மதத்திலே நல்ல நம்பிக்கை உள்ளவர்கள் என்பதால் அவர் பேசுகிறார். அவர் பேசட்டும். ஆனால் இந்தச் சபையினுடைய கட்டுப்பாட்டுக்குக் கட்டுப்பட்டு பேசினால் நல்லது. ஒரு மதம் இந்த நாட்டை [illegible] விட்டது என்று சொல்வது சரியாகாது. அது மற்றவர்களைப்



1987 ஏப்ரல் 30] [திரு. கு. ராமணி]

ஆகவே, பொதுவுடைமைக்காரர்கள், பூமியெல்லாம்
புண்படுத்தும். விவசாயம் செய்யலாம் என்று
எங்களுக்குக் கொடுத்தால்தான் எல்லாவற்றுக்கும்
சொல்வது உண்மைக்கு மாறுபட்டது. அவருடைய பேச்சிலே
மேலாக 'ஏன்டா' என்ற வார்த்தை அவைக்குறிப்பிலே இருக்கக் கூடாது.
இருந்தது. அது நமது வேண்டுமென்று கேட்டுக்கொள்
அதைக் கொஞ்சம் கவனிக்க
கிறேன்.

**திரு. ஆர். தியாகராசன்:** மரியாதைக்குரிய மாண்புமிகு
சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு தர்ம சொத்துக்களை
பாதுகாக்க வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம். அங்கே
400 ஏக்கர் நிலம் இருக்கிறது. நான் யாரையும் குறிப்பிட்டு
பெயர் சொல்லவில்லை. அந்தச் சொத்துக்களை, போராட்
டத்திலே நிலத்தை எடுத்துக்கொண்டு குத்தகையே கொடுக்க
மாட்டோம் என்று 20 ஆண்டுகளாகச் சொல்கிறார்கள். அந்த
பிரகதீஸ்வரர் கோயிலுக்கு நிறைய சொத்து இருக்கிறது. அந்தக்
கோயில் சொத்திலே நீங்கள் தலையிட வேண்டாம். பணக்காரர்
களிடத்திலே இருக்கும் சொத்துக்களில் நீங்கள் தலையிடுங்கள்.
அங்கே இருக்கும் பொதுச் சொத்தில், கோயில் சொத்தில்
தலையிடவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வேறு
ஒன்றும் நான் சொல்லவில்லை.

ஆகவே மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த
சினிமாவிலே ஒரு பெரிய புரட்சியை மரியாதைக்குரிய நம்முடைய
அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்த வேண்டும்
என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிரகதீஸ்வரர் கோவில் ஒரு பெரிய ஸ்தலம். அது மாண்புமிகு
அமைச்சருக்கு நன்கு தெரியும். அவர் பக்கத்து ஊர்க்காரர்தான்.
அங்கே மரியாதைக்குரிய ஈஸ்வரர் இருந்தாலும்கூட அவருடைய
தலைவனாக அந்த பிரகதீஸ்வரர் 4 புலவர்களால் பாடப்பட்ட
ஸ்தலம் அது. அதற்கு 4 புறத்திலும் 4 தேவதைகள் இருக்கிறார்
கள். கொளஞ்சியப்பர், வேடப்பர், வெள்ளை மலையப்பர்,
[illegible] ஆயிரம் கொண்டவர் என்பவர்கள் அதை சுற்றி இருக்
கிறார்கள். அந்த ஸ்தலத்தை புண்ணிய ஸ்தலமாக கருதி 4
[illegible]க்கமும் வாகனத்தில் சுப்பிரமணியர் அவர்கள் அமர்ந்து இருக்

கிறார்கள். அந்த கொளஞ்சியப்பர் கோவிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு வருகிற வருமானம் 7 லட்சம் ரூபாய், அப்படிப்பட்ட பிரசித்தி பெற்ற அந்த ஸ்தலம் பற்றி அவருக்கு நன்கு தெரியும்.

இன்றைக்கு கங்கை கொண்ட சோழ புரத்தை எடுத்துக் கொண்டாலும் இப்படிப்பட்ட கோவில்கள் எல்லாம் அங்கே அமைந்து இருக்கின்றன. இந்த இடத்தில் ஒரு சுற்றுலா தலம் வேண்டி, அதை சுற்றுலா வட்டமாக கருதி இன்னும் பல ஊர்கள் கொண்டதாக அங்கே ஒரு ஏற்பாட்டைச் செய்து இவர் காலத்தில் தங்குவதற்கு விருத்தாசலத்தில் வழியே இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்தால்கூட பக்கத்தில் உள்ள தொழுப் பேட்டுக்குத் தான் போகிறார்கள் தங்குவதற்கு. அமைச்சர் வந்தாலோ, யார் வந்தாலோ, பெரியவர்கள் யார் வந்தாலோ, விருத்தாசலத்தில் தங்குவதற்கு இடம் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே உங்கள் காலத்திலாவது எங்கள் பகுதியில் ஒரு சுற்றுலா கட்டிடத்தை தயவுசெய்து கட்டித் தர வேண்டும் என்று மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கங்கை கொண்ட சோழபுரம் புராண கதையில் வந்து இருக்கக்கூடிய ஒரு ஸ்தலம். பெரிய ஸ்தலம். அதைச் சுற்றிப் பார்ப்பதற்கு நிறைய யாத்திரிகர்கள் வருகிறார்கள். அந்த விருத்தாசலம் வந்தால் அவர்கள் தங்குவதற்கு அங்கே இடம் இல்லை. அங்கே தங்குவதற்கு கட்டிட வசதி இல்லை. ஆகவே அங்கே ஒரு சுற்றுலா ஸ்தலம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொளஞ்சியப்பர் கோவிலில் இருக்கக்கூடிய பணத்தைக் கொண்டு கொளஞ்சியப்பர் கல்லூரியை அங்கே விருத்தாசலத்தில் ஏற்படுத்தி இருக்கிறோம். அந்தப் பகுதியில் அந்தத் தெய்வம் இல்லை என்றால் அந்தக் கல்லூரி வந்து இருக்காது. 100 ஏக்கர் நிலத்தை எடுத்து, அந்தக் கோவில் சொத்திலிருந்து 3 லட்சம் ரூபாய் எடுத்து அந்தக் கொளஞ்சியப்பக் கல்லூரியை இன்றைக்கு உருவாக்கி இருக்கிறோம். அந்தக் கல்லூரியில் தான் எங்களுடைய குழந்தைகள் எல்லாம் படிக்கிறார்கள். அப்படிப் பட்ட அந்தக் கொளஞ்சியப்பக் கோவில் சொத்திலிருந்து இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்



கொள்கிறேன். அந்தக் கொளஞ்சியப்பக் கோவில் வருமானம் பல வழிகளில் அழிக்கப்படுகிறது. அதை ஒழுங்கு செய்து அங்கே ஒரு தொழில் பேட்டை, ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே மாணவர்களுக்கு ஒரு தொழிற்பயிற்சிக் கல்லூரியாவது அந்த நிதியிலிருந்து, அதனுடைய நிலத்தைப் பயன்படுத்தி விருத்தாசலத்தில் ஒரு தொழில் கூடத்தை அமைப் பதற்கு அறநிலையத் துறையிலிருந்தும் செலவு செய்து எங்களுக்கு அமைத்துத் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் கோவிலுக்கு இருப்பது 11 ஏக்கர் நிலம் தான். அந்த 11 ஏக்கர் நிலம் போதாது. ஆனால் வருகிற வருமானம் நிறைய வருகிறது உண்டியல் மூலம். இருந்தாலும் அங்கே தங்குவதற்கு சரியான வசதி இல்லை.

திருமண மண்டபம் ஒன்று தான் பெரிய மண்டபமாக இருக்கிறது. 1,500 ரூபாய் வாடகை கொடுத்தால் தான் அதில் திருமணம் செய்ய முடியும். ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள் அதில் திருமணம் செய்வதற்கு முடியாது. ஆகவே ஒரு நடுத்தர மண்டபமாக 1 லட்சம் ரூபாய் செலவிலோ, அல்லது 50 ஆயிரம் ரூபாய் செலவிலோ ஒரு திருமண மண்டபம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஒரே நேரத்தில் அங்கே 500 திருமணங்கள் நடக்கின்றன. அப்போது அந்தக் கோவிலில் உட்காரக் கூட இடம் இருக்காது. அவ்வளவு திருமணம் அங்கே நடப்பதால் அங்கே 2 திருமண மண்டபங்களை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அங்கே இராஜ கோபுரம் கட்ட பெரிய திட்டம் போட்டு இன்றைக்கு குறிப்பில் கூட கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. பொது நிதியிலிருந்து தான் பணம் எடுக்கிறோம். இன்னமும் நன்கொடை வசூல் செய்கிறோம், யாத்திரிகர்களிடமிருந்து கேட்டு வாங்கித் தான் கட்டிக்கொண்டு வருகிறோம். அதற்கு நிதி ஒதுக்கி இந்த ஆண்டு முடிவுக்குள்ளே அந்த இராஜ கோபுரத்தை மாண்புமிகு கட்சித் தலைவர் இராமச்சந்திரனார் அவர்கள் திருக்கரத்தாலே திறந்து வைப்பதற்கு அந்த வேலையைத் துரிதம் செய்ய

வேண்டும், உடனடியாகச் செய்ய வேண்டும். இன்றைக்கு அரை கட்டிடம் வந்து விட்டது. இன்னும் ஒரு பகுதியை சீர் செய்து அதை நீங்கள் திறந்து வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் கொளஞ்சியப்பர் கோவிலைச் சுற்றியுள்ள நிலங்கள் எல்லாம் இப்போது நல்ல விலையில் அதிக விலையில் போகிறது. 1½ லட்சம் 2 லட்சம் என்று போகிறது. ஆகவே அந்த நிதியிலிருந்து 20, 30 ஏக்கர் நிலத்தை சுற்றிலும் வாங்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கிராமக் கோவில், செல்லியம்மாள் கோவிலை மற்றபடி எல்லாக் கோவில்களையும் அறநிலையத் துறை எடுத்துக் கொண்டது— அந்த ஒரு கோவிலைத் தான் எடுக்கவில்லை. ஆகவே அந்த செல்லியயம்மாள் கோவிலையும் உங்களோடு சேர்த்துக்கொண்டு அந்த நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஊரில் இருக்கும்படியான 4, 5 கோவில்களையும் எடுத்து உங்கள் பொறுப்பில் நிர்வகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா கோவில்களையும் பாதுகாப்பதற்கு திட்டம் போட்டுச் செய்ய வேண்டும். இன்னும் 5 கோபுரங்கள் இருக்கின்றன. அதில் 3 கட்டி ஆகிவிட்டது. இன்னும் 2 பாக்கி இருக்கிறது. அதையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு நேரம் பேச அனுமதி தந்த மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 10-30)

**திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை, அறநிலையத்துறை ஆகிய துறைகளின் மீது பேச வாய்ப்பளித்ததற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாவரங்கள், விலங்கினங்கள் போன்ற அனைத்து உயிரினங்களும், வாழப் பாதுகாப்பான உறைவிடமாக காடுகள் விளங்குகின்றன. ஒதுக்கக் காடுகளாகவும், வனவிலங்குப் புகலிடங்களாகவும் உள்ள ஏறத்தாழ 2,18,000 எக்டேர் பகுதி இன்னும் பசுமை மாறாத இயற்கைக் காடுகளாகவே உள்ளன என்று அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது பாராட்டத்தக்கது.





நமது மாநிலத்தின் நிலப்பரப்பில் 6-ல் ஒரு பங்கு காடுகளாக உள்ளன. 1985-86 ஆம் ஆண்டுபடி காடுகளின் மொத்தப் பரப்பு 22,379 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதை மேலும் விரிவுபடுத்தி முயற்சி எடுத்ததற்காக எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1986—87-ல் காடுகளின் மூலம் வருவாய் ரூ. 28.49 கோடியாகும். இந்த ஆண்டு செலவு ரூ. 34.40 கோடியாகும். அதிகமாகச் செலவு செய்து காடுகளை வளர்ப்பதற்கு புரட்சித்தலைவர் அரசு உத்தரவிட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். தமிழகத்தின் தானைத் தலைவர், புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் தான் 10 ஆண்டுகளில் காடுகள் வளர்ந்துள்ளன. அரசுத் தரிசு நிலங்கள் மற்றும் கால்வாய்ப்பகுதியிலுள்ள புறம்போக்கு, ஏரிக்கரைகளிலே, 242,592 ஏக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. காடுகளைப் பெருக்கவும், வன விலங்குகளைக் காக்கவும் கடந்த ஆண்டு ரூ. 20.27 கோடி செலவிடப்பட்டது. இந்த ஆண்டு சுமார் ரூ. 25.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகமாகப் பணம் ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் புதிய திட்டத்தின் கீழ் காடுகள் வளர்ப்பு செயல்படுத்தப்பட உள்ளது என்ற ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவர்கட்கும் மரம் வளர்ப்புப் பற்றிய ஓர் பாடத்திட்டம் புகுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்படி மரம் வளர்ப்புத் திட்டம், ஒரு மக்கள் இயக்கமாக உருவாக்கப்பட்டு விவசாயப் பெருங்குடி மக்களும், மாணவர்களும், மகளிரும், இளைஞர்களும் இப்பணியில் ஈடுபடுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது வரவேற்கத் தக்கது. இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் மேலும் நிச்சயமாக காடுகளில் நல்லமுறையில் நல்ல மரங்கள் வளர்க்கப்படும் என்று உறுதி அளிக்கப்படுகிறது.

வனத்துறை தற்போது சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், சில குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. குறிப்பாக எனது தொகுதியில் டி.ஏ. 74 காணிக்குடியிருப்பு மலைவாழ் மக்கள் வனத்தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு குத்தகை கொடுப்பது பற்றி, முண்டன்துறை

வனவிலங்கு காப்பாளரும், திருநெல்வேலி வனப்பாதுகாவலரும், ஏற்கனவே பரிந்துரை செய்துவிட்டார்கள். ஆனால் தலைமையகத்திலிருந்து இதுவரை எந்தவிதமான பதிலும் இல்லை. இந்தத் திட்டம் செயல்படுத்தப்படாத காரணத்தால் இந்தக் கூட்டுறவு ஒப்பந்தச் சங்கத்திற்கு குத்தகை கொடுக்கப்படாத காரணத்தால், அங்குள்ள மலை வாழ் மக்கள் பட்டினியும், பசியுமாக இருக்கிறார்கள்.

அதேபோன்று பாபநாசம் வனச் சரகத்தில் வனத்துறையிலிருந்து டெண்டர் மூலம் விடப்படும் வேலைகளை, கால அவகாசம் இன்றி, டெண்டர் நோட்டீஸ் விட்டு, ஆட்கள் வரவில்லை என்றும், குறித்த காலத்திற்குள், மார்ச்சிற்குள் வேலை முடிக்கப்படவேண்டுமென்று, சொல்லி நியமன அடிப்படையில் ஒரு சிலருக்கு மட்டும் கமிஷன் அடிப்படையில் வேலைகள் கொடுக்கப்பட்டு, முடிவடைவதற்கு முன்பே, வேலைகள் முடிந்துவிட்டதாக சான்றிதழ் வழங்கி, பணம் யாவும் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது. பின்னர் வேலைகள் முடிக்கப்படாத காரணத்தினால், நமது அமைச்சரவர்களுக்கு தந்தி மூலம் தெரியப்படுத்தப்பட்டு, பின் பணிகள் சமீபத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த வேலைகள் எல்லாம் எஸ்டிமேட்டிற்கும் அதிகமாகப் போடப்பட்டு, குறிப்பிட்ட காண்ட்ராக்டருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மலை வாழ் மக்கள் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்காமல், தனியாருக்குக் கொடுக்கப்பட்டது மிகவும் கண்டிக்கத்தக்க ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பாபநாசம், அம்பாசமுத்திரம் வனச்சரகத்தில் வாழையார், கன்னிகட்டு, காந்தப்பாறை, ராஜா எஸ்டேட், சிவசைலம், சின்னப்புல் ஆகிய ஏலக்காய் எஸ்டேட்டுகள் இருந்து வந்தன. தற்சமயம் ஏலக்காய்த் தோட்டங்களில் குத்தகை பீரியட் முடிந்துவிட்டது. ஆனால் இன்னும் அவர்கள் அந்தக் குத்தகை நிலங்களை விட்டு வெளியேறாமல் அவர்கள் முன்பு அனுபவித்ததைப்போல அனுபவித்துக் கொண்டு அந்த ஏலக்காய் மற்றும் மலை வளர்ச்சிப் பொருள்களை இன்றுவரை கைப்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதிகாரிகளிடம் பலமுறை சொல்லியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோல முண்டன்துறை வனவிலங்கு சரணாலய காப்பாளர்





அலுவலகம் ஒன்று முண்டன்துறையிலிருந்து 50 கிலோ மீட்டர் தள்ளி செங்கோட்டையில் இருக்கிறது. அதற்கும் செங்கோட்டைக்கும் சம்பந்தமே இல்லை. ஆனால் வனவிலங்கு காப்பாளருடைய அலுவலகம் அம்பாசமுத்திரத்தில் இருந்தால் மிகவும் உதவிகரமாக இருக்கும். ஆட்கள் செல்வதற்கும், அதிகாரிகள் வருவதற்கும் சௌகரியமாக இருக்கும். ஆகவே வனவிலங்கு காப்பாளர் அலுவலகத்தை செங்கோட்டையிலிருந்து அம்பாசமுத்திரத்திற்கு மாற்ற அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் வனச்சரகத்தின் வனக்காவல் நிலையம் பாபநாசத்தில் உள்ளது. வனக்காவல் நிலையத்தினுள் பொதுமக்களின் சௌகரியங்களுக்காக பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. பாபநாசம் வனச் சரகத்தில் பாபநாசம், சேர்வலாறு மின் திட்டங்களும், லோபர் டாம், அப்பர் டாம் சேர்வலாறு அணைகளும் உள்ளன. மலைப்பகுதியில் மலை வாழ் மக்களும் உள்ளனர். தற்சமயம் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை தான் மக்கள் செல்ல வேண்டும் அதற்கு மேல் மக்கள் செல்லக்கூடாது என்று புதிய உத்திரவுகள் பிறப்பித்திருக்கிறார்கள். மேலும் பேருந்துகள் கூட மாலை 6 மணிக்கு மேல் செல்லக்கூடாது என்று இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஏனென்றால் இந்த வனத்துறை சரணாலயம் வருவதற்கு முன்பாகவே இந்த அணைகள் கட்டப்பட்டு பல மின் திட்டங்களும் போடப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தப் பகுதியில் வசிக்கிறார்கள். அவர்கள் இரவு பகலாக, குறிப்பாக ஹாஸ்பிட்டல் மற்ற வசதிகளுக்காக கீழே உள்ள விக்கிரமசிங்கபுரத்திற்கு வரவேண்டிய சூழ்நிலை இப்போது இருக்கிறது. இந்த பஸ்கள் செல்வதற்கு கூட மறுப்பு தெரிவிக்கும்போது நிச்சயமாக இது பொது மக்களை மிகவும் பாதிக்கும். ஆகவே இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். பாலசுப்பிரமணியன்] [1987 ஏப்ரல் 30

அதே போல பாபநாசம் மலைப்பகுதியில் உள்ள லோயர் டாம் பகுதியில் மின்சார உற்பத்தி நிலையம் இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஆயிரக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் சில மாடுகள் வைத்திருக்கிறார்கள். அந்த மாடுகளை அவர்கள் மூன்றாண்டு காலமாக அந்தக் காடுகளிலே மேய்க்கின்றார்கள். இப்போது சரணாலயம் என்று அறிவித்துள்ளதால் இந்த இடத்தில் போகக் கூடாது; அந்த இடத்தில் போகக்கூடாது என்று உத்திரவு போடுகிறார்கள். ஆகவே ஒரு குறிப்பிட்ட இடத்தை மாடுகள் மேய்வதற்கு ஒதுக்கித்தர வேண்டும். குறிப்பாக் லோயர் டாமில் உள்ள மாடுகள் மேய்வதற்கு கோபால்தேரி பீட்டையும் அப்பர் டாமில் உள்ள மாடுகள் மேய்வதற்கு பாதர்மலைப் பீட்டையும் ஒதுக்குவதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இப்படி ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒதுக்கிக் கொடுத்தால் நிச்சயமாக பொதுமக்களால் இடைஞ்சல் இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பாபநாசம் மலைப்பகுதியில் வசிக்கும் ஆதிவாசி காணிகளுக்கு நிறைய பேர்களுக்கு விவசாயத்திற்கு இடம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே நிலம் இல்லாத ஏழை எளிய ஆதிவாசி பெருமக்களுக்கு விவசாயத்திற்கு உடனடியாக இடம் வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே மலைப்பகுதியில் உள்ள ஆதிவாசி காணிகளுக்கு குடிசை வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு மின்சார வாரியம் தயாராக இருந்தும் வனத்துறை அனுமதிக்காத காரணத்தால் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஆகவே வனத்துறை உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல கடந்த இரண்டு ஆண்டுகளாக முண்டந்துறை சரணாலயத்தில் மலை விளைச்சலினால் அரசுக்கு எந்தவித வருமானமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே தேன் இலவங்கம் குங்கிலியம் மற்றும் புளி போன்ற நல்ல விளை பொருள்களினால் லட்சக்கணக்கான ரூபாய் வரக்கூடிய அளவிலே இருக்கிறது. ஆனால் இன்றுவரை அதை குத்தகைக்கோ அல்லது மலைவாழ் மக்களுடைய ஒப்பந்த கூட்டுறவுச்



1987 ஏப்ரல் 30] [திரு. எஸ். பாலசுப்பிரமணியன்]

சங்கங்களுக்கோ கொடுக்காமல் சில தனியார்கள் கணக்கு வழக்கு இல்லாமல் தாங்களே எடுத்துவைத்துக்கொண்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10.40)

அதேபோல் இன்று காடுகளை நாம் எவ்வளவு வளர்த்தாலும், ஒரு பக்கம் அழிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. குறிப்பாக, இன்று இந்த நிமிடம் முதல் எனது தொகுதியில் முண்டந்துறை சரணாலயத்தில் காலை இரண்டு மணி முதல் காலை 5 மணி வரை லாரி, லாரியாக மரங்கள், பச்சை மரங்கள் வெட்டப்பட்டு, கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது சம்பந்தமாக நான் சில அதிகாரிகளுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் தந்தி கொடுத்தும் மற்றும் புகார்களும் அடிக்கடி கொடுத்துள்ளேன். ஆனால் இது சம்பந்தமாக என்னை என்ன நடந்தது என்று ஒரு அதிகாரியாவது கேட்டதில்லை. ஆகவே, இனிமேலாவது அந்தச் சரணாலயத்தில் என்ன நடக்கிறது என்று சம்பந்தப்பட்ட உறுப்பினர் தகவல் தெரிவித்தால் நிச்சயமாக அவர்களை அழைத்து என்ன நடந்தது, அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற ஒரு தகவலையாவது எங்களுக்குத் தெரிவிக்குமாறு நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல், வனத்துறை குழு என்று மாநிலத்திலே ஒரு குழு உள்ளது. இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவிலே இதுவரை போட்டுள்ளீர்கள். அதிலே நானும் ஒருவன். இதுவரை அந்தக் குழுவினுடைய ஒரு கூட்டம் கூட நடைபெற்றதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட ஒரு வனத்துறையின் ஆலோசனைக் குழுக் கூட்டம் சுமார் 6 மாதத்திற்கு ஒரு தடவையாவது நடந்தால், நிச்சயமாக இதைப்போல் பல சின்னஞ்சிறிய குறைகளை எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, 6 மாதத்திற்கு ஒரு தடவையாவது அந்தக் குழுவைக் கூட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திடவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

வனத்துறை சிப்பந்திகளுக்கு, சிறிய தவறுகளுக்கு அதிகபட்சமாக தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அதிகமாக குற்றச்சாட்டு ஆணைகளும் பிறப்பிக்கப்படுகின்றன. இன்று

ஒரு வனப் பாதுகாவலர் என்ன தண்டனை கொடுக்கிறாரோ அதைத் தான் வனத்துறைத் தலைவரும் பரிந்துரை செய்ய வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. அதனால் ஏழை எளிய வனத்துறை சிப்பந்திகள் பாதிக்கப்படுகின்றனர். அவர்களைத் தீர விசாரித்து அவர்களுக்குரிய நியாயம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் செக் போஸ்டுகளைப் பொறுத்தவரையில் இன்று மிகவும் மோசமான நிலையில் செயல்படுவதாகத் தெரிகிறது. உதாரணமாக, என்னுடைய தொகுதியில் உள்ள செக்போஸ்டைபற்றிச் சொல்லவிரும்புகிறேன். தற்போது ஏராளமாக, நீதி மன்றத்தின் மூலமாக ஸ்டே ஆர்டர் பெற்று, Form 2 பெர்மிட்டும் இன்றி நீதிமன்ற ஆணையை ' ஜெராக்ஸ் காப்பி நகல் எடுத்து, இலட்சக்கணக்கான மரங்கள் லாரிகளில் கடத்தப்பட்டு வருவதாக பல பகுதியிலிருந்து புகார்கள் வருகின்றன.

இவ்வாறான ஸ்டே ஆர்டர்களை ரத்து செய்து, விரைவான நடவடிக்கையை வனத்துறைத் தலைவர் எடுக்கவேண்டும். அதை எடுக்காததால் காடுகள் நிறைய அழிக்கப்படுகின்றன. இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு உதாரணம் என்னுடைய தொகுதியிலுள்ள காடுகளே ஆகும்.

அதுபோல், ஆயிரக்கணக்கான சிப்பந்திகள் சம்பள உயர்வு, பி. எஃப். லோன், ஊதிய நிலுவை பாக்கிகள், சரண்டர் லீவ், எல். டி. சி. சம்பளம், பென்ஷன் பாக்கி போன்றவைகள் நிலுவையில் உள்ளன. இன்று அதிகமான தொகைகள் வனத்துறை ஊழியர்களுக்குக் கொடுக்கப்படவேண்டி இருந்தும், உயர் மட்ட அதிகாரிகள் சிலர் இன்று சுற்றுலா செல்லக்கூடிய முறையிலே இருக்கின்றார்கள். குறிப்பிட்ட எந்த அதிகாரி சுற்றுலா செல்லவேண்டுமோ, அந்த அதிகாரி சுற்றுலா செல்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாபநாசத்திலே வற்றாத ஆறுகள் ஓடுகின்றன. அவற்றை சுற்றுலா மையமாக ஆக்கி, அங்கு பல இளைஞர் விடுதிகளைக் கட்டுவதன் மூலமாக அதைச் சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டும்.





நெல்லை மாவட்டத்திலே 16 எம். எம். சினிமா படம் காட்டக்கூடிய பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இன்று சட்டப்பூர்வமாக அந்த மிஷின்கள் எல்லாம் தமிழகத்திலே தயாரிக்கப்படுகின்றன. சட்ட பூர்வமாக அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் அந்தப் படத்தைக் காட்டுவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும். இன்று விடியோ தொழிலுக்கு ஏழைகளின் அரசு, ஏழைகளின் காவலன் புரட்சித்தலைவர் அவர்கள் அங்கீகாரம் அளித்து, அதன்மூலம் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்கின்றார்கள்.

அதனைப்போல், 16 எம். எம். காட்டக்கூடிய சினிமாக் கலைஞர்களும் நிறைய பேர் தமிழகத்திலே இருக்கிறார்கள். அவர்கள் வாழ வழி செய்து, குறிப்பாக, திருவிழாக்கள் மற்றும் திருமண வைபவங்களில் 16 எம். எம். படம் காட்டுவதற்கு சட்டப்படி லைசென்சு வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்று, அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பெற்றார்).

(மாற்றுத் தலைவர் தலைமை)

**திரு. எஸ். ரெத்தினராஜ்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம், சின்கோனா, காட்டுவனத் துறை, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியங்களுக்காக 1987—88 ஆம் ஆண்டிற்கு கிட்டத்தட்ட ரூ. 50,76,56,000 அளவுக்கு அவையின் அனுமதியைக் கேட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொள்கை விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள்.

இந்த மானியங்களுக்காகத் தரப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளைப் பொறுத்த வரையில்—அதிலும் குறிப்பாகக் காட்டுவளத் துறை குறித்த மூலதனச் செலவு மற்றும் காட்டுவளம் ஆகிய இரண்டிற்கும் சேர்த்து ஏறத்தாழ ரூ. 39,18,73,000 அளவுக்கு செலவினத்திற்கான அனுமதி கோரப்பட்டிருக்கிறது.

வனத்துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்தின் நிலப்பரப்பில் 17.22 சதவீத நிலப்பரப்பு காடுகளாகவும் ஒதுக்க நிலங்களாகவும் வகைப்படுத்தப்பட்ட காடுகளாகவும் உள்ளன. இவை

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1987 ஏப்ரல் 30

அனைத்தும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு நீர் ஆதாரத்திற்கும் மூலகாரணமாக உள்ளது என்று இங்கே தெளிவாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே சுட்டிக் காட்டியிருப்பதைப் போல் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் அடிப்படைச் சுகாதாரத்திற்கும், நல்வளத்தைக் காக்கவும் காடுகள் உதவுகின்றன. இது மறுக்க முடியாத உண்மைதான். விஞ்ஞானபூர்வமான உண்மை என்றுகூட சொல்லலாம். ஆனால், நடைமுறையில் இன்றைக்கு காடுகள் ஒழிக்கப்படுகிற நிலையில் மழை குறைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில்—அதுவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில்—கிட்டத்தட்ட 20,000 ஏக்கர் நிலத்தில் காடுகள்—ரிக் பாரெஸ்ட்—அழிக்கப்பட்டுள்ளன. அந்த இடத்தில் ரப்பர் மரங்கள் நடப்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். மேலும் ரப்பர் லாபகரமான ஒரு விவசாயம்தான். ஆனால், காட்டைவிட—ரிக் பாரஸ்டை விட—அது அவ்வளவு உயர்வானது அல்ல. ஒருவேளை அது அதிகப்படியான வருவாயைத் தருவதாக இருக்கலாம். ஆனால் மழை பெய்கிற தன்மையைப் பொறுத்தவரையில் ரப்பர் போட்டுவிட்ட காரணத்தால்—ரிக் பாரெஸ்ட் குறைந்துவிட்ட காரணத்தால்—இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் மழை குறைந்து வறட்சி நிலவுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

வன இலாகாவைப்பற்றி சொல்லும்போது அந்த இலாகா வனத்தை ஓரளவுக்குப் பாதுகாக்கிறது—அதாவது பிரிசர்வேஷன் செய்கிறது. அடுத்தபடியாக degeneration, that is natural, sometimes artificial அதாவது செயற்கையாக காட்டை உண்டாக்குகிறபோது அது பெரிதாக இருப்பது நல்லதுதான். ஆனால் அந்தக் காடும் வளமானதாக, அடர்த்தியானதாக இருக்க வேண்டும் என்று பார்க்கிறபோதுதான் நம்முடைய அதிகாரிகள் அங்கே அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.



1987 ஏப்ரல் 30] [திரு. எஸ். ரெத்தினராஜ்]

வனத்துறையின் மூலமாக நாம் அதிகமாக மரங்களை நட்டுக் கொண்டிருக்கிறோம். உண்மைதான். ஆண்டுதோறும் நட்டுக் கொண்டிருக்கிறோம். வனத்துறையில் கணக்குக் காட்டப்படுகிற அடிப்படையில் பார்த்தால் ஆண்டுதோறும் நாம் அதிகப்படியான இடங்களில் மரங்களைப் பயிரிட்டு காடுகளை உண்டாக்கி வளர்த்து வருகிறோம். அத்தகைய காடுகளையெல்லாம் ரிசர்வ் பாரெஸ்டோடு சேர்த்திருக்கிறோம் என்ற கணக்கையெல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமக்குத் தெளிவாகத் தந்திருக்கிறார்கள்.

ஆனால் வனத்துறையைப் பொறுத்த வரையில் அங்கே வேலை செய்யும் தினக் கூலிகளுக்கு வழங்கப்படும் கூலி மிகவும் குறைவாக இருக்கிறது. வனத்துறையில் கூலி வேலை செய்பவர்களுக்கு என்று தனியாக ஒரு கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சாதாரணமாக காடுகளை—மரங்களை—நடவேண்டுமென்று ஆட்களை வேலைக்கு அமர்த்தினால் அவர்களுக்கு என்று ஒரு ஷெட்யூல் ஆப் ரேட் ஆப் வேஜஸ் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே பி.டபிள்யூ.டி. இலாகாவில் இருப்பதைப் போல் மற்றும் ஊராட்சி மன்றங்களில் நாம் நிர்ணயம் செய்திருப்பதைப்போல் கூலியை நிர்ணயித்து அங்கே கூலிவேலை செய்பவர்களுக்கு கூலி தந்தால்தான் அங்கே முறைகேடுகள் தவிர்க்கப்பட்டு, அதிகமான அளவுக்கு உண்மையான காடுகளை வளர்க்க ஏதுவாக இருக்கும். அப்படி இல்லை என்றால் தொடர்ந்து முறைகேடுகள் இருக்கதான் இருக்கும். இப்போது அங்கே முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

முறைகேடுகள் தொடர்ந்து நடைபெறுவதைத் தடுக்க வேண்டியது நம்முடைய கடமை. எல்லா திட்டங்களையும் நிறைவேற்றும்போது அடிமட்டத்திலுள்ள ஊழியர்கள் முறைகேடுகள் இல்லாமல் வேலைகளைச் செய்தால்தான் திட்டங்கள் நிறைவேறும். இந்தத் துறையைப் பொறுத்த வரையில் அண்மைக் காலத்திலே ஒரு தேக்க நிலை இருக்கிறது. பத்து பதினைந்து

ஆண்டு காலமாக இந்தத் துறை வளர்ந்து வந்திருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்தபோது காடுகளில் வேட்டையாடினார்கள். ரெயில் தண்டவாளம் போடுவதற்காக மரங்களை வெட்டினார்கள். கட்டிடப் பணிகளுக்காக மரத்தை வெட்டி பயன்படுத்தினார்கள். இன்றைக்குப் படிப்படியாக அதன் தேவை உணரப்பட்டு அந்த வேலையின் காரணமாக conservation is very important and necessary என்று உணர்ந்து அன்றைக்கு இருந்த சென்னை இராஜதானியில் கன்சர்வேட்டரை நியமித்தார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த மன்ற உறுப்பினர்களும் அறிவார்கள். ஆங்கிலேயர்கள் காலத்திலே காட்டிலேயிருந்து வந்த வளம், அன்றைக்கு அதிலிருந்து கிடைத்த செல்வங்கள் இன்றைக்கு உதாசீனப்படுத்தப்பட்டு பாழடிக்கப்பட்டிருக்கிறன என்ற குற்றச்சாட்டை இந்த அவையின் துணைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

என்னைப் பொறுத்த வரையில் இந்தத் துறை மிகவும் வளர வேண்டும், அதனாலே வளம் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாகத்தான் சொல்லுகிறேனே தவிர, வேறல்ல. வறட்சியால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது நாடும், காடும் சுடுகாடாக மாறிவிடக் கூடாது என்பதால் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் துறை பல்வேறு வளங்களைப் பெற்று, பல நன்மைகளைப் பெற்றிருக்கிறது. இந்தத் துறையில் தேயிலைத் தோட்டங்கள் போடப்பட்டு அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்திருக்கிறது. தேயிலைத் தோட்டங்களிலிருந்து நாம் அந்நியச் செலாவணியைப் பெற்றிருக்கிறோம். அது மட்டுமல்ல. தேயிலைத் தோட்டத்தை வளர்த்ததன் காரணமாக அதற்கடுத்தபடியாக இரப்பர் தோட்டத்தை வளர்த்தோம். இதனால் பொருளாதார வளத்தைப் பெற்றோம். இதனால் இரப்பர் கூட நம்மாலே தயார் செய்ய முடிந்தது. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு பிளான்டேஷன் கார்ப்பரேஷன் ஏற்படுத்தி, யூக்கலிப்டஸ் மரங்களை நட்டு, அதன் உற்பத்தியைப் பெருக்க முடிந்தது. அதற்கடுத்து பரங்கிமலாவை நட்டோம். பரங்கிமலாவை நட்டார்கள், வளர்த்தார்கள், அது செழித்தோங்கி வளர்ந்திருக்கிறது. ஆனால் இதனால் வந்த வருவாயைக் கணக்கிட்டுப்





பார்க்கும்போது அதிகாரிகளும், அமைச்சர் அவர்களும் பெரிய அளவில் வருவாயைக் காட்ட முடியாது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். காரணம் அந்த மரங்களைப் பொறுத்த வரையில் அதில் கிடைக்கிற வருவாய் சமூகவிரோதிகளால் எடுத்துச் செல்லப்பட்டு விடுகிறது. வருவாய் சுரண்டப்பட்டு விடுகிறது. அதிலே வருவாய் அரசுக்கு வருவதில்லை.

யூக்கலிப்டஸ் மரத்தைப் பொறுத்த வரையில் பல்வேறு கருத்துக்கள் பொது மக்கள் மத்தியிலே இருந்து பீதியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. யூக்கலிப்டஸ் மரங்களை வளர்ப்பதால் மலைப் பகுதிகளில் கிரீப்பர்கள், உருளைக் கிழங்கு போன்றவை பயிரிட முடியாது, வறட்சி வந்துவிடும் என்றும், இதனால் உதகமண்டலப் பகுதியில் மண் அரிப்பு ஏற்படுகிறது என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே என்னைப் பொறுத்த வரையில் ஒரு டெக்னிக்கல் எக்ஸ்பார்ட்ஸ் கமிட்டியைப் போட்டு அறிக்கை பெற ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு காலத்திலே கேரள அரசு ஓர் அறிக்கையை வெளியிட்டது. அங்கே கிராம மக்கள் யூக்கலிப்டஸ் மரங்களை வெட்ட வேண்டும் என்று சொல்லி வெட்டியபோது கேரள அரசு ஓர் அறிக்கையை வெளியிட்டது. யூக்கலிப்டஸ் மரத்தைப் பயிரிடுவதால் நீர்த் தடுப்பு ஏற்படாது, கரையில் உள்ள நீரை ஆவியாக்கும் தன்மை இதற்கில்லை என்று விஞ்ஞானிகளை வைத்து ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். விவசாயத் துறையிலே கூட ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். யூக்கலிப்டஸ் எதற்காக பயன்படுகிறது? பேப்பர் தொழிற்சாலைக்குப் பயன்படலாம். இன்னும் மருந்துகளுக்குக் கூட பயன்படலாம். ஆனால் அதிலிருந்து வருகிற வருவாயைவிட, அதிலிருந்து வருகிற இலாபத்தை விட இழப்புகள், மண் அரிப்புகள் அதிகமாக ஏற்படுகின்றன என்பதால் நிச்சயமாக இந்தத் துறை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஃபார்ம் பாரஸ்ட்ரி, சோஷியல் ஃபாரஸ்ட்ரி போன்ற திட்டங்கள் பயன் உள்ள திட்டங்களாக இருக்கின்றன. இப்படி பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி இந்தத் துறை படிப்படியாக வளர்ந்த பிறகு இப்போது, இரண்டு, மூன்று ஆண்டுகளாக

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1987 ஏப்ரல் 30

இந்தத் துறையில் தேக்க நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு துணைத் தலைவர் அவர்களின் மூலமாகக் கொண்டு வருகிறேன்.

பரங்கிமா வளர்ப்புத் திட்டத்தால் இலாபம் இல்லை என்றாலும், யூக்கலிப்டஸ் வளர்ப்புத் திட்டத்தால் மண் அரிப்பு இருக்கிறது என்றாலும், நல்ல நோக்கத்தோடுதான் இத்தகைய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவை பயனுள்ளதாக இருந்து கொண்டிருக்கின்றன. இதைச் சொல்கிறபோது இந்தத் துறையில் நடக்கிற சில நிர்வாகச் சீர்கேடுகளை சுட்டிக் காட்டுவதும், அதனால் ஏற்படுகிற தவறுகள் என்ன என்பதைச் சுட்டிக் காட்டுவதும் என்னுடைய கடமை என்று கருதுகிறேன்

நம்முடைய ஆளும் கட்சி உறுப்பினர், சகோதரர் மாண்புமிகு பாலசுப்பிரமணியம் அவர்கள் வனத் துறையில் நடைபெறுகிற தவறுகளையும், ஊழல்களையும் சுட்டிக் காட்டினார்கள். காடுகளிலே மரங்கள் கடத்திச் செல்லப்படுகிறது என்றும், அப்படிக் கடத்திச் செல்லப்படுவதைக் கண்டுபிடித்து சுட்டிக் காட்டினால் நடவடிக்கை எடுக்கத் தவறிவிடுகிறார்கள், மேல் அதிகாரிகள் மட்டத்தில் ஏதோ தவறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். இந்தத் துறையின் தலைவர் இன்றைக்கு வெளி நாட்டுப் பயணம் போகிறார் என்பதையும் சொல்லி, வேறு ஒருவரை அனுப்பக்கூடாதா என்று கேட்டார்கள். பயணம் இன்று அல்லது நாளை துவக்க இருக்கிறார் என்பதால் அதை மாற்ற முடியாது என்று எனக்குத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் அப்படி வேதனையோடு சொன்னதற்குக் காரணம், இந்தத் துறையின் தலைமைப் பொறுப்பிலே உள்ள தலைவர் இந்தத் துறையில் அக்கறை இல்லாமல், இந்தத் துறையில் பணி புரிபவர்கள்மீது அக்கறையில்லாமல், மக்கள் பிரதிநிதிகளிடம் மரியாதையில்லாமல் இருக்கிறாரோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், வனத் துறையில் நடைபெறும் திருட்டுக்களைச் சுட்டிக் காட்டும்போது நடவடிக்கைகள் இல்லாமல் இருப்பதால், இந்த இலாக்காமீது அவர் அக்கறை இல்லாமல் இருக்கிறாரோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 30] [திரு. எஸ். ரத்தினராஜ்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் முண்டந்துறை கடத்தல் பற்றிச் சொன்னார்கள். 1984 என்று நினைக்கிறேன். அங்கே பெரிய அளவில், 25 இலட்சம் மதிப்புக்கு கடத்தல் நடைபெற்றது. அது பொதுமக்களாலும், காவல் துறையாலும் பிடிக்கப்பட்டது என்ற செய்தியை மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். மதுரையில் கம்பம் பகுதியில் 1985-ல் சுமார் 15 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான கழிகள் பிடிபெற்றன. வனத் துறை அதைத் தடுக்க முடியவில்லை, கண்டுபிடிக்க முடியவில்லை. காவல் துறை அதைத் தடுத்துப் பிடிக்கிறது. பொது மக்களும் சேர்ந்து பிடிக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் பேமஸ் ஸ்கேன்டல் ஆஃப் சேன்டல் . . . (மணி அடிக்கப்பெற்றது) மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தரப்பட்டிருக்கிற மானியம் மிகப் பெரிது. நான் வாழ்கிற பகுதியில் கிட்டத்தட்ட 20 சதவிகிதம் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது வனம். இந்தப் பரந்த பூமியில், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, இந்து அறநிலையத் துறை பெரிய துறை. 'மே டே' நாளைக்கு எல்லோரும் போகவேண்டும். எனவே சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன்.

ஸ்கேன்டல் ஆஃப் சேன்டல் என்று பத்திரிகையில் போட்டார்கள். நடந்த சம்பவம் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியும். நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் 1986 ஆம் ஆண்டு சேலத்திலே பருவமாகாத சந்தன மரங்களை வெட்டினார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டது. பல்வேறு பத்திரிகைகளில் செய்தி வந்தது. இந்த ஆண்டு சென்னையில் பொது மக்கள் சுட்டிக்காட்டி, காவல் துறை நடவடிக்கை எடுத்து. சந்தனக் கட்டை திருட்டு பிடிபட்டிருக்கிறது. இது பத்திரிகையில் வந்த செய்தி. இப்படி காடுகளைப் பாதுகாக்கும் அதிகாரிகளின் கண்ணில் இருந்து தப்பி, வன அதிகாரிகள் கண்ணிலிருந்து தப்பி, காவல் துறையும், பொது மக்களும் கண்டுபிடிக்கும் அளவுக்கு வந்தால், இந்தத் துறையின் நிர்வாகம், தலைமை எப்படி இருக்கும் என்பதை அமைச்சரவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1987 ஏப்ரல் 30

ஓராண்டுக்கு முன்னால் கல்கி பத்திரிகையில், 15—6—1986-ல் ரப்பர் கழகமா, ஊழல் கழகமா என்ற செய்தி வந்தது. குமரி மாவட்ட மலரில், குமரி மாவட்டத்தில் ரப்பர் பேக்டரியிலிருந்து 15 லட்சத்திற்கு மேலுள்ள ரப்பர் கடத்திச் செல்லப்பட்டது. அதை காவல் துறைதான் கண்டுபிடித்தது என்றெல்லாம் செய்திகளைப் பார்த்தோம். 20 இலட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பாம்புத் தோல் சென்னையில் கைப்பற்றப்பட்டது. இப்படிப்பட்ட சம்பவங்கள் எதைக் காட்டுகிறது என்றால் வனத்தைப் பாதுகாக்க வேண்டிய அதிகாரிகள் அதிலிருந்து தவறிவிட்டார்கள் என்பதைத்தான் காட்டுகிறது. இன்னும் சொல்லப்போனால் நம்முடைய வனத் துறையில் அலுவலர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. அதை உணர்கிறேன். காவலர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. அதை அதிகரிக்க வேண்டும். வட ஆற்காடு மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்திலும் நடைபெற்ற திருட்டுக்கள் பற்றி கோடிட்டுக் காட்ட நேரமில்லை. இருந்தாலும் இத்தகைய நிர்வாகச் சீர்கேடுகளுக்குக் காரணம் என்ன என்பதை மட்டும் குறிப்பிட்டுக் காட்டி என்னுடைய உரையை இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

இந்தத் துறையில் 1984–85-ல் 43 பேர்கள் ஃபாரஸ்ட்டரி பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் பயிற்சி முடிந்து வருவதற்குள் அங்கேயிருந்தவர்களுக்கு அந்த புரோமோஷனைக் கொடுத்து இந்த இடங்களை நிரப்பிவிட்டார்கள். அதனால் அவர்கள் வேறுமனே இருந்தார்கள். அடுத்த வருடமும் இன்னொரு 43 பேர்கள் பயிற்சிக்கு அனுப்பி அவர்களும் பயிற்சி முடிந்து திரும்பிவந்தார்கள். அவர்களுக்கும் வேலையில்லை என்ற நிலைமை ஏற்பட்டது. அதனால் அவர்கள் உயர்நீதி மன்றத்திலே வழக்குப்போட்டு அவர்கள் இன்று நீதி பெற்றிருக்கின்றார்கள். ஒருவர் பயிற்சி பெறுவதற்கு இருபதனாயிரம் ரூபாய் அளவுக்குச் செலவு ஆகிறது. அவர்களுக்கு பயிற்சி அளித்துவிட்டப் பிறகு அவர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு வேலை கொடுக்காமல் இருப்பது முறைதானா என்பதை இந்த அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வனத்துறையில் அதிகாரியாக இருந்து பாடுபட்டு செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒருவர், அவருடைய பெயர் எனக்குச் சரியாக நினைவு இருக்குமானால், திரு. டி. ஷண்முகம் என்பவர் அவர்கள்-இந்த இலாக்கா தலைவரின் மீதும், இந்த இலாகாவில் தவறுகள் நடக்கின்றது என்பதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் சுட்டிக்காட்டினார்கள் என்பதற்காக அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அதற்குப் பிறகு அவர் மீது வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்லி அவரை வேலைநீக்கம் செய்தார்கள். அவர் உயர்நீதி மன்றத்திலே வழக்குப் போட்டு இன்று அவர்கள் வேலையில் இருக்கின்றார்கள். அவர் கொடுத்த குற்றச்சாட்டுகள் உண்மையாக இருக்குமானால் அதை பரிசீலிப்பதற்கு, சாதிப்பதற்கு ஒரு கமிஷனை அமைச்சர் அவர்கள் நியமித்திருக்கின்றாரா அல்லது இனி நியமிக்க இருக்கின்றாரா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 30] [திரு. எஸ். ரெத்தினராஜ்]

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நடந்த மானிய கோரிக்கையின் மீது பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். உச்ச நீதி மன்றத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பாப்பு வில்லேஜில் ஒரு பகுதியில் ஒருவர் அவருக்கு நிலம் சொந்தமானது என்று தீர்ப்பு வாங்கினார்கள். கிட்டத்தட்ட 30 ஏக்கர் நிலம். அந்த 30 ஏக்கர் நிலத்திலே இருந்த காடுகளில் இருந்து சமூக விரோதிகள் சிலர் மரத்தை வெட்டிக்கொண்டு சென்று விட்டார்கள். அதற்கு அதிகாரிகள் துணையாக இருந்திருக்கின்றார்கள். இன்னும் அந்த வழக்கிலே சம்பந்தப்பட்ட சொத்தில் 25 ஏக்கர் நிலம் சர்க்காருக்குச் சொந்தமானது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்படி தீர்ப்பு வழங்கப்பட்டபிறகும் அந்த நிலம் கையகப்படுத்தப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிக நேரம் ஆகிவிட்டது. இன்று மாலை நடத்தமுடியாது. பேசுங்கள்.

**திரு. எஸ். ரெத்தினராஜ்:** மற்ற துறைகள் பற்றி நான் பேசவில்லை. தயவு கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிலத்தைக் கையகப்படுத்திடவேண்டும். அதிலிருந்து வெட்டி கடத்திச்செல்லப்பட்ட மரங்கள் எவ்வளவு? அதன் மதிப்பு எவ்வளவு? ரூ. 50 லட்சத்திற்கும் அதிகமாகவே இருக்கும். அதை குறிப்பிலே வைத்துக்கொண்டு அதிலே உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளை வைக்கிறேன்.

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1987 ஏப்ரல் 30

நம்முடைய சோசியல் ஃபாரஸ்ட்டரியைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு 108 கோடி ரூபாயைக் கடனாகப் பெற்று இருக்கிறோம். மானியமாகவும் கடனாகவும் ஸ்வீடன் நாடு தந்திருக்கிறது. மனம் உவந்து தந்திருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தை கிராமப் பகுதியிலே வேலைவாய்ப்பை உருவாக்கிக்கொடுப்பதற்காகத்தான் நாம் அமுல்படுத்துகிறோம். அந்த கிராமப்பகுதிகளுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யத்தான் இந்தத் திட்டம் வருகிறது. நாம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை அண்ணா இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் மேனேஜ்மெண்ட் பேகல்ட்டி மெம்பர் திரு. ஸ்ரீனிவாசன் அவர்கள் அந்தத் திட்டத்தின் நடைமுறைபற்றி அவர்கள் ஒரு அறிக்கை தந்திருக்கின்றார்கள். அந்த அறிக்கையில் " In some instance, there were even instances of subordinate staff murmurring that the funds get systematically depleted, stage by stage, before they reach the grass-root level staff. They are helpless and they are constrained to resort to means of economising on the planting areas and trees and hence, perhaps, the discrepancy between the records and the reality. " என்று சொல்லியிருக்கின்றார்கள். இதை வைத்துக்கொண்டு, அதை குறிப்பாக வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஸ்வீடிஸ் இண்டர்நேஷனல் டெவலப்மெண்ட் அத்தாரிட்டியினுடைய ஒரு டிவிஷனைச் சேர்ந்தவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இங்கே லேபர்களுக்கு, விவசாயிகளுக்கு இருப்பது போல கூலிகள் கொடுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டிக் கொள்கின்றேன். இது செகண்ட் ஃபேஸ்-ல் இருக்கிறது. 1985-க்குப் பிறகு நடைமுறைப்படுத்துகின்ற இந்தத் திட்டத்திலே விவசாயப் பணியாளர்களுக்கு வசதிகளை அதிகப்படுத்தித் தர வேண்டும் என்று அவர்கள் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

* திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கை எண் 12, 25, 45, 47 மற்றும் 56 ஆகியவைகளின் மீது என்னுடைய கருத்துக்களை நான் இங்கே எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்



1987 ஏப்ரல் 30] [திரு. சோ. கலிதீர்த்தான்]

நாட்டின் மொத்த பரப்பளவில் 17 சதவிகிதம் காடுகள் உள்ளன. மாவட்டங்களில் காடுகள் அதிகமுள்ள மாவட்டங்கள் என்று பார்த்தால் அவை வட ஆற்காடு, தர்மபுரி, மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்களாகும். அதுபோல குறைந்த அளவு காடுகள் உள்ள மாவட்டங்கள் செங்கல்பட்டு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களாகும். இன்றைக்கு மாவட்டங்களிலுள்ள வனத்தின் பரப்பை எடுத்துக்கொண்டாலும், காட்டுச் செல்வங்களின் உற்பத்தியை எடுத்துக்கொண்டாலும் ஆண்டுக்காண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் அவைகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. காடுகள் தான் இயற்கைச் செல்வம் காடுகள் தான் மழையைக் கொண்டு வரும் சாதனம் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதற்காகத் தான் இந்த அரசு காடுகளின் பரப்பளவை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

மர வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1985—86-ல் சுமார் 1,214 லட்சம் மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 30 ஆயிரம் ஹெக்டேர் காடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதுபோல பல்வேறு வனப் பணி திட்டங்களின் கீழ் 531 லட்சம் மரக் கன்றுகள் வினியோகிக்கப் பட்டிருக்கின்றன என்றெல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் நான் பாராட்டுகிறேன். அதுபோல சென்னை மாநகராட்சியில் இந்த ஆண்டு தொடக்கத்தில் வன இலாக்காவுடன் சேர்ந்து மரக் கன்றுகளை வளர்க்கின்ற பணியை ஆரம்பித்திருக்கிறோம். இத்திட்டம் மாண்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களின் பொற் கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் 10 ஆயிரத்திற்குமேல் மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. ஆக சென்னையிலே இன்றையதினம் முக்கியமாக உள்ள சாலைகளில் எல்லாம் இத்தகைய நல்ல, ரக மரங்கள் வளர்ந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மரக் கன்றுகளுக்கு அரசு நல்ல பாதுகாப்பையும் அளித்து வருகிறது. உண்மையிலேயே மரங்களை வளர்ப்பதில் இந்த அரசுக்கு இருக்கும் அக்கறையை இது எடுத்துக்காட்டுகிறது. ஆனால் இந்த நேரத்தில் அரசுக்கு ஓர் ஆலோசனையைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையிலே மாநகராட்சியும், வன இலாக்காவும்

[திரு. சோ. கலிதீர்த்தான்] [1987 ஏப்ரல் 30

இணைந்து எப்படி மரக் கன்றுகளை வளர்த்து அனைவரும் பாராட்டும் வகையில் செயல்படுகின்றார்களோ அதுபோல மற்ற எல்லா மாநகராட்சிகளிலும் இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வன இலாக்காவில் முக்கியமான தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் அதிகரித்து வருவது பாராட்டத் தக்கது. இன்றையதினம் நம்முடைய தொழிற்சாலைகளுக்குத் தேவையான யூக்கலிப்டஸ், மூங்கில் போன்றவற்றின் உற்பத்தியைக் அதிகரிக்க இன்னும் அதிக அளவில் பெரு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதோடு அரசின் வருமானமும் அதிகரிக்கும். அதுபோல வனத் துறையில் வருமானம் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவது பாராட்டத்தக்கது. குறிப்பாக சந்தன மரங்களின் மூலமாக 1982-ல் 658 லட்சம் ரூபாய் வருமானம் வந்து கொண்டிருந்தது. அது 1986 ஆம் ஆண்டில் 1,501 லட்சம் ரூபாயாக, இரண்டரை மடங்கு உயர்ந்திருக்கிறது என்பது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் நடந்திருக்கிறது. வன இலாக்காவைப் பொறுத்தவரையில் இது ஒரு இமாலய சாதனையாகும்.

அடுத்து, வன இலாக்கா அதிகாரிகளின் கடமைகளைச் செய்ய விடாமல் சிலர் தடுக்கும் நிலை இருப்பதாக செய்திகள் வருகின்றன. அப்படி கடமையைச் செய்ய விடாமல் தடுக்கின்ற சமூக விரோதிகள் மீது விரைவாக கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அபாயகரமான வேலையை வன இலாக்கா அதிகாரிகள் செய்வதால் அவர்களுக்கு இன்னும் கூடுதலாக அதிகாரங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் வனத் துறையில் பணியாற்றுகின்ற அலுவலர்கள் வனச் செல்வங்களை பாதுகாக்க வாய்ப்பு ஏற்படும். அதோடு மட்டுமல்ல, வன இலாக்காவிலிருந்து மரங்களைக் கடத்துவதைத் தடுக்கவும் முடியும். அதற்கு காவல் துறையில் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களை, குறிப்பாக குற்றங்களைக் கண்டுபிடிக்கின்ற மற்றும் தண்டிக்கின்ற அதிகாரங்களை வனத் துறை அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 30] [திரு. சோ. கலிதீர்த்தான்]

எனது தொகுதியைச் சார்ந்த சங்கராபுரம் பகுதியிலுள்ள கல்வராயன் மலைப் பகுதியிலுள்ள காடுகளிலிருந்து வன செல்வங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. அன்றையதினம் அங்கே வாழ்ந்துகொண்டிருந்த மலைவாழ் மக்கள் நீண்டகாலமாக ஜாகீர்தார்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தார்கள். அந்தப் பகுதியை 1976 ஆம் ஆண்டு அரசு தன் கைவசம் எடுத்து, பிறகு மலைவாழ் மக்களுக்குக் கொடுத்தது. முன்பெல்லாம் அந்த மலை வாழ் மக்கள் மலைப் பகுதி முழுவதும் சுதந்திரமாக சுற்றித் திரிய முடிந்தது. இன்றைக்கு அந்தப் பகுதியிலே எவ்வளவு வேண்டுமானாலும் காடுகளை அழித்து நிலமாக்க முடிந்ததே தவிர அங்கு வாழ்ந்த அந்த மலைவாழ் மக்களுக்கு இருந்த உரிமைகள் எல்லாம் வன இலாக்காவின் சட்ட திட்டத்தின் மூலமாக பறி போய்விட்டன. காடு அழிக்கப்படக்கூடாது என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனாலும் நில ஆர்ஜிதம் செய்து முடித்த பின்னர் 1980 ஆம் ஆண்டு அம்மக்களின் குடிசைக்கு அருகிலே வனத் துறை நிலம் வந்து விடுகிறது. எனவே, கால் நடைகள் செல்வதற்குப் போதுமான மேய்ச்சல் நிலமும் இல்லை. சொந்த நிலங்களிலிருந்து கடுக்காய் போன்ற வனப் பொருட்களை மக்கள் எடுத்து வரும்போது வனத் துறை அதிகாரிகள், வனப் பகுதியிலிருந்து அவை எடுத்து வரப்படுகிறது என அச்சுறுத்தி வருகிற நிலை உள்ளது. எனவே, மலைவாழ் மக்கள் வனத் துறையின் வீணான பழிச்சொல்லுக்கு ஆளாகாதவண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வருவாய்த் துறையும், வனத் துறையும் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

(முற்பகல் 11-10)

கல்வராயன் மலைப் பகுதியில் வனத் தோட்ட வளர்ச்சிக்கென இன்னும் அதிக நிலப் பரப்பையும், நிதியையும் ஒதுக்க வேண்டும். மலைவாழ் மக்களுக்கு வனக் கன்றுகள் வழங்கும்பொழுது அவர்களுக்குப் பராமரிப்பு முறையையும் சொல்லித் தர வேண்டும். அரசின் செயற் குறிப்பில் மரம் வளர்ப்பு கல்வித் திட்டம் பற்றி கூறப்பட்டுள்ளது. மலைவாழ் மக்கள் பாடத் திட்டத்தில் இதற்கு முன்னுரிமை கொடுக்கும் அதே நேரத்தில் கிராமப்புற மாணவர்களுக்கும், நகர்ப்புற மாணவர்களுக்கும் இதுபோன்ற கல்வியினை அளிப்பதற்கு ஆரம்பத்திலேயிருந்து முயற்சிக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் அதனை அமைத்துத் தர

[திரு. சோ. கலியிர்த்தான்] [1987 ஏப்ரல் 30

வேண்டும். இப்பொழுது எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்கள் மட்டும் மாட்டுப் பண்ணையில் ஈடுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள். இதை அனைவருக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

அண்மைக் காலங்களில் சுற்றுலா வளர்ச்சியில் காட்டும் ஆர்வம் அனைவரையும் வியக்க வைக்கிறது. வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, நீலகிரி மாவட்டத்தில் அழகிய இடங்களை மேம்படுத்துதல் ஆகியன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. தென்னார்க்காடு மாவட்டம் பிச்சாவரம் பகுதியை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்து அதை தென்னார்க்காடு மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா மையமாக ஆக்க வேண்டும். அங்கே உள்ள கோங்காரக் காடுகள் அழிக்கப்படுவதைத் தடுத்து அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு எனது வாழ்த்துக்கள்.

தமிழ்நாடு சுற்றுலா என்றதும் அனைவரையும் அழைக்கும் காட்சிகள் மனத்திலே நிற்கும் வண்ணம் சுற்றுலாத் துறை செயலாற்றி வருகிறது. பண்டைத் தமிழகத்தில் பல்லவர் காலம் கலை மலிந்த காலம்; சேரர் காலத்தில் சேரன் செங்குட்டுவன் இமாலய சாதனையைச் செய்தான்; சோழர் காலத்தில் தஞ்சைப் பெரிய கோயில் கோபுரம்; பாண்டியர் காலத்திலே தமிழ்ச் சங்கங்கள் என்பன போன்ற எண்ணம் நமக்கு வரும். ஆனால் இவையனைத்தும் ஒன்றாகப் பெற்றுள்ள தமிழ் மாநிலத்தில் முதலமைச்சர் புரட்சித் தலைவரவர்களின் காலத்தில், எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதனை எங்கு சென்றாலும் விளக்கும் சுற்றுலாத் துறையின் சாதனை நம்மை வியக்க வைக்கிறது. இதனால்தானோ என்னவோ ஒவ்வொரு ஆண்டும் இங்கே வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 1986 ஆம் ஆண்டில் வந்த அயல்நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 11 இலட்சம் என்பதனை அறியும்பொழுது தமிழகத்தின் சிறப்பு நமக்குப் புரிகிறது. வந்தோரை வாழ வைக்கும் வண்டமிழ் நாடு என்பது முதுமொழியாகும்; வருவோரை வியக்க வைக்கும் சுற்றுலாத் துறை என இப்பொழுது புதிதாக ஒன்றைச் சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய அரசின் சாதனையாக சுற்றுலாத் திட்டத்தில் வேலைவாய்ப்பு பெற்றுவரும் பல குடும்பங்களுக்குப் பாதிப்பு ஏற்படா வண்ணம் எதிர்காலத் திட்டங்கள் அமைய வேண்டும்.



1987 ஏப்ரல் 30] [திரு. சோ. கலியிர்த்தான்]

அரசின் செயற்குறிப்பில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை, மத்திய அரசின் சுற்றுலாத் துறை நிதியுதவி பெற்று, பல்வேறு திட்டங்களை மாமல்லபுரம், காஞ்சிபுரம், முட்டுக்காடு, பழவேற்காடு, கன்னியாகுமரி, பிச்சாவரம், குற்றாலம், முதுமலை போன்ற இடங்களில் அமைக்க இருப்பது எதிர்காலத்தில் இரண்டும் அதிக அளவில் சுற்றுலா மையங்களை ஏற்கும் என்பதில் எவரும் சந்தேகப்படுவதற்கில்லை.

எங்களுடைய மாவட்டத்திலுள்ள சிதம்பரம் நடராஜர் கோவில் அனைவரும் வந்துசெல்லக்கூடிய ஒரு இடமாக இருக்கிறது. அந்த இடம் அனைவரின் கண்களையும் கவரக்கூடிய ஒரு சிறப்பு வாய்ந்த இடமாக இருக்கிறது. புகழ்பெற்ற ஆலயம் அங்கே இருக்கிறது. அதை நிர்வகிக்கின்ற உரிமை, தனியாரிடம் இருப்பதால் வருகிற சுற்றுலாப் பயணிகளை கவனிப்பதற்கு முடியாத நிலைமை இருக்கிறது. அங்கே என்ன நடக்கிறது என்பதை அறிய முடியவில்லை. ஆகவே, ஒரு ஸ்பெஷல் ஆபீசரை இ.ஓ.ஆக நியமித்து, அரசாங்கம் கண்காணித்துவரத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நிர்வகிக்கின்ற பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கல்வராயன் மலைப் பகுதியில் ஒரு சுற்றுலா மையத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மலைப் பகுதி மக்களைக் கவருகின்ற அளவுக்கு சாலை வசதிகளைச் செய்ய 2, 3 ஆண்டுகளாக வனத் துறையைக் கேட்டு, அதற்காக 5 கோடி ரூபாயைக் கொடுத்து, இன்றையதினம் நல்ல போக்குவரத்து வசதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கே இருக்கிற மலைப் பகுதியில் சுற்றுலா மையம் ஏற்படுத்தி மலை இடங்களைப் பார்க்க வருகின்றவர்களுக்கு வசதியாக கோபியிலிருந்து மலை அடிவாரம் வரையில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் பேருந்துகளை விடுகின்ற ஏற்பாடுகள் பற்றி மாண்புமிகு சுற்றுலா அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு அந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியிலுள்ள மலைவாழ் மக்களின் நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டு பிறகு அவர்களுக்கும் வனத் துறைக்கும் அடிக்கடி தகராறு ஏற்படுகிறது. ஆகவே,

[திரு. சோ. கலிதீர்த்தான்] [1987 ஏப்ரல் 30

'ரீ-செட்டில்மெண்ட்' செய்து, மலைவாழ் மக்களுக்கு எந்த எந்த நிலங்களை அனுமதிக்க முடியுமோ அதைத் தனியாக ஒதுக்கி அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். நமக்கு நெல், கரும்பு போன்ற பயிர்கள் மூலம் வருமானம் வருவதைப்போல அவர்களுக்கு எல்லாம் கடுக்காய், புளி போன்ற பொருள்களிலிருந்து வருமானம் வருகிறது. மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கின்ற அந்த மலைவாழ் மக்களுக்கு கடுக்காய், புளி போன்ற பொருள்களை எடுத்துக்கொள்வதற்கு உண்டான உரிமையை வருவாய்த் துறையையும் வனத்துறையையும் கலந்து பேசி, இனாமாகவே வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் அங்கே இருக்கக்கூடிய கடுக்காய் மரமும், புளிய மரமும் வனத்துறையில் இருந்தாலும் மலைவாழ் மக்கள் வாழுகின்ற இடங்களில் இருக்கிறது. அதைப் பறித்து வரும்போது வன இலாக்காவினரும் கூட்டுறவுச் சங்கத்தினரும் அவர்களைத் தடுத்து நிறுத்தும் நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் வனத்துறையின் மூலமாக மலைவாழ் மக்களுக்கு புதிய பள்ளிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களுடைய குழந்தைகள் கல்வி கற்க வசதி செய்து கொடுக்க வேண்டும். மரம் வெட்டுவதும், சிறிய அளவில் விவசாயம் செய்வதும் தவிர அவர்களுக்கு வேறு தொழில் ஒன்றும் தெரியாது. அவர்கள் கல்வி கற்கவும், பிற தொழில்களை கற்றுக் செய்வதும் தவிர அவர்களுக்கு வேறு தொழில் ஒன்றும் தெரி ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியில் மேகம் என்ற இடத்தில் ஒரு நீர் வீழ்ச்சி இருக்கிறது. அந்த நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் அளவுக்கு அது அமைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு அங்கே வந்திருந்தார்கள். அப்போது மின்சாரம் தயாரிப்பதற்கான ஆய்வு நடைபெறு



1987 ஏப்ரல் 30] [திரு. சோ. கலிதீர்த்தான்]

வதாகச் சொன்னார்கள். அங்கே இந்த ஆண்டு மின்சாரம் உற்பத்தி செய்கின்ற திட்டப் பணிகளைத் தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்களிடம்தான் மின்சாரத் துறையும் இருக்கிறது.

அடுத்து, அங்குள்ள மலைவாழ் மக்களுக்கு சாலை வசதியை ஏற்படுத்தும் வகையில் தொரம்ப்பட்டு வரையில் புதியசாலையை வனத்துறையின் மூலம் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத் தின்கீழ் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். அங்கே மலைவாழ் மக்களால் வழிபாடு செய்யப்படும் காமாட்சி அம்மன் கோவில் ஒன்று இருக்கிறது. அந்த ஆலயம் எப்போது தோன்றியது என்று தெரியாது. இப்போது அது பழுதுபட்டிருக்கிறது. முன்னால் இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆலயத்தை புதுப்பித்துத் தருவதாகச் சொன்னார்கள். இப்போது இருக்கிற அமைச்சர் அவர்களும் அங்கே வருவதாக இருக்கிறார்கள். அவர்கள் வருகின்றபோது தேவையான நிதி உதவி செய்து, அந்த காமாட்சி அம்மன் ஆலயத்தைச் செப்பனிட்டு மலைவாழ் மக்கள் நல்லமுறையில் வழிபாடு செய்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோடு இந்த மானியக் கோரிக்கைகளில் எனக்கு பேச வாய்ப்பளிக்க துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

(மூற்பகல் 11-20)

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளை, செய்தி-சுற்றுலா. திரைப்படத் தொழில் நுட்பவியல், வனத்துறை, சின்கோனா போன்ற மானியக் கோரிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையைப் பற்றி குறிப்பிலே பல்வேறு விவரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அங்கே பிரதானமாக இருக்கக்கூடிய ஆலயங்களிலே பணிபுரியக்கூடிய

[திரு. எம். செல்லமுத்து] [1987 ஏப்ரல் 30

அந்த ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருக்
கிறார்கள். அவற்றை எல்லாம் நிறைவேற்ற அரசு உரிய நட
வடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
குறிப்பாக நிர்வாகப் பணியாளர்கள் என்றும், ஆலயப் பணி
யாளர்கள் என்றும் இரண்டு பிரிவினராகப் பிரிக்கப்பட்டு
நிர்வாகப் பணியாளர்களைப் பொறுத்த வரையிலே அரசே
அங்கே பணத்தை வாங்கிச் சம்பளம் கொடுக்கின்றது. ஆனால்
ஆலயங்களிலே பணியாற்றுகின்ற ஊழியர்களைப் பொறுத்த
வரையில் ஆலய நிர்வாகத்தினர் சம்பளம் வழங்குகிறார்கள்.
அந்த நிலையில் பல மாதங்களாக அவர்களுக்குச் சம்பளம்
கொடுக்கப்படாமல் இருக்கின்ற நிலைமை பல கோவில்களிலே
இருக்கின்றன. அவற்றை எல்லாம் போக்கி, எப்படி நிர்வாகப்
பணியாளர்களுக்கு அரசே சம்பளத்தை வாங்கிக் கொடுக்
கிறதோ அதுபோல் இவர்களுக்கும் கொடுத்து அந்த ஆலய
ஊழியர்களைப் பாதுகாக்கக்கூடிய காரியத்தை அரசாங்கம்
மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அறங்காவலர்களை நியமிப்பதைப் பொறுத்த
வரையில் பல்வேறு முறைகேடுகள் பற்றி எல்லாம் சொல்லப்படு
கிறது. அதிலே பல்வேறு வகையான போட்டிகள் எல்லாம்
இருக்கின்றன. அதன் காரணமாகப் பலச் சிக்கல்களும் ஏற்படு
கின்றன. குறிப்பாகச் சில கோயில்களில் தக்கார் என்று
ஒருவரை நியமித்து இருக்கிறார்கள். அவர்கள் வைத்ததுதான்
சட்டம் என்ற வகையில் அவர்களுடைய சர்வாதிகாரம் அங்கே
நடக்கின்ற நிலைமை இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட
தக்கார்களை நியமிக்காமல் நல்ல, நேர்மையான அறங்காவலர்
களை அங்கே அறங்காவலர்கள் குழு என்ற அமைப்பமைப்பில்
நியமித்து இந்த நிலைமைகளை எல்லாம் செம்மையாக்க
வதற்கான நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு
கடவைகள் அதைப்பற்றி இங்கே நாம் விவாதித்து இருக்கிறோம்
கோயில் நிலங்களில் சாகுபடி செய்யக்கூடிய சாகுபடியாளர்
களுக்கே அந்த நிலங்களை விற்பனை செய்து வருகின்றமையால்
வரக்கூடிய பணத்தை வங்கிகளில் டெப்பாசிட் செய்து சிறிய



1987 ஏப்ரல் 30] [திரு. எம். செல்லமுத்து]

கோவில், பெரிய கோயில் என்று பார்க்காமல் தமிழகம் முழுவதும்
இருக்கின்ற அனைத்துக் கோயில்களையும் அரசே அந்தத்
துறையின்கீழ் நிர்வகிக்கக்கூடிய காரியத்தைச் செய்ய
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில்
கோயில் நிலங்களைச் சாகுபடி செய்பவர்களுக்கே சொந்தமாகக்
கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து பெரிய நகரங்களில் கோயில்களுக்குச் சொந்த
மான நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களைப் பொறுத்த
வரையில் 95 வருடங்களுக்கு குத்தகைக்கு எடுத்த பெரிய
மனிதர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு அவற்றை வாடகைக்கு
விட்டு, குறைந்த தொகையைத்தான் கோயில்களில் கட்டு
கிறார்கள். எனவே அப்படிப்பட்ட கோயில் நிலங்களை எல்லாம்
சர்வே செய்து, அவற்றை அரசே மேற்கொண்டு அந்த வாடகை
களை எல்லாம் சரியான முறையில் வசூலிக்க அரசு உரிய
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்து சமய அறக்கட்டளைகள் பற்றித்தான்
இந்த மன்றத்தில் விவாதங்கள் நடைபெறுகின்றன. மற்ற
சமயங்களைப் பற்றியும் இந்த மன்றத்தில் விவாதிக்கக்கூடிய வகை
யில் அரசு நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன். மத உணர்வுகளையும், ஜாதி
உணர்வுகளையும் தூண்டுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே
மதவேறுபாடுகளைக் காட்டுபவர்கள் மீது கடுமையான
நடவடிக்கை எடுத்து மத விவாதங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய
நடவடிக்கையைத் துறை மேற்கொள்ள வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோயில்களிலே இன்றைக்கு பல்வேறு குறைபாடுகள்
இருக்கின்றன. அந்தக் கோயில்கள் எல்லாம் கொடியவர்களின்
கூடாரமாக மாறாமல் மக்களுடைய மனோபாவம் மற்றும் பக்தி
உணர்ச்சிகளைப் புரிந்து சிறப்பான முறையில் பணியாற்றக்கூடிய
வகையில், நல்ல நிர்வாகத்தை உருவாக்கக்கூடிய முறையில்
அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து] [1987 ஏப்ரல் 30

சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு பெரிய அளவில் வருமானம் ஈட்டக்கூடிய துறையாக அது இருக்கின்றது என்றெல்லாம் கொள்கைக் குறிப்புகளிலே கூறியிருக்கிறார்கள். பல சுற்றுலா மையங்களிலே பெரிய பெரிய ஹோட்டல்களை எல்லாம் கட்டுகிறார்கள். ஆனால் சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் அங்கே போனால் தங்குவதற்கான இட வசதியில்லை, கழிப்பிட வசதி இல்லை; குளியல் அறை இல்லை இப்படிப்பட்ட மோசமான சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. எனவே சாதாரண மக்களைக் கவரக்கூடிய அளவுக்கு, சாதாரண மக்கள் சென்றுவரக்கூடிய அளவுக்கு, சுற்றுலா மையங்களில் சாதாரண மக்கள் தங்குவதற்கு உரிய வகையில் கழிப்பிட வசதி, குளியல் அறை வசதி, தங்கும் விடுதி போன்றவற்றை ஏற்படுத்தி, குறைந்த கட்டணங்களை வசூலிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக கன்னியாகுமரியில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை. உலகின் பல பகுதிகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அந்தப் பகுதிக்கு வருகிறார்கள். அங்கே கழிப்பிட வசதி கூட போதிய அளவுக்கு இல்லை என்றும், தங்கும் வசதி இல்லை என்றும் சொல்கிறார்கள். எனவே அவற்றை எல்லாம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் திருமலை மூர்த்தி மலை இருக்கிறது. அதனைச் சுற்றுலாத்தலமாக ஆக்கவேண்டும். தஞ்சைப் பெரிய கோயில், நாகூர், வேளாங்கண்ணி, திருவாரூர் போன்ற பெரிய கோயில்களில் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் சரியான சுற்றுலா மையங்களில்லாத சூழ்நிலை இருக்கிறது. பயணிகளைக் கவரக்கூடிய வகையில் இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக தஞ்சைக் கோயிலைப் பொறுத்தவரையில் சோழனுடைய சிலையை எங்கே வைக்கவேண்டுமென்ற சர்ச்சை ஒரு பக்கம் இருந்தாலும், அந்தக் கோயிலைப் பார்க்க வருபவர்களுக்கு நின்று பார்ப்பதற்குக் கூட சரியான வசதி இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட திருத்தலங்களும் பெரிய கோயில்களும் இருக்கும் இடங்களில் எல்லாம் நல்ல சுற்றுலா மையம் அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 30] [திரு. எம். செல்லமுத்து]

அடுத்து திரைப்படம் மற்றும் விளம்பரத் தொழிலைப் பொறுத்த அளவில் சினிமா என்று சொல்கிறபோது அது மக்களை நல வழிப்படுத்தக் கூடிய ஒரு விஞ்ஞானக் கருவியாகும். அதை நல்ல வழியில் பயன்படுத்துவதற்குப் பதிலாக இன்றைக்கு மக்களை தீய வழியில் அழைத்துச் செல்வதற்கு பயன்படுத்துவதற்கான சூழ்நிலை தான் இருக்கிறது. இன்றைக்கு அந்த திரைப் படத் தொழிலில் தரமான படங்கள் எடுப்பதற்கு பதிலாக மனிதனை திசை திருப்பக் கூடிய வேறு வகைபடுத்தக் கூடிய பல்வேறு காட்சிகளைத்தான் அந்தத் திரைப்படங்களில் காட்டுகிறார்கள். ஒருவனுக்கு ஒருத்தி தான் என்ற நிலைமையை நாம் ஒப்புக் கொண்டிருக்கிறோம். ஆனால் இரட்டைவால் குருவி என்ற படம் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் ஒருவன் இரண்டு மனைவிகளைக் கட்டிக் கொள்ளலாம்; பின்னால் சமாளித்துக் கொள்ளலாம் என்ற ஒரு கருத்தை வலியுறுத்தக் கூடிய படமாக இருக்கிறது. அதை யெல்லாம் தடை செய்ய வேண்டும் என்று ஜனநாயக மாதர் சங்கம் எல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறது.

இப்படிப்பட்ட படங்களைத் தடை செய்வதற்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்று சொன்னாலும் அப்படிப்பட்ட படங்களைத் திரையிடக்கூடிய தியேட்டர்களுக்கு லைசன்சை ரத்து செய்யக் கூடிய காரியத்தைச் செய்வதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமானால் அவைகள் நிச்சயமாக தடுக்கப்படும். குறிப்பாக தஞ்சைத் தலை நகரத்தில் இருக்கக் கூடிய திருவள்ளுவர் திரை அரங்குகளில் தவறான படங்களைப் போடுகிறார்கள் என்று மக்கள் பார்த்து விட்டு வந்து சொல்லுகிறார்கள். அசிங்கமான படத்தை எல்லாம் போடுகிறார்கள். என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட படங்களை எல்லாம் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். திரைப்படங்களைப் பொறுத்தவரையில் அது மக்களுடைய சிந்தனையையும் ஒழுக்கத்தையும் சமூக சீர்திருத்தங்களையும் உருவாக்கக் கூடிய வகையில் எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக மருத்துவத்துறை, போக்குவரத்துத் துறை, கல்வித் துறை, ஜாதி ஒழிப்பு, விவசாயம், தொழில் போன்றவைகளை வளர்க்கக் கூடிய வகையில் அந்தப் படங்களை எல்லாம் எடுத்து மக்களுக்கு காட்டக் கூடிய வகையில் ஒழுங்கு படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து] [1987 ஏப்ரல் 30

அதேபோல சினிமா பார்க்கப் போகக் கூடியவர்களுக்கு அந்த தியேட்டர்களிலே சரியான வசதி கிடையாது. குடிக்க தண்ணீர் கிடையாது; லெட்ரின் வசதி கிடையாது. இப்படிப்பட்ட நிலை மைகளையெல்லாம் ஒழுங்கு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பத்திரிகைத் துறையை எடுத்துக் கொண்டால் பத்திரிகை விளம்பரம் கொடுப்பதில் அரசு பாரபட்சம் காட்டு கிறது. உழைக்கும் பத்திரிகைகள் ஆனாலும் சரி, சிறிய பத்திரி கைகள் ஆனாலும் சரி, கருத்துப் பத்திரிகைகள் ஆனாலும் சரி, நல்ல கருத்துக்களைத் தாங்கி சமுதாயத்திற்கு உழைக்கக் கூடிய எல்லாப் பத்திரிகைகளுக்கும் அரசு விளம்பரங்கள் தந்து அந்தப் பத்திரிகைகளை வளர்க்கக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து காட்டு வளம. காட்டு வளம் நாட்டுக்கு நலம் பயக்கக் கூடிய காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. நோக்கமாகவும் இருக் கிறது. ஆனால் இன்றைக்கு காட்டு வளம் எல்லாம் கெட்டு மழை நீர் கூட ஏற்படாத அளவுக்கு சூழ்நிலை உருவாகி இருக் கிறது. அதிலே பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன. குறிப்பாக சமூக நலக் காடுகள் என்று விளம் பரம் தான் இருக்கிறதே தவிர அங்கே காடுகள் இல்லை. விளம் பரத்திற்குத்தான் பயன்படுத்தப்படுகிறதே தவிர, புள்ளி விவரங்கள் சொல்லப்படுகிறதே தவிர, சமூகக் காடுகளை உண்மையிலேயே வளர்ப்பதில் அக்கறையோ நாட்டமோ இல்லை. மிக மோசமான நிலைமையில் இருக்கிறது. அவைகள் எல்லாம் திருத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.!

அதேநேரத்தில் காட்டு வளத்தை வளர்க்கக்கூடியவர்களே பாதுகாக்கக் கூடியவர்களே அழிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே மயி லாடுதுறை கோட்டத்திலே பல ஆயிரக்கணக்கான தேக்கு மரங்கள் பல ஆயிரக்கணக்கில் பெருமானமுள்ள மரங்கள் வெட்டப் படுவதாக புகார்கள் வந்திருக்கின்றன. அதேபோல தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியாகியிருக்கக் கூடிய தேக்கு மரங்கள்



1987 ஏப்ரல் 30] [திரு. எம். செல்லமுத்து]

எல்லாம் வெட்டி விற்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவை களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 11-30)

காட்டுமன்னார்கோயில் வட்டத்திலே ஆத்தூர் கிராமத்திலே அரசு புறம்போக்கு நிலத்தில் பல ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்பட்டிருப்பதாக தகவல் வந்திருக்கின்றது. அவைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல ஒட்டன் சத்திரம் பாப்புதுப்பேட்டை ஒன்றியத்தில் கண்மாய்களிலே மரங்கள் வெட்டப்பட்டிருப்பதாக அரசுக்கு புகார்கள் எல்லாம் வந்திருக்கின்றன. அதேபோல காட்டு மரங்களை வெட்டுபவர் கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி புகார் கொடுத்தால் புகார் கொடுத்தவர்களையே அடிக்கக் கூடிய சூழ்நிலை தான் இருக்கிறது. அத்தகைய நடவடிக்கைகளை வனத்துறையினர், வன அதிகாரிகள் செய்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக கல்வராயன் மலையில் காசிம் என்பவர் காட்டு மரங்களை யெல்லாம் வெட்டு கிறார்கள் என்று புகார் சொன்ன காரணத்தினாலேயே வன இலாக்காவினர் அவரை அடித்து அவர் மீது வழக்கு போட்டு அவரைத் துன்புறுத்தியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் அறிந்து, அவர்கள்மீது உரிய நடவடிக்கை, அதுவும் கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடிய அதிகாரிகள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மதுரை மாவட்டம், பாலமேடு ரேஞ்ச் வனத் துறை அதிகாரிகள் திடீரென்று வைத்துமலை, ஆனைமலை ஆகியவற்றின் அடிவாரத்தில் வசிக்கக்கூடிய இடங்களுக்கு எல்லாம் வந்து, அங்கேயிருக்கும் ஏழை விவசாயிகளிடம் ஆயிரக் கணக்கான பணம் கேட்கிறார்கள். அப்படிக் கொடுக்கவில்லை என்றால், துப்பாக்கியைக் காட்டி மிரட்டுகிறார்கள். பெண்களை எல்லாம் கேவலமாகப் பேசுகிறார்கள். அந்த ஏழை விவசாயி களை எல்லாம் மிரட்டக்கூடிய நிலைமைகள் இருப்பதாக தக வல்கள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே வனத்துறை அதி காரிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில். அவர்களுடைய முறைகேடுகளைத் தடுக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து] [1987 ஏப்ரல் 30

கன்னியாகுமரியிலே அரசு ரப்பர் கழகம் ஒன்று உள்ளது. அங்கே உற்பத்தியாகிற ரப்பர் பொது ஏலத்தில் விற்கப்படுகிறது. ஏலம் எடுக்கக்கூடியவர்கள் அதிகாரிகளைத் தனியாக கவனித்தால், ரப்பரை ஏலம் போடுகிறபோது, கணக்குக்கு மேல் ரப்பரை எடுத்துக்கொண்டு, கணக்குக் காட்டுவதிலே பல தில்லுமுல்லுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். போன வருடம் கூட ரப்பர் லோடு ஏற்றுவதிலே பயங்கரமான ஊழல்கள் நடந்திருப்பதாகச் சொல்கிறார்கள். மாலை 5 மணிக்கு மேலே லோடு ஏற்றக்கூடாது என்று சட்டம் இருந்தும் கூட இரவோடு இரவாக லோடு ஏற்றப்படுகிறது. அதிலும் ஒவ்வொரு லாரியிலும் அதிகமாக எடை போட்டு, லோடு ஏற்றுகிறார்கள். இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட அதிகாரி ஒருவர், லாரியை மடக்கியிருக்கிறார். நான்கு லாரிகளை நிறுத்தி எடை போடுவதற்காக வந்தால், 156 கிலோ அதிகமாக இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட முறைகேடுகள் எல்லாம் நடந்து இருக்கின்றன. இந்த விஷயம் குறித்து 1986 ஆம் ஆண்டு வெளிவந்த கல்கி பத்திரிகையிலே விவரமாக விவரிக்கப்பட்டு இருக்கிறது. எனவே இவைகளுக்கு எல்லாம் நீங்கள் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சின்கோனா. உயிர் காக்கும் மருந்துகளையும், நறுமணத் தைலங்களையும் உற்பத்தி செய்கிற விசேஷத் தொழிலானது இது. நீலகிரி, ஆனைமலை ஆகிய மலைகளில் சுமார் 2 ஆயிரத்திற்கும் அதிகமான, ஆண், பெண் தொழிலாளர்கள் மிகவும் கடுமையாக உழைப்பைச் செலுத்தி, மிகக் குறைந்த கூலியைப் பெறுகிறார்கள். இவர்களுக்கு பஞ்சப்படி உட்பட, நாள் ஒன்றுக்கு 12 ரூபாய் 65 பைசாதான் கூலியாகக் கொடுக்கப்படுகிறது. இதை உடனடியாக உயர்த்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மலை முகடுக்களிலே வாழ்கின்ற இவர்கள் நியாய வாழ்க்கை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இவர்களில் பெரும்பகுதியினர், தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள்தான். நாகரீக வளர்ச்சியிலே, சமூக வளர்ச்சியிலே இவர்கள் முன்னேற வில்லை. பல வருடங்களுக்கு முன்பாக 1925 ஆம் ஆண்டு முடிய கட்டப்பட்டுள்ள வீடுகள் 471 தான். ஆனால் இவர்களுக்கு 1,300 வீடுகள் தேவை. எனவே அவர்களுக்குத் தேவையான வீடுகளைக்



1987 ஏப்ரல் 30] [திரு. எம். செல்லமுத்து]

கட்டிக் கொடுத்து, அவர்களை நாகரீக வளர்ச்சிக்கு ஏற்ப வாழ்வதற்கான நிலைமைகளை உருவாக்கிக் கொடுக்கவேண்டும். இந்த ஆண்டு பொங்கல் பரிசாக 300 ரூபாயைத் தந்திருக்கிறார்கள். அதெல்லாம் மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால் இவர்கள் எல்லாம் தினக்கூலிகள்தான். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மிகவும் குறைவான கூலி கொடுக்கப்படுகிறது. எனவே இவர்களுக்குக் கூலியை உடனடியாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஏற்படுத்தி, அதிலே தேவையான எல்லாப் பொருட்களையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, முடிக்கிறேன்.

* **திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்திலே முன்மொழியப்பட்டு விவாதத்திலே இருந்து கொண்டிருக்கிற 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கை உட்பட பல்வேறு மானியக் கோரிக்கைகள் மீது நான், சார்ந்திருக்கிற இந்த முன்னணி பேரியக்கத்தின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பினை வழங்கியிருக்கிறீர்கள். அதற்காக தான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இந்து சமய அறநிலையத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையைத் தெளிவுபடுத்தும் முகமாக தந்திருக்கிற கொள்கைக் குறிப்பைப் படித்துப் பார்க்கும்போது, கால் இல்லாத முடவனை நடையழகனாகக் காட்டுவதற்கும், பல் இல்லாத பொக்கை வாய்க் கிழவியை பல்லழகியாகக் காட்டுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. ஏன் என்றால், மிகவும் வேதனையோடு [illegible] வேண்டிய நடைபெறாத ஒருசில சம்பவங்கள், ஒரு சில [illegible] தகவல்கள் இதிலே சேர்க்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் இல்லாதவைகளை இருப்பவைகளாகவும், நடக்காதவைகளை நடக்கின்றவைகளாகவும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கைக் குறிப்பிலே [illegible] காட்டியிருக்கிறார்கள். ஆகவே

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 30

தவறான தகவல்கள் பல இந்தக் கொள்கைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கின்றன. அந்தத் தவறான தகவல்களை எல்லாம் நான் ஒன்றன்பின்ஒன்றாக சுட்டிக்காட்டுவதற்கு நேரம் இடம் கொடுக்காது என்ற காரணத்தால், அவைகளிலே ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கொள்கைக் குறிப்பில் 9 ஆவது பக்கத்தில் ஒரு செய்தியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக்கி இருக்கிறார்கள். அது என்னவென்றால், ஆலயப் பணியாளர்களுக்கு ஆண்டு தோறும் ஒரு மாத ஊதியம் போனசாக வழங்கப்படுகிறது என்ற செய்தியாகும். தமிழகத்தைப் பொறுத்த வரையில் திருக்கோயில்களில் பணியாற்றுகின்ற ஆலயப் பணியாளர்கள் மட்டும் சுமார் 1 லட்சம் பேர் என்று சொல்லப்படுகிறது. இதை மனதிலே கொண்டு அந்தச்செய்தியைப் படித்துப் பார்க்கும் போது அந்த 1 லட்சம் ஆலயப் பணியாளர்களுக்கும் ஆண்டு தோறும் 1 மாத ஊதியம் போனசாக வழங்கப்பட்டுவருகிறது என்று நம்ப வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆனால் நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எந்த ஆலயப் பணியாளர்களுக்கு இந்த ஒரு மாத போனஸ் வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கிக்காட்ட வேண்டும். ஒருக்கால் சொல்லக்கூடும். நாங்களெல்லாம். முழு நிலை ஆலயப் பணியாளர்களுக்கு ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தைக் கொடுக்கிறோமே ஆண்டொன்றுக்கு. அதைத்தான் போனஸ் என்று சொல்லியிருக்கிறோம் என்று சொல்லக்கூடும். ஆனால் அப்படி சொல்லமுடியாது. ஏனெனில் ஒரு மாத அடிப்படைச் சம்பளம் என்கின்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு தீபாவளி நாட்களில் அதிகமாகப் பணி புரிவதற்காகக் கொடுக்கப்பட்டு வருவதை இன்னொரு சலுகையாக அவர்கள் இன்னொரு இடத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதை பக்கம் 11-லே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் 9 வது பக்கத்திலே சொல்லி இருப்பதும் 11 வது பக்கத்திலே சொல்லியிருப்பதும் வேறுபட்டவை என்று நான் கருதுகிறேன். ஆகவே. இல்லாத ஒன்றை, நடக்காத ஒன்றை, செய்யாத ஒன்றை நடந்ததாகவும் இருப்பதாகவும், செய்யப்பட்டதாகவும் சொல்வது



1987 ஏப்ரல் 30] [திரு. வை. பாலச்சந்திரன்]

இந்த அவையை திசை திருப்புவது மட்டுமல்ல, இந்த அவையில் சொல்லப்படுகிற சொல்லிய கருத்துக்களை வெளியிலே இருந்து பார்த்துக்கொண்டிருக்கிற இந்து சமுதாயத்தையும் அந்த ஆலயப் பணியாளர்களையும் திசை திருப்புகின்ற ஒரு முயற்சியாகும் என்பதை நான் மெத்த வேதனையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற அளவிலே ஒன்றை மட்டும் நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். இது ஒன்றுதான் தவறாகச் சொல்லப் படுகிறது. வேறு ஒன்றும் தவறான தகவலாக சொல்லப்பட வில்லை என்று ஒருக்கால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிடக்கூடும். ஆகவே, ஒன்றுக்குப் பின்னாலே ஒன்று என்ற அளவிலே இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே கொள்கைக் குறிப்பில் பக்கம் 12-ல் சொல்லப்பட்டிருக்கிறது: குரூப் இன்சூரன்ஸ் திட்டம் என்று ஒரு திட்டம் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது உண்மை தான்; அந்தத் திட்டம் செயலிலே இருந்தது உண்மைதான். மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு அதிகமாக ஊதியம் பெறுகின்ற, திருக்கோயில் பணியாளர்கள், ஆண்டொன்றுக்கு 25 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு அவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்ற வகையில் கொண்டுவரப்பட்டதுதான் இந்தத் திட்டம். ஆனால் கடந்த 3 ஆண்டுகளாக அந்தத் திட்டம் நடைமுறையில் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள். தெளிவுபடுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன். கடந்த 3 ஆண்டுகளாக அந்தத் திட்டம் செயலிலே இல்லை. ஏனென்றால் ஆலயப் பணியாளர்களிடத்திலேயிருந்து ஆண்டொன்றுக்கு 25 ரூபாய் வசூலிக்கப்படவேண்டிய பணம் வசூலிக்கப்படாமல், அதிலும் வசூலிக்கப்பட்ட பணம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு வழங்கப்படாமல் அது முடங்கி இருக்கிற காரணத்தால், இன்றைக்கு பல திருக்கோயில் பணியாளர்கள் ஓய்வு பெற்றிருந்தும் அந்த 5 ஆயிரம் ரூபாய் கிடைக்காமல் நீண்டகாலமாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கிடப்பிலே போடப்பட்ட ஒரு திட்டத்தை அல்லது பரணையிலே முடங்கிவிட்ட அந்தத் திட்டத்தை இன்றைக்கும் இருப்பதாகச்

சொல்வது, இல்லாத ஒன்றை இருப்பதாகப் படம் பிடித்துக் காட்டுகின்ற ஒரு முயற்சியே ஆகும் என்பதை நான் தெளிவு படுத்த விரும்புகின்றேன். ஆகவே, இந்த அளவிற்குத் தவறான தகவல்கள் இந்தக் கொள்கைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கின்றன என்று சொன்னால்—நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைத் தெரிந்து செய்து இருக்கமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் இன்றைக்கு ஒன்றை நான் அனுபவப்பூர்வமாகச் சொல்கிறேன்.

அறநிலையத்துறையிலே இருக்கிற மேல்மட்ட அதிகாரிகள், அமைச்சர் அவர்களுக்கு நிர்வாகம் சம்பந்தமாகவும், வேறுபல பிரச்சினைகள் சம்பந்தமாகவும், அப்போதைக்கப்போது தேவையான தகவல்களைத் தருவதில்லை. அப்படித் தரப்படும் தகவல்கள்கூட அமைச்சர் அவர்களை திசை திருப்புகின்ற அளவிலே அவை இருக்கின்றன என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, அறநிலையைத் துறையின் மேல்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் இன்றைக்குப் பொறுப்போடு செயல்படவில்லை என்பதையும், கருணை உள்ளத்தோடு செயல்படவில்லை என்பதையும் இந்த ஆலயத் துறையை மேம்படுத்தவேண்டுமென்ற நெஞ்சசுத்தியோடு அவர்கள் செயல்படவில்லை என்பதையும் நான் சார்ந்திருக்கிற இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பாக ஒரு குற்றச்சாட்டாக எடுத்து வைக்க விரும்புகிறேன். அதற்குக் கூட காரணம் கேட்கக்கூடும். ஆலயத் துறையிலே மேல்மட்டத்திலே இருப்பவர்கள் பொறுப்பற்ற அதிகாரிகளாகவா இருக்கிறார்கள் என்று கேட்கக் கூடும். சான்றுக்காக ஒன்றைச் சொல்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களில் சுசீந்திரம் தேவஸம் போர்டால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அங்கே இருக்கின்ற சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலய சுவாமி ஆலயத்திலே பணியாற்றுகின்ற பணியாளர்களெல்லாம் இந்த 1 ஆம் தேதி எங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டும்; எங்களை அரசுப் பணியாளர்களாக ஆக்கவேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அவர்கள் தொடர் உண்ணா விரதம் இருந்தார்கள். அப்போது நம்முடைய ஆலய அதிகாரிகள், ஆலய ஊழியர்களின் பசிக்க வயிற்றுக்கு கால்வயிறு கஞ்சிகேட்டு அவர்கள்





(முற்புகல் 11-40).

உண்ணா விரதம் இருக்கிறார்கள் என்று கருதி அவர்களிடத்திலே சென்று பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்கவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்கூட அந்த அதிகாரிகள் கொண்டுவரவில்லை என்பதை நாங்கள் பின்னாலே புரிந்து கொண்டோம். அதற்குப் பிறகு அந்த ஊழியர்கள் இந்த மாதம் 15 ஆம் தேதி அறிவிப்பு செய்திருந்தார்கள். அந்த அறிவிப்பிலே அவர்கள் மிகத் தெளிவாக அவர்களது நிலையை விளக்கியிருந்தார்கள். எங்களிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தப்படுமேயானால், எங்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்படுமேயானால், பேச்சுவார்த்தையின் மூலமாக வருகின்ற ஆண்டுகளில் ஏற்கப்படும் என்று சொல்லப்பட்டாலும்கூட. நாங்கள் போராட்டத்தை நிறுத்திவிடுகிறோம், இல்லையென்றால் ஆலயத்தில் பூஜை நடக்காத அளவிற்கு நாங்கள் அர்ச்சகர்களை ஆலயத்திற்குள்ளே விடமாட்டோம் என்று அவர்கள் சொன்னார்கள். 19 ஆம் தேதிவரை காத்து இருந்தார்கள். இங்கிருந்த அதிகாரிகள் அதைக் கண்டுகொள்ளவில்லை. இங்கே இருந்த அதிகாரிகள் வாய் மூடி மௌனிகளாக இருந்தார்கள். இங்கே இருந்த அதிகாரிகள் கண்களை மூடிக்கொண்டு குருடர்களாக இருந்தார்கள். இங்கே இருந்த அதிகாரிகள் செவிகளை மூடிக்கொண்டு செவிடர்களாக இருந்தார்கள். ஆகவே 19-ஆம் தேதி அந்த திருக்கோவில் பணியாளர்கள், இனிமேல் இந்த ஆலயத்தில் பூசைகள் நடைபெறாது, பூசாரிகளை ஆலயத்திற்குள் செல்லவிட மாட்டோம் என்று சொன்னார்கள். ஆனாலும் அதிகாரிகள் துடிக்கவில்லை, ஆனாலும் அதிகாரிகள் ஆலயங்கள் மூடப்படுகின்றனவே என்று துவளவில்லை; அப்படி ஆலயங்கள் மூடப்பட்டால் இந்து சமுதாயம் கதறுமே, கொதித்து எழுமே, தமிழ்நாட்டில் அசம்பாவிதம் வருமே என்ற அடிப்படை உணர்வுகூட அவர்களுக்கு இல்லாமல் மீண்டும் மௌனமாக இருந்தார்கள். ஆகவே 21 ஆம் தேதி அங்கே ஆலயங்கள் மூடப்பட்டன. அகில இந்திய அளவில் சரித்திரத்தில் முதல் முறையாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் முதல் முறையாக, தமிழ்நாட்டில் முதல் முறையாக ஆலயங்களில் பூசைகள் நடக்காமல் போராட்டத்தின் காரணமாக குமரி மாவட்டத்தில் உள்ள ஆலயங்கள் இந்த மாதம் 21 ஆம் தேதி

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 30

மூடப்பட்டன. 21 ஆம் தேதி திருக்கோவில்கள் மூடப்பட்டதற்கு ஆணையாளர் கதறினாரா? 22 ஆம் தேதியும் கதவடைப்பு தொடர்கிறது, ஆணையாளர் கதறவில்லை. அமைச்சருக்குச் செய்தியைச் சொல்லவில்லை. 23 ஆம் தேதி சட்ட சபையில் அந்தப் பிரச்சினையை எழுப்பியதற்குப் பிறகு இங்கே இருந்து அதிகாரிகள் அங்கே போய் அந்தப் பிரச்சினையை தீர்த்து வருகிறார்கள். ஆகவே தாணுமாலயசுவாமி ஆலயத்தில் பூசை நடக்காமல் கதவு அடைப்பு நடைபெற்றதற்கும் அதற்கு ஆதரவாக குமாரகோவில் வேளிமலை முருகன் சன்னிதானம் அடைக்கப்பட்டதற்கும் கன்னியாகுமரி தேவி திருக்கோயில் அடைக்கப்பட்டதற்கும், நாகராஜர் திருக்கோவில் அடைக்கப்பட்டதற்கும்—சரித்திரத்தில் முதன் முறையாக அத் திருக்கோவில்களின் கதவுகள் அடைக்கப்பட்டதற்கு—நம்முடைய அறநிலையத் துறையின் மேல்மட்ட அதிகாரிகள் பொறுப்பு ஏற்று பதவி விலக வேண்டும் என்ற வேண்டுகோளை தெரிவிக்க விரும்புகிறேன். அப்படி பொறுப்பு ஏற்று பதவி விலகுகிற நிலையில் அவர்கள் இல்லாமல் இருந்தால் அவர்களை எல்லாம் இங்கிருந்து ரஷ்யாவுக்கு அனுப்பி அங்கே உள்ள அறநிலையங்களை நிர்வகிக்கின்ற அளவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை கொந்தளிக்கும் மனதுக்கு சொந்தக்காரனாக நின்று கேட்டுக்கொள்கிறேன். கொந்தளித்துக் கொண்டு இருக்கிற இந்து சமுதாயத்தின் பிரதிநிதியாக இருந்து இன்றைக்கு நான் இதைக் கேட்டுக் கொண்டு இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும், இது ஒரு சம்பவம் தானே, தெரியாமல் நடந்து விட்டது என்று சொல்லக்கூடும்.

இது ஒன்று மட்டும் அல்ல, மீண்டும் ஒரு சம்பவம் நடைபெற்றது. கன்னியாகுமரி திருக்கோவிலுக்கு சங்கராச்சாரியார் வருகிறார், சிருங்கேரி மடத்தினுடைய மடாதிபதி வருகிறார். அவர்கள் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆனால் திருக்கோவிலில் அதற்கும் சற்று உயர்ந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று தங்களைத் தாங்களே வர்ணித்து கொண்டிருப்பவர்கள் அங்கே பூஜை செய்வது வழக்கம். ஆனால் நம்முடைய ஆணையாளரிடம் அந்த சிருங்கேரி மடத்தினுடைய மடாதிபதி அங்கே நான் பூஜை செய்யவேண்டும் என்று அனுமதி கேட்டபோது அதற்கு ஆணையாளர் ஆணை வழங்கியிருக்கிறார்.



1987 ஏப்ரல் 30] [திரு. வை. பாலச்சந்திரன்]

திருக்கோவிலில் எந்த ஜாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அங்கே வழிபாடு செய்வதற்கும், பூஜை செய்வதற்கும் இடம் கொடுக்கலாம், அதில் எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஜாதிவேறுபாடே கூடாது என்பதே எங்கள் கொள்கை. அறநிலையத்துறை ஆணையாளர் சிருங்கேரி மடாதிபதிக்கு ஆணை மூலம் அனுமதி வழங்குகிறார். அந்த ஆணை வழங்கிய பின் அங்கே அவர் போய் பூஜை செய்கிறார். இந்தச் செய்தியை அங்கே இருந்த குருக்கள் அறிகிறார். அவர் சென்றதால் திருக்கோவிலுக்குத் தீட்டு ஏற்பட்டுவிட்டது. அங்கே தீட்டு தீருகிற வரை ஆலயத்தைத் திறக்க மாட்டோம் என்று சொல்லி ஒரு நாள் மாலையிலிருந்து இரவு முழுவதும் அங்கே பூஜை நடைபெறாமல் கன்னியாகுமரி தேவியினுடைய திருக்கோவில் சாத்தப்பட்டு இருந்தது. பொறுப்பு ஏற்கவேண்டியது யார் என்று கேட்க விரும்புகிறேன். இப்படியே ஆலயங்கள் எல்லாம் மூடப்படுமானால் அதைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருப்பதற்கு ஆணையாளர் தேவையா? அந்த ஆணையாளரை தலைவராகக் கொண்ட ஒரு துறை தேவையா என்பதை நான் இங்கே மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படி பொறுப்பு இல்லாமல் அவர் நடந்து கொள்வது மட்டும் அல்ல; மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூட தவறான தகவலை அவர் தந்து எனவே அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கை குறிப்பில் குறிப்பிடும் நிலையினை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

இன்றைக்கு நம்முடைய ஆலயப் பணியாளர்கள் எல்லாம் தங்களை அரசுப் பணியாளர்களாக ஆக்கவேண்டும் என்ற கோரிக்கையினை வலியுறுத்தி வருகின்றனர். இன்றைக்கு கொத்தடிமைகளைப் பார்க்கவேண்டும் என்றால் எங்கேயும் செல்ல வேண்டாம், திருக்கோவில்களுக்குச் சென்று அங்கே இருக்கக் கூடிய ஊழியர்களைப் பார்த்தாலே போதும். அவர்கள்தான் இன்றைக்கு கொத்தடிமைகளாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்றைக்குப் போதுமான ஊதியம் இல்லை. எனவே அப்படி போதுமான ஊதியம் இல்லாத நோக்கில் அவர்களை எல்லாம் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை என்பதால் அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும் என்ற வேண்டுகோளை நாங்கள் வைக்கிறோம். ஆனால் இந்த கொள்கைக் குறிப்பில் ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கிறது.

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 30

நாங்கள் அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க மாட்டோம் என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல் மறைமுகமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆலயப் பணியாளர்களை அரசுப் பணியாளர்கள் ஆக்கும் ஒரு சூழ்நிலை கொள்கைக் குறிப்பில் இல்லை என்பதை சொல்வதற்குப் பதிலாக ஒரு செய்தி சொல்லப் பட்டிருக்கிறது. 9-வது பக்கத்தில் அந்தச் செய்தி இருக்கிறது. ஆலயப் பணியாளர்களை பணியில் நியமிப்பதற்கு கல்வித் தகுதி ஆகியவை அரசு பணியாளர்களைப் போன்று வரையறுக்கப்படுவது இல்லை என்று சொல்லிவிட்டு ஆலய ஊழியர்கள் வேறு பல சலுகைகளைப் பெறுகிறார்கள், உதாரணமாக திருவிழாக் காலங்களில் மரியாதை பெறுவது, ஓய்வு பெறும் வயது 60 போன்றவைகள் என்று சொல்லப் பட்டு ஆலயப் பணியாளர்கள் அரசுப் பணியாளர்களைவிட அதிகமாக சலுகைகளைப் பெறுகிறார்கள் என்று சொல்லி அரசு ஊழியர்களாக ஆக்க மாட்டோம் என்பதை மறைமுகமாக சொல்லுவது போல் 'யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே' என்று சொல்லுவது போல் நாங்கள் அரசு ஊழியர் களாக திருக்கோயில் பணியாளர்களை ஆக்கமாட்டோம் என்ற முடிவை திட்டவட்டமாகச் சொல்வதற்கு இங்கே மணி ஒலிக்கப் பட்டிருக்கிறது என்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். ஆனால் நான் ஒன்றைக் கேட்கிறேன். ஆலய ஊழியர்கள் இன்றைக்கு அதிகமான சலுகைகளைப் பெறுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்களே இது உண்மைதானா? அரசுப் பணியாளர் களுக்கு மொத்தமாக பணிக் காலத்தில் 18 மாதம் மருத்துவ விடுப்பு வழங்கப்படுகிறது. ஆனால் ஆலயப் பணியாளர்களுக்கு மொத்தப் பணிக் காலத்தில் 3 மாதம் மட்டுமே வழங்கப்படுகிறது. இது சலுகையா? என்று அறிவதற்கு நான் விரும்புகிறேன். அது மட்டும் அல்ல. பட்டியல் போட்டுக் காட்டினால் பலவற்றைக் காட்ட முடியும். அரசுப் பணியாளர்கள் 11 நாட்கள் பணி புரிந் தால் ஒரு நாள் ஈட்டிய விடுப்பு அவர்களுக்கு உண்டு. ஆனால் ஆலயப் பணியாளர்கள் 22 நாட்கள் பணி புரிந்தால்தான் ஒரு நாள் ஈட்டிய விடுப்பு உண்டு. இது சலுகையா? அதுவும் அங்கே இருக்கின்ற அலுவலர் விரும்பினால்தான். அரசு ஊழியர் களைப் பொறுத்தவரையில் 180 நாட்கள் ஈட்டிய விடுப்பைச் சேர்த்து வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஆலய ஊழியர் களுக்கு 75 நாட்கள் என்றுதான் இருக்கிறது. இது சலுகையா?



1987 ஏப்ரல் 30] [திரு. வை. பாலச்சந்திரன்]

(மணியடிக்கப்பெற்றது) மணியோசையோடு சேராத அர்ச்சனைக்கு சிறப்பில்லை. அதுபோல் ஆலயம் பற்றிப் பேசப் படும் எனது பேச்சோடு மணியோசை சேரவில்லை என்றால் சிறப்பு இருக்காது என்று கருதித்தான் துணைத் தலைவரவர்களே தங்கள் மணி அடிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

ஆலய ஊழியர்களுக்கு எப்போதும் மரியாதை இருக்கிறது என்று சொல்லி அவர்களின் கோரிக்கைகளைப் புறக்கணிப்பது, ஆலய ஊழியர்களின் மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கப்படும் காலம் கனியவில்லை என்று ஒருக்கால் அரசு கருத்து கொண்டு இருந்தாலும் இடைப்பட்ட காலத்தில் ஒரு ஏற்பாடு செய்வதற்கு ஆலயப் பணியாளர்கள் ஒரு ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆண்டு வருமானத்தில் 40 சதவீதத்திற்கு மேற்படாத ஒரு சதவீதம் ஆணையாளரால் குறிப் பிடப்பட்டு அதை அந்தந்த ஆலய ஊழியர்கள் தங்கள் ஊதிய மாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்ற நிலை இன்று இருக் கிறது. ஆலயத்திற்கு ஆலயம் வருமானம் வேறுபடுவதால் ஊழியர்களின் ஊதியமும் வேறுபடுகின்றது. பல திருக்கோயில் பணியாளர்களுக்கு ஊதியமே கிடைப்பதில்லை. இது நியாய மல்ல.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஒரு பெருந்துக் கழகம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதிகமான வருமானம் வரக்கூடிய வழித் தடங்களில் வண்டியை ஓட்டுகின்ற டிரைவருக்கு அதிக ஊதிய மும், குறைவான வருமானம் வரக்கூடிய வழித் தடங்களில் வண்டியை ஓட்டுகின்ற டிரைவருக்கு குறைந்த சம்பளமுமா கொடுக்கிறோம்? மொத்த வருமானத்தைக் கணக்கிட்டு, ஒரே மாதிரியாகத் தானே கொடுக்கிறோம். அது போன்று ஆலயங் களிலிருந்து வருகின்ற வருமானத்தைக் கணக்கிட்டு, எல்லா ஆலயத்திலும் இருந்தும் ஒரு குறிப்பிட்ட சதவீத வருமானத்தை ஒன்றாகச் சேர்த்து ஒரு பொது நிதியை உருவாக்கி, அதிலிருந்து ஆலய ஊழியர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் வழங்க வேண்டும்.

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 30

சில ஆலயங்களில் இரண்டு கயிற்றிலே தூக்கிட்டுத் தொங்குவதற்குக்கூட வசதி இல்லாத நிலையில், ஒரே கயிற்றில் இரண்டு ஆலய ஊழியர்கள் தூக்கிலே தொங்குகின்ற நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை தற்போதுதான் உருவாகியிருக்கிறது.

எனவே ஒரு பொது நிதியை உடனடியாக அமைத்து, அதில் இருந்து, மாதந்தோறும் ஆலய ஊழியர்களுக்கு ஊதியம் தரவேண்டும். இது ஒன்றும் புதுமையான கருத்தல்ல. 92-ஆவது பிரிவில் சொல்லியிருக்கின்ற 'காண்ட்ரிபியூஷன்' என்று சொல்லியிருக்கின்ற அந்தப் பங்களிப்புத் தொகையைப் பெற்று, நாம் எப்படி அரசுப் பணியாளர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கு பங்களிப்பு நிதி வைத்திருக்கிறோமோ, அதைப்போன்று ஒரு தொகையை இந்த ஆலயங்களில் இருந்து பெற்று ஊழியர்களுக்கும் வழங்கவேண்டும். குறிப்பிட்ட சதவீதத்தைப் பங்குத் தொகையாக ஒவ்வொரு திருக்கோவிலில் இருந்து பெற்றுக் கொண்டு, அந்தப் பொது நிதியை அமைக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்பதற்கு ஆசைப்படுகிறேன்.

ஒரு பொது நிதி வைக்கப்படுமா என்று நேற்று இதே மாமன்றத்தில் உறுப்பினர் திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் அவர்கள் கொண்டுவந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் சில விளக்கங்களைக் கேட்கின்றபோது அவர் கேட்டார். இப்படி பொது நிதி அமைக்கப்படுமா என்று கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்த பதிலிலே அந்தந்தக் கோவிலிலே நிதி இருப்பதால் பொது நிதி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்கள். பொது நிதி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது. ஏனென்றால், ஒவ்வொரு ஆலயத்திற்கும் வருமானம் இருக்கிறது. நிதி இருக்கிறது. அப்படி ஒவ்வொரு ஆலயத்திற்கும் நிதி இருக்கிற காரணத்தால், பொது நிதி தேவையில்லை என்று சொன்னீர்கள். இந்தக் காரணத்தைச் சொல்லி அந்தக் கோரிக்கை மறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் காரணம் உண்மையல்ல. இது உண்மைக்கு மாறானது என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்துள்ள கொள்கைக் குறிப்பில், இங்கேயே சுட்டிக்காட்டப்படுகிறது. கொள்கைக் குறிப்பின் 15 ஆவது பக்கத்தில் சொல்லப்



1987 ஏப்ரல் 30] [திரு. வை. பாலச்சந்திரன்]

பட்டிருக்கிறது. "பெரும்பாலான திருக்கோயில்கள்"—பெரும்பாலான திருக்கோயில்கள் என்று சொன்னால் 35,000-ல் பாதிக்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் என்றுதான் ஆகும். "பெரும்பாலான திருக்கோயில்களில்"—(கிட்டத்தட்ட 25,000 திருக்கோயில்களில்)"—நிலங்களையே வருமான வழியாகக் கொண்டிருக்கின்றன. அந்நிலங்களில் உள்ள குத்தகைதாரர்கள் பல ஆண்டுகளாகக் குத்தகை பாக்கிகளைத் தராத காரணத்தால் தினசரி பூஜைகள், சிப்பந்திகள் சம்பளம் மற்றும் இதர இனங்களுக்கான செலவுகளைச் சமாளிக்க முடியாமல் இடர் உண்டாகியுள்ளது" என்றிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். 15 நிமிடத்திற்கு பேசியாகிவிட்டது

**திரு. வை. பாலச்சந்திரன்:** நான் கேட்கிறேன். ஒவ்வொரு ஆலயத்திற்கும் நிதியிருக்கிறது. ஆகவே பொது நிதி தேவையில்லை என்று நேற்று சொன்னீர்கள்—ஆனால் இன்று பெரும்பான்மையான ஆலயங்களில் நிதி இல்லாமல், ஊழியர்களுக்கு ஊதியமும், கொடுக்காமல், பூஜையும் நடத்தப்படாமல் இடர் உண்டாகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்களே, எது உண்மை என்பதை அறிய விரும்புகிறேன். காரணம் காட்டி ஒன்றை மறுக்கும்போது, அந்த மறுப்புக்குக் காரணமாகக் காட்டப்படும் காரணம் தவறானது என்று நிரூபிக்கப்பட்டு விட்டால் அந்த மறுப்பே ஆதாரமற்றதாகிவிடும். அதுபோல, பொதுநிதி அமைக்க மறுத்தபோது மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்குக் காரணமாக சுட்டிக் காட்டிய காரணம் தவறு என்று அமைச்சரின் குறிப்பே சொல்கிறது. எனவே நேற்றைய மறுப்பை இன்று வாபஸ் பெற்று பொது நிதி அமைக்கும் அறிவிப்பை அமைச்சரவர்கள் வெளியிட வேண்டுமென வேண்டுகிறேன்.

(முற்பகல் 11-50)

ஆலயத்திற்கு வருகின்ற வருமானம் நிலங்களிலிருந்து வருகிறது. ரொக்கிலிருந்து வருகிறது. சொத்தை குத்தகைக்குக் கொடுப்பதில் லஞ்ச லாவண்யம் விரித்தாடுகிறது. லஞ்சம் தலைவிரித்து நர்த்தனமாடுகின்ற ஒரு துறை இந்தத் துறை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கான பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது. இருக்கின்ற அந்த காலி

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 30

நிலங்கள் இன்றைக்கு பல்வேறு பிரிவைச் சேர்ந்த மக்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்திலேயிருந்து ஆலய நிலங்களுக்கு விதிவிலக்கு கொடுக்காத காரணத்தால் 37 கோடி ரூபாய் வசூல் பாக்கியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 37 கோடி ரூபாயில் 40 சதவீதத் தொகை ஊழியர்களுக்கு போய் இருக்கவேண்டியது. கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் பஞ்சையாய், பராரியாய் இருக்கக் கூடிய ஆலய ஊழியர்களுக்கு ஊதியமாக போய் இருக்க வேண்டிய தொகை. அந்தத் தொகையை வசூல் பண்ணிக் கொடுப்பதற்கு அரசு தயாராக இல்லை. ஆனால் 1985-ல் இதே மாமன்றத்தில் அப்போது இருந்த அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னவென்றால் காலி ஆலய நிலங்களுக்கு குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்ற முடிவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆகவே சட்டமுன்வடிவு விரைவிலே வரும் என்று 1985-லே சொல்லப்பட்டிருக்கிறது. 3—6—1985-லே இந்த மாமன்றத்தில் சொல்லப்பட்ட சட்டம் ஏன் கொண்டுவரப்படவில்லை? சட்டம் கொண்டுவராத காரணத்தால் ஒரு இலட்சம் ஊழியர்கள் இன்று பட்டினி கிடக்கிறார்களே நியாயமா? நாங்கள் முதலாளிக்காக வாதாடவில்லை. ஆலய நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து திரும்பப் பெற்று ஆலயத்தின் நிதியைப் பெருக்க வேண்டும் என்று சொல்கின்ற போது ஏழை மக்களை நாங்கள் புறக்கணிக்கின்றோம், குறைத்து மதிப்பிடுகின்றோம் என்று சொல்லத் தேவையில்லை. நாங்கள் வாதாடுவது ஏழைகளுக்காகத்தான். கிட்டத்தட்ட 2,000 பேர்கள் பாக்கி வைத்திருக்கிறார்களே, அவர்களிடமிருந்து அதைப்பெற்று இங்கே கொடுத்தால் ஒரு இலட்சம் ஏழை ஊழியர்கள் பயன்பெற முடியும். It is only a comparative study. ஆகவே அந்த அளவிற்கு நம்முடைய அரசு சட்டங்களைக் கொண்டுவரவேண்டும். அந்தப் பாக்கியை வசூல் செய்வதற்கு சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கையை வரவேற்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இக்குறைந்த செய்திருக்கக்கூடிய பல நல்ல திட்டங்களை முதற்



1987 ஏப்ரல் 30] [திரு. எம். இராசரத்தினம்]

கண் தெரிவிக்க விழைகின்றேன். குறிப்பாக பல நல்ல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அரசை சினிமாத்துறையைச் சேர்ந்தவர்கள்—இன்று வாழ வழி வகை செய்து கொண்டிருக்கும் இன்றைய நிலையிலே, சினிமாத்துறையைச் சார்ந்தவர்கள் புரட்சித் தலைவர் அவர்கள் அரசை—பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிலர் குறிப்பிடலாம். புரட்சித் தலைவர் அவர்கள் சினிமாத்துறையின் மூலமாக வந்தவர், ஆகவே அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள் என்றெல்லாம் குறிப்பிடலாம். ஆனால் என்னைப் பொறுத்த அளவில் அது உண்மை அல்ல. நாட்டு மக்களுக்கும் தெரியக் கூடிய அளவில் ஏறக்குறைய பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள், பல லட்சக்கணக்கான ரூபாய்கள் இன்றைக்கு சினிமாத் துறையின் மூலமாக, கேளிக்கை வரியாக அரசுக்கு வந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக 1977-78-ஆம் ஆண்டு ஏறக்குறைய கேளிக்கை வரி மூலமாக 20 கோடி ரூபாய் தான் வந்தது. இன்றைய நிலையிலே ஏறக்குறைய 60 கோடி ரூபாய் கேளிக்கை வரியாக அரசுக்கு வருகிறது. இது எதைக் காட்டுகிறது என்றால் அரசுக்கும் வருமானம் வரவேண்டும், அதே நேரத்தில் திரைப்படத் துறையினரும் வாழ்வதற்கு வழி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய நிலையிலே மதுவிலக்கை அமுல் படுத்தியதினால் மிகுந்த அளவு அரசு வருமானத்தை இழந்து கொண்டிருக்கிறது என்பது நாடறிந்த ஒன்று. ஆனால் காமதேனுவாக, கற்பக விருட்சமாக விளங்குவது, திரையரங்கு உரிமையாளர்கள் தியேட்டர்கள் மூலமாக கொடுக்கக் கூடிய கேளிக்கை வரி என்பது மறுக்க முடியாத உண்மை. இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாராட்டுகின்ற வகையில் பல துறைகளை நிர்வகித்துக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் ஆசியுடன் நிர்வகித்துக் கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக பல பணிகளைச் செய்துகொண்டிருக்கின்ற நோக்கில், இந்தத் திரைப்படத் துறைக்கு மேலும் சில சலுகைகளைச் செய்ய வேண்டு மென்று திரைப்படத் துறையைச் சார்ந்தவர்களின் கோரிக்கையை என் மூலம் இங்கே சமர்ப்பிக்கின்றேன். ஏறக்குறைய 1977 ஆம் ஆண்டு 1,500 திரையரங்குகள் இருந்த இடத்தில், 2,500 திரையரங்குகள் இப்போது பெருகியுள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் சுமார்

[திரு. எம். இராசரத்தினம்] [1987 ஏப்ரல் 30

25,000 மக்கள் தொகை இருக்கக்கூடிய இடத்தில் ஒரு தியேட்டர் என்று அமைத்தால் ஹெல்த்தி காம்படிஷனாக இருக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது நகரத்திலும் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு தியேட்டர் என்று இருப்பது மிகவும் அன்- ஹெல்த்தி காம்படிஷனாக இருக்கிறது. இப்படி அன்-ஹெல்த்தி காம்படிஷன் ஏற்பட்டு, திரையரங்குகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதை இந்த மாநிலத்திலுடைய திரையரங்கு உரிமையாளர் கள்—பொதுச் செயலாளர் திரு. டி. இராமானுஜம் அவர்கள்— மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களையும் அழைத்து ஒரு வேண்டு கோளை அங்கே சமர்ப்பித்து இருக்கிறார்கள். அவர்கள் சமர்ப் பித்தது என்னவென்றால், "நாங்கள் எல்லாம் ஒரு வேண்டு கோளை வைக்கிறோம்; இப்போது வீடியோ தியேட்டர்களை அமல்படுத்துவது என்ற கொள்கையின் காரணமாக இருக்கக் கூடிய தியேட்டர்கள் பாதிக்கப்பட்டுவிடும், அப்படி பாதிக்கப் பட்டு விடுமானால், கேளிக்கை வரி இழப்பு என்பதோடு மட்டு மல்ல; பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்துகொண்டு தியேட்டர்களை நிர்மாணித்துக் கொண்டிருக்கிற திரையரங்கு உரிமையாளர் அழிந்துவிடக்கூடிய ஒரு அவல நிலை இருக்கிறது" என்பதை எடுத்துரைத்து இருக் கிறது" என்பதை எடுத்துரைத்து இருக்கிறார்கள்.

ஆகவே, இதையெல்லாம் மனதிலே கொண்டு, ஏறக்குறைய ஒரு இலட்சம் மக்கள் தொகை உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் 4 திரை யரங்குகளும் 25 ஆயிரம் பாப்புலேஷன் இருக்கக்கூடிய ஒரு கிராமத்தில் ஒன்றும்—போதும் என்ற நிலையை வகுத்துக் கொண்டால்தான் மேலும் சில பேர்கள் அங்கு திரையரங்கு களைக் கட்ட முன்வருவார்கள். அதற்கு முன்னோடியாகச் சொல்லவேண்டுமானால், கர்நாடக மாநிலத்திலே, பெங்களூரிலே தியேட்டர்களைக் கட்டுவதை வரன்முறைப்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி யினை அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அந்த மாநிலத்திலே செய்யக்கூடிய செயல்களைப் போன்று நமது மாநிலத்திலும் திரைப்படத் துறையை வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற இதயதெய்வம் புரட்சித் தலைவர்



1987 ஏப்ரல் 30] [திரு. எம். இராசரத்தினம்]

அவர்கள் நல்லாட்சியில், அது மேலும் வளர வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், வீடியோ தியேட்டர்கள் இருப்பது மட்டும் அல்ல; வேறு விதமான, லைசென்சு பெறாமல் நடக்கக்கூடிய இடங் களும் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்திலுள்ள பாச்சூர் என்ற கிராமத்தில் வீடியோ தியேட்டர் லைசென்சு எடுத்து வைத்திருந் தாலும், கொஞ்சமும் லைசென்சுக்கு ஈடுபாடு இல்லாமல், அதற்கு முறைகேடாக அந்த வீடியோ தியேட்டர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே காட்டக்கூடிய படங்கள்— 'சென்சார்' செய்யப்பட்ட படங்கள்தான் காட்டப்படவேண்டும் என்றிருக்கிறது ஆனால் அங்கே காட்டப்படக்கூடிய படங்கள்— 'சென்சார்' செய்யாமல் இருக்கிற படங்களும், பாலுணர்ச்சியைத் தூண்டக்கூடிய படங்களும் முறைகேடாக அங்கே காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியினைத் தெரிவித்துக்கொள் கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அழைத்து, அதிகாரிகளின் வாயிலாக கடுமையான நட வடிக்கையை எடுக்கவேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதைப்போல, என்டர்டெயின்மென்ட் டாக்ஸ் மூலமாக ஒவ்வொரு திரையரங்குகளுக்கும் இப்போது 48 சதவீதம், 52 சதவீதம் என்று கட்டிக்கொண்டிருக்கிற நேரத்தில், 55 சதவீதம் என்று போட்டிருப்பது—நான் முன்னமேயே குறிப்பிட்டதைப் போல, 'பொன் முட்டையிடும் வாத்தாக இருக்கிற துறையை' மேலும் நசுக்கவேண்டாம், அது வாழ வழி செய்யவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், அண்டை மாநிலமாக இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்தில் 22 சதவீதம் தான் என்டர்டெயின்மென்ட் டாக்ஸ்-ஆகப் போட்டிருக் கிறார்கள். ஹைதராபாத், திருப்பதி போன்ற இடங்களில் சைமல் டேனியஸ் ரிலீசாகப் படங்களை எடுத்தால், 'ஏ' சென்டர் தியேட்டர்களுக்கு—உடனே திரையிடக்கூடிய புதிய தியேட்டர் களுக்கு—22 சதவீதம் தான் ஆந்திர மாநிலத்திலே விதிக்கப்

[திரு. எம். இராசரத்தினம்] [1987 ஏப்ரல் 30

படுகிறது. அதற்கு அடுத்து எடுத்துக்கொண்டால், கர்நாடக மாநிலத்தில் உள்ள அனைத்து ஊர்களிலேயும் அங்கு 37 சதவீதம்தான் இருக்கிறது.

அதற்கு அடுத்தபடியாக, அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில், 27 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் தான் விகிதாச் சார முறைப்படி போட்டிருக்கிறார்கள். அதற்கு அடுத்த படியாக, புதுவை மாநிலத்தை எடுத்துக்கொண்டால், 40 சதவீதம்தான் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால், இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே சினிமாத் துறை என்பது ஏதோ ஒரு நல்லதொரு துறை என்று நினைப்பதாக இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், அனு பவத்தின் வாயிலாகக் குறிப்பிட விரும்புகிறேன். பல இடர்ப் பாடுகளைச் சந்தித்து இன்றுதான் புரட்சித் தலைவர் அவர்களின் பொற்காலத்திலேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறது அது. நல்ல தொரு கேளிக்கை வரியை இங்கே அது கொடுத்துக்கொண்டிருக் கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அப்படி நல்லதொரு கேளிக்கை வரியைக் கொடுக்கக்கூடிய அந்தத் துறையை ஊக்கு விக்கவேண்டும். ஊக்கம் ஆக்கத்திற்கு பயன் தரும் என்பதைப் போல் செயல்படவேண்டும். அதற்குண்டான ஆதரவை நல்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல், குறைவாக பெர்சன்டேஜ் இருக்கிற அண்டை மாநிலங்களை அனுசரித்து இங்கேயுள்ள என்டர்டெயின்மென்ட் டாக்ஸை 55 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக குறைக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்து குறிப்பிட விரும்புவது, வீடியோ தியேட்டர் களுக்கு எல்லாம், பெர்மனன்ட் தியேட்டர்கள் இருக்கிற இடங்களில் அனுமதி கொடுக்கக்கூடாது என்று அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காரணம், பல இலட்சக்கணக்கான ரூபாய்கள், 20 இலட்சம் ரூபாய், 25 இலட்சம் ரூபாய் என்று போட்டு செய்யக்கூடிய திரையரங்குகளுக்குப் போட்டியாக அங்கே வீடியோ தியேட்டர் கள் வந்துவிட்டால் உண்மையிலேயே சினிமாத் தொழிலை இது



1987 ஏப்ரல் 30] [திரு. எம். இராசரத்தினம்]

பாதிக்கும் என்பதை குறித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த மானியக் கோரிக்கையின் மீது பதில் சொல்லும் போது நல்லதொரு பதிலை இன்றைக்குத் தருவார் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், திரைப்படத் துறையினர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே நீங்கள் நல்ல தொரு நிலைமையினை உருவாக்கவேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வீடியோ தியேட்டர்களினால் நிச்சயமாக என்டர்டெயின் மென்ட் டாக்ஸ் பாதிக்கப்பட்டு விடும் என்பதை கவனப்படுத்தவும் விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

குறிப்பாக அவர்களை ஊக்குவிக்க பல காரியங்களைச் செய்து கொண்டிருந்தாலும், அவர்களை ஆதரிக்க வேண்டும் என்று அரசு கொள்கை அளவில் இருந்தாலும், கடைப்பிடிக்க வேண்டிய சட்ட திட்டங்களை நிச்சயமாக அந்த வீடியோ தியேட்டர்கள் கட்டினால் கடைப்பிடிக்க முடியாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன். திரைப்படத் துறையில் இருக்கிற சட்டதிட்டங்களின் படி 20' சுற்றுவட்டாரம் இருக்க வேண்டும். கோயில்கள் மருத்துவமனை கள் போன்ற இடங்களுக்கு அருகே இருக்கக் கூடாது என்ற விதி முறைகள் இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்கே நன்கு தெரியும். அந்த விதிமுறைகளையெல்லாம் தீர்க்கமாக ஆலோசித்துத்தான் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் நல்ல நிலைமையில் நடந்து கொண்டிருக்கிற இந்தத் திரைப்படத் துறையை அழித்துவிட வேண்டாம் என்று குறிப்பாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலத்தில் சொல்லுவதைப் போல் ஒருவர் மகிழ்ச்சியாக இருப்பதற்காக மற்றவர்களை அழித்துவிட வேண்டாம் என்று இந்த அரசின் நல்ல காரியங்களைச் செய்து வருகிற மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். இராசரத்தினம்] [1987 ஏப்ரல் 30

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவக்கரையில் மிகச் சிறந்த கோயில் இருக்கிறது, சிறப்பான ஸ்தலம் அது. அங்கே சில முறைகேடுகள் நடப்பதாக என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அந்த முறைகேடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே திருவாமத்தூர் ஒரு பெரிய பாடல்பெற்ற ஸ்தலம். அங்கெல்லாம் கும்பாபிஷேகம் போன்றவற்றைச் செய்ய வேண்டும் என்றும் அதற்கு அரசு மானியத் தொகை கொடுக்க வேண்டும் என்றும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது).

அடுத்து, மற்ற உறுப்பினர்கள் கூட இங்கே குறிப்பிட்டார்கள். அதாவது திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களுக்குச் சரிவர குத்தகை தரவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் எரியா கமிட்டியில் சேர்மன் பொறுப்பில் இருந்திருக்கிறேன். பல இடங்களில் குத்தகை தரப்படவில்லை என்பதை அறிவேன். எனக்கு முன்னாலே கூட பெரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது மறுக்க முடியாத உண்மை. நான் சொல்ல விரும்புவதெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்களின் பிரதிநிதிகளாக இருக்கிற சர்வ கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லோரும் இதற்கு உறுதுணையாக இருந்தால் நிச்சயமாக குத்தகையை வசூலித்துவிட முடியும். அதன் வாயிலாகக் கோயில்களும் சிறப்பாக நடைபெற வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சிதம்பரம் தாலுக்காவில் சோழியன் பாளையம் ஸ்கீம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதைக் கவனித்து அங்கே இருக்கிற அதிகாரிகள் சோதனை செய்வதோடு ஒவ்வொரு இடத்திற்கும் சென்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் பல கிராமங்களில் அது சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதைப் போக்கும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் செயல்பட வேண்டும் என்று கூறி, பேசுவதற்கு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.



1987 ஏப்ரல் 30]

* திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1987-88 ஆண்டுக்கான தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வைணவர்களின் 108 திவ்யதேசங்களில் முதன்மையான ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதப் பெருமானின் திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணியைத் துவக்கி, 400 ஆண்டுகளாக அச்சுதராயர் மன்னராலேயே முடிக்கப்படாத இராஜகோபுரத்தை கடந்த 25—3—1987 அன்று சிறப்பான முறையில் சம்ப்ரோக்ஷணம் செய்து முடித்த, போற்றுதலுக்குரிய அஹோபில மடத்து ஜீயர் சுவாமி அவர்களுக்கும், இத்திருப்பணிக்கு அனுமதித்து ரூ. 7 லட்சம் அளவுக்கு நிதி உதவி அளித்து, உறுதுணையாக இருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மற்றும் முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீ. அவர்களுக்கும் இன்றையதினம் அறநிலையத் துறை அமைச்சராக இருக்கும், மாண்புமிகு திரு. வி. வி. எஸ். அவர்களுக்கும் என்னுடைய சார்பாக, முக்கியமாக ஆன்மீகத்தில் பற்றுள்ளவர்கள் சார்பாக உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறநிலையத் துறை கடந்த பத்தாண்டுகளில் பல திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்தும், நிதி உதவி செய்தும், பாராட்டும்படி விதத்தில் தனது பணியைச் செய்து கொண்டிருக்கிறது. ஆனால் இதன் நிர்வாகத் துறையை எடுத்துக் கொண்டால் முழு திருப்தி அளிக்கக்கூடிய நிலையில் இல்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் துறையின் தணிக்கைப் பிரிவைச் செம்மைப்படுத்த வேண்டுகிறேன்.

கோயில்களில் செலவழிக்கக்கூடிய பணத்திற்குச் சுலபமாக போலி வவுச்சர்கள் எழுதி பல முறைகேடுகள் நடப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. குறிப்பாக வெள்ளை அடித்தல், வர்ணம் அடித்தல், புஷ்ப சப்ளை, அலங்காரம், இசை நிகழ்ச்சி போன்ற வகையில் இதுபோன்ற முறைகேடுகள் அதிகமாக நடைபெறுகின்றன. அதைத் தவிர, கொள்கை விளக்கக் குறிப்பிலேயே நிலக் குத்தகை பாக்கியாக ரூ. 37.25 கோடி உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளவு பெரும் தொகை வர

[திரு. எஸ். பி. மணவாளன்] [1987 ஏப்ரல் 30

வேண்டியதாக இருக்கிறது. அதே நேரத்தில் நகர்ப் பகுதிகளில் உள்ள மனைவாடகை விடுவதிலும் அவர்கள் உள்வாடகை விட்டு தனியார் பணம் சம்பாதிக்கிறார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனைகளையும், இந்த நிலங்களையும் விற்று ஒரு நிரந்தர வைப்பு நிதியாகப் போட்டு அதிலிருந்து வரும் வட்டித் தொகையை வைத்து திருப்பணி போன்ற பணிகளைச் செய்யலாம். இதை என்னுடைய கருத்தாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிக வருமானம் உள்ள திருக்கோவில்களிலிருந்து அதிக அளவிற்கு பாடல்பெற்ற சைவ திருக்கோவில்களுக்கு திருப்பணி செய்ய முன்னுரிமை கொடுத்து உதவிட வேண்டுகிறேன்.

தற்சமயம் திருமண மண்டபங்கள் அதிகமாக இல்லை. அறநிலையத் துறையின் சார்பாக அதிகமான திருமண மண்டபங்களைக் கட்டி குறைந்த வாடகைக்கு மக்களுக்குக் கொடுக்க வேண்டுகிறேன்.

சிலை திருட்டைத் தடுக்க சிறப்பான நடவடிக்கைகள் எடுப்பதாக குறிப்பிலே குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் கடந்த ஆண்டுகளில் சிலை திருட்டுக்கள் எவ்வளவு நடைபெற்றன, அதிலே எவ்வளவு கண்டுபிடிக்கப்பட்டன என்ற குறிப்பு இதிலே இல்லை. தயவு செய்து அமைச்சர் அவர்கள் இதை விளக்கிட வேண்டுகிறேன்.

சைவ, வைணவ திருக்கோவில்களில் திருமறைகளை சிறுவர்களுக்கு போதிக்கும் வகையில் தனியாக பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயில்களில் தக்கார் என்ற ஒரு நபர் நிர்வகிக்கிற முறையை விடுத்து எல்லா திருக்கோயில்களுக்கும் அறங்காவலர்கள் குழுவை அமைத்திட வேண்டுகிறேன். ஆன்மீகத்தில் நம்பிக்கை உடையவர்களை, ஆன்மீகப் பணியில் நாட்டம் உள்ளவர்களை மட்டும் அறங்காவலர்களாக நியமியுங்கள். கட்சிக்காரர்களை நியமிக்காதீர்கள். ஆலயத்தை அரசியல் ஆக்காதீர்கள் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



136529 சென்னை-600 009

1987 ஏப்ரல் 30] [திரு. எஸ். பி. மணவாளன்]

அடுத்து இந்தத் துறையைப் பற்றி ஒரு முக்கியமான கருத்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறை செம்மையாக, திறம்பட செயல்பட வேண்டும் என்றால் இந்தத் துறையை அரசியல் ஆக்காமல், அரசியல் தலையீடு இல்லாமல் சுயாட்சியோடு தனி அதிகாரத்தை உடைய அமைப்பாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காக சிந்தனை செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சுற்றுலாத் துறையைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். தமிழக சுற்றுலாத் துறைக்கு மத்திய அரசு இரண்டு கோடி ரூபாய் கொடுத்து, அது போக மேற்கொண்டு இரண்டு கோடி ரூபாய் கொடுப்பதாக வாக்களித்து இருக்கிறார்கள் என்றும் மேற்கொண்டு 6 கோடி ரூபாய்க்கான திட்டங்களை தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த வகையிலே சுற்றுலா வளர்ச்சியில் மைய அரசு அதிகமான கவனம் செலுத்தி தமிழக அரசுக்கு உதவிக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதற்காக மத்திய அரசுக்கு இந்த மன்றத்தின் மூலமாக நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலா ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வளர்ச்சி பெற வேண்டுமானால் அரசின் பிற துறைகளின் ஒருங்கிணைப்புத் தேவை. சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை தயார் செய்கின்ற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்தாலோசித்து அவர்களுடைய யோசனைகளைக் கேட்டு இந்தத் துறை செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுற்றுலாத் துறை இலாபத்தையே கருத்திற்கொள்ளாமல் சுற்றுலாப் பயணிகளின் வசதிகளை கருத்திற் கொண்டு அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையில் நியமிக்கப்படும் அதிகாரிகள் அலுவல் ரீதியாக இல்லாமல் வணிகரீதியாக சுற்றுலாத் துறையை எப்படி வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்குரிய வகையில் உள்ள அதிகாரிகளாக நியமித்து இந்தத் துறையை வளர்ச்சி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுற்றுலாத் துறை வளர்ச்சி அடையும் நோக்கில் சுற்றுலா இடங்கள் இயற்கைச் சூழ்நிலை மாறாவண்ணம், இயற்கை வளங்களை பாதுகாக்கும் வகை

[திரு. எஸ். பி. மணவாளன்] [1987 ஏப்ரல் 30

யில் செயல்பட வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். ஒரு சில இடங்களை மட்டும் வளர்ச்சி பெறச் செய்யாமல் பரவலாக மக்கள் சென்று காணும் வகையில் பல இடங்களில் வளர்ச்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலாத் துறைக்கு பிற்காலத்திலே வேண்டிய அதன் வளர்ச்சிக்குத் தேவையான அரசாங்க புறம்போக்கு நிலங்களை இப்போதே திட்டமிட்டு அரசாங்கத்திடமிருந்து சுற்றுலாத் துறை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்று அமைச்சருக்கு என்னுடைய கருத்தாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் சார்ந்துள்ள திருப்பத்தூர் தொகுதியில் ஏலகிரி மலையில் கட்டப்பட்டு வரும் இளைஞர் விடுதி துரிதமாக திறக்கப்பட வேண்டும் என்றும், அங்கே ஒரு படகுக் குழாம் அமைக்க வேண்டும் என்றும் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தேன். என்னுடைய கோரிக்கையை ஏற்று உடனடியாக சுற்றுலாத் துறை அமைச்சர் அவரே முன் நின்று சுற்றுலாத் துறை இணை இயக்குநரை அனுப்பி இளைஞர் விடுதியையும், படகுக் குழாம் ஆகியவற்றையும் விரைவிலே எடுத்துச் செய்ய ஆவன செய்தார்கள். அதற்காக அமைச்சர் அவர்களுக்கும் இந்தத் துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே ஏலகிரி மலை அடிவாரத்திலே சுமார் 9 மாதங்கள் தண்ணீர் வற்றாத ஜலக்கம்பாறை நீர் வீழ்ச்சி இருக்கிறது. அதையும் சுற்றுலாத் துறையில் சேர்த்து, அந்த இடத்தையும் வளர்ச்சி அடையச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்து, காட்டு வளத்துறையைப் பொறுத்தவரையில் என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மனித வாழ்க்கைக்கு வேண்டிய அதிகமான நீர்த் தேவைகளுக்கு, ஏற்ற மழைக்கு முக்கியமாக இருப்பது காட்டு வளம். அந்தக் காட்டு வளத்தை அதிகப்படுத்துவதிலே சிறப்பான செயல் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.



[1987 ஏப்ரல் 20 [திரு. எஸ். பி. மணவாளன்]

அதே நேரத்திலே மரங்களை வளர்க்க ஊக்கப்படுத்துகின்ற வகையிலே மரக் கன்றுகளை எல்லா மக்களுக்கும் இலவசமாகக் கொடுக்க வேண்டுகிறேன். மரங்கள் வளர்ப்புப் பணியில் இயற்கைப் பாதுகாப்பு மன்றம் தன்னுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறது. சென்ற சில வருடங்களாக இலவசமாக மரக் கன்றுகள் கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. அது ஏன் என்று தெரியவில்லை. அந்த இயற்கைப் பாதுகாப்பு மன்றங்களுக்கு இலவசமாக மரக் கன்றுகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கம்பி வலை வேலி அமைத்து, சந்தன மரங்களை வளர்க்கின்ற முயற்சி நல்ல சிறப்பான திட்டமாகும். நான் சார்ந்துள்ள திருப்பத்தூர் தொகுதி ஜவ்வாது மலையிலே அந்தத் திட்டத்தை பரீட்சார்த்தமான முறையில் செய்திருக்கிறார்கள். நானும் துறை அதிகாரிகளுடன் சென்று பார்த்தேன். சிறப்பான முறையில் சந்தன மரங்கள் வளர அது ஏற்றதாக இருக்கிறது. அந்த முயற்சியை மேலும் தொடருங்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தைல மரங்களை மலையில் பயிரிடுகிறார்கள். ஆனால் அதை சமவெளியில் பயிரிட்டால், நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறதென்ற கருத்து நிலவி வருகிறது. அரசுத் துறைகளிலேயே இதில் மாறு பட்ட கருத்துக்கள் இருக்கின்றன. இதை அரசு தெளிவாக்கிட வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூகக் காடுகள் பற்றிச் சொல்லும்போது, வனத் துறையினர் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பணியைப் பாராட்டுகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு இந்த நேரத்தில் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சமூகக் காடுகளை ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைத்து, வளர்த்துக்கொள்ளச் செய்கிறார்கள். ஆனால் ஊராட்சி மன்றங்கள் சரியாக, செம்மையாக பராமரிப்பதில்லை. அங்கே மரக் கன்றுகளை அவர்கள் நடுவது கிடையாது. எனவே, என். ஆர். இ. பி. திட்டத்தின்கீழ் உள்ள சமூகக் காடுகள் வளர்ப்பை அமைச்சர்களுடைய துறையோ ஏற்று, அந்த சமூகக் காடுகளை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். பி. மணவாளன்] [1987 ஏப்ரல் 30

அடுத்து, சந்தன மர வருவாய் 14 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த 14 கோடி ரூபாயிலே நான் சார்ந்துள்ள திருப்பத்தூர் வனத் துறையைச் சேர்ந்த சந்தனக் கிடங்கிலிருந்து சுமார் 9 கோடி ரூபாய் வருவாய் வருகிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தவிர சாலைகள் என்னும்போது வருடத்திற்கு 5 முதல் 10 கிலோ மீட்டர் அளவுக்குத்தான் சாலை அமைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். மலையிலிருந்து பல கோடி ரூபாய் வருவாய் வருகிறது. அந்த மலைவாழ் மக்களின் நலன் கருதி, மலைவாழ் மக்களுக்கு வசதி செய்யும் வகையிலே இன்னும் அதிகமான அளவிலே மலைச் சாலைகளைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

**திரு. ச. சங்கரலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து நானும் என்னுடைய கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இன்றைக்கு அறநிலையத் துறை சிறப்பாக தன்னுடைய பணியைச் செய்து வருகிறது. தமிழ் நாட்டில் விளக்கு ஏற்றக்கூட வசதியில்லாத பல ஆலயங்கள் இருப்பதும், அந்த ஆலயங்களிலே விளக்கேற்றி பூசை செய்வதற்கு பல கோடி ரூபாயை வைத்து, அதன்மூலம் கிடைக்கும் வட்டியைக் கொண்டு தமிழ் நாட்டிலுள்ள வசதியில்லாத ஆலயங்களில் எல்லாம் விளக்கேற்றி பூசை செய்து, அங்குள்ள அர்ச்சகர்களுக்கு சம்பளம் வழங்கும் திட்டத்தை உருவாக்கி, இன்றைக்கு அந்தப் பணிகள் எல்லாம் சிறப்பாக, செம்மையாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை நான் அருள்கூர்ந்து ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இப்படி சிறப்பாக பணிகள் செய்வதன் மூலமாகத்தான். இன்றைக்கு ஆலயக் கடவுள்கள் எல்லாம் தமிழர்களின் இதயக் கடவுள் போன்றாக முதல்வர் புரட்சித் தலைவரை வாழ்த்திக் கொண்டிருக்கின்றன என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 30] [திரு. ச. சங்கரலிங்கம்]

ஆலயத்திற்குச் செய்யும் மேம்பாடு ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டு என்ற முறையிலே அறநிலையத் துறை செம்மையாக ஈடுபட்டு, பல கோபுரங்களை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த வகையிலேதான் ஸ்ரீரங்கம் கோயில் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்று இருக்கின்றது. அதுபோலவே, தென்பாண்டி மண்டபத்தில் தென்காசி கோபுரம் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் தமிழ் நாட்டில் இருக்கின்ற ஆலயங்களில் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சிறப்பான அளவுக்கு அந்தப் பணிகள் நடக்கின்றன. அவைகள் நல்ல எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றன என்பதை நான் அருள்கூர்ந்து ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்னும் தமிழ்நாட்டில் இருக்கின்ற இந்துக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான் இந்து மதம் வளர்ந்து வருகிறது என்று நினைந்து இன்றைக்கு பெருமைப்படுகின்றார்கள்; ஒரு பூரிப்பு அடைகிறார்கள். அதுபோலவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, நிதி வசதியுள்ள ஆலயங்களிலே எல்லாம் இன்றைக்கு தங்கத் தேர் உருவாக்கி இந்து மக்களுக்கும் இந்து மதத்திற்கும் மதிப்பு உயர்ந்திருக்கிறது. இந்துக்களின் புனிதமான இந்த ஆலயங்களில் இருந்து தங்கத் தேர் உலாவி வருகின்ற காட்சியை பார்க்கின்றபோது பக்தர்கள் எல்லாம் பெருமைப்படுகின்ற ஒரு நிலையை நாம் பார்க்கிறோம். அந்த நிலையை நாம் உருவாக்கிக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

எனது சங்கரன்கோயில் தொகுதியிலே சங்கரநாராயணசாமி ஆலயத்திற்கு 22 லட்சம் ரூபாய்க்கும் அதிகமான தொகையில் தங்கத் தேர் உருவாக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் ரூ. 3 லட்சம் செலவிலே ஒரு கலை அரங்கமும் ஒரு கல்யாண மண்டபமும் கட்டி முடிக்கப்பட்டது என்பதையும் ஞாபகப்படுத்தி, அதை உருவாக்குவதற்கு உத்தரவு இட்டதையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ச. சங்கரலிங்கம்] 1987 ஏப்ரல் 30]

மேலும் சங்கர நாராயணசாமி திருக்கோயிலுக்கு ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம் அங்கு பூசை செய்கின்ற அர்ச்சகர்களுக்கு பூசைமுறை மானியமாக பட்டா வழங்கப்பட்டு இன்றைக்கு அவர்கள் அனைவரும் அந்த நிலங்களை எல்லாம் வசதி உள்ளவர்களுக்கு விற்று விட்டிருக்கின்றார்கள். அந்த நிலங்களை வாங்கி அதை வீட்டு மனைப் பட்டாக்களாக ஆக்கி அதிலே வசதியாக வீடுகட்டிக் கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து அந்த ஆலயத்திற்கு சொந்தமான நிலங்களைக் கைப்பற்ற வேண்டும் என்றும். அந்த ஆலயத்திற்குச் சொந்தமான சொத்தை அந்த ஆலயத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கவேண்டும் என்றும் அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

மேலும் சங்கரன் கோயில் சங்கரநாராயணசாமி கோயில், தென்பாண்டி மண்டலம், திருநெல்வேலிச் சீமையில் கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள அந்த கோயில் அதிகமான வருமானம் உள்ள கோயிலாக இன்றைக்கு இருக்கின்றது. அங்கு ஆடித்தபசு திருவிழா நடக்கின்றது. கோமதி அம்மன் ஆடித்தபசு திருவிழாவிற்கு, அதைக் காண்பதற்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வருகின்றார்கள். அந்த ஆலயத்திற்குப் போதிய வசதிகள் இன்னும் தரப்படவேண்டும். அங்கு பக்தர்கள் வசதி இல்லாத காரணத்தினாலே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே ஆலயங்களில் நிதி வசதி இருந்தாலும், அவைகள் சீரமைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நான் அங்கே அறங்காவலர் குழு மெம்பராக இருந்த காலத்தில் அந்த ஆலயத்திற்கு கோமதி அம்மன் பொறியியல் கல்லூரி ஒன்று உருவாக்கவேண்டும் என்று தீர்மானங்களை வைத்தோம். அந்தத் தீர்மானங்கள் இதுவரையில் நிறைவேற்றப் படவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பேற்றிருக்கின்றார்கள். அவர்கள் சங்கரன் கோயிலில் ஒரு பொறியியல் கல்லூரி, கோமதி அம்மன் ஆலயத்தின் சார்பிலே உருவாக்கித்தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 30] [திரு. ச. சங்கரலிங்கம்]

மேலும் ஆலயங்களின் நிதியிலிருந்து, ஏழைகளுக்கு 'இலவசத் திருமணங்களை நடத்துகின்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து பல ஆண்டுக் காலமாக நடைபெறுவக் கொண்டிருக்கின்றது. அதிலே தாமதம் ஆகியுள்ளது என்பதையும், அங்கே அதை உடனடியாக நடத்த வேண்டும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். அங்கு ஆண்டு தோறும் ஆலயத்திலே உள்ள நிதிவசதியைக் கொண்டு, கட்டாயமாக இத்தனை திருமணங்கள் நடத்தப்பட வேண்டும் என்று மீண்டும் அறிவுறுத்தவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

என் நினைவு சரியாக இருக்குமானால், 1981-82-லே ஆதி திராவிடர் மதத்தைச் சேர்ந்த ஒருவர் ஆலயங்களிலே பரிச்சாரகராக போடவேண்டும் என்று ஒரு உத்தரவு வந்திருக்கிறது. அந்த உத்தரவு இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அந்த உத்தரவை கண்டிப்பாக நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அடுத்தபடியாக காட்டு வளம். காடு வளர்ந்தால்தான் நாடு வளரும், நாட்டு வளம் செழிக்கும். அதற்குரிய மழை பெய் வதற்கு மரங்கள் வளர்க்கப்படவேண்டும். அந்த மரங்களை வளர்ப்பதற்கு வனத்துறை சிறப்பான பணிகளைச் செய்து வருகின்றது. புறம்போக்கு நிலங்களிலே இன்றைக்கு சமூகநலக் காடுகள் உருவாக்கப்பட்டு அந்தப் பணிகளைச் செம்மையாக, சிறப்பாக வனத்துறை செய்து வருகின்றது. அந்தப் பணி இன்னும் முடிக்கிவிடப்படவேண்டும் என்றும் அந்தத் துறை இன்னும் சீராக, செம்மையாக செயல்பட அமைச்சர் அவர்கள் அறிவுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். புறம்போக்கு நிலத் தில் மரங்கள் உருவாக்குவதால் பஞ்சாயத்துக்குக்கூட இன்றைக்கு அதிக வருமானம் வருகின்ற அளவுக்கு இருக்கும். இந்த நல்ல திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தை இன்னும் மேலும் சிறப்பாக, செம்மையாக செயல்படுத்த வேண்டு மென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செய்தி தொடர்புத் துறை முக்கியமான ஒன்று. அதன் மூலம்தான் அரசின் சாதனைகளை, திட்டங்களை பாமர மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும். அரசாங்கத்தால எத்தனையோ திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத் தகைய திட்டங்களைப் பற்றி எல்லாம் கிராமப்புறங்களில் வாழ்கிற அப்பாவி மக்களுக்கு எடுத்து வைக்கின்ற வகையில், அவர்கள் அவைகளைப் பற்றி தெரிந்துகொள்கின்ற வகையில், புரிந்துகொள் கின்ற வகையில், நல்ல நோக்கத்தோடு, நல்ல திரைப்படங்களின் வாயிலாக எடுத்துச்சொல்ல வேண்டும். மாதத்திற்கு இரண்டு தடவை எல்லா கிராம மக்களுக்கும் திரைப்படங் களைக் காட்ட விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி அமர் கிறேன், நன்றி, வணக்கம்.

* திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை, அறநிலையத் துறை, செய்தித் துறை ஆகிய துறைகள் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீது ஒருசில கருத்துக்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சொல்ல விரும்புகிறேன். முதலில் சில கோரிக்கைகளை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். நீலகிரி வால்பாறை சிங் கோனா தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கின்ற சம்பளம் கூட இவர்களுக்குக் கிடைப்பதில்லை. சிங்கோனா தொழிலாளர்களுக்கு சம்பளம் மிகவும் குறைவாக இருப்பதால் அவர்களுக்கு நியாய விலைக் கடைகளைத் திறந்து அத்தியாவசிய பண்டங்களை நியாய விலையில் வழங்க வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தொழிலாளர்கள் சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி சிங்கோனா தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து, தமிழ்நாட்டிலுள்ள 'டூரிஸ்ட் ஓட்டல் யூனிட்' -களில் தொழிலாளர்களாக பணியாற்றுகின்ற வெயிட்டர்கள், ரூம் பாய்ஸ் போன்றவர்களுக்கெல்லாம் வீட்டு வாடகை அலவன்ஸ், மருத்துவ





அலவன்ஸ் ஆகியவற்றை வழங்க வேண்டும். 'தமிழ்நாடு ஓட்டல்'-களில் பணியாற்றுகின்ற 12 ஆயிரம் தொழிலாளர்கள் அதன் மூலம் பயன் பெறுவார்கள். அதுபோல தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறையை எடுத்துக்கொண்டால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் தொழிற்சங்கம் என்கிற ஒரே ஒரு ஏ.ஐ.டி. யு.சி. சங்கம் தான் இருக்கிறது. அரசு உடனடியாக அந்தத் தொழிற் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இன்றைக்கு சுற்றுலாத் துறையை எடுத்துக்கொண்டால் சுற்றுலா விடுதிகளில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் நல்ல முறையில் விடுதிகளை வைத்திருப்பதோடு நல்ல உணவையும் தயாரித்து வழங்குகிறார்கள். அந்தத் தங்கும் விடுதிகளில் பணி யாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு அரசு சில சலுகைகளை அளித் தால்தான் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் அமைக்க முடியும் என்பதோடு மாத்திரமல்லாமல், தங்கும் விடுதி களையும் நல்ல முறையில் பராமரித்து நல்ல முறையில் பணி யாற்றுவார்கள் என்பதால் அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தோட்டத்தில் பணியாற்றுகின்ற வனக் காவலர் களுக்கு சீருடை வழங்க முடியாது என்று அதிகாரிகள் சொல்லி யிருக்கிறார்கள். குறிப்பாக கந்தசாமி என்பவர் கொலை செய்யப் பட்டிருக்கிறார். செத்தவர் யார் என்று கண்டுபிடிக்க அடையாளம் கிடையாது. கடைசியில் அவர் போட்டிருந்த வனத் துறை பெல்டை பார்த்துதான் அவர் தோட்டக் காவலர் என்று தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அதுபோல இன்னொரு சம்பவம் நடைபெற்றது. மரம் வெட்டுகின்றவர்களை எதிர்த்த தால் கொலை செய்யப்படும் அளவுக்கு தாக்கப்பட்ட ஒருவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படும்போது வழியில் இறந்து விட்டார். ஆக, இத்தகைய காவலர்களுடைய உயிருக்கு பாதுகாப்பு கிடையாது என்கிற நிலை இருக்கிறது. இவர் களுடைய உயிருக்கு பாதுகாப்பளிப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுப்பதோடு சீருடையும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இறந்துவிட்டவர்களுடைய குடும்பத்தினருக்கு முதலமைச்சருடைய நிதியிலிருந்து நிவாரணம் கொடுப்பதில்லை. மற்றவர்களுக்குக் கொடுப்பதுபோல இவர்களுக்கும் அதனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காடுகளில் வன அலுவலர்கள், வனக் காப்பாளர்கள் போன்றவர்களை நேரடியாக எடுப்பதை விட்டுவிட்டு தகுதி அடிப்படையில் வனத்திலுள்ள வனத் தோட்டக் காவலர்களிலிருந்து, வன ஊழியர்களிலிருந்து நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஆணை 107-ன்படி 5 ஆண்டுகள் பணி புரிந்தவர்களை எல்லாம் நிரந்தரப்படுத்த வேண்டும். அதுபோல வன இலாக்கா ஊழியர்களுக்கும் தோட்டக் காவலர்களுக்கும் தற்போது இருக்கின்ற தகுதியின் அடிப்படையில் சம்பளம் தர வேண்டும்.

அடுத்து, அரசு ஊழியர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் தருவது போல இவர்களுக்கும் தரப்பட வேண்டும். அதற்கு அவர்கள் மாதந்தோறும் சம்பளத்திலிருந்து 10 ரூபாய் பிடித்தம் செய்ய சம்மதித்திருப்பதால் இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் நாகப்பட்டினம் பகுதியிலுள்ள வேளாங்கண்ணி பிரசித்தி பெற்ற இடமாதலால் அங்கே சுற்றுலா விடுதி ஒன்றைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல வேதாரண்யம் கோடிக்கரையை எடுத்துக்கொண்டால் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் அமாவாசை போன்ற நாட்களில் அங்கு முழுக்குக்கு வருகிறார்கள். வெளிநாட்டுப் பறவைகளைப் பார்க்க வருகிறார்கள். அங்கே தங்கும் விடுதி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செய்தி-திரைப்படத் தொழில் சம்பந்தமாகக் கூற வேண்டுமென்றால், எனக்கு முன்னால் பேசிய பெரியவர்கள் சில பேர் சொன்னார்கள். மந்திரிகள், எம்.எல்.ஏ. க்கள், எம்.பி. க்கள்



பற்றி சினிமா எடுக்கப்படுவதற்குச் சிலர் வருத்தப்பட்டார்கள். வருத்தப்படலாம். ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விமர்சனத்தை நாம் கொஞ்சம் தைரியமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், இன்றைக்குத் தமிழகத்தில் படமெடுக்கக் கூடியவர்களெல்லாம் யார்? இழிவான படங்கள், பார்க்க முடியாத அசிங்கமான படங்களை எடுத்து, பருவம் வராத பெண்கள், ஆண்கள்கூட கெடக்கூடிய அபாயம் தமிழ்நாட்டில் இருக்கிறது என்று சொன்னால், இந்த நிலை திட்டமிட்டுச் செய்யப்படக் கூடிய ஒரு காரியம். மத்திய சர்க்கார்தான் இன்றைக்குத் தணிக்கை செய்கிறது என்று சொன்னாலும்கூட, மத்திய சர்க்காரோ தமிழ்நாட்டினுடைய கலாச்சாரத்தை, கலைகளைச் சீரழிக்கக்கூடிய அளவிற்கு விட்டுவிடுகிறார்கள் என்று நாம் சொல்ல முடியாது. அந்த அளவிற்கு இன்றைக்குப் படமெடுக்கக் கூடியவர்களெல்லாம் யார்? அது நன்றாக அமைச்சர்களுக்குத் தெரியும், மற்றவர்களுக்கும் தெரியும். அமைச்சராக இருந்தவர்கள், எம்.எல்.ஏ. க்களாக இருந்தவர்கள், அரசியல் பிரமுகர்கள், சினிமாத் துறையிலே இருப்பவர்களைப்பற்றி நாம் பேசுகிறோம். ஆனால் இந்தத் துறையிலே இருக்கக்கூடியவர்களே—தற்போது "காதல் பரிசு" என்ற படம் வந்திருக்கிறது—அதைப் பார்த்தார்களோ, பார்க்கவில்லையோ, தெரியவில்லை. உண்மையிலேயே அந்தப் படம் பார்க்கிறவர்களுக்கு எப்படியிருக்கும்? அந்தப் படத்தைத் தயாரித்தவர்கள் யார்? ஒரு அரசியல் பிரமுகர். தமிழகத்திற்கே வழிகாட்டக் கூடியவர்களே அப்படிப்பட்ட படங்களை எடுக்கின்றபொழுது சினிமாத் துறையை நாம் குறை சொல்வதில் சாத்தியமில்லை. ஆகவே, எதிர்காலத்தில் அமைச்சரவர்கள், இப்படிப் படம் எடுப்பவர்களுக்கு ஒரு வழி காட்டக் கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வனத் துறை. சேலம் மாவட்டத்தில் காட்டிலாகாவிற்குச் சொந்தமான தரிசு நிலங்கள் இருக்கின்றன. அதில், 400, 500 குடிசைகளைப் போட்டிருக்கிறார்கள். அதனால் காடு வளர்ப்பதற்கும் பிரயோஜனமில்லை. ஆனால் அப்படிப்பட்ட இடங்களில் குடிசை போட்டதற்கு இன்றைக்கு வழக்கு போட்டிருக்கிறார்கள். வழக்கையும் தள்ளுபடி செய்யவேண்டும்; வன

[திரு. பொ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 30

இலாக்காவிற்கு தேவையில்லாத இடங்களில் குடிசை போடுவதற்கே வசதியில்லாத ஏழைகளுக்கு அந்த மாதிரி இடங்களைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தர்மபுரி மாவட்டத்திலேயும் சரி, மற்ற மாவட்டங்களிலேயும் சரி, இன்றைக்குப் பழங்குடி மலை ஜாதியினர் வசிக்கிறார்கள். தர்மபுரியிலே ரொம்பப்பேர் மலையிலே உள்ள வறட்சியின் கொடுமையாலே கீழே இறங்கி விட்டார்கள். கடுகு, சீரகம் என்று இப்படியெல்லாம் உற்பத்தி செய்கிறார்கள். அப்படிப்பட்ட மலை ஜாதியினருக்கும், பழங்குடியினருக்கும் அவரவர்கள் வைத்திருக்கக்கூடிய இடங்களை அவர்களுக்குக் குத்தகைக்கு விட வேண்டும்; குடியிருப்பு மனைகளை அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும். அதை இன்றைக்குப் பெரிய மனிதர்களெல்லாம், தேவைக்கும் அதிகமாக மலைகளை வளைத்து வைத்துக்கொண்டு, ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஏழைகளுக்கு அந்த இடங்களைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குடிதண்ணீர்ப் பற்றாக்குறைக்குக் காரணம் மழையின்மை தான் என்று சொல்கிறோம். கடல், நீர், மழை இது மூன்றும் ஒரு தேசத்தில் இருந்தால், நீரும், மழையின் ஒத்தாசையும் இருந்தால் தமிழகமோ அல்லது ஒரு நாடோ வாழ முடியும். ஆகவே, அந்த அடிப்படையில் இன்றைக்கு மலையில் இருக்கின்ற காடுகளை அழித்தவர்கள் யார்? பத்தாண்டுக் காலத்திற்கு முன்னால் தமிழகத்திலே நாம் பார்த்தோமேயானால் ஒரு விவரம் சொல்லப்பட்டது. 1971-72-லே இருந்து இன்று வரை லட்சக்கணக்கான வழக்குகள் இன்றைக்குப் போடப்பட்டு அதிகாரிகள் மூடமாக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்கு என்ன காரணம்? அதிகாரிகளா? அதற்கு என்ன காரணம் என்று அமைச்சரவர்கள் ஆராய்ந்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, கடுமையான தண்டனை கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இயற்கையின் செல்வம் இன்றைக்கு அழிக்கப்பட்டுவிட்டது. என்ன காரணம் என்று கேட்டால் இயற்கையில் மழை பெய்ய வேண்டுமென்றால் மலை



1987 ஏப்ரல் 30] [திரு. பொ. உத்திராபதி]

யிலே மரங்கள் இருக்க வேண்டும். மரங்களும் வெட்டப்பட்டாகி விட்டன; காட்டில் தழையும் இல்லை. வரக்கூடிய இயற்கை இன்றைக்குத் தமிழகத்தில் பொய்த்து விட்டது. இதற்கெல்லாம் காரணம், திட்டமிட்டே, பெரிய மனிதர்கள், கொள்ளையடிக்கக் கூடியவர்கள் அதற்கு உடந்தையாக இருக்கக்கூடிய பெரிய அதிகாரிகள், திட்டமிட்டுச் செய்யக்கூடிய செயலைத் தடுப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்றைக்கு சந்தன மரங்களைப் பற்றிப் பேசுகிறோம். விலையுயர்ந்த மரங்கள் தமிழகத்திலே உற்பத்தியாகின்றன. ஆனால் அவைகள் வெட்டப்பட்டு இன்றைக்கு லாரிகளிலே போவதற்குப் பதிலாக ஏரோபிளேனில் கடத்தப்பட்டு வெளிநாடுகளுக்கு அவற்றை எடுத்துச் செல்கிறார்கள். எப்படி நம் அதிகாரிகளுக்குத் தெரியாமல் போகிறது? காவல் துறைக்குத் தெரியாமல் எப்படி ஏரோபிளேனில் ஏறுகின்றன சந்தன மரங்கள்? ஆகவே, இன்றைக்கு இப்படித் தமிழகத்தினுடைய பொருளாதாரத்தையே கொள்ளையடித்துச் சீரழிக்கக்கூடிய அளவிற்குச் சில பெரும் புள்ளிகளே, பெரிய அதிகாரிகளே திட்டமிட்டுச் செய்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் இதற்கெல்லாம் துரிதமாக உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சமூகக் காடுகள் வளர்ப்பு. அது நல்ல திட்டம். நல்ல திட்டம் என்றாலும், நான் பார்க்கின்ற இடங்களில், கன்றுகள் நட்டு வைத்திருக்கிறார்கள். கொஞ்ச நாள் கழித்துப் போய்ப் பார்த்தால் அதற்குத் தண்ணீர் ஊற்றுவதற்கு ஆள் இல்லை. அதனால் பட்டுப் போயிற்று. அங்கே வேறு என்ன இருக்கிறது போர்டு மட்டும் இருக்கிறது. "சமூகக் காடு வளர்ப்பு" என்ற அந்த போர்டுதான் மிச்சமிருக்கிறதே தவிர, கோடிக்கணக்கான பணத்தை அள்ளிக்கொட்டி, சமூகக் காடு வளர்ப்பு என்ற பெயரில் இன்றைக்குச் சமூகக் காடுகளை வளர்க்காமல் இருக்கிறார்கள் சிலபேர்கள்—அவர்கள்தான் வளர்ந்திருக்கிறார்களே தவிர—நான் சொல்வதெல்லாம். நேரடியாகத் தஞ்சாவூர் ஜில்லாவிலே பார்த்த உண்மைகள் என்று சொல்கிறேன். ஆகவே அதற்குத் தனியாக

[திரு. பொ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 30

(பிற்பகல் 12-30)

அதிகாரிகளைப் போட்டு, கோடிக்கணக்கான பணம் பாழாகாமல், எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் மரங்களை வளர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல வனத் துறைக்குத் தகுதி இல்லாத இடங்கள் எல்லாம் நிறைய கிடக்கின்றன. அவற்றை ரிக்கார்டு இல்லாமல் சிலருக்குக் கொடுத்து, அங்கெல்லாம் சில காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அது சர்க்காருக்குத் தெரியவில்லை. கணக்கில் இல்லாமல் அந்த இடங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கின்ற இடங்களை சில அதிகாரிகள் ஒருசிலருக்குக் கொடுத்து, அங்கே பல தவறுகள் நடக்கின்றன. ஆகவே, தவறாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறவர்களை அந்த இடத்தி லிருந்து வெளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, மாங்கன்று, புளியங்கன்று, தேக்குக் கன்று, கொய்யாக் கன்று போன்ற கன்றுகளை தோட்டங்களில் வைத்து வளர்க்கிறார்கள். தோட்டங்களில் இந்தக் கன்றுகள் சரியாக வளரவில்லை. ஆகவே, கிராமங்களில் இருக்கிற தொழிலா ளர்கள், விவசாயிகளுடைய கொல்லைகளில் இந்தக் கன்றுகளை வைத்து வளர்க்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

அடுத்தபடியாக. இன்றைக்கு தைல மரம், சீமை, காட்டாமணி, ஆகாசத் தாமரை போன்றவைகளால் பெரிய தீங்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகாசத்தாமரையினால் குளங்கள் பாழா கின்றன. சீமை, காட்டாமணியினால் நீர்ப்பாசனப் பகுதி பாழாகி விட்டது. தைல மரத்தினால் பூமிக்கு அடியிலிருக்கிற நீர் முழு வதும் உறிஞ்சப்பட்டு, வறட்சி ஏற்படுகிறது என்று அறிஞர்கள். விஞ்ஞானிகள், வல்லுநர்கள். நிபுணர்கள் எல்லாம் சொல் கிறார்கள். தைலமரத்தின் வேர் நீரை எல்லாம் எடுத்துவிடுவ தால் வறட்சி அதிகமாக இருக்கிறது என்று சொல்வதால் தைல மரங்களை எடுத்துவிட வேண்டும்; மேலும் வளர்க்கக்கூடாது; அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 30] [திரு. பொ. உத்திராபதி]

அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் திருச்செந்தூர் போன்ற பெரிய பெரிய கோவில்களில் வருமானம் அதிகமாக இருக்கிறது. கோவில் உண்டியில் 5 இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய் என்று போடுகிறார்கள். அது மட்டுமல்ல. 10 பவுன், 5 பவுன் என்று போடுகிறார்கள்; 2 பவுன், 3 பவுன் சங்கிலிகளைப் போடுகிறார்கள். இதை எல்லாம் போடுவது யார்? அந்த விவரங்களுக்குள் நான் போகவில்லை. நல்ல வசதி படைத்தவர் களும் மோசடிக்காரர்களும் தான் இப்படி இலட்சக்கணக்கில் உண்டியில் போடுகிறார்கள். அதேநேரத்தில் பல சிறிய கோவில்கள் இருக்கின்றன; வருமானம் இல்லாத கோவில்கள் நிறைய இருக்கின்றன. அதன் காரணமாக பணியாற்றுகின்ற கோவில் ஊழியர்களின் வருமானத்தில் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசத்தைப் போக்கவேண்டும்.

சாமிகளிலே * * என்று இருக்கலாம். * * என்று இருக்கலாம். அதைப்பற்றி கவலை இல்லை. ஆனால் வருமானம் குறைவாக வருகின்ற ஆலயங்களில் பணியாற்றும் ஊழியர்கள் பட்டினி கிடக்கக்கூடாது; அவர்களுடைய வாழ்வில் அரசாங்கம் அக்கறை காட்டவேண்டும். வசதிபடைத்த கோவில்களில் பணியாற்றுகின்றவர்களுக்கும் வருமானம் இல்லாத கோவில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் சமமான ஊதியம் கிடைக்க வேண்டும்.

**திரு. வை. பாலசந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * * என்று சொல்லி இந்து மக்களின் மனதைப் புண்படுத்தும் வகையிலே பேசுகிறார்கள். ஆகவே, அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** மனிதர்களிலேதான் ஏழை, பணக்காரர்கள் என்று இருக்கிறார்கள். * * ஆகவே, இந்த வார்த்தைகளை நீக்கி விடுகிறேன். வருமானம் உள்ள கோவில், வருமானம் இல்லாத கோவில் என்று சொல்லிவிடுங்கள்.

---

* * மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 ஏப்ரல் 30

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அந்தத்துறையை குறிப்பிடுகின்றேன். வருமானம் அதிகமாக வரக் கூடிய கோவில்களும் இருக்கின்றன; வருமானம் இல்லாத கோவில் களும் இருக்கின்றன. எல்லாக் கோவில்களிலும் சாமி கும்பிடு கிறார்கள். எல்லாக் கோவில்களிலும் ஊழியர்கள் இருக்கிறார்கள். ஊழியர்கள் எல்லோருக்கும் சமமான ஊதியம் கிடைக்க வேண்டும். அந்தவகையில் எல்லாக் கோவில்களின் வருமானத் தையும் மையப்படுத்தி, கோவில்களில் பணியாற்றுகின்ற ஊழியர் களின் சம்பளத்தில் பாகுபாடு இல்லாமல், சமமான ஊதியம் வழங்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்த வருமானம் உள்ள அல்லது வருமானம் இல்லாத கோவில் ஊழியர்களை பட்டினி போடாமல், அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவில் மனைகளில் குடியிருக்கிறார்கள். அவர் களுக்கு பட்டா கொடுக்க மறுக்கிறார்கள். அதனால் சர்க்கா ருக்கும் இலாபம் இல்லை; கோவிலுக்கும் வருமானம் இல்லை. ஆகையால் அந்த மனைகளை அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கோவில்களுக்கு, மடங்களுக்குச் சொந்த மான நிலங்களில் சாகுபடி செய்கின்ற குத்தகை விவசாயிகள் நிறையபேர் இருக்கிறார்கள். அவர்கள் சாகுபடி செய்கின்ற நிலங்களை அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும். கேரளத் தில் பத்மநாபசுவாமி கோவில் நிலம் 15,000 ஏக்கர் இருந்தது. அந்த நிலத்தை எல்லாம் நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டார்கள். நிலத்தை சும்மா, இனாமாகக் கொடுக்கவில்லை. ஒரு தொகையை நிர்ணயித்து, அந்தத் தொகையை வாங்கி வங்கியில் போட்டு, அதிலிருந்து கிடைக்கிற வட்டியை வைத்து கோவில் நிர்வாகத்தை நல்லமுறையில் நடத்துகிறார்கள். அதைப் போன்று தமிழ்நாட்டிலும் செய்யலாம். இன்றைக்கு கோவில் நிலங்களின் வருமானத்தை ஒருசிலர் கொண்டுபோகிற நிலை மையும் இருக்கிறது. ஆகவே, குத்தகை சாகுபடிதாரர்களுக்கு கோவில் நிலத்தைச் சொந்தமாக்கி, அவர்களிடமிருந்து பெறுகிற பணத்திலிருந்து கோவிலுக்கு வேண்டிய செலவுகளைச் செய்ய லாம். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.



1987 ஏப்ரல் 30] [திரு. பொ. உத்திராபதி]

அதைப்போன்று ஒன்றிரண்டு கோவில்களைத் தவிர எந்தக் கோவிலிலும் சிலைகள் இல்லை. பொய்யச் சிலைகளை, நல்ல சிலைகளை, அழகான சிலைகளை எல்லாம கடத்திக்கொண்டு போய், விற்றுவிடுகிறார்கள். சில சிலைகளை உருக்கி. . . .

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவில் கோவில்களில் சிலைகள் இல்லை என்று சொல்லு கிறார்கள். அதற்கு என்ன காரணம்? தகுந்த ஆதாரம் தரவேண்டும். ஆதாரம் இல்லாமல் இப்படிச் சொல்வது அவைக் குறிப்பில் இருக்கவேண்டுமா என்பதுபற்றி யோசிக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. பொ. உத்திராபதி : தமிழ்நாட்டில் இருந்து ஐம்பொன் சிலைகள் கடத்தப்பட்டு, கைவேறு, கால் வேறாகப் பிரிக்கப்பட்டு, வெளிநாடுக்குப் போய், அங்கிருந்து கைப்பற்றப்பட்டு வந்திருக் கின்றன. இப்படி கடத்துபவர்கள் ஏழைகள் அல்ல, பெரிய கோடீஸ்வரர்கள்தான்; கொள்ளைக்காரர்கள்தான். ஆகவே, எதிர் காலத்தில் சிலைகள் திருட்டுப்போகாமல் இருக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கோயில் இடங்களை எல்லாம் பொதுவான காரியங்களுக் குக் கேட்கிறார்கள். கோயம்பேரில் கூட பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டும் வேண்டும் என்று அதற்காக நான்கு ஏக்கர் நிலம் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் அதற்கு மார்க்கெட் ரேட் தரவேண்டுமென்று கோயில் நிர்வாகிகள் கேட் கிறார்கள். எனவே நான் அமைச்சரவைகளைக் கேட்டுக்கொள் கிறேன்; இந்தக் கோயில்களுக்குத் தேவையில்லாத இடங்களைப் பொதுத்துறையில் பள்ளிக்கூடங்களை கட்டுவதற்கும் மற்ற காரியங்களுக்கும் கேட்கிறபோது குறைந்த ரேட்டுக்குத் தர ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் அதற்கும் மக்கள் வரிப்பணத் திலிருந்தோ கொடுக்க வேண்டியிருக்கிறது.

அதுபோல் திருத்துறைப்பூண்டியில் தீயணைப்பு நிலையத்தி [illegible] வெளியே எடுத்துக்கொண்டு போக வேண்டியிருக்கிறது. அதனை ஒரு தென்னை மரம் [illegible]த்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமை இரண்டு வருஷ

மாக இருக்கிறது. அதுபற்றிக் கேட்டால் அந்த மாத்தை வெட்டுவதற்கான ஆர்டர் வரவில்லை என்று சொல்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் போக்கி நல்ல காரியங்களுக்கு கோயில் மனைகளைக் கொடுத்து உதவுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை வரவேற்று நான் சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில்தான் அறநிலையத்துறை என்பது சிறப்புமிக்க துறையாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. அருமை அண்ணன் உத்திராபதி அவர்கள் சொன்னதுபோல் ஏழைக் கோயில்களாக இருந்தாலும் சரி, பணக்காரக் கோயில்களாக இருந்தாலும் சரி அனைத்துக் கோயில்களுக்கும் திருப்பணி செய்யவேண்டிய கடமை உணர்வு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் உள்ளத்தில் எழுந்திருக்கிற காரணத்தால்தான் பெரிய கோயில்களிலிருந்து நிதியினைப் பெற்று 5 கோடி ரூபாயை வைப்பு நிதியாக வைத்து அதிலேயிருந்து வருகிற வட்டித் தொகையை [illegible] ஆலயங்களில் இருக்கின்ற பணியாட்களுக்கு [illegible] வகையில் ஒரு திட்டத்தையும், நலிந்திருக்கிற கோயில்களுக்கு 5,000 ரூபாய் தருகிற திட்டத்தையும், சிறிய கோயில்களுக்கும் திருப்பணி செய்கிற திட்டத்தையும் இன்றைக்குக் கொண்டு வந்து சிறப்பாக்கி இருக்கிறார்கள். அந்த வகையில் இன்றைக்கு ஸ்ரீரங்கம் கோயில் திருப்பணியைச் செய்து முடித்து [illegible] பெரும் பாராட்டுதல்களைத் தமிழக அரசு பெற்றிருக்கிறது. சிதம்பரத்தில் இருக்கின்ற அந்தக் கோயிலுக்கும் திருப்பணி செய்து முடித்திருக்கிறார்கள். இதையும் நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை, ஆசியா கண்டத்திலேயே பெரிய பூங்காவாக அமைத்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனை 7 கோடி ரூபாய்ச் செலவில் சிறப்பாக அமைத்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





சுற்றுலாத் துறையினைத் தொழில் துறையாக ஆக்கி அந்தத் துறையின் சார்பாக சென்னை நகரில் தீவுத்திடலில் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியை நிரந்தரப் பொருட்காட்சியாக ஆக்குவதற்குரிய வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை அறிகிறபோது நான் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

புதுடெல்லியில், புதுக்கவிதை படைத்த புரட்சிக்கவியாம் பாரதியாருக்கு புரட்சித்தலைவர் அவர்கள் சிலை அமைத்து இருக்கிறார்கள். இதையெல்லாம் இந்தத் தருணத்தில் நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆலயத்துறையினைப் பொறுத்தவரையில் பலபேர் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆலயங்களில் திருப்பணி செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அதுபற்றி எல்லாம் குறிப்பிலே தந்திருக்கிறார்கள். பல்வேறு ஆலயங்களிலே திருப்பணி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆலயங்களில் இருக்கக்கூடிய ஊழியர்களுக்காக பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் போன்ற திட்டங்கள் இன்றைக்கு தமிழக அரசால் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆலயங்களிலே ஏ.சி.,டி.சி., மற்றும் இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்களுக்கு எல்லாம் அரசாங்கம் சம்பளம் தருகிறது. ஆனால் ஆலயத்திலே பணியாற்றக்கூடிய பணியாளர்கள் அதாவது அந்த ஆலயத்தைக் காத்துக்கொண்டிருப்பவர்கள், அங்கே ஒளி விளக்கேற்றுவதற்காக ஒளியைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவர்களுடைய வீடுகளில் ஒளி இல்லாமல் இருக்கிறது. அந்த ஆலயப் பணியாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். எப்படி அந்த அதிகாரிகளுக்கெல்லாம் அரசாங்கம் சலுகைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறதோ, அதுபோல் அந்த ஆலய ஊழியர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்த ஆலயத்தினுடைய சங்கங்களைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள் கூட ஒரு கௌரவத் தலைவராக இருக்கிறார்கள். அதுபோல்

[திரு. சா. ஞானசுந்தரம்] [1987 ஏப்ரல் 30

மற்றவர்களும் தலைவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பணியாளர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தற்போது பெரிய கோயில்களைப் பொறுத்தவரையில் அவற்றுக்கு நிலங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றின் மூலம் வருமானம் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். பல இலட்சம் ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு அறநிலையத்துறைக்குச் சொந்தம். ஆனால் வருமானம் குறைவு. அதற்குக் காரணம் என்ன? பல பெரும் திமிங்கலங்கள், வசதி படைத்தவர்கள், பணக்காரர்கள் எல்லாம் அந்த நிலங்களை பினாமியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே மாவட்ட அளவில், ஒன்றிய அளவில் குழுவினை அமைத்து அந்த நிலங்களை எல்லாம் எடுக்க அறநிலையத்துறை முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆலயங்களில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவினுடைய ஆலோசனையைப் பெற்று அவர்களுக்கு ஊதிய உயர்வையும் சலுகைகளையும் அளிக்கப்படும் என்று சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தக் கோரிக்கையை இன்றைக்கு நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

இன்றைக்கு பல்வேறு விஷயங்களை இந்த மன்றத்திலே எடுத்து வைத்தாலும் ஆலயங்களைப் பற்றிச் சொல்லுகிறபோது அதனுடைய நிலங்கள் எல்லாம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே விதவைகளுக்கு விலக்கு அளிக்கலாம், அதுபோல் சிறு விவசாயிகளுக்கு விலக்கு அளிக்கலாம். ஆனால் 99 வருடங்கள் குத்தகையைப் பெற்று அதன் மூலம் சென்னையில் பல மாடிக் கட்டிடங்களைக் கட்டுகிறார்கள் சிலர். உள்குத்தகை விட்டு என்று வசூலிக்கிறபோது அவைகளுக்கு எல்லாம் குத்தகைச் சட்டத்திலிருந்து விலக்குத் தரவேண்டும். ஆலய நிலங்களுக்கு குத்தகை சட்டத்திலிருந்து விலக்குத் தரவேண்டும் என்று இந்த



1987 ஏப்ரல் 30] [திரு. சா. ஞானசுந்தரம்]

அவையிலே பேசப்பட்டு இருக்கிறது, கருத்துக்களை இந்த அரசாங்கம வைத்திருக்கிறது. ஆனால் இனனமும் தாாமல் இருககிறார்கள். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்று சொன்னால் ஆலயங்களைப் பாதுகாக்க வேணடும் என்று அனைத்துத் தரப்பிலும் சொல்லுகிறோம். ஆலயங்களைப். பாதுகாக்க இந்த முயற்சிகளையெல்லாம் செய்ய வேண்டி இருக்கிறது. ஆலய நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் சரியாக குத்தகை கொடுப்பது இல்லை. அல்லது நெல் தருவதில்லை அல்லது பொருள்கள் தருவதில்லை. ஏமாற்றுகின்ற வகையில்தான் காரியங்களைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே சிறிய ஆலயமானாலும் சரி, பெரிய ஆலயமானாலும் சரி அவைகளை பாதுகாப்பதற்கு முயற்சிகளை எடுத்து ஆக வேண்டும். இதில் கட்சி நோக்கமோ அல்லது வேறு எந்த வேறுபாடுகளோ இருக்கக் கூடாது. சில ஆலயங்களிலிருந்து வரும் வருமானத்திலிருந்து கல்லூரிகளை நடத்துகிறார்கள், தொழில் நுட்ப பயிற்சிகளை நடத்துகிறார்கள், திருமணக் கூடங்களை கட்டியிருக்கிறார்கள். இப்படிச் செய்வது இன்றைக்கு அறநிலையத் துறையின்கீழ் பரவலாக நடந்துக் கொண்டிருக்கிறது. அதை நாம் போற்றுகிறோம். பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மன்னார்குடி தாலுக்காவில் மன்னார்குடி கோட்டத்தை உள் அடக்கிய நிலையில் ஒரு ஏ.சி. அலுவலகம் வரவேண்டும் என்று கோருகிறேன். மன்னார்குடி டிவிஷனைச் சேர்ந்த வட்டங்களைச் சேர்த்து அந்த ஏ.சி. அலுவலகம் அமைக்கப்படவேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். அதேபோல மன்னார்குடியில் ராஜகோபாலசாமி ஆலயம் ஒன்று இருக்கிறது. மிகத் தொன்மை வாய்ந்த ஆலயம். அங்கே திருப்பணி செய்வதற்கு முயற்சிகள் நடைபெற்று கமிட்டிகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் முன்னாலேயே அரசாங்கம் தந்த பணம் இன்றைக்கு சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆலயத்தில் திருப்பணி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மன்னார்குடியில் சேதுபாவா என்ற ஒரு அறக்கட்டளையும், ஒரு பெரிய குளமும் இருக்கிறது. திருவாரூர் தெப்பக் குளத்தை விட பெரிய குளமாக 36 ஏக்கரில் அந்தக் குளம் இருக்கிறது.

[திரு. சா. ஞானசுந்தரம்] [1987 ஏப்ரல் 30

ஆலயக் கும்பாபிஷேகம் செய்யும்போது அந்தக் குளத்தைத் தூர் வாருவ [illegible] படித்துறை ஒன்றையும் அமைத்து [illegible] ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் திருமாகாளேஸ்வரர் ஆலயம் ஒன்று இருக்கிறது. பாபர் கூட அங்கே வந்து சென்றிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த ஆலயத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல பேரின்ப விழாக்களை நடத்த வேண்டும். ஏன் நான் இதை சொல்லுகிறேன் என்று சொன்னால், இங்கே கூட செல்லமுத்து அவர்கள் சொன்னார்கள். கிறிஸ்துவர்களுக்கு இல்லையா, இஸ்லாமியருக்கு இல்லையா என்று கேட்டார்கள். அவர்கள் எல்லாம் நல்ல வசதி படைத்த நிலையில் பேரின்ப விழாக்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல இந்து மதத்தின் சார்பாக நம்முடைய பழைய புராணங்கள், பழைய இதிகாசங்கள், பழைய வரலாறுகள் எல்லாம் வெளியிடும் வகையில் அந்த விழாவை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது தான் நாட்டில் மறைந்து கிடக்கும் உண்மைகள் வரலாறுகள் வெளிப்படுத்த முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு கருத்து. இன்றைக்கு டெலிவிஷன் மத்திய சர்க்காரிடத்திலே இருந்துக் கொண்டிருக்கிறது. இந்தியிலே தான் நிகழ்ச்சிகளை அதிகமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திற்கு 2-வது சானல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். தமிழிலே நிகழ்ச்சிகள் அதிகம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். காலையிலே செய்திகள் வாசிக்கிறபோது ஆங்கிலத்திலே வாசிக்கிறார்கள். இந்தியிலே வாசிக்கிறார்கள். தமிழிலேயும் வாசிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலம் கலாச்சார இந்திய ஒருமைப்பாடு வளர்வதற்கு உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே மனோரா என்று ஒன்று இருக்கிறது. தஞ்சை மாரியம்மன் கோவில் உள்ள இடத்தையும் அந்த மனோ



1987 ஏப்ரல் 30] [திரு. சா. ஞானசுந்தரம்]

ராவையும் சுற்றுலாத் தலமாக ஆக்குவதற்கு சுற்றுலாத் துறை முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. அந்த முயற்சிகளை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவு படுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் இஸ்லாமியர்களின் புண்ணியத்தலமான நாகூர் இருக்கிறது. கிறிஸ்துவர்களின் முக்கிய தலமான வேளாங்கன்னி இருக்கிறது. அதைப்போல இந்துக்களுக்குச் சொந்தமான பல ஆலயங்கள் திருவாரூர் ஆலயம், மன்னார்குடி ஆலயம், தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம் போன்ற தொன்மை வாய்ந்த ஆலயங்கள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டம் என்பதே ஆலயங்கள் நிறைந்த மாவட்டமாகும். அதிலே மன்னார்குடி, திருவாரூர், வேதாரண்யம் ஆகிய இடங்களையும், மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் சொன்னதைப் போல கோடியக்கரையும் இணைத்து அவைகளை சுற்றுலாத் தலங்களாகச் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வனத் துறையைப் பற்றி இங்கே உறுப்பினர்கள் பேசினார்கள். காடுகளைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக அமைக்கப்படுகிற காடுகள், வனத்துறையின் ஆளுகைக்கு வந்து வனத்துறையே முழுப் பொறுப்பேற்று ஏரிகள், குளங்கள், ரெவின்யூ டிபார்ட்மெண்டிற்குச் சொந்தமான நிலங்களில், தரிசு நிலங்களில் எல்லாம் காடுகளை வளர்க்கவேண்டும். ஸ்வீடன் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை நாம் பெற்றிருக்கிறோம். காடுகளை வளர்க்கிறபோது [illegible] அளவில் தவறுகள் நடைபெறுகின்றனவென்றும், காடுகள் உண்மையில் வளர்க்கப்படுவதில்லையென்றும் குறிப்பிட்டார்கள். நான் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்வது, வனத்துறையின் மூலமாக பல்வேறு அதிகாரிகளை நியமிக்க [illegible] வானம் ஒரு காலத்தில் மழையைத் தரும், சுத்தமான காற்றைப் பெற முடியும், இயற்கை வளத்தைப் பெருக்க முடியும். அந்த வகையில் வனத் துறையை சிறப்போடு ஈடுபடுத்தி செய்ய வேண்டுமென்று கேட்டு மானியக் கோரிக்கைகளை வரவேற்று, அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

[1987 ஏப்ரல் 30

**திரு. ந. சிவஞானம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, 1987—
88-ம் இந்து சமய அறக்கட்டளைகள், சுற்றுலா, செய்தி, வனத்
துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய சில
கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்து சமய அறக்
கட்டளைக்கு ஏறத்தாழ 14,400-க்கும் மேற்பட்ட திருக்கோவில்
களும், மடங்களும், அறக்கட்டளைகளும் இருக்கின்றன.
இப்படிப்பட்ட அறக்கட்டளைகளிலிருந்து நாட்டில் பக்தியையும்,
ஆன்மீகத்தையும் ஒழுக்கத்தையும் பரப்புவதற்காக பல்வேறு
இடங்களில் மடங்கள் இருக்கின்றன. இன்றைக்கு இந்த
நிலைக்கு மாறாக ஒரு மடாதிபதி ஒருவர் செயல்படுகிறார்.
நாட்டில் பக்தியைப் பரப்புவதற்கும், ஒழுக்கத்தைப் பரப்பு
வதற்கும், பல்வேறு நல்ல செயல்களைச் செய்வதற்கும் இருக்கிற
அந்த மடாதிபதி இன்றைக்கு நாட்டில் அமைதியைக் கெடுக்கிற
முறையில். அராஜகத்தைத் தூண்டி விடுகிற அளவிற்கு, தலையில்
உத்ராட்சத்தை அணிந்து கொண்டு, கையில் துப்பாக்கியை ஏந்தி
பல பொதுக்கூட்டங்களில் வருகிறார். மடாதிபதி செய்ய
வேண்டிய வேலையை விட்டு சமூகவிரோதி போன்று வருகிற
நிலையை மாற்றவேண்டும். மடாதிபதி வேலையை மடாதிபதி
செய்கிற அளவிற்கு இருக்கவேண்டும். மற்ற வேலைக்கு சென்று
கொண்டிருக்கிற நிலைமையை இப்போது பார்த்துக்கொண்டிருக்
கிறோம். நாட்டில் அமைதி ஏற்படுத்துவதற்காக செய்ய
வேண்டிய பணிகளையெல்லாம் விட்டுவிட்டு இன்றைக்கு கையில்
துப்பாக்கி ஏந்தி பொதுக்கூட்டங்களில் காட்டுகிற சில மடாதிபதி
களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட
நிலையை மாற்றுவதற்கு, இத்தகைய மடாதிபதிகளை நீக்குவதற்
குரிய முறையில் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு இந்த
மன்றத்தில் வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து இன்றைக்கு கோவில்களுக்கு நிலங்கள் ஏராளமாக
இருக்கின்றன. அவற்றிலிருந்து வருகிற வருமானம்தான்
மிகவும் குறைவாக இருக்கிறது. குத்தகை பாக்கிகளை சரியாக
கட்டாததினால் இன்றைக்கு கோவில் வருமானம் குறைந்து
பூஜைகள் கூட சரியாக நடத்த முடியாமல் இருக்கின்றன.
தஞ்சை மாவட்டத்தில் பல பெரிய கோவில்கள் பாடல் பெற்ற
தலங்கள் இன்றைக்கு நலிவுற்று இருக்கின்றன. இந்த கோவில்
களுக்கு அழியாத பொருளான நிலத்தை அன்றைக்கிருந்த



1987 ஏப்ரல் 30] [திரு. ந. சிவஞானம்]

மாமன்னர்களும், மற்றவர்களும் கொடுத்தார்கள். அந்த நிலங்களை
வைத்திருப்பவர்கள் குத்தகைகளை சரியாக கொடுக்காததினால்
தான் இன்றைக்கு இந்த ஆலயங்களுக்கு வருகிற வருமானம்
மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே அவர்களுக்கே பட்டா
போட்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற கருத்தை மனதிலே
கொண்டு அவர்களிடம் இருக்கிற நிலத்திற்கான கிரயத்தை
வாங்கிக் கொண்டு ஒரு மாற்றுவழியை செய்தால் தான் நன்றாக
இருக்கும். அந்த வகையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப்போல இந்த ஆலயங்களுக்கு அறங்காவலர்களை சரிவர
நியமிக்க வேண்டும். பக்தியுள்ளவர்களை, ஆன்மீக உணர்வு
உடையவர்களை, கட்சி வேறுபாடின்றி நல்லவர்களை அறங்காவ
லர்களாக நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். சமீபகாலத்திலே நம்முடைய

(பிற்பகல் 12-50)

தமிழக முதல்வர் அவர்கள் சென்னைக்கு அருகே இருக்கிற
கோயில்களினுடைய திருக்குளத்தை எல்லாம் பார்த்து, அதைச்
சுத்தப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.
இதுபோன்று தமிழகத்தில் இருக்கிற எல்லாக் கோயில்களிலும்
உள்ள திருக்குளங்களை நம்முடைய அமைச்சர் அவர்களும்
அறநிலையத்துறை ஆணையாளர் அவர்களும் சென்று, பார்த்து,
அவைகளைச் செம்மைப்படுத்துவதற்கும், பக்தர்கள் வந்து அங்கே
குளிப்பதற்கு ஏற்ற நல்ல இடமாக மாற்றுவதற்கும்—நம்முடைய
தமிழக முதல்வர் அவர்கள் எப்படி ஒரு நடவடிக்கையை எடுத்
தார்களோ. அதைப்போல—ஏற்பாடு செய்யவேண்டும் என்று
இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தஞ்சை பெரிய கோயில் என்பது பிரசித்தி
பெற்ற ஒரு ஸ்தலமாகும். அந்தக் கோயிலைக் கட்டிய
மாமன்னன் ராஜராஜனுடைய சிலை இன்றைக்கு வெளியே நின்று
கொண்டு இருக்கிறது. வெளியிலே நின்று கொண்டிருப்பதோடு
மட்டுமல்ல. அதற்கு பதிய நல்ல கூடத்தை அமைப்பதற்கு
வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டும். நம்முடைய

[திரு. ந. சிவஞானம்] [1987 ஏப்ரல் 30

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், நம்முடைய அன்னை இந்திரா காந்தி அவர்களும் ராஜராஜனு டைய ஆயிரமாவது விழாவிலே பங்கு கொண்டு சிறப்பாகச் செய்தார்கள்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாற்றுத்தலைவர் அவர்களே, தஞ்சை பெருவுடையார் கோயிலின் உள்ளே ராஜராஜன் சிலையை வைப்பதற்கு மத்திய அரசு அனுமதி தரவேண்டும். மத்திய அரசு அனுமதி தந்தால் நாம் நிச்சயமாக வைத்துவிடலாம். ஏற்கனவே ஐம்பொன்னால் ஆன ராஜராஜன் சிலை இருந்து, அது இன்றையதினம் அகமதாபாத்தில் உள்ள ஒரு பணக்காரக் குடும்பத்தில் இருப்பதாக தகவல் இருக்கிறது. அதைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும்.

**திரு. ந. சிவஞானம் :** மாற்றுத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள், நன்றி. இருக்கின்ற சிலை, வைத்த சிலை அரசாங்கப் பொறுப்பிலே வைக்கப்பட்டு உள்ளது. அந்த ராஜராஜன் கட்டிய திருக்கோயிலுக்குப் பக்கத்திலே, சின்ன, அழகான கூடத்தைக் கட்டி, அங்கேயே, வெளியிலேயே, கட்டவேண்டும். அதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்ய வேண்டும். அதற்கான திட்டத்தை நிச்சயமாக செய்வதற்கு முற்படவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் இந்து அறநிலையத்துறையிலே பல்வேறு நல்ல காரியங்கள் இன்று நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. புதிதாக பல்வேறு திருப்பணிகளும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அதையெல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள பரிதியப்பனார் என்ற இடத்திலே பல்வேறு திருப்பணி வேலைகள் ஏறத்தாழ 5 லட்சம் ரூபாய் மதிப்பில் நடந்து முடிந்து விட்டன. அதற்கு அரசாங்க மானியமாக 50 ஆயிரம் ரூபாய் அளித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், ஆணையாளர் அவர்களும், தமிழக முதல்வர் அவர்களும் 10—6—1987 அன்று நடைபெற உள்ள கும்பாபிஷேகத்திலே கலந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 30] [திரு. ந. சிவஞானம்]

அமுறது, இந்து சமுதாயத்தில் உள்ள சில நிலை காரணமாக இன்றைக்கு மதமாற்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இதைத் தடுப்பதற்கு மதமாற்றத் தடைச் சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வரவேண்டும். அதற்கு அரசியல் சட்டம் குறுக்கே நின்றாலும் கூட, இந்த மன்றத்திலே அதற்கான ஒரு பொறுப்பை நிச்சயமாக ஏற்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு இந்து அறநிலையத் துறையோடு இணைக்கப்பட்டு இருக்கிறது பொறியாளர் பணி. இந்த பொறி யாளர் பணிக்கு தனியாக ஒரு இலாக்காவை இணைத்துக் கொண்டு, தலைமைப் பொறியாளரை நியமிக்க வேண்டும். அவருக்குக் கீழே பல்வேறு பொறியாளர்களை நியமித்து, தமிழ கத்தில் உள்ள பல்வேறு திருக்கோயில்களுடைய பணிகளை, திருப்பணி வேலைகளை செம்மையாகவும், நல்லமுறையில் நடை பெறுவதற்கும்—தலைமைப் பொறியாளர் அவர்களுடைய தலைமையிலே—அறநிலையத்துறையிலே ஒரு இலாக்காவை அமைத்து, அதைச் சீர்திருத்தம் செய்து, இந்த இலாக்காவை புனரமைப்பு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த இந்து அறநிலையத்துறையிலே ஆலய மேம் பாட்டிற்காக, தனியாக, இதற்கு முன்பாக இருந்த அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் வழி வைத்தார்கள். நலிவுற்ற கோயில்களுக்கு, நலிவுற்ற கோயில் அர்ச்சகர்களுக்கு பல்வேறு வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக இன்னும் அதிக மான நிதியை ஒதுக்கி, நிச்சயமாக செய்து கொடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வனத்துறையைப் பற்றி இங்கே அருமை நண்பர்கள் எல்லாம் நன்றாகப் பேசியிருக்கிறார்கள். இருக்கின்ற நிலத்தில் மூன்றில் ஒரு பங்கு காடாக இருக்கவேண்டும் என்றும், அப்படி யிருந்தால்தான் மழை நன்றாகப் பெய்யும் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு வறட்சி ஏற்பட்டு இருப்பதற்கு முக்கியக் காரணம், காடுகள் அழிக்கப்பட்டுவிட்டதுதான், மரங்கள் அழிக்கப்பட்டு விட்டதுதான். இதற்கான நல்ல காரியத்தைச் செய்வதற்கு, நம்முடைய அரசாங்கம், குறிப்பாக வெளிநாட்டு உதவியுடன்

இன்றைக்கு காடுகளை வளர்க்கிறார்கள். மத்திய அரசும் கூட காடுகள் வளர்ப்பிலே பல்வேறு உதவிகளைச் செய்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஆர்.எல்.இ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.இ.பி., திட்டங்களின் மூலமாக பல்வேறு ஒன்றியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படுகிறது. அதைப்போல சமூக நலக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இன்றைக்கு அரசாங்கமே, காடு இலாக்கா மூலமாக அதைச் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். இதற்காக பஞ்சாயத்திலே கொடுக்கப்படுகிற கன்றுகளை எல்லாம் பல்வேறு இடங்களில் சரியாக நடவில்லை என்ற புகார்களைச் சொல்கிறார்கள். எனவே இவற்றை எல்லாம் சரி செய்வதற்காக, மரக்கன்றுகளை சமூகநலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்திலே கொடுத்து, காடுகளை வளர்க்க, வனத்துறை ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் உங்களுக்கு நன்றாகத் தெரியும். சாதாரணமாக உலகத்தை எடுத்துக்கொண்டால், இந்தியாதான், காடு வளர்ப்பிலே, மரம் வளர்ப்பிலே முதலிடம் வகிக்கிறது. தேசிய அளவிலே மத்திய அரசு அதற்கு நிதியைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிதியைக் கொண்டு, ஸ்வீடன் நாட்டில் இருந்து கொடுக்கப்படுகிற நிதியைக் கொண்டு, எல்லா இடங்களிலும் சமூகக் காடுகளை வளர்க்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைய தினம் சுற்றுலாத்துறை மையமாக கோடிக்கரை இருக்கிறது. சாதாரணமாக அங்கேயிருக்கும் காடுகளுக்கு, இன்றையதினம் வெளிநாட்டிலிருந்து பறவைகள் சரணாலயத்திற்கு பறவைகள் வருகின்றன. ஆனால் சமூக விரோதிகள் அந்தக் காடுகளை அழித்து, குறிப்பாக வெளிநாட்டிலிருந்து வந்து இங்கே இருக்கின்ற காடுகளை அழித்து, அங்கே இருக்கின்ற வனவிலங்குகளையும், பறவைகளையும் அழிக்கின்ற சூழ்நிலை இப்போது வேதாரண்யத்திலும், கோடிக்கரையிலும் இருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையை நம்முடைய அரசு நிச்சயமாக தடுத்து நிறுத்தவேண்டும். வெளிநாட்டிலிருந்து வருகின்ற பறவைகளையெல்லாம், கோடிக்கரையிலுள்ள சரணாலயத்திற்கு வருகின்ற பறவைகளை நிச்சயமாகப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளவேண்டுமென்றும்,



அங்கே இருக்கின்ற சமூகவிரோதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொண்டு, குறிப்பாக, செய்தி சுற்றுலாத்துறை மூலம், செய்திச் சுருள்களை சாதாரணமாக சினிமாவிலே இன்றையதினம் பல இடங்களில் அரசின் மூலமாகக் காட்டுகிறார்கள். அதேபோன்று வீடியோ தியேட்டர்களையும் அமைக்க அனுமதி கொடுக்கலாம். ஆனால் ஏற்படுகின்ற தவறை இன்றைக்கு வீடியோ திருட்டு என்று சொல்கிறார்கள். அதையெல்லாம் தடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். அதேபோன்று சினிமாத் தொழிலிலே இன்றைக்கு இருக்கின்ற நிலைமையைப்போல சாதாரண வீடியோ தியேட்டர்களிலும் ஆங்காங்கே ஏற்படுத்த அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இன்றைக்கு பத்திரிக்கைகாரர்களுக்கெல்லாம் பல்வேறு நல்ல வசதிகளை, குறிப்பாக நிருபர்களுக்கு அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும். ஏனென்றால், அவர்கள் இந்தச் சமுதாயத்திற்கு மிக நல்லமுறையிலே பணி செய்பவர்கள். அவர்கள் எதையும் எதிர்பார்க்காமல் பணி செய்பவர்கள். அவர்களுக்கு குடியிருப்பதற்கான பல்வேறு வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, இப்போது இருக்கின்ற பத்திரிக்கைகளுக்கெல்லாம் நான் ஒன்றை வேண்டுகோளாக வைக்கிறேன். மஞ்சள் பத்திரிக்கையாக ஆக வேண்டாம். நாட்டில் நடக்கின்ற உண்மை நிலைமைகளை அதில் எழுதவேண்டும். பொய் வதந்திகளையெல்லாம் அதிலே நிச்சயமாக எழுதக் கூடாது. இன்றைக்கு நாட்டிலே அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலேதான் பொய் வதந்திகளை அதிகமாக ஏராளமாக பலர் சொல்கிறார்கள். அதைப் போன்ற சூழ்நிலையில் நிச்சயமாக அது செயல்படக்கூடாது என்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. சி. சுப்புராயர்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா, வனத்துறை, அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கையின் மீதான

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்கு முன்பு, இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையைத் துவங்குகிறேன்.

முதலில் சுற்றுலாத் துறையைப் பற்றி நான் கருத்து கூற விரும்புகிறேன். தமிழகத்தில்தான் சுற்றுலாத்துறை சிறந்து விளங்குகிறது. வெளிநாட்டிலிருந்து வரும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் பல சிறப்பு அம்சங்களைத் தமிழ்நாடு சுற்றுலாத் துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் ஏற்பாடு செய்து வருகின்றன. இந்தச் சிறப்பான அம்சங்களில் முக்கியமானவை, அனைத்து சுற்றுலா ஸ்தலங்களுக்குச் சென்று பார்ப்பதற்கு பேருந்துகள், சுற்றுலா மையங்களில் தங்கும் வசதிகள், சுற்றுலாத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொருட்காட்சி அரங்குகள் ஆகியவைகள் குறிப்பிடத் தக்கவைகளாகும். அகில இந்திய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 சுற்றுலா மையங்களில், தமிழகத்திலுள்ள மதுரை, திருச்சி, சென்னை, இராமேஸ்வரம் ஆகிய 4 இடங்கள் அடங்கும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சுற்றுலாவைப் பெருக்கும் அளவில் சுற்றுலாவை ஒரு தொழிலாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் சுற்றுலா மையங்களில் பல சுற்றுலா விடுதிகள் கட்டுவதற்கு ஏராளமானவர்கள் முன்வருவார்கள்.

கண்ணகி கோட்டம் என்னுடைய தொகுயில்தான் அமைய உள்ளது. கண்ணகி கோட்ட வளாகம் கட்டுவதற்கு நிதி உதவி அளிக்குமாறு இந்திய சுற்றுலாத்துறையை கேட்டுள்ளதாக மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தனது கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த கண்ணகிக் கோயிலானது, கேரள, தமிழக மாநில எல்லையில் உள்ள ஒரு மலைமீது அமைந்துள்ளது. கோயிலுக்குச் செல்வது என்றால், கேரளா மாநிலத்திற்குள் சென்று அங்கு வனத்துறையினரின் அனுமதி பெற்றுத்தான் செல்லவேண்டும். இதனால் வருடந்தோறும், சித்ரா பௌர்ணமி விழாவின்போது பல பிரச்சினைகள் ஏற்பட்டு வந்தன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தமிழக எல்லையின் வழியாக ஒரு பாதை அமைக்கவேண்டுமென்று நான் கோரியிருந்தேன். தற்சமயம் வனத்துறையின்





மூலமாக, வனத்துறை அதிகாரிகள், அடிவாரத்திலிருந்து கோயி
லுக்குச் செல்வதற்கு ஒரு நடைபாதை அமைத்து உள்ளார்கள்.
இதற்காக வனத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும்,
மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றி
யைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு நடக்கவிருக்கும்
சித்ரா பௌர்ணமி திருவிழாவின்போது எந்தப் பிரச்சினையும்
எழாது என்று நம்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கம்பம் தொகுதி மக்களின் நீண்டகால குறையைத் தீர்க்கும்
வண்ணம் கண்ணகி கோட்டம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்ட
தற்கு, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்
கும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும்
என் தொகுதி மக்களின் சார்பாக நான் என் நன்றியைத் தெரிவித்
துக்கொள்கிறேன். இந்தக் கண்ணகி கோட்டம் கட்டுவதற்கு
சமமாய் உள்ள ஒரு உயரமான இடத்தை தேர்வு செய்து
உள்ளார்கள். இதற்கு அருகில் ஒரு இயற்கை சுனை உள்ளது.

(பிற்பகல் 1-00)

கண்ணகி வரலாற்றில் இந்த சுனையை பற்றி குறிப்பு உள்ளது.
எனவே தேர்வு செய்யப்பட்ட இடம் சரியான இடம் ஆகும். இந்த
கண்ணகி கோட்டத்தில் பளிங்கு கற்களால் ஒரு மண்டபம் கட்டி
அதில் கண்ணகி வரலாறு இடம் பெறும் வண்ணம் சித்திரங்கள்
தீட்டவேண்டும். இந்த மண்டபத்தைச் சுற்றி ஒரு மினி ஸ்சு
பூங்கா ஆகியவற்றை ஏற்படுத்தினால் கண்ணகி கோட்டத்தை
காண வருபவர்களுக்கு சிறந்த சுற்றுலா மையம் ஆகும். மேலும்
சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம், கீழே அடிவாரத்தில்
இருந்து மேலே கோவிலுக்குச் செல்ல கேபிள் கார் அமைக்க
வேண்டும் என்றும் கீழே இருந்து மேலே உள்ள கோயிலுக்குச்
செல்லும் ஓடை பாதையில் ஒரு நுழைவு வாயிலை அமைத்து
அதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் நுழைவு வாயில்
என்றும் பெயரிட வேண்டும் என்றும் மாண்புமிகு சுற்றுலாத்
துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். மேலே
கண்ணகி கோவில் மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளது.
எனவே கண்ணகி தெய்வத்திற்கு ஒரு புதிய சிலை அமைக்க
வேண்டும்.

[திரு. சி. சுப்புராயர்] [1987 ஏப்ரல் 30

கோவிலுக்கு அருகில் ஒரு இயற்கை நீர் ஊற்று உள்ளது. இப்பொழுதும் இந்த வெயில் காலத்திலும் அதில் தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது. இந்த இடத்தை சுத்தம் செய்து இயற்கை நீர் ஊற்றை பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படும் நினைவுச் சின்னமாக விளங்கும் வகையில் இந்த கண்ணகி கோட்டத்தை அமைக்க வேண்டும், அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். தற்போது கோடை வாசஸ்தலம் மதுரை மாவட்டத்தில் இல்லை. எனது தொகுதியில் உள்ள மேகமலை என்று அழைக்கப்படுகின்ற ஹைவேஸ் பகுதியை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சுருளி நீர் வீழ்ச்சி என்னுடைய தொகுதியில்தான் உள்ளது. இது சிறந்த சுற்றுலா மையம் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மூலம் ஒரு உணவு விடுதியும், தங்கும் விடுதியும் அங்கே கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். எனது பகுதியில் ஏராளமான மரங்கள் திருடப்படுகின்றன. வனத் துறை அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை சரியாக எடுப்பது இல்லை. மிகவும் மன வருத்தத்தோடு ஒரு சம்பவத்தை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்பு கிறேன். கடந்த மாதம் நடந்த மதுரை மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் ஊராட்சி ஒன்றிய தலைவர் ஒருவர் வனத்துறை அதிகாரியை பார்த்து, மரம் திருடுபவர்கள் யார் என்று அவர் களுக்கு தெரியும் என்றும் இந்த வனத் துறை அதிகாரியின் உதவி யுடன் தான் மரம் வெட்டப்படுகிறது என்றும் மாவட்ட வனத் துறை அதிகாரி ஒருவர் உங்கள் உறவினர் தான் இந்த மரத்தை வெட்டுகிறார் என்றும் குற்றச்சாட்டை ஒத்துக்கொண்டு, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையிலேயே பதில் கூறியிருக் கிறார். மாவட்ட வன அதிகாரிக்கு யார் யார் மரம் திருடு கிறார்கள் என்று தெரிந்தும் அவர் இதுவரை சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்திற்கு பின்பும் சரியான நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை. என்று



1987 ஏப்ரல் 30] [திரு. சி. சுப்புராயர்]

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இதை மனதில் கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மேகமலைப் பகுதியில் வன விலங்கு சரணாலயம் அமைக்கப்படுவதாக 1985-86 ஆம் ஆண்டு மானிய கோரிக்கை யில் கூறப்பட்டு இருந்தது. ஆனால் இதுவரை அந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த ஹைவேஸ் பகுதி தேக்கடி வன விலங்கு சரணாலய பகுதிக்கு மறு பக்கத்தில் இருக்கிறது. தேக் கடியில் இருக்கக்கூடிய வன விலங்குகள் அடிக்கடி இந்த பகுதிக்கு வந்து விடுகின்றன. அதனால் அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு பல ஆபத்துகள் ஏற்படுகின்றன. கடந்த 20 தினங்களுக்கு முன் பாக நான் அந்தப் பகுதிக்கு சென்று இருந்தேன். இரவு நேரங் களில் ஒரு சிறுத்தையை நானே நேரில் கண்ணால் பார்த்தேன். பல யானைகள் இரவு நேரங்களில் அந்த தொழிலாளி வீட்டுக்கு முன்னால் வந்து விடுகின்றன. இதை தவிர்க்கும் வண்ணம் அங்கே ஒரு வன விலங்கு சரணாலயம் ஏற்படுத்தினால் அங்கு இருக்கும் வன விலங்குகளை கட்டுப்படுத்தி ஒரு நிலைக்கு கொண்டு வர முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

*திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர் களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியங்களை வரவேற்று என்னுடைய கருத்துக்களை கூற விழைகிறேன்.

தமிழகத்தில் இருக்கிற திருக்கோவில்கள் எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்கு பின்பு புனிதம் அடைந்து இருக்கிறது என்ற நிகழ்ச்சியை தமிழ்நாட்டில் இருக் கிற அத்தனை மக்களும் நன்கு அறிவார்கள். அந்த நிலையில் சிறப் பாக நடந்து கொண்டு இருந்தாலும் அந்த நிர்வாகம் செம்மைப் பட நடக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அந்த அறநிலையத் துறையை விரிவு செய்வதற்கு பரவலாக அதிகாரங்களை கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கமிஷனர், சாயின்ட் கமிஷனர், டெப்புட்டி கமிஷனர், உதவி ஆணையாளர் போன்ற

பதவிகளை உண்டாக்கி அந்த அதிகாரங்களை பரவலாக ஆக்குவதற்கு அந்தத் துறையை விரிவு செய்து இருக்கிறார்கள் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த நிலையிலே திருத்தணி திருக்கோவிலுக்கு தக்காராக ஏறக்குறைய 4 ஆண்டு காலமாக பொறுப்பில் இருக் கிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பிலே இந்தத் திருத்தணித் திருக் கோயிலுக்கு 'ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்' கட்டுவதாக இந்தக் குறிப் பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த 'ஷாப்பிங் காம்ப்ளக்சை' நான் பொறுப்பேற்பதற்கு முன்னாலே அறநிலையத்துறையில் அங்கே அறங்காவலர் போடப்பட்டு, அந்த நேரத்திலே அதை நிர்வாகத்திற்குக் கொண்டுவந்து, அதற்குண்டான ஆயத்தங் களைச் செய்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவுகூறி, அப்படி அந்த ஷாப்பிங் காம்பளக்ஸ் 5, 6 ஆண்டுகாலமாக, இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்குக் காரணம்— முறையாக அந்த டி.சி. பதவி இருக்கின்ற கோயில்களில் இருக்கின்ற பொறியாளர்கள் ஹைவேஸ் டிபார்ட்மெண்டி லிருந்து வந்தவர்கள். ஆகவே தான் முறையான கட்டி டங்களுக்கு உண்டான மதிப்பீடுகளைப் போடுவதற்கு அவர் களுக்குத் தெரியவில்லை. ஆகவே அந்த நிலையைப் போக்கி, அதன் காரணமாக ஒவ்வொன்றாகக் குறை கூறி, அதற்குப் பின்னாலே தலைமை அலுவலகத்திற்கு வருவதும், அங்கேயிருந்து குறிப்புகளைக் கேட்பதுமாக திரும்பவும் அந்தக் கோப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த வகையிலேதான், இன்று குறிப்பிலே கூட, அந்த 'ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்' ஒன்று திருத்தணித் திருக்கோவிலில் கட்டப்படுகிறது என்று குறிப்பிட் டிருக்கிறோம். ஏறக்குறைய 4, 5 ஆண்டுகளாக அந்தத் திருக் கோவிலில் எந்தவிதமான வளர்ச்சியும் இல்லாமல் இருப்பதற்குக் காரணம், முறையான பொறியாளர்கள் அங்கேயில்லை என்று தான் சொல்லவேண்டும். அதற்கு நாம் அந்த ஹைவேஸ் டிபார்ட் மெண்டிலிருந்து வந்தவர்களை எடுத்துவிட்டு, முறையாக, பொதுப் பணித்துறையிலிருந்து வருகின்றவர்களையாவது வைத்துக் கொண்டு அந்தப் பணிகளை ஆற்றுவதற்கு முன்வரவேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படியில்லை என்று சொன்னால், நிச்சய மாக நாமே நம்முடைய துறைகளிலே எப்படி டி.சி. துணை ஆணையாளர் அந்தஸ்திலே இருக்கின்ற கோயில்களில் நாமே ஒரு





உதவிக் கோட்டப் பொறியாளரை வைத்துக்கொண்டு, அவருக்கு உறுதுணையாக ஏ.ஈ., ஏ.டீ. போன்றவர்களை வைத்துக் கொண்டு, மதிப்பீடுகளையெல்லாம் அங்கேயே தயார் செய்து, அதை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை உருவாக்கினால் கூட, அதற்கு நிதிநிலை வசதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்த உதவிக் கோட்டப் பொறியாளரை, அந்தக் கோவிலிலேயிருந்து மற்ற டி.சி. கோவில்களுக்கு மாற்றுவதற்கான வாய்ப்பை உருவாக் கலாம். காரணம், கோவில்களுக்கு வருகின்ற பொறியாளர்கள் எல்லாம் ஒன்றும் தெரியாமல் இருப்பவர்களாக, ஹைவேஸ் சர்வீசிலிருந்து அனுப்பிவிடுகிறார்கள். அங்கே வந்து அவர் களுக்கு பணியாற்ற விருப்பமில்லை. பணியாற்றுவதற்கு விருப்பம் இல்லையென்று சொன்னாலும், அதிலே வந்து சேர்ந்து விட்டு, அதிலிருந்து மீண்டும் வெளியே போவதற்கான 'டிரான்ஸ்பர்' வாங்குவதற்கான முயற்சியிலே ஈடுபடுகிறார்களே யொழிய, அந்தத் திருக்கோயில்களில் இருக்கின்ற பணிகளை முடிக்கவேண்டும். நம்முடைய காலத்திலே இவைகளையெல்லாம் செய்துதரவேண்டும், அங்கே வருகின்ற யாத்திரிகர்களுக்கு, பக்தர் களுக்கு என்னென்ன தேவையோ, அவைகளை எல்லாம் செய்து தரவேண்டும் என்ற எண்ணம் இல்லாதிருக்கின்ற காரணத்தால், திருக்கோவில்களில் உதவிக் கோட்டப் பொறியாளர் நிலையில், அந்த அந்தஸ்திலுள்ள பொறியாளர்களை வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படி வைப்பார்களே யானால். திருத்தணியிலே நாம் 3 கல்யாணமண்டபங்களைக் கட்டவேண்டுமென்று எழுதி அனுப்பியிருக்கிறோம். அதற்கு உண்டான எல்லா குறிப்புகளும் எழுதி அனுப்பி. இது நாள் வரையிலும். எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது.

அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் ஏறக்குறைய ரூ. 42 இலட்சத்திலே மதிப்பீடு செய்திருக்கிறோம். இருந்தாலும் அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் 5 ஆண்டுகளுக்கு முன்னாலே நிறைவேற்றப்பட்டிருக் குமானால், அதே மதிப்பீட்டில் செய்திருக்கமுடியும். 5 ஆண்டு களுக்குப் பிறகு; இப்போது விலைவாசி ஏறியிருக்கின்ற காரண மாக, அதிலே ரூ. 2, 3 இலட்சம் நமக்கு நஷ்டம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிற காரணத்தால் இதுபோன்ற நஷ்டம் ஏற்படாது

[திரு. இரா. சண்முகம்] [1987 ஏப்ரல் 30

வகையில், சிறந்த பொறியாளர்களை வைத்து, நாமே வெகு சீக்கிரத்தில் அதை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், திருக்கோயிலில் இருக்கின்ற சொத்துக்களைப் பராமரிப்பதிலே, நிலங்களாக இருந்தாலும், அல்லது கட்டிடங்களாக இருந்தாலும், அல்லது வீடுகளாக இருந்தாலும், அவைகளை, நாம் வாடகைக்கு விடுவதிலே நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. அந்தத் திருக்கோவிலிலே இருக்கின்ற துணை ஆணையாளர், அல்லது உதவி ஆணையாளர், யாராக இருந்தாலும், நேரடியாக அவர்கள் மீது நாம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதற்கான வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அப்படி அந்த வாய்ப்பு இல்லாமல் இருப்பதற்குக் காரணம், சட்டத்திலே நெளிவு, சுளிவு இருக்கின்ற காரணத்தால் நாம் நேரடியாக அவர்களிடத்திலே போய், எதையும் ஜப்தி செய்யவோ, அல்லது அவர்களிடத்திலே இருக்கின்ற பாத்திரங்கள், பண்டங்கள், அல்லது பொருட்களை எடுப்பதற்கான அதிகாரம் இல்லாத காரணத்தாலே நாம் எதையும் செய்ய முடியவில்லை. ஆனால் அந்தப் பஞ்சாயத்து அல்லது முனிசிபாலிட்டியில் வரி வசூல் ஆகவில்லை என்று சொன்னால். அந்த அதிகாரிகள் நேரடியாக அவர்களது அதிகாரத்தைப் பயன் படுத்துகிறார்கள். போய் நேரடியாக அவர்களிடத்திலே இருக்கின்ற பொருள்களை, எடுத்து ஜப்தி செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது. அதுபோன்ற சட்டங்களை, இந்தத் திருக்கோயில்களுக்குக் கொண்டு வருவோமானால், நம்முடைய திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு வழியாக இருக்குமென்று சொல்லி, அப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கித்தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கிராமப் பகுதிகளில் இருக்கின்ற கோவில்களில் அவைற்றுக்குச் சொந்தமான சொத்துக்கள் அங்கே நிறைய இருக்கின்றன. தர்மகர்த்தாக்களை நியமனம் செய்கிறோம். நியமனம் செய்து மூன்று ஆண்டுகள் ஆனதற்குப் பிறகு, மறுபடியும் வேறு ஒரு தர்மகர்த்தாவை அங்கே போடுவோமானால் அவர்கள், இவர்களிடமிருந்து சார்ஜ் அஸ்யூம் பண்ணமுடியாமல் இருக்கிறது. காரணம், அவர்கள் நேரடியாகக் கோர்ட்டிற்குப்



1987 ஏப்ரல் 30] [திரு. இரா. சண்முகம்]

போய்விடுகிறார்கள். அந்தச் சொத்துக்களை திரும்ப அவர்களுக்குக் கொடுக்க வாய்ப்பில்லாமல், அந்த சார்ஜை எடுப்பதற்கு முடியாமல், ஓராண்டு, 2 ஆண்டுகள், ஏன் 3 ஆண்டுகளே கூட, அந்த சார்ஜ் அஸ்யூம் பண்ணாமல் போய்விடுகிறார்கள். அதற்காக

(பிற்பகல் 1-10)

அந்தச் சட்டத்தில் 3 ஆண்டுக்காலங்கள் என்று போட்டால் அந்த தேதி முடிந்தவுடனே அவர்களுக்கு அந்தப் பதவி காலாவதியாகிவிட்டது என்று அந்தச் சட்டத்தில் இடம் இருக்க வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால் புகார் கொடுத்து காவல்துறை அதிகாரிகள் மூலமாக நடவடிக்கை எடுத்து அந்த சார்ஜ்ஜை நாம் எடுத்துக்கொள்கிற அளவுக்கு சட்டத்தை திருத்தவில்லையென்றால் இந்த நிர்வாகம் இப்போது இருப்பது போலே மீண்டும் நிரந்தரமாக இருப்பதற்கான வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றொன்றையும் நான் சொல்வதற்கு கடமைப்பட்டு இருக்கிறேன். திருக்கோயிலிலே கட்டிடங்கள் கட்டுவதற்கு யாரும் வருவதில்லை. அப்படி அவர்கள் வருவதென்றால் அந்த கட்டிடங்கள் கட்டுவதற்கான வாய்ப்பை பெறுகின்றபோது முதலிலேயே டெப்பாசிட் செய்கிறார்கள். டெப்பாசிட் செய்துவிட்டு அவர்கள் பணியைச் செய்கின்றபோது அந்தப் பணியிலே படிப்படியாக எவ்வளவு வேலை ஆகின்றதோ அதற்கான பில்லை வாங்கும்போது அவர்களுக்கு ஈ.எம்.டி. பிடித்தம் செய்கிறார்கள். ஈ.எம்.டி. பிடித்தம் செய்து விட்டு. அவர்கள் பணி முழுமை அடைந்தவுடனே கம்ப்ளீஷன் ரிப்போர்ட் என்று கொடுத்த பிறகுதான் அந்த டெப்பாசிட், ஒவ்வொரு பில்லிலும் போடப்படுகின்ற ஈ.எம்.டி. போன்றவைகளை திருப்பித்தரவேண்டும். இது எத்தனை காலம் ஆகின்றதென்றால் குறைந்தது 3, 4 ஆண்டுக்காலம் ஆகிறது. இப்படிப்பட்ட குறை இருப்பதால் கோயில்களுக்கு எந்த வேலை செய்வதாக இருந்தாலும் காண்ட்ராக்ட்காரர்கள், ஒப்பந்தக்காரர்கள் வருவதில்லை. இப்படிப்பட்ட நிலையைப் போக்கி, பிடபிள்யுடி. மைனேவல்ஸில் இருக்கின்ற சட்டதிட்டங்கள் இந்த திருக்கோவிலிலே இருப்பவர்கள் பெறுவதற்குண்டான வாய்ப்பை உருவாக்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி யடிக்கப்பெற்றது).

அடுத்து திருத்தணியில் அதிகமாக சுற்றுலாப்பயணிகள் வருவதால் திருத்தணியை சுற்றுலாமையமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருத்தணியில் தேவஸ்தானம் மூலமாக நிதிநிலைமை நல்ல முறையில் இருப்பதால் பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் போன்றவற்றை அமைப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும். அதோடுமட்டுமல்லாமல் கடைசியாக வனத்துறையில் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். வனத்துறை சிறப்பாக பணியாற்றுகிறது. இந்த நிலையிலே, சமூகநலக்காடுகளை கிராமப்பகுதியிலே ஊராட்சி மன்றங்கள் மூலமாக வைக்கிறார்கள். அங்கே வைக்கின்றபோது 3 மாத கன்றுகளை வைக்கிறார்கள். அதற்கு செலவு 600 என்று எழுதுகிறார்கள். ஆனால் வனத்துறையிலே வைப்பது 3 ஆண்டுக் கன்றுகள் என்று வைத்து அதற்கு 300 ரூபாய் செலவு என்று நிர்ணயம் செய்கிறார்கள். 3 ஆண்டுக்காலமாகிவிட்ட காரணத்தினால் அந்தக் கன்றுகள் முதிர்ச்சி அடைந்திருப்பதால், மழைக் காலங்களில் வைத்தால் வைத்தவுடனே அது பச்சை கட்டி, மரமாக வளர்கின்ற வாய்ப்பு இருக்கிறது. மூன்று மாத கன்றுகளை கொடுத்துவிட்டு அதற்கு செலவு 600 ரூபாய் என்று எழுதினால், அந்த கன்றுகள் 3 மாதமாக இருப்பதால் உலர்ந்துபோய் விடுகிறது. ஆகவே அரசாங்கத்தின் மூலமாக செலவு செய்கின்றபோது சமூகநலக் காடுகளை வளர்க்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்கு பாதகமாக அது அமையும் என்பதால் 3 ஆண்டுக் கன்றுகளை நட்டு அதை வனத்துறை இலாக்காவே மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சுற்றுலாத்துறை, வனத்துறை முதலிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட தமிழகத்திலே எங்கும் இல்லாத அளவிற்கு 58.84 விழுக்காடு அளவிற்கு அதிக காடுகளைக் கொண்டது. அந்த மாவட்டத்தில் காடுகளை பேணிக் காப்பதில் அரசும் நம்முடைய அதிகாரிகளும் மிகத் ஆங்காங்கு சில சமூக விரோதிகள் அந்த வனங்களை அழித்து விடுகிறார்கள். அப்படி அழிக்கக்கூடிய அந்த சமூக விரோதிகளை தீவிரமாக முயற்சிகளைச் செய்துகொண்டிருந்தாலும் கூட





எப்படியாவது தீவிரமாக பரிசீலனை செய்து குண்டர் சட்டத்தை பயன்படுத்தியாவது அவர்களை கைது செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் நீலகிரி மாவட்டத்தில் தனியார்கள் ஒரு ஏக்கரிலிருந்து 5 ஏக்கர் வரை தோட்டங்களை வளர்த்து அங்கே மரங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் 10 மரங்களை தங்களுடைய தேவைக்கு வெட்ட வேண்டும் என்றாலும் கூட அவர்கள் 20 மரங்களை பயிரிட்ட பிறகுதான் வெட்ட வேண்டும். இப்படி 10 மரங்களை வெட்டுவதற்கு அனுமதி பெறுவதில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. கட்டிங் பெர்மிட் வழங்குவதில் நீங்கள் தாராளமாக இருக்க வேண்டும். கற்பூர மரத்தை பொறுத்தவரையில் 10 ஆண்டுகளுக்கு பிறகு வெட்டலாம். மற்ற சில்வர் ஓக் மரங்களை 5 ஆண்டுகளுக்கு பிறகு வெட்டலாம். சாதாரண ஏழை எளிய மக்கள் தங்கள் குடும்பத் தேவைக்கு வெட்டுகிறார்கள். அவர்களுக்கு சற்று வேகமாக அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அந்த அனுமதி கிடைக்கவில்லை என்றால் தான் இந்த சமூகவிரோதிகள் தவறான முறையில் அனுமதி இல்லாமலேயே வெட்டுகிறார்கள். அப்படி வெட்டும்போது அந்த விவசாயிகளுக்கு மரங்களுக்குச் சேரவேண்டிய முழுத் தொகையும் போய் சேருவதில்லை. ஆகவே அவர்களுக்கு அனுமதி வேகமாக கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சுற்றுலாத் துறையை எடுத்துக்கொண்டால், நீலகிரி மாவட்டம் பல வகைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆனால் அங்கே தொட்டபெட்டாவிலிருந்து 'ரோப் வே' என்று சொல்லக்கூடிய ஒரு கம்பிப் பாதை அமைக்கவேண்டும் என்று நீண்ட நாட்களாகச் சொல்லியும், அது ஏனோ ஒரு காரணத்தால் நடைபெறாமல் இருக்கிறது. அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கோருவதோடு, அங்கே நீலகிரி மாவட்டத்தில் ஒரு டி.வி. ஸ்டேஷன்—அங்கு கொடைக்கானலில் ஏற்பட்டிருக்கும் டி. வி. ஸ்டேஷனின் உதவியிலே இருக்கின்ற மக்கள் பயன் பெற முடியவில்லை—ஆகவே, அங்கு டி.வி. ஸ்டேஷன் அமைக்க வேண்டும்.

[திரு. கே. உச்சி] [1987 ஏப்ரல் 30

அதே நேரத்தில், ஊட்டி லேக். அந்த ஏரியில்—ஏராளமான உல்லாசப் பயணிகள் வருகிறார்கள். அங்கே அழகு மிக்க தொங்கும் பாலம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்றும், ஒரு மிதக்கும் படகு ஒன்றை ஏற்படுத்தி அதில் இனிய பலகாரங்கள் விற்கப்படவேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் அதனுடைய ஃபைலில் எழுதியிருந்தும்கூட, அது இன்னும் செய்யப்படவில்லை. அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி அதைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அதே நேரத்தில் நீலகிரி மாவட்டத்தில்தான் உயிர்காக்கும் மருந்து என்று சொல்லக்கூடிய—அந்த 'சின்கோனா' டிபார்ட் மென்ட் நீலகிரி மாவட்டத்திலும், கோவை மாவட்டத்தின் பகுதி களிலும் உள்ளது. மலேரியா நோயைத் தடுத்து உயிர்காக்கப் பயன்படுத்தப்படும் குனைன் சல்பேட் மருந்தையும், மற்றும் நறுமணத் தைலங்களையும் தயாரிக்கக்கூடிய ஒரு ஸ்தாபனம் நீலகிரியில் இருக்கிறது. அதில் கிட்டத்தட்ட 1911 நிரந்தரத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 343 பேர் தற்காலிகத் தொழி லாளர்கள், நீண்ட நாட்களாக இருக்கிறார்கள். ஆகவே, அந்த 343 தற்காலிகத் தொழிலாளர்களை நீங்கள் நிரந்தரமாக்க வேண்டும். நாங்கள் அங்கே பல நேரங்களில் கேட்கும்போது அங்கே அதிகாரிகள் சொல்கிறார்கள்—'அந்த சின்கோனா தொழில் இலாபமாக இல்லை. அதனால் அவர்களை நிரந்தர மாக்க முடியவில்லை' என்று சொல்கிறார்கள். அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஏழைகள் அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் ஏறத்தாழ 80 விழுக்காடு உள்ளவர்கள் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய வாழ்வை வளமாக்க அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், அங்கு சின்கோனா தொழிலில் இலாபம் இல்லையென்றாலும்கூட, ஏராளமான மலைப் பகுதிகள் அங்கே இருப்பதால், அங்கே தேயிலையை வளர்க்கவேண்டும். அங்கு தேயிலையை வளர்த்தால் இலாபமாக இருக்கும் என்ற கோரிக் கையை அமைச்சர் அவர்களிடம் அங்கே நடந்த ஒரு மாநாட்



1987 ஏப்ரல் 30] [திரு. கே. உச்சி]

டிலே விடுத்து இருக்கிறார்கள். அந்தத் துறையின் மாநாடு நடக்கும்போது—தேயிலைப் பயிரிடுவது பற்றிய கோப்புகள் வேகமாக நகரவில்லை என்று தொழிலாளர்கள் மத்தியிலே ஒரு வேதனை இருக்கிறது. அதை உடனடியாகத் தீர்க்கவேண்டும் என்று சொல்லி, அங்கே உள்ள ஏழை எளிய ஆதிவாசிகளுக்கு சில பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.

உதாரணமாக, கூடலூர் பகுதியிலே 'தொரப்பள்ளி' என்ற பகுதி—காட்டுப் பகுதி—அதிலே ஆதிவாசிகளுக்கு நம்முடைய வனத்துறையின் சார்பாக ஒரு பள்ளி நடக்கிறது. அந்தப் பள்ளி உயர்நிலைப்பள்ளி ஆக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. அங்கே படிக்கக்கூடியவர்களில் முழுமை யாக 80 விழுக்காடு அளவுக்கு ஆதி திராவிட மக்கள் படிக்கிறார் கள். மலைவாழ் மக்கள் படிக்கிறார்கள். அந்தப் பள்ளியை உயர்த்தித் தரவேண்டுமென்றுகேட்டு, நீலகிரி மாவட்டத்தில், உல்லாசப் பயணிகள் தமிழகத்திலே மிகவும் குவிந்து கொண்டு வரக்கூடிய நேரத்தில் அதிகமான அளவுக்கு விளம்பரம் செய்து, வடநாட்டுப் பகுதியிலேயும் நீலகிரி மாவட்டத்தைப் பற்றி விளம்பரம் செய்யவேண்டும் என்று கோரி, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி, சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த, எண்கள் 12, 25, 47, 56 ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த காட்டு வளமும், அறநிலையத் துறையும் சீரோடும், சிறப்போடும் செயல்பட்டு வருகிறது என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதேபோல் தான் ஆலயப் பணியாளர்கள் அகவிலைப் படியும், ஊதியமும் உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். அதைப்போலவே, ஆலயத்தி னுடைய களவுகளைத் தடுப்பதற்காக காவல்துறையைக் கொண்டும் பயிற்சி வகுப்பு நடத்தி வருகிற பாங்குகளைப்

[திரு. ஏ. தங்கராசு] [1987 ஏப்ரல் 30

பார்க்கிறபோது நான், இந்த ஆலயங்களின் மீது எவ்வளவு அக்கறையோடு செயல்படுகிறார்கள் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

அதேபோல்தான் கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஆலயச் சிலைகளைக் கண்டுபிடிப்பதற்கான ஆய்வுக் குழுவை, கமிட்டியை அமைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைப் போலவே ஆலய நிலங்களையும், மனைகளையும்—அந்த வருமானத்தை அதிகப்படுத்துவதற்கான வாய்ப்பை இத்துறையினர் ஏற்பாடுசெய்து இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-20)

அதைப் போலவே வசதிபடைத்தவர்கள் எல்லாம் அறநிலையங்களுக்குச் சொந்தமான இடங்களை 99 ஆண்டு குத்தகை என்ற வகையில் தங்களுடைய வசத்தில் எடுத்துக் கொண்டு அதிலே பல்வேறு கட்டிடங்களைக் கட்டி வாடகை வசூல் செய்கிறார்கள். அந்த வாடகை தனியார் வசத்திற்குப் போகிறது, ஆலயத்திற்கு வரவில்லை. இப்படி 99 வருஷ குத்தகை என்கிற வகையில் பல்வேறு ஆலயங்களின் சொத்துக்கள் இன்றைய தினம் தனியாரால் அனுபவித்து வரப்படுகின்றன. அவைகளை எல்லாம் கைப்பற்றி காப்பாற்றுவதற்கான முறையில் விரைவில் அதற்குச் சட்டம் கொண்டு வந்து அந்த இடங்களைக் கைப்பற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து பெரிய ஆலயங்களில் எல்லாம் திருப்பணி செய்யவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 26 ஆலயங்கள் இதன் மூலம் பயன்பெற்றிருக்கின்றன. அதற்காக ரூ. 35 லட்சம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 83 ஆலயங்களில் திருப்பணிக்காக என்று ரூ. 45 லட்சம் செலவழிக்கப்பட இருக்கிறது அதைப் போலவே பெரிய ஆலயங்களையும் செப்பனிடுகிற பணி நடந்து வருகிறது. அந்த வகையில் தஞ்சை மாவட்டத்தில் இராஜராஜன் கோயில் ஆலயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அந்த ஆலயம் புதுப்பிக்க இருக்கிறார்கள் என்று அறிகிறேன். இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



1987 ஏப்ரல் 30] [திரு. ஏ. தங்கராசு]

தஞ்சையில் உள்ள இராசராச சோழனுடைய சிலை களவு போய் விட்டது என்று சொன்னார்கள். அந்த இராசராச சோழன் சிலை தொன்மை வாய்ந்த சிலை. அந்தச் சிலை எப்படிக் களவு போனது? யாரால், யார் மூலமாக, களவு போனது? அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்கிற விவரங்களையெல்லாம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஆதி திராவிட மற்றும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் திருமணத்திற்காக அளிக்கப்படும் தொகை ஆயிரம் ரூபாய் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது நான் பெருமைப்படுகிறேன். அதைப் போலவே தமிழ் நாட்டில் இருக்கிற பாதுகாக்கப்பட வேண்டிய ஆலயங்களைப் பராமரிக்க ஒரு நல்ல செயல் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதையும் பாராட்ட விரும்புகிறேன்.

மேலும் கோயில்களில் ஒரு கால பூசை கூட நடக்காமல் இருந்தால் அத்தகைய ஆலயங்களுக்கு நமது ஆட்சி ஏற்பட்ட பிறகு அரசின் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆலயத்திற்கு ரூ. 5,000 வீதம் 1985-ஆம் ஆண்டு 32 ஆலயங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 1986 ஆம் ஆண்டு 1300 ஆலயங்களுக்கு ரூ. 115 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. அதனால் 150 கிராமத்தில் உள்ள மக்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன்.

அடுத்து ஆலயங்கள் மூலமாக அன்பு இல்லங்களை நடத்துகிறார்கள். ஏழை எளிய மக்கள் இதன் காரணமாகப் பயன் அடைகிறார்கள். ஆகவே அந்த வகையில் கிராமப்புறப் பகுதிகளில் ஆலயங்களுக்குச் சொந்தமான, ஆனால் ஆலயங்களுக்குத் தேவையில்லாமல் இருக்கிற இடங்களை அங்குள்ள கிராமப் பொதுமக்களின் காரியங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அதாவது பள்ளிக்கூடம் கட்டுதல், மருத்துவ மனை அமைத்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் போன்ற காரியங்களுக்கு அத்தகைய ஆலயங்களுக்குச் சொந்தமான ஆனால் தேவைப்படாத இடங்களைத் தருவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, என்னுடைய தொகுதியில் முத்துமாரியம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. அதனுடைய இடம்—அதற்குச் சொந்தமான இடம்—தனியார் அனுபோகத்தில் இருந்து வருகிறது. ஆலயத்தைச் சார்ந்தவர்கள் அதற்கு நடவடிக்கை எடுத்தும்கூட இதுவரை தனியார் அந்த இடத்தை விட்டு வெளியேற்றப்படவில்லை. எனவே உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த இடத்திலிருந்து அவரைக் காலி செய்ய வேண்டுமென்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் வடலூரில் உள்ள சத்திய ஞான சபைக்கு விரைவில் அறங்காவலர் குழுவை நியமிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் வடலூரை ஒரு சுற்றுலா மையமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தந்தை பெரியார் அவர்கள் மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை புரட்சித் தலைவர் அரசாங்கம், அரசாங்க விழாவாகவே கொண்டாடி வருகிறது. அந்த வகையில் 5—10—1923 ஆம் ஆண்டிலே வள்ளலார் அவர்கள் பிறந்திருக்கிறார்கள். அவருடைய பிறந்த நாள் விழாவையும் அரசே கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 164 ஆம் ஆண்டு முடிவடைந்து 165 ஆம் ஆண்டு பிறந்த விழா 5—10—1987-ல் வருகிறது. அன்றைய தினம் அந்தப் பிறந்த தின விழாவை அரசாங்கம் மூலமாகக் கொண்டாட வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானிய கோரிக்கைகள் 12, 25, 45, 47, 56 ஆகியவற்றை ஆதரித்து இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த துணை சபாநாயகர் அவர்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகுதான் வனத்துறையைப் பொறுத்த வரையில் இதற்கு முன் இருந்த அமைச்சர் அண்ணன் ஆர்.எம்.வீ. அவர்களிடம் இருந்த நேரத்திலேயும் சரி அதற்குப் பிறகு அமைச்சர் பொறுப்பை





ஏற்றுள்ள அண்ணன் திரு. சுவாமிநாதன் அவர்கள் வந்த பிறகும் சரி, காடுகள் பாதுகாக்கப்படுகின்றன. 1982-ஆம் ஆண்டு காடுகளை அழிக்கக் கூடாது என்ற திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்கள். 1982-ஆம் ஆண்டுக்குப் பிறகு காடுகளை ஏலம் விடப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டு, தமிழ் நாட்டிலுள்ள ஏரி, குளங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ அந்தப் பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்று சமூக நலக் காடுகளை ஏற்படுத்தி தமிழகத்திலே இன்றைக்குச் சுமார் 80 இலட்சம் டன் என்ற அளவிற்கு உற்பத்தி செய்கின்ற அளவிற்கு வனத்துறை முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இதனால் ஏழையெளிய மக்கள் ஏரிகள், குளங்களில் இருக்கின்ற சமூகநலக் காடுகளில் உள்ள கருவேல மரங்களை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் சமூக நலக் காடுகளில் இருந்து வரும் ஏலத் தொகையிலிருந்து பாதி தொகையை அரசு கொடுக்கிறது. அந்தப் பணத்தை அங்கேயுள்ள ஊராட்சி மன்றத் தலைவர்கள் நல்ல முறையிலே உபயோகப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரிக்கு வரும்போது மேடையிலேயே எடுத்துக் கூறினார்கள். கலெக்டர் நாட்டைச் சேர்ந்த அதிகாரி அங்கே வந்தார்கள். அங்கே அந்த மேடையில், பஞ்சாயத்துக்கு கொடுக்கப்படுகிற பணம், பள்ளிக் கூடம் கட்ட, ஆஸ்பத்திரி கட்ட உபயோகப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்கள்கூட அறிவுரை சொன்னார்கள். புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்த பிறகுதான் காடுகள் பாதுகாக்கப்படுகின்றன. இரண்டு நாட்களுக்கு முன்பு என்னுடைய பகுதியில், ஓசூர் பகுதியில் சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமான சந்தனக் கட்டை பிடிக்கப்பட்டு நான்கைந்து பேர் அரெஸ்ட் செய்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. தர்மபுரி மாவட்டத்திலேதான் சந்தன மரங்கள் அதிகமாக இருக்கின்றன. வனத் துறையிலே இலட்சக்கணக்கான ஏக்கர் காடுகளை பாதுகாக்க ஃபாரஸ்ட் கார்ட், வாட்சர் சுமார் நான்கு பேர்களைத் தான் போட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் ஆட்சியில் அவர்களுக்கெல்லாம் துப்பாக்கி கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்னும் துப்பாக்கி அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஃபாரஸ்ட் கார்ட், வாட்சர் களுக்கெல்லாம் துப்பாக்கி கண்டிப்பாக கொடுக்கப்பட வேண்டும்.

ஏனென்றால் காடுகளை முக்கியமாக பாதுகாப்பவர்கள் இந்த ஃபாரஸ்ட் கார்டுகளும், வாட்சர்களும்தான். ஃபாரஸ்டர்களும், ரேஞ்சர்களும் ஏதோ ஒரு நாளைக்குத்தான் செல்வார்கள். ஆகவே இந்தக் காட்டை பாதுகாக்கக் கூடிய கார்ட், வாட்சர் களுக்கு புரட்சித் தலைவர் ஆட்சியில் துப்பாக்கி கொடுத்து அங்கேயுள்ள வனங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரையில், என்னுடைய தொகுதியில் ஒகேனக்கல் சிறந்த சுற்றுலா தலமாக இருக்கிறது. அமைச்சர் அவர்களும், சுற்றுலாத் துறையின் இயக்குநர் அவர் களும் மற்றும் அதிகாரிகளும் ஒகேனக்கலுக்கு வந்தார்கள். அங்கே ஒரு தொங்குபாலம் கட்ட 10 இலட்சம் ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் வேலை துவங்கப்பட வில்லை. உடனடியாக அந்த தொங்கு பாலம் கட்டும் வேலை துவங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஒகேனக்கல் சுற்றுலா தலமாக இருப்பதால் அங்கே பல வசதிகளைச் செய்து தர வேண்டும். பஸ் நிலையம், பெண்கள் குளிப்பதற்காக தனி அறை ஆகியவற்றை கட்டித் தர வேண்டும்.

அடுத்து, தீர்த்தமலை சுற்றுலா தலமாக இருக்கிறது. 1979-இல் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. ஆர்.எம்.வீ. அவர்கள் ஒரு கிலோமீட்டர் அளவிற்கு மலையில் ஏறி தீர்த்த கிரீஸ்வரன் கோவிலைப் பார்த்தார்கள். அங்கே சுமார் ஒன்பது தீர்த்தங்கள் வருகின்றன. தமிழகத்திலே எங்கும் இல்லாத அளவிற்கு எவ்வளவு வறட்சி ஏற்பட்டாலும், தீர்த்தம் அங்கே வருகிறது. அதை முன்னாள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்தார்கள். சென்ற மாதம் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்த்தமலைக்கு வருவதாகச் சொன்னார்கள். என்ன

(பிற்பகல் 1-30)

காரணத்தாலோ அமைச்சர் அவர்கள் அந்த நிகழ்ச்சியை ரத்து செய்து விட்டார்கள். ரத்து செய்யவில்லை என்றால், தீர்த்த மலையில் இருக்கும் தீர்த்தகிரீஸ்வரர் கோவிலை அவரும் பார்த்திருக்கக்கூடிய சூழ்நிலை இருந்திருக்கும். எனவே





மலையில் பயணிகள் தங்க விடுதி கட்ட 2 லட்சம் ரூபாய்க்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அந்த வேலையையும் துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பெற்றது).

திரு. க. ராமமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளின் மீது ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். இந்து சமய அறநிலையத் துறை மிக முக்கியமான துறை. இந்து சமய முன்னேற்றத்திற்கும், இந்து சமயக் கோட் பாடுகள் வளர்வதற்கும் துணையாக உள்ள இந்தத் துறை மிக முக்கியம் வாய்ந்தது. தமிழகத்தில் உள்ள மடங்களும், மடாதி பதிகளும் இந்தத் துறையின் வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டிருக் கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவஞானம் அவர்கள் வருந்தத்தக்க நிகழ்ச்சியை இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள்.

இந்து சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கும், பண்பாட்டை வளர்ப்பதற்கும், இந்து மதம் வளர்வதற்கும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் மடாதிபதிகளில் சிலபேர், அந்தக் கொள்கைகள், கோட்பாடுகளுக்குப் பாடுபடுவதற்கு மாறாக இன்றைக்கு எப்படி சாதாரண நிகழ்ச்சிகளில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் கள் என்பதை அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக தமிழகத் திலே ஹரிஜனங்கள் என்றால் அவர்களில் பெரும்பகுதி தாழ்த்தப் பட்ட மக்கள் இந்து சமுதாயத்தில் இருக்கிறார்கள். பல்வேறு இடங்களிலே இன்றைக்கு புரையோடிப்போன ஜாதி உணர்வுகள் காரணமாக, ஜாதிச் சண்டைகள் நடைபெறுகின்றன. இதன் காரணமாக மத மாற்றமும் நடக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் நன்றாக அறிவார்கள். எனவே இப்படிப்பட்ட பிரச்சினைகளிலே கவனம் செலுத்தி, அப்படிப்பட்ட சச்சரவுகள் நடக்காமல் பாதுகாத்து, இந்து மத சமய வளர்ச்சிக்கு, இந்து மதக் கோட்பாடுகள் வளரப் பாடுபடுவதற்கு பதிலாக சில

[திரு. க. பாரமலை] [1987 ஏப்ரல் 30

குறிப்பிட்ட மடாதிபதிகள் என்னென்ன வேலைகள் செய்கிறார்கள், எப்படி தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவஞானம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதுகுறித்து ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1960-ஆம் ஆண்டு மத்திய அரசு நியமித்த சி. பி. இராமசாமி ஐயர் தலைமையிலான குழு மிக அருமையான கருத்தைச் சொல்லியிருக்கிறது. அதை இந்த மன்றத்தில் சொல்வது இந்த நாட்டிற்குப் பலனளிக்கும் என்பதால் குறிப்பிட விரும்புகிறேன்.

"Moral and spiritual qualifications are of course of special importance. The head of the Institution must be a man of unquestionable moral character and religious temperament, with implicit faith in the ideals and modes of discipline and the practices for which the institution stands and should be capable of giving instruction to the people in regard to these matters"

என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதோடு,

"In the case of bigger mutts, the heads should be conversant not only with the particular system of philosophy of the mutts of which they are the heads but they should also be conversant with other systems of philosophy"

என்று கூறியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே ஒன்றைச் சேர்ந்திருக்கிறார்கள்.

"In short, we are of the opinion that the head of the mutt should combine in himself moral and spiritual sanctity with a thorough knowledge of the tenets of the philosophy of the particular institution of which he is the head and with capacity to expound the tenets to his disciples and devotees in a language which would be understood by them."

என்று கூறியிருக்கிறார்கள்.

"If a person has not been adequately trained by the head of the mutt for the time being, steps should be taken to ensure that he is so trained before he takes up the headship of the institution."

என்றும் கூறியிருக்கிறார்கள்.



1987 ஏப்ரல் 30] [திரு. க. பாரமலை]

நான் பணிவோடு மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வேன். நம்முடைய அருமை நண்பர் திரு. சிவஞானம் அவர்கள் குறிப்பிட்ட மடாதிபதிகளுக்கெல்லாம் இப்படிப்பட்ட கருத்துக்களைப் பயிற்றுவிக்க சிறப்பான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் அல்லது அவர்களை மாற்றுவதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்றால்கூட அதற்கு சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்து அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற இந்தக் கொள்கைக் குறிப்பில் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்போது, சில மடாதிபதிகள் என்று சொன்னார்கள். நான் மாறுபட்டுப் பேசவில்லை. எந்த மடாதிபதி என்று சொன்னால் நன்றாக இருக்கும். இல்லையென்றால் புனிதமான சங்கராச்சாரியார் அவர்களைக்கூட புண்படுத்துவதாக இருக்கும். எனவே சில மடாதிபதிகள் என்று சொல்வதைவிட்டு, எந்த மடாதிபதி என்று கூறினால் நன்றாக இருக்கும்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மடாதிபதிகள் மீது நான் மதிப்புடையவன். சங்கராச்சாரியார் போன்ற பெரிய மடாதிபதிகள்மீது நான் உண்மையான மதிப்பு வைத்திருப்பவன். ஆனால் இந்த மன்றத்திலே குறிப்பிட்ட ஒரு பெயரை சொல்கிறபோது, அவர்களுக்கு, இந்த மன்றத்தில் இல்லாததனால், பேசுவதற்கு வாய்ப்பளிக்க இயலாது என்று காரணத்தினாலே, ஒரு மரபு இருக்கின்ற காரணத்தினாலேயே, அவர் பெயரை குறிப்பிட வேண்டாமென்று கருதுகிறேன். அது நாடறிந்த உண்மை. அந்த மடாதிபதி செய்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** குற்றமாகச் சொல்லக்கூடாது. குறைகளைச் சொல்லலாம். ஒட்டுமொத்தமாக மடாதிபதிகள் என்று சொல்லக்கூடாது. பெயர் சொல்லி சொல்லுங்கள்.

**திரு. க. பரமலை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிலர் என்றுதான் சொன்னேன். இருந்தாலும் பரவாயில்லை. குற்றச்சாட்டாக சொல்லவில்லை. ஒரு குறையாக சொல்கிறேன். இந்த சமயத் துறையின்மீது இருக்கின்ற ஆர்வம் காரணமாக சொல்கிறேன். இப்படி அந்த செயல்களில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். மதுரை மடாதிபதிகள் தான் அப்படி இருக்கின்றார்கள். இந்த போக்கை தடுத்து நிறுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு இந்த திருக்கோயில்களில் இந்த துறையின் சார்பிலே ஏறத்தாழ 34 ஆயிரம் அறநிலையங்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. இதிலே ஒரு லட்சம் பேர்கள் வேலை செய்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஏறத்தாழ துறை ஆணையாளர்கள் 15 ஆணையாளர்கள் பதவி உயர்வு இல்லாமல் இருக்கின்ற அந்த நிலையைப் போக்குவதற்காக சென்னையிலே இருக்கின்ற இரண்டு துணை ஆணையாளர்கள் பதவிகளை இணை ஆணையர்களாக ஆக்க ஆணை பிறப்பித்திருப்பதாக குறிப்பிட்டார்கள். நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஒரு லட்சம் ஊழியர்கள் பணியாற்றுகின்ற இந்தத் துறையிலே இன்னும் வேலைவாய்ப்புக்களை அதிகமாக உருவாக்கித் தரவேண்டும். இந்த இரண்டு இணை ஆணையர்களுக்குப் பதிலாக 4 இணை ஆணையர்கள் என்று ஆக்கி இந்த தமிழகத்திலே இந்த துறையை 4 பிரிவினராக ஆக்கி, பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு இணை ஆணையாளராக பொறுப்பாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு இந்த திருக்கோயில்களிலே 1,800 திருக்கோயில்களில் ஏறத்தாழ 492 நிர்வாக அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதிலே உதவி ஆணையாளர்கள் அல்லது துணை ஆணையாளர்கள் பொறுப்பிலே இருக்கின்ற அந்த கோயில்கள் 19. மீதம் இருக்கின்ற அந்த 1,782 கோயில்களில் ஏறத்தாழ 373 ஊழியர்கள் அந்த நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் குறைந்தது ஒவ்வொரு வருக்கும் 4. 5 கோயில்கள் என்று இருக்கின்ற அளவிலே அவர்





களுக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. அந்த பளுவை குறைக்க மேலும் அதிகமான நிர்வாகிகளை போட முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கொள்கைக் குறிப்பிலே ஏறத்தாழ 125 ஊதிய விகிதங்களை 20 ஆகக் குறைத்து 2,444 பேர்கள் பயனடையக்கூடிய அளவில் 22 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள ஒரு திட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் இதிலே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு நான் பாராட்டுகிறேன். ஆனால் முதல் நிலை நான்காவது நிலையிலே உள்ள ஊழியர்கள் விகிதத்தைப் பொறுத்தவரையில் இந்த சீர்திருத்திய விகிதம் பொருந்தாது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்காக ஒட்டுமொத்தமாக ரூ. 200 வழங்கப்பட்டிருக்கின்றது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்வேன், இந்த துறையிலே பல்வேறு நிலையிலே இருக்கின்ற ஊழியர்கள் சம்பள மாறுபாடு காரணமாக அவர்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றார்கள். குறிப்பாகத் திருக்கோயில்களிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குச் சம்பளம் மிகமிக குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே நான் பணிவோடு கேட்டுக்கொள்வேன். இன்றைக்கு நமக்கு இருக்கின்ற நிதிவசதிகளைப் பெருக்கவேண்டுமென்று சொன்னால் அதற்கு எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றன. அதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல சந்தர்ப்பங்களிலே சொல்லி இருக்கின்றார்கள்.

நான சொல்லிக்கொள்வது அனைத்து ஊழியர்களும் பயன் பெறுகின்ற வகையிலே சம்பளத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருப்பணிகள்:** இன்றைக்கு மாமன்னன் ராஜராஜசோழன் ஆயிரமாவது முடிசூட்டு விழாவிற்குப் போற்றுகிற வகையிலே 60 தொன்மை வாய்ந்த திருக்கோயில்களிலே திருப்பணி செய்வதாகத் திட்டமிட்டு அதிலே 36 கோயில்களிலே திருப்பணி முடிக்கப்பட்டு அதிலே குடமுழுக்கு செய்யப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், எனக்கு

முன்னாலே பேசிய நண்பர்கள் குறிப்பிட்டதுபோல ஏறத்தாழ 400 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த அந்த ராஜ கோபுரத்தை இன்றைக்கு முடித்து மிகச்சிறப்பான முறையில் இப்போது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விழாவினை கடந்த 25—3—1987 லே நடத்தியிருக்கின்றார்கள்.

எனக்கு இருக்கின்ற முறையெல்லாம், என்னுடைய தொகுதியிலே புராதனமாக, தொன்மை வாய்ந்த, பெரியவர்களாலே பாராட்டப்பட்ட திருகோண புவனேஸ்வரர் கோயில் இன்னும் பராமரிப்பு இல்லாமல் மிக மோசமான நிலையிலே அது இருக்கிறது. அப்படிப்பட்ட கோயில்களை இந்த திட்டத்திலே சேர்த்து இந்த திருப்பணிகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

அடுத்து, இந்தத் துறையில் இன்றையதினம் மாவட்ட வருவாய் அலுவலர் பதவி தரத்தில் ஒரு தனி அலுவலரை, கோயில் நிலங்களைக் கண்டு பிடிப்பதற்காக நியமனம் செய்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதுபோல 4 தாசில்தார்களை நியமித்திருக்கிறார்கள். சிதம்பரத்திலும் ஒரு தாசில்தார் போடுவதாக சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் 5.2 லட்சம் ஏக்கர் கோயில் நிலங்கள் இருப்பதாகவும், அவைகளின் மூலமாக 38 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்றும் சொல்லுகிறார்கள். இந்த 38 கோடி ரூபாய் என்பது குத்தகை மட்டுமா அல்லது கோயில்களிலிருந்து வருகின்ற வருமானமும் சேர்ந்ததா என்பது பற்றி தெரியவில்லை. இந்த நிலங்களை எல்லாம் அரசாங்கம், அதாவது இந்தத் துறை கைப்பற்றி நேரடியாக உழுபவர்களுக்கு கொடுத்தால் அரசுக்கு பல கோடிக் கணக்கான ரூபாய் கிடைக்கும் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் 37.2 கோடி ரூபாய் அளவுக்கு குத்தகை பாக்கியிருப்பதாக சொல்கிறார்கள். ஒட்டுமொத்தமாக கோடிக்கணக்கில், இவ்வளவு கோடி ரூபாய் வருமானம் பாக்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். சாதாரண ஏழையெளிய விவசாயிகள் விவசாயம் செய்து, விவசாயத்திலிருந்து பாதிப்பு ஏற்பட்டு அவர்களால் அரசுக்கு கட்ட வேண்டிய





தொகையை கட்ட முடியவில்லையென்றால் நாம் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் இவர்களோ மிகப் பெரிய பணக் காரர்கள். நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை கையில் வைத்துக்கொண்டு கோயில்களுக்கு தரவேண்டிய தொகையை தராமலும், ஏழைகளிடத்திலும் அதை தராமல் அவர்களே அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலங்களைப் பொறுத்தவரையில் அரசு நிச்சயமாக குத்தகை பாக்கியை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, விழிப்பு குழு இன்றையதினம் புதுக்கோட்டை, மதுரை, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் இருக்கின்றன. அதுபோல மற்ற மாவட்டங்களிலும் குழுக்களை போட்டு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இன்றைக்கு சிலை திருட்டை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் ஒன்றை சொன்னார்கள். இங்கிருந்து திருடப்பட்ட சிலை லண்டனுக்கு போய், அங்கிருந்து அதனை திருப்பி கொண்டு வரவேண்டிய நிலையிருக்கிறது என்று நாமெல்லாம் அறிவோம்.

அடுத்து, சிதம்பரத்திலும் புஷ்பநேஷ்வர் கோயிலைப் பொறுத்தவரையில் இரண்டு முறை அங்கேயிருந்து நகைகள் திருடப்பட்டன. இன்றைக்குக்கூட அவை கிடைக்கவில்லை. அங்கேயிருந்த வெள்ளி நகையைகூட திருடிவிட்டார்கள். குற்றவாளிகள் பிடிபட்டபோதிலும் இன்னும் தண்டனைக் கொடுக்கப்படவில்லை. அதுசம்பந்தமான வழக்கு என்ன ஆனதென்றே தெரியவில்லை. இப்படிப்பட்ட சிலை திருட்டு சம்பவங்களைப் பொறுத்தவரையில் அதில் அரசுக்கு தோல்வி ஏற்பட்டால் அதற்கு யார் காரணம் என்பதைக் கண்டறிய வேண்டும். அதுபோல எங்கள் பகுதியிலுள்ள கோயில் சிறப்பு மிக்க ஒன்று. அது தேவஸ்தானத்திலுடைய பொறுப்பிலே இருக்கிறது. அங்கேயிருப்பவர்கள் இம்மாதிரி விஷயங்களில் வழக்கை நடத்த தயாராக இல்லை, அல்லது தவறு செய்பவர்களுக்கு உடந்தையாக இருப்பதால் அரசு வழக்கில் வெற்றிபெற முடியவில்லை. ஆகவே, தவறுசெய்தது எங்கேயாவது வழக்குகளில் அரசுக்கு

[திரு. க. பாரமலை] [1987 ஏப்ரல் 30

தோல்வி ஏற்பட்டால், அரசுக்கு எதிராக தீர்ப்பு வந்தால் அதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிவதோடு உடந்தையாக இருப்பவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மற்ற துறைகளைப் பொறுத்தமட்டிலும் அங்கும் இங்கும் சில தவறுகள் நடக்கக் கூடும். ஆனால் இந்தத் துறையிலே எங்கேயும் எந்தவிதமான ஒழுக்கக் கேடும் நடக்கக் கூடாது. மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயிலை எடுத்துக் கொண்டால் கலைக் கண்காட்சி என்கிற பெயரில் வசூல் செய்தார்கள். ஒரு நாளைக்கு 100 ரூபாய், 200 ரூபாய் என்கிற வீதத்தில் வசூல் செய்தார்கள். அங்கே இந்த வசூலில் மட்டும் கிட்டத்தட்ட 1 லட்சம் ரூபாய் மோசடி நடந்திருக்கிறது. இவ்வளவு பெரிய தொகை அங்கே கையாடல் செய்யப்பட்டதற்கு அதிகாரிகளுடைய மெத்தன போக்குதான் காரணம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். அது உண்மையாக கண்டுபிடிக்கப்பட்டால், அந்த ஒழுக்கக் கேட்டை, சீர்கேட்டை செய்ய காரணமாக இருந்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையிலே இருக்கின்ற நிலங்களைப் பொறுத்தவரையில், புறநகர் பகுதியிலே இருக்கிற இடங்களை 99 ஆண்டுகளுக்கு நீண்ட கால குத்தகைக்கு விட்டிருப்பது பற்றி சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு சென்னை நகரிலும், புறநகர் பகுதியிலும் இருக்கின்ற நிலங்களில் மதிப்பு பல மடங்கு உயர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அதற்கு ஏற்றாற்போல குத்தகை தொகையையும் உயர்த்தி அவர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டுமென்று நாம் சொல்கிற நேரத்தில் அதிலே, சட்டத்திலே சிக்கல் இருக்கிறது என்று இங்கே சொன்னாலும் கூட அதற்கும் வழிவகை கண்டாக வேண்டும். காரணம் இன்றைக்கு திருப்புவனத்தை எடுத்துக்கொண்டாலும் கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள நிலங்களை எல்லாம் மிகக் குறைந்த குத்தகைக்கு, நீண்ட காலத்துக்கு, 99 வருடங்களுக்கு விட்டிருக்கிறார்கள். இந்த நிலங்களை எல்லாம் எடுத்து, இன்றைய மார்கெட் விலைக்கு ஏற்ப, குத்தகையை நிர்ணயித்து வசூலித்தால் அரசுக்கு கோடிக்கணக்கான வருவாய் கிடைக்கும்.



1987 ஏப்ரல் 30] [திரு. க. பாரமலை]

இன்றைக்கு இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக் கூட முடியாத நிலையில் கோயில்கள் பொருளாதார நிலை இருக்கிறது என்று சொல்லுகிற நேரத்தில் நான் சொல்லியுள்ள இந்த கோரிக்கை குறித்தும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருப்புவனத்தை எடுத்துக்கொண்டால், 5 இடங்களில், பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இன்றையதினம் தனியாரிடத்தில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் நீங்கள் திரும்ப எடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சரவர்கள் இந்த ஆலய வழிபாடு சம்பந்தமாக குறிப்பைச் சொல்லியிருக்கிறார்கள். சுதந்திரம் பெற்ற நாளன்று ஒவ்வொரு கோயிலிலும் சிறப்பு வழிபாடு செய்து தாழ்த்தப்பட்ட மக்களையும் அங்கே கொண்டு வந்து சேர்த்து சமபந்தி போஜனம் செய்து கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட இந்த நேரத்திலே நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட கோயில்களிலே இன்றைக்குத் தர்மகர்த்தாக்கள் இல்லை. அவைகளுக்குத் தக்கார் என்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகமெங்கும் தக்கார்களைப் பார்த்தால் எங்கோ ஒரு சில இடங்களிலே தவிர, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த யாரும் தக்காராக வருவதற்கு வாய்ப்புகள் இல்லை. குறிப்பாகப் பெரிய கோயில்களிலே யாரும் இல்லை என்றுகூடச் சொல்ல முடியும். ஆகவே, நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட விழாக்கள் நடக்கின்ற காலத்தில் மிகப்பெரிய கோயில்கள்—நாட்டிலே அடையாளம் காட்டக்கூடிய மிகப்பெரிய கோயில்களிலே ஒரு சில கோயில்களிலேயாவது தாழ்த்தப்பட்ட மக்களை அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

வனத் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மரங்கள் அழிக்கப்படுவது மழை குறைவாக இருப்பதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த இருபது அம்சத் திட்டத்திலேகூட மர வளர்ச்சிக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கப்

[திரு. க. பாரமலை] [1987 ஏப்ரல் 30

பட்டிருக்கிறது. இதை அடிப்படையாக வைத்துக்கூட 1987—88 ஆம் ஆண்டு 9.4 கோடி மரக் கன்றுகளை நடுவதற்குத் திட்டமிட்டிருக்கிறது என்று கூட அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்களுடைய வைகையாற்றிற்குத் தண்ணீர் ஆதாரம் தருகின்ற வருஷநாடு மலையிலேயிருக்கின்ற காடுகள் அழிக்கப்பட்டு அங்கே விவசாய நிலமாக ஆக்கப்பட்ட காரணத்தினாலே தான் அங்கே மழை குறைந்து எங்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல், எங்கள் பகுதி வறட்சி நிலங்களாக இன்றைக்குக் காட்சியளித்துக் கொண்டு இருக்கின்றன. கடந்த நான்கு வருடங்களாகத் தொடர்ந்து எங்கள் பகுதியிலே விளைச்சல் இல்லை என்று சொன்னால் அதற்கு மழை பொழிவதற்கு மரம் இல்லை என்பதுதான்; மரங்கள் வெட்டப்படுவது அதற்கு ஒரு காரணம். ஆகவே, நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அமைச்சரவர்கள் அங்கேயிருக்கிற ஆக்கிரமிப்புகளை அகற்றி அவற்றில் மரங்களை வளர்ப்பதற்கு திட்டமிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய வனச் சட்ட கழகத்திலே, ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் தொகுதியிலே இருக்கின்ற முந்திரி மரங்கள் நவம்பர் மாதத்தில் ஏலம் விடப்படுகின்றன. இருக்கின்ற பலனை எதிர் பார்த்து ஏலம் எடுக்கின்றார்கள். அங்கேயிருக்கின்ற விவசாயிகள் தான் அந்த ஏலத்தை எடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், ஏப்ரல் மாதத்திலே பலன் வருகின்றபொழுது சில நேரங்களிலே எதிர்பார்த்த பலன் கிடைப்பதில்லை. ஆனாலும் அந்த விவசாயிகள் வணிக வரித் துறைக்கு வரி கட்ட வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்று சொல்லப் படுகிறது. ஆகவே, அதைப் பொறுக்கியெடுக்கின்ற இந்தப் பொறுப்பைக் கழகமே செய்யுமானால் அவர்களுக்கு வரி கிடையாது. அதுவே விவசாயிகளாக இருப்பார்களேயானால் வரி கொடுக்க வேண்டுமென்று சொல்கிற அந்த நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 30] [திரு. க. பாரமலை]

வன மேம்பாட்டுக் கழகம் ஒன்றை அமைக்க வேண்டும். அகில இந்திய National Commission on Agriculture ஒரு சிபார்சு செய்திருக்கிறது. அந்த அடிப்படையிலே பலயிடங்களில் ஒரு Autonomous Forest Development Corporation அமைக்கப் பட்டிருக்கிறது பல மாநிலங்களிலே. அந்த அளவிற்கு இதற்கென்று தனியாக ஒரு வன மேம்பாட்டுக் கழகம், ஒரு தன்னுரிமை பெற்ற, தன்னாட்சி பெற்ற வன மேம்பாட்டுக் கழகம் அமைக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு இந்த வனத் துறையிலே ஏறக்குறைய நான்கு கோடி ரூபாய் தேவைக்கு அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதிலே Regeneration of Forest என்ற தலைப்பின்கீழ் 1985—86 ஆம் ஆண்டிலே கொடுக்கப்பட்டிருந்த அந்த ரேட்—அந்த விகிதத்திற்கும் 1986-87 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட விகிதத்திற்கும் மத்தியிலே ஏறக்குறைய நான்கு கோடி ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருப்பதாக ஒரு குறிப்பு வந்திருக்கிறது. அதை அறிந்த Chief Conservator of Forest அவர்கள் 1987—88 ஆம் ஆண்டுக்கு அந்த 1985—86 ஆம் ஆண்டுக்கான அந்த விகிதத்தைத்தான் கடைப்பிடிக்க வேண்டும். காரணம், 1986—87-லே தேவைக்கு அதிகமாக, நடைமுறைக்கு அதிகமாகப் பணம் கொடுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது உண்மையென்றால் இப்படிப்பட்டதற்குக் காரணமாக இருக்கின்றவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோரிக்கை எண்கள் 12, 25, 45, 47 மற்றும் 56 ஆகியவைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த விருத்தாசலம் தொகுதி உறுப்பினர் தியாகராசன் அவர்கள் முதற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள் வரையில் பல்வேறு மானியங்களைப்பற்றி, பல்வேறு தரப்பிலேயிருந்து பல்வேறு கட்சிகளைச் சார்ந்த

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 30

உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். முதலில் இந்து சமய அறநிலையத் துறையைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-50)

இந்து சமய அறநிலையத் துறையில் 1975-76 ஆம் ஆண்டு 20,246 திருக்கோயில்கள் இருந்தன; அன்றையதினம் கிடைத்த வருமானம் 11.69 கோடி ரூபாய் ஆகும். 1986-87 ஆம் ஆண்டில் 26,033 திருக்கோயில்கள் அறநிலையத் துறையில் இருக்கின்றன; இப்போது கிடைக்கின்ற வருமானம் 25.98 கோடி ரூபாய் ஆகும். இது கிட்டத்தட்ட இரண்டு மடங்குக்குமேல் வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் கோவில் வருமானம் அர்ச்சனை மூலமாகவும் இதர வகையிலும் அதிகமாகி இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காக நான் இதை அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கோவில்கள் வருமானம் எப்படி இருக்கிறது என்பதையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திருக்கோவில்களைப் பொறுத்தவரையில் பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவில் மூலமாக 1975-76 ஆம் ஆண்டில் கிடைத்த வருமானம் 32,64,907 ரூபாய் ஆகும். ஆனால் 1985-86 ஆம் ஆண்டில் கிடைத்த வருமானம் 3,14,55,930 ரூபாய் ஆக இருக்கிறது. அதைப்போன்று திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் வருமானம் 1975-76 ஆம் ஆண்டில் 31,49,836 ரூபாய் ஆகும். ஆனால், 1985-86 ஆம் ஆண்டில் கிடைத்த வருமானம் 1,33,64,567 ரூபாய் ஆகும்.

மதுரை கோவில் வருமானம் 1975-76 ஆம் ஆண்டில் 31,79,527 ரூபாய்; 1985-86 ஆம் ஆண்டில் அதனுடைய வருமானம் 74 இலட்சத்துச் சொச்சமாகும். அதைப்போன்று திருத்தணி கோவில் வருமானம் 1975-76 ஆம் ஆண்டில் 24 இலட்சம் சொச்சம்; ஆனால் 1985-86 ஆம் ஆண்டில் 90 இலட்சத்துச் சொச்சமாகும். கருமாரியம்மன் கோவில் வருமானம் 1975-76 ஆம் ஆண்டில் 24 இலட்சத்துச் சொச்சம்; ஆனால் [illegible] ஆம் ஆண்டில் 59 இலட்சத்துச் சொச்சமாகும்.



1987 ஏப்ரல் 30] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

அதைப்போன்று, திருவரங்கம் அரங்கநாத சுவாமி கோவில் வருமானம் 1975-76 ஆம் ஆண்டில் 20 இலட்சத்துச் சொச்சம்; 1985-86 ஆம் ஆண்டில் 48 இலட்சத்துச் சொச்சமாக இருக்கிறது. இராமேஸ்வரம் சுவாமி கோவில் வருமானம் 1975-76 ஆம் ஆண்டில் 15 இலட்சத்துச் சொச்சம்; 1985-86 ஆம் ஆண்டில் 55 இலட்சத்துச் சொச்சமாகும். கள்ளழகர் கோவில் வருமானம் 1975-76 ஆம் ஆண்டில் 7 இலட்சம் ரூபாய்; 1985-86 ஆம் ஆண்டில் 26 இலட்சத்துச் சொச்சமாக இருக்கிறது.

அதைப்போன்று கபாலீஸ்வரர் கோவில் வருமானம் 1975-76-ல் 8 இலட்சத்துச் சொச்சம்; 1985-86 ஆம் ஆண்டில் 31 இலட்சத்துச் சொச்சமாகும். வடபழனி ஆண்டவர் கோவில் வருமானம் 1975-76-ல் 7 இலட்சத்துச் சொச்சம்; இப்போது 27 இலட்சத்துச் சொச்சமாக இருக்கிறது. சுவாமிநாத சுவாமி கோவில் வருமானம் 1975-76-ல் 5 இலட்சத்துச் சொச்சம்; இப்போது 14 இலட்சத்துச் சொச்சமாகும். இந்த அளவுக்கு திருக்கோயில்களின் ஆண்டு வருமானம் அதிகமாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோவிலின் வரவு-செலவு கணக்கு விவரங்கள் தணிக்கை மூலம் பெறப்படுகின்றன.

அதைப்போன்று 1985-87 ஆம் ஆண்டில் உள்ள குத்தகைப் பாக்கி 37.20 கோடி ரூபாய் ஆகும். இந்த பாக்கியை வசூல் செய்வதற்கு ஏற்கெனவே தடை இருந்தது. வெள்ள நிவாரணம், வறட்சி நிவாரணம் போன்ற பல்வேறு காரணங்களால் பாக்கியை வசூல் செய்யக் கூடாது என்பதால் வழக்கு போட முடியாமல் [illegible]. இப்போது அந்த தடை இல்லை. எனவே சம்பந்தப்பட்ட திருக்கோவில் நிர்வாக அறங்காவலர்கள் வசூல் செய்ய வழக்குப் போடலாம். ஆனால் இந்த குத்தகைப் பாக்கியை எப்படி வசூல் செய்யலாம் என்பதற்கு எப்படி சட்டத்தைத் [illegible]துவது என்பதுபற்றி இன்னும் அரசு ஆய்ந்துகொண்டிருக்கிறது. அதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து பேசி, வருகின்ற தொடர் கூட்டத்தில் அவைக்கு அறிவிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் வருமானம், 1980-ல் குத்தகை நிலங்களுக்கு ஓரளவு குத்தகையை உயர்த்தியதால் 6,21,518 ரூபாய் அதிகமாகியிருக்கிறது. அதைப்போன்று தரிசு நிலத்தில் கட்டடங்கள் கட்டி [illegible] விட்டதன் மூலமாக கிடைத்த வருமானம் 43,217

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 30

ரூபாய் அதிகமாகி இருக்கிறது. அதைப்போன்று ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டு, அதிலிருந்து குத்தகையாக வசூல் செய்ததன் மூலம் கிடைத்த வருமானம் 78,[illegible]62 ரூபாய்.

சென்னை மாநகரில் நீண்டகாலமாக சுமார் 7 கோவில்களின் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன. 100 ஆண்டுக்கு என்று மிகக்குறைந்த குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன. அதைக் கணக்கிட்டுப் பார்த்தால் தோராயமாக தற்போது வருகிற வருமானம் (வாடகை மூலம்) 7,932 ரூபாய் 99 பைசாதான். ஆனால் நியாயமாக வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்ற தொகை 1,33,51,767 ரூபாய் ஆகும். இவைகளுக்கு செக்ஷன் 33-ன் கீழ் ஒரு திருத்தம் கொண்டு வந்து, 100 வருடம் குத்தகை என்பதை 5 வருடத்திற்குமேல் குத்தகைக்கு விடக்கூடாது என்று சட்டம் கொண்டுவந்து, 100 வருடமாக இருந்து கொண்டு ஏகபோகமாக இருக்கிற குத்தகையினால் கோவிலுக்கு வருமானம் வராமல் முடக்கி வைத்திருப்பதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நம்முடைய, மாண்புமிகு இந்து முன்னணி உறுப்பினர் அவர்கள் இல்லாததை இருப்பதாகவும், காலே இல்லாமல் புதிதாகக் காலை வைத்ததாகவும் இங்கே கொள்கைக் குறிப்பில் சொன்னதாகச் சொல்லி இருக்கிறார்கள். அப்படி நாங்கள் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்து ஒரு மாதச் சம்பளம் ஆலயப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட விவரம் பற்றிக் குறிப்பிட்டார்கள். முதுநிலைக் கோயிலிலே உள்ள பணியாளர்களுக்கு ஒரு மாதச் சம்பளம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் க்ரூப் இன்சூரன்ஸ் திட்டத்தில் யாருக்கும் எதுவும் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். க்ரூப் இன்சூரன்ஸ் திட்டத்தைப் பொறுத்தவரையில் எத்தனை பேருக்காகப் பரிந்துரை செய்யப்பட்டது. எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டது என்பன பற்றிய விவரங்கள் கொள்கைக் குறிப்பிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையில் க்ரூப் இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் 170 திருக்கோயில் பணியாளர்களின் குடும்பத்தினருக்காகப்



1987 ஏப்ரல் 30] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

பரிந்துரை செய்யப்பட்டு 126 பேர்களுக்கு ரூபாய் 5,000 வீதம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சுமார் 80 பேருக்காகப் பரிந்துரை செய்யப்பட்டு இன்சூரன்ஸ் கம்பெனிக்கும், அறநிலையத்துறைக்கும் கடிதப் போக்குவரத்து இருப்பதன் காரணத்தால் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இன்சூரன்ஸ் கம்பெனிக்கு நாம் கொடுக்கிற பணம், இன்சூரன்ஸ் கம்பெனி நமக்குக் கொடுக்கிற பணம் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நாம்தான் அதிகமான பணத்தை இன்சூரன்ஸ் கம்பெனிக்குக் கொடுக்கிறோம். எனவே அது கஷ்டமாகிறது என்பதை முடிவு செய்து எற்கெனவே 5 கோடி ரூபாயை வைப்பு நிதியாக வைத்து அறநிலையத்துறையிலே உள்ள ஊழியர்களுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் பல்வேறு நல்ல பணிகளைச் செய்கிற திட்டத்தின்கீழ் நேரடியாக—இன்சூரன்ஸ்-க்குக் கொடுக்காமலேயே, அதை மாற்றியமைத்து—உடனுக்குடன் ஆலய ஊழியர்களுக்கு பணம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலயங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மூடப்பட்டிருப்பதாக இங்கே சொன்னார்கள். அவை வேண்டுமென்றே தான் மூடப்பட்டன. அதாவது இந்த ஆட்சிக்காலத்தில் ஏதாவது கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்டது.

பல ஆண்டுகளாக இருந்துவந்த, ஆலயங்களிலே உள்ள ஆலயப் பணியாளர்களின் சம்பள விகிதத்தைத் திருத்தி சுமார் 24 இலட்சம் ரூபாய்க்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது கிடைக்கப் பெறாதவர்களுக்கு கருணைத் தொகையாக ரூ. 200 வீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டுமே கிடைக்காமல் சில ஆலயப் பணியாளர்கள் தங்களுக்கும் சம்பளங்கள் வேண்டும். சலுகைகள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைத் தனியாக இந்தத் துறை ஆய்வு செய்து அதற்கான பரிகாரத்தைத் தேடும். புரட்சித்தலைவரின் ஆட்சியில்தான் 500 கோடி ரூபாய் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு, ஒரு கால பூஜை கூட இல்லாத கோயில்களுக்கெல்லாம் பூஜை [illegible]வேண்டுமென்ற முறைப்படி இதுவரையில் ஒரு கால பூஜை [illegible]தற்காக 1,367 கோயில்களுக்கு 5,000 ரூபாய் வீதம்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 30

கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் 1,206 கோயில்களுக்கு ஒரு கால பூஜைக்காகப் பணம் கொடுக்க வேண்டும் என்று விண்ணப்பம் வந்திருக்கிறது. தினம் பூஜைக்கு 10 ரூபாய் விதம் மாதத்திற்கு 300 ரூபாய் விதமும், அர்ச்சகர்களுக்கு 100 ரூபாய் விதமும் தருகிற வகையில் 5,000 ரூபாய் இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப் படுகிறது.

கிராமப்புறக் கோயில்களுக்குத் திருப்பணி செய்ய வேண்டும் என்ற வகையில் ஒரு கோடி ரூபாயை வைப்பு நிதியாக வைத்து அதிலே இருந்து வருகிற வட்டியிலிருந்து 194 கிராம கோயில் களுக்குத் திருப்பணி செய்வதற்காகப் பணம் கொடுக்கப்பட்டிருக் கிறது.

ஒரு கோடி ரூபாயை வைப்பு நிதியாக வைத்து 5,551 கோயில் களிலே உள்ள 2,430 ஊழியர்களுக்கு 15.47 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

(பிற்பகல் 2.00)

சிலை திருட்டைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். எந்தெந்த பகுதிகளில் திருட்டு நடந்ததோ அவைகள் எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு வழக்கு மன்றத்திலே வழக்குகள் இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நேரம் நீட்டிக்கப்பெறு கிறது.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** கிட்டத்தட்ட களவு போன நகைகள் எல்லாம் கைப்பற்றப்பட்டதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.

பல்வேறு கோவில்களுக்கு இந்த ஆட்சியில் தான் கும்பாபி ஷேகம் நடந்தது என்பதை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் நன்றாகத் தெரிவித்திருக்கிறோம். மேலும் சிலபல கோவில் களுக்கு திருப்பணி நடத்த வேண்டும் என்று அதன் புராதன தன்மையை காண்பித்துச் சொன்னார்கள். அவைகள் [illegible] துறை குறிப்பேட்டில் குறிப்பு எடுத்துக் கொண்டு [illegible] அந்தந்த கோவில்களுக்கு திருப்பணி நடக்க [illegible] நடவடிக்கை எடுக்கும்.



1987 ஏப்ரல் 30] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

மடாதிபதிகள் சில பேர் ஆன்மீக வளர்ச்சியில் ஈடுபடாமல் கமண்டலம் ஏந்துவதற்கு பதில் கைத்துப்பாக்கி ஏந்திகொண் டிருக்கிறார்கள் என்றும் அதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே மடாதிபதிகள் நியமனத்தில் அதிகாரம் வேண்டும் என்றும் மடங்களுக்கு நிர்வாக அதிகாரி போடவேண்டும் என்றும் சட்டம் இயற்றப்பட்டு அந்தச் சட்டம் குடியரசுத் தலைவரிடம் ஒப்புதல் பெறாமல் அப்படியே இருக்கிறது. அந்தச் சட்டம் வந்தால் நிச்சயமாக நாம் அந்தச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கலாம். அந்தச் சட்டத்தைப் பற்றிக் கூட ஒரு விளக்கம். கேட்டு மத்திய அரசாங்கத்திலிருந்து வந்திருக்கிறது. அதற்கு விரைவில் பதில் அளித்து அந்த சட்டத்திற்கு இசைவு பெற அரசு நடவடிக்கை எடுக்கும்.

திருத்தணி ஷண்முகம் அவர்கள் திருத்தணியில் ஒரு ஷாப்பிங் காம்பிளக்ஸ் வேண்டுமென்று கேட்டார்கள். அது திட்டளவில் இருக்கிறது. அமல் படுத்த வேண்டும். அதற்கு சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். கட்டிடப் பிரிவைச் சார்ந்தவர்களாக இல்லை என்று சொன்னார்கள். அது உண்மை. தற்போதுள்ள என்ஜினியர்களுக்குப் பதில் பொதுப் பணித் துறையில் கட்டிடப் பிரிவில் இருப்பவர்கள் நியமிக்கப்பட்டு விரைவில் எங்கெங்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டுமோ அவற்றை தயாரிக்க ஆணை இடப்பட்டு, கட்டிடங்கள் கட்ட விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காசி விஸ்வநாதர் சுவாமி கோவிலுக்கு ஏற்கெனவே நான்கு லட்சம் அரசு கொடுத்ததோடு அல்லாமல் இந்து சமய அற நிலையத்துறை உபரி நிதியாக வைத்திருக்கக் கூடிய தொகையி லிருந்து 37.5 லட்சம் ரூபாயை ஒதுக்கி இருக்கிறது.

உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களுக்கும், ஸ்ரீலங்கா, கலிபோர்னியா, சான் பிரான்சிஸ்கோ போன்ற வெளிநாடுகளுக்கும் கூட பணத்தைக் கொடுத்து ஆன்மீகத்தை வளர்க்க இந்த அரசு உதவி செய்திருக் கிறது.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 30

கோவில்களின் நகைகள் சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கு கிருஷ்ணசாமி ரெட்டியார் அவருடைய தலைமையில் ஒரு குழு போடப்பட்டு அந்தக் குழு ஸ்ரீரங்கம் கோவில், கபாலீஸ்வரர் கோவில் போன்ற கோவில்களில் சரி பார்த்து திருப்திகரமாக இருக்கிறது என்று பதில் அளித்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக காடு வளர்ப்பு பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். தேசிய அளவில் 24 சதவீதம் காட்டினுடைய வளர்ச்சிப் பகுதியில் இருக்கிறது. ஆனால் வல்லுநர்கள் கேட்பது மூன்றில் ஒரு பங்கு அதாவது 33 சதவீதம் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். தமிழ்நாட்டினுடைய காட்டு வளம் 17.25 சதவீதம் இருக்கிறது. ஆனால் அதை இரண்டு மடங்காக உயர்த்துவதற்கான நடவடிக்கை எல்லாம் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக காட்டுக்கு அப்பால் உள்ள இடங்களில் காடு வளர்ப்பதில் 1960-லிருந்து 1975-76 வரையில் 15 ஆண்டு காலத்தில் எவ்வளவு பயிரிடப்பட்டதோ அதை விட 4 மடங்கு அதிகமாக இந்த பத்தாண்டுக் காலத்தில் காடுகளை நாம் வளர்த்திருக்கிறோம். 1960-லிருந்து 75 வரையில் 15 ஆண்டுகளில் 64,429 ஹெக்டேர்தான் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. 10 ஆண்டுகளில் இரண்டு லட்சத்து 42 ஆயிரத்து 592 ஏக்கர்களில் மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநில சர்க்கார் மற்றும் மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் கொடுத்தார்களோ அதில் கிட்டத்தட்ட நான்கில் மூன்று பங்கை இந்த அரசு காடு வளர்ப்பதற்காக செலவு செய்திருக்கிறது என்பதை வனத்துறை சம்பந்தமான கொள்கைக் குறிப்பிலே பார்க்கலாம். சில இடங்களில் மரங்கள் வெட்டப்பட்டு விட்டன, அதனால் மழையில்லையென்று சொன்னார்கள். அதைக் கருத்தில் கொண்டு நீர்வள மேம்பாட்டுத் திட்டம் என்கிற திட்டத்தில் அண்ணா மாவட்டத்தில் 23.50 லட்சம் ரூபாய் செலவில் மரம் வளர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. இதனை **Water harvesting** என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்கள். அண்ணா மாவட்டத்தில் பரிட்சார்த்தமாக செய்த பிறகு தர்மபுரி, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களில் இந்த காடு வளர்ப்புத் திட்டம் அமலுக்குக் கொண்டு வரப்படும். இந்தியாவிலேயே முதல் முதலாக தமிழ்நாட்டில் நீர்பிடிப்பு நிலவளத் திட்டம் கொண்டு வரப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 30] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வைகை நீர்பிடிப்பு பகுதிகளிலும், மேட்டூர் ஸ்டான்லி நீர்பிடிப்புப் பகுதிகளிலும், காடு வளர்ப்பதற்கும், பொன்னையாறு நதிப்படுகையில் மண்வளப் பாதுகாப்பிற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் இரண்டாவது இடமாக கீழ் கடற்கரையோரப் பகுதியில் கடல் பசு (Dugong) என்று சொல்லப்படுகிற இனத்தை பாதுகாப்பதற்கு பல லட்ச ரூபாய் செலவில் ஒரு கடலுறை உயிரினப் பூங்கா வைப்பதற்கு நடவடிக்கையெடுக்கப் போகிறோம்.

உதகமண்டலத்தில் 'ஹை ஆல்டிடியூடில்' அந்த ஏரியாவை அழகுபடுத்தி ஒரு உயிரியல் பூங்கா வைப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்போகிறோம்.

இன்னொன்று மரங்கள் வளர்க்க வேண்டிய அவசியத்தை உணர்த்துவதற்காக முதல்முதலாக தமிழ்நாட்டில், இந்தியாவில் வேறெங்கும் இல்லாத அளவில் மாணவர்கள் மரம் வளர்ப்புத் திட்டத்தில் ஈடுபடுகிற ஒரு புதிய திட்டத்தை நாம் இப்போது அறிவித்து இருக்கிறோம். ஆறாவது ஸ்டாண்டர்டு முதல் ப்ளஸ் 2 வரையில் படிக்கிற மாணவ மாணவியர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது ஐந்து செடிகளை வளர்ப்பார்களானால் ஒரு ஆண்டிற்கு சுமார் ஒன்றரை கோடி செடிகள் வளர்ப்பதாக அமையும். கடைசியில் ப்ளஸ் 2 படித்து முடிக்கிற போது வெற்றி கரமாக அவர்கள் அந்த மரங்களை நட்டதற்கு விசேஷ மார்க் போடுகிற போது, தொழில் கல்லூரியில், பொறியியல் கல்லூரியில், மருத்துவக் கல்லூரியில் படிக்கிறபோது உதவும்படியாக இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

மரங்கள் வெட்டப்பட்டு வேறு இடங்களுக்கு கடத்தப் படுகிறது. இது கடுமையான குற்றம். பல வருடங்களாக இந்த குற்றங்கள் நடந்து வழக்குகள் எல்லாம் தேங்கியிருக்கின்றன என்று சொன்னார்கள். அதை உத்தேசித்து தனி வழக்குமன்றம் வேலூர் பகுதியில் ஏற்படுத்தி அந்த வழக்குகளை நிலுவையில் இருப்பதை விரைவில் விசாரித்து முடிப்பதற்கு நடவடிக்கையெடுக்க அரசு உத்தேசித்திருக்கிறது. அந்த விலையுயர்ந்த மரங்களை வெட்டுவதும், யானைத் தந்தங்களை அகற்றுவதுமான குற்றங்கள் அதிகமாகியிருப்பதால் அவற்றில் சம்பந்தப்பட்டவர்

களை குண்டர்கள் சட்டத்தின்கீழ் கொண்டு வந்து தண்டிப் பதற்கு ஜாமீனில் போகாமல் இருப்பதற்கு முதல்முதலாக தமிழக முதல்வர் அவர்கள் அந்தவகையில் ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். அது விரைவில் அமல்படுத்தப்படும் போது அதில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் கைது செய்யப்படுவார்கள்.

காடுகளில் உள்ள பல்வேறு பொருள்கள் சந்தன மரங்கள், 'பாம் புராடிஜூஸ்' என்று சொல்லப்படுகிற காட்டு வளப் பொருட்கள் வேப்பர் மற்றும் சில மூலப்பொருள்களாக உபயோகப்படுகிற பொருள்கள் ஆகியவை விற்கப்படுவதால் வருமானம் அதிகப்படுவதை கொள்கைக் குறிப்பில் உறுப்பினர்கள் பார்க்கலாம். இதனைப் பார்க்கும்போது நிச்சயமாக காட்டு வளத்தை நன்றாக பாதுகாத்து இருக்கிறோம் என்பது புலனாகும்.

அடுத்து சில உறுப்பினர்கள் தைல மரங்கள், யூகலிப்டஸ் மரங்கள் வளர்க்கக்கூடாது என்று சொன்னார்கள். அதுபற்றி இரண்டுவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. யூகலிப்டஸ் மரங்களை வளர்த்தால் பூமியில் உள்ள [illegible] அந்த மரங்கள் உறிஞ்சி விடுகின்றன என்று சொல்கிறார்கள். சில பேர்கள்

(பிற்பகல் 2-10)

இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழக அரசைப் பொறுத்தவரையில் இதுசம்பந்தப்பட்ட மரங்கள் வளர்க்கின்ற இடங்கள் 8 சதவீதம்தான். இந்த 8 சதவீதத்திற்கு மேல் இவைகள் மேற்கொண்டு வளர்க்கப்படாமல் நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

சின்கோனா தொழிலாளர்கள் பற்றி சொன்னார்கள். இதிலே கிட்டத்தட்ட வேலை செய்கிற எல்லோரும், ஆதி திராவிடர்களும், மலைவாழ் மக்களும், மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும்தான். அவர்களுக்கு அண்மையில் பொங்கல் பரிசாக ரூபாய் [illegible] கொடுக்கப்பட்டது. அவர்களுடைய சம்பளம் குறைவானது என்பதைத் துறை நன்றாக உணர்ந்து இருக்கிறது. இந்த சின்கோனா தொழில் சம்பந்தப்பட்ட சில பொருட்கள், அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சரியான





பொருளை ஈட்டாததினால், அதிலே அவர்களுக்கு எதிர்பார்த்த சம்பளம் கொடுக்க முடியாமல் இருந்தது. விரைவிலே சின்கோனா தொழிலாளர்களுக்குத் தேவையான எல்லா வீடுகளைக் கட்டித் தரவும், அவர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்கவும், இந்த சின்கோனாத் துறை லாபகரமாக இயங்குவதற்கும், தேயிலைத் தோட்டம் புதிதாகப் போடுவதற்கு அங்கே வாய்ப்பு இருந்தால், அதைப் போட்டு, அதிலே தற்காலிகமாக வேலை செய்துகொண்டிருப்பவர்களுக்கு வேலை கொடுப்பதற்கான ஒரு குறிப்பு ஆய்விலே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்தன மரங்களை வெட்டிய வகையில் சில பேர்கள், அலுவலகத்திலே இருக்கிற அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதிலே அதிகாரிகள் ஈடுபட்டாலும், ஒப்பந்தக்காரர்கள் ஈடுபட்டாலும், தனியார்கள் ஈடுபட்டாலும் அவர்களை சட்டம் விடுவதில்லை. வழக்கு மன்றத்திலே தேங்கியிருக்கிறது, குறிப்பாக 1972-ம் ஆண்டு போடப்பட்ட பெரிய வழக்கில், உயர்தர வன இலாக்கா அதிகாரிகள், ரேஞ்சர்கள் எல்லாம் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். ஒப்பந்தக்காரர்கள் எல்லாம் இருக்கிறார்கள். சென்னை உயர்நீதிமன்றத்திலே ஒரு தடவை வழக்கு நடந்து, உச்சநீதிமன்றத்திலே விசாரிக்கட்டும் என்று சொன்னதற்குப் பிறகு, உச்ச நீதிமன்றத்திற்கு போய், அங்கே நீண்டகாலம் அதை முடக்கி வைத்தார்கள். உச்ச நீதி மன்றத்திலே தீர்ப்பு கொடுத்த பிறகு, சென்னை உயர்நீதி மன்றத்திலே வந்து திரும்பியும்—அதிலே கிட்டத்தட்ட 40, 60 பேர்கள் குற்றம் சாட்டப்பட்டு இருப்பதால்—புதிதாக ஒருவர் வழக்கு போட்டு இப்போது தடை வாங்கியிருக்கிறார்கள். அந்தத் தடை நீக்கப்படவேண்டும் என்று நாம் இப்போது தீவிர முயற்சி எடுத்து இருக்கிறோம். இருந்தாலும் நம்முடைய சபை மூலம் உயர்நீதிமன்ற நீதிபதி அவர்களுக்கும், தலைமை நீதிபதி அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது, தடை கொடுத்தால், இதைப் போன்ற வழக்குகளில் பல்லாண்டுகாலமாக நிலுவையில் உள்ள வழக்குகளில்—ஒரே வழக்கு, ஒரே சீரியல் நெம்பர், அதிலே ஒவ்வொருவராக வழக்கு போடுவது என்றால், 60 வருடங்கள் கூட வழக்கு நடக்கலாம். எனவே இந்த நாட்டினுடைய நன்மையைக் கருதி, அந்த வழக்கிலே சம்பந்தப்பட்ட சந்தன

[மாண்புமிகு திரு. வி. வி. சாமிநாதன்] [1987 ஏப்ரல் 30

மரங்கள் மாத்திரம் 1 கோடி ரூபாய் பெருமானமுள்ள மரங்கள், தேங்கிக் கிடக்கின்றன, வாகனங்கள் கிட்டத்தட்ட 1 கோடி பெருமானமுள்ள வாகனங்கள் தேங்கிக் கிடக்கின்றன—ஆகவே உயர்நீதி மன்றம் தடை விதித்தாலும், அந்தத் தடையை உடனே நீக்கி, விசாரணை செய்ய உதவி செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரைப்படத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். திரைப்படத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், அல்லது அமைச்சர்கள் பற்றி விமர்சனம் செய்கின்ற படங்கள் வருகிறது, அதை எப்படித் தடை செய்யாமல் இருக்கிறீர்கள், அல்லது சென்சார் சர்டிபிகேட் கொடுத்தாலும் இந்த அரசு அப்படிப்பட்ட படங்களை காட்டுகிற தியேட்டர்களுக்கு ஏன் உரிமங்கள் வழங்கவேண்டும் என்று கேட்டார்கள். இதைப் பற்றி தனியாக ஒரு சட்டம்தான் போடவேண்டும். அப்படி நாம் போட்டால், சென்சார் செய்த ஒரு படத்தை அவர்கள் காட்டுவதற்கு உயர்நீதிமன்றத்திலே அல்லது வேறு கோர்ட்டுகளிலோ அவர்கள் தடை வாங்கிவிடுவார்கள். இருந்தாலும் திரைப்படம் எடுப்பவர்களை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன், ஒரு குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர் அல்லது அமைச்சர், அல்லது ஒன்றுக்கு மேற்பட்டு உள்ளவர்கள், இவர்கள் தங்களுடைய பதவியை துஷ்பிரயோகம் செய்து, ஏதாவது அநீதி இழைத்தார்கள் என்று சொன்னால், நிச்சயமாகச் செய்யலாம். ஆனால் பொதுவாக, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என்று சொல்வது சரியல்ல, குற்றம்புரிந்த உடனே ஒருவருக்கு போன் வருகிறது, போன் எங்கேயிருந்து வருகிறது என்று சொன்னவுடன், அது கோட்டையில் இருந்து வருகிறது என்று சொல்கிறார்கள். கோட்டையா, அப்படியானால் ஒரு அமைச்சர் போன் பண்ணுகிறார் என்று அதிலே வசனம் எழுதுகிறார்கள். இந்த ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்க வேண்டுமானால். ஜனநாயக அமைப்பைக் காப்பாற்ற வேண்டுமானால், திரைப்படத்திலே உள்ளவர்கள், இதுமாதிரி கதை எழுதுவதை நிறுத்த வேண்டும். குறிப்பிட்ட யாராவது ஒருவர் இருந்தால், அவருடைய பெயரை போட்டுக்கூட நடக்கலாம். இதை பற்றி பேச நாம் நேரிடையாக படத் தயாரிப்பாளர்களை சந்திக்கவேண்டும். படத்தயாரிப்பாளர்கள்.



1987 ஏப்ரல் 30] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

படத்தை திரையிடுபவர்கள் இவர்களை எல்லாம் கொண்ட ஒரு கூட்டத்தைக் கூட்டி மாண்புமிகு உறுப்பினர்களுடைய எண்ணத்தைச் சொல்லி, அதற்கு சரியான பரிகாரம் தேடலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய விழுப்புரத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் வீடியோ படத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு திரைப்படம் வெளிவந்தால், அதனுடைய வீடியோ கேசட்டுகளை வாங்கி உடனே போட்டுவிடுகிறார்கள். சினிமாவில் முதல் நாள் வருகிற படத்தை, இவர்கள் அதற்கு முதல் நாளே பார்த்துவிடுகிறார்கள் என்ற ஒரு உணர்ச்சி திரைப்படம் தயாரிப்பவர்கள் மத்தியிலே இருக்கிறது என்று சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திரைப்படம் தயாரிப்பவர்கள் அயல் நாட்டுக்கு உரிமையைத் தருகிறபோது தமிழ்நாட்டில் அல்லது இந்தியாவில் படம் என்றைக்கு வெளியிடப்படுகிறதோ அதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே அவர்கள் வெளியிட்டு விடுகிறார்கள். அதுதான் தவறு. 3 நாட்களுக்கு முன்பு வெளியிட்டு விடுவதால் அவர்கள் மிக அருமையாக, தமிழ்நாட்டில் 'படம் தயாரிப்பவர்கள் இந்தியாவில், படம் தயாரிப்பவர்களைவிட அழகாக வண்ணத்திலே தயாரித்து அவர்கள்தான் விநியோகிக்கிறார்கள். ஆகவே திரைப்படம் தயாரிப்பவர்களும் 3 நாட்களுக்கு முன்பு அயல் நாட்டுக்கு உரிமை தருகிறேன் என்ற வகையில் கொடுக்கக் கூடாது. அவைகளையும் நாம் மனதிலே கொள்ள வேண்டும். திரைப்படத் தொழில் நன்றாக வளரவேண்டும். திரைப்படம் வெளியிடுவதால் உள்ளாட்சித் துறைக்கு அதிகமான வருமானம் வருகிறது என்பதை இந்த அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. அதற்குப் போடப்பட்ட வரியைப் பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டார்கள். திரைப்படம் வெளியிடுபவர்கள் சங்கத்தின் சார்பிலேயிருந்துகூட அந்த மாதிரி வந்திருக்கிறது. அதுபற்றி துறை ஆய்ந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலாத்துறையைப் பொறுத்த வரையில் இந்தத் துறையை ஒரு தொழிலாக, இண்டஸ்டிரியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலிருந்து நல்ல வரவேற்பு இருந்து கொண்டிருக்கிறது. தற்காலிகமாக "வார் மெமோரியல்" என்று

சொல்லப்படுகின்ற இடத்திற்குப் பக்கத்திலே உள்ள தீவுத் திடலில் நடத்துகின்ற பொருட்காட்சி இந்தியாவிலேயே அதிக நாள் பார்க்கப்படுகிற பொருட்காட்சியாகும். அதுவும் வியாபகமாக நடந்துகொண்டிருக்கிறது. அதை நிரந்தரமாக ஆக்க வேண்டுமென்ற முறையில் அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டு செய்திருக்கிறார்கள். இன்னும் ஒரு ஆண்டு அல்லது 3 ஆண்டுக் காலத்திற்குள் தொடர்ச்சியாக ஒரு நிரந்தர கண்காட்சி சாலையை தமிழகத்தின் தலைமையிடத்தில் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய சுற்றுலாத்துறை ஹோட்டல்களில் வேலை செய்கிற பல்வேறு பணியாளர்களுக்கு சம்பள விகிதம் திருத்தியமைக்கப்பட்டு அரசு அலுவலர்களைப் போல எல்லாவிதமான சலுகைகள் கொடுப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். மத்திய அரசு, தமிழக அரசுக்கு சுமார் 10 கோடி ரூபாயை இந்த சுற்றுலாத் துறையை வளர்ப்பதற்காக உதவி செய்து இருக்கிறார்கள். இந்த நேரத்திலே மத்திய அரசுக்கு தமிழக அரசின் சார்பில் நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் அந்தந்த மாவட்டங்களில் நீர்வீழ்ச்சியாக இருந்தாலும், மலைவாழ் ஸ்தலமாக இருந்தாலும் அல்லது சில முக்கியமான புராதன கோயில்கள், புகழ்பெற்ற கோயில்களாக இருந்தாலும் அவைகளையெல்லாம் அபிவிருத்தி செய்வதற்குத் திட்டங்களைத் தயாரித்து அமைக்க வேண்டுமென்றும், சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை, மாவட்டத்தில் உள்ளவர்களை கலந்து கலெக்டர்களை அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி அந்தக் கருத்தின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்தத் துறை முயலும்.

உதகையிலுள்ள ஏரியைப்பற்றிச் சொன்னார்கள். அந்த ஏரியை மிகவும் அழகுபடுத்தவும், அங்கே போட்டுகள் போன்றவற்றைக் கட்டவும் சுற்றுலாத்துறை முயன்று கொண்டிருக்கிறது.





உதகையில் டி.வி. ஸ்டேஷன் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் உச்சி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அங்கே டி.வி. ஸ்டேஷன் வரவேண்டுமென்று ஏற்கெனவே மைய அரசுக்கு தன்னுடைய பரிந்துரையை இந்த அரசு அனுப்பி இருக்கிறது. ஒரு வருட காலத்திற்குள் அவர்கள் கட்டுவார்கள் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம். அரசு தொடர்ந்து அவர்களுக்குக் கடிதம் எழுதி நினைவுபடுத்தும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தித் திரைப்படத்தைப் பொறுத்தவரையில், ஜி. கே. ரெட்டி அவர்கள் ஒரு அறிக்கையை, செய்தி மற்றும் விளம்பர இலாகாவில் ஒரு பயிற்சி அளிப்பதற்கு ஏற்கெனவே உள்ளவர்களுக்குப் பயிற்சியும், அப்படி இல்லாதவர்களுக்கு அடிப்படைப் பயிற்சியும் தற்போது உள்ளவர்களுக்கு புதிதாக தொடர்ந்து பயிற்சி அளிக்கவும், ஒரு நல்ல மையமாக ஏற்படுத்துவதற்கு அவர்கள் ஒரு அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதற்கு சுமார் 7 லட்சம் ரூபாய் செலவு ஆகும். அந்த அறிக்கை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இசைவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இசைவைப் பெற்று அந்தப் புதிய 'மாஸ் கம்யூனிகேஷன் இன்ஸ்டிடியூட்' என்பதை தமிழ்நாட்டில் ஏற்படுத்தி, அது ஏற்படுமானால் இந்தியாவில் வேறு எங்கும் அப்படி ஒரு பயிற்சி நிறுவனம் இல்லை என்பதைப்போல அதை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைக்கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப்பெற்றுக் கொண்டு, காரணம் வெட்டுத் தீர்மானங்களில் கொடுத்த பொருள்கள் நீங்கள் சொன்ன வேண்டுகோளையெல்லாம், சம்பந்தப்பட்ட துறைகளெல்லாம் கவனத்தில் கொண்டு அவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும் என்று கூறிக்கொண்டு என்னுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-20)

திரு. வை. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல்வேறு ஆலயங்களில் பணி புரிகின்ற ஊழியர்களுக்கு எல்லாம் மாதம் தோறும் ஒழுங்காக

ஊதியம் கிடைக்கின்ற வகையில் வருமானம் வருகின்ற திருக்கோவில்களில் இருக்கின்ற வருமானத்திலே ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை எடுத்து ஒரு பொது நிதி அமைத்து அதிலிருந்து அவர்களுக்கு ஊதியம் கொடுக்கவேண்டும் என்று கேட்கப்பட்ட போது நேற்று அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆலயத்திற்கும் வருமானம் சரியாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய கொள்கை குறிப்பில் அப்படி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நேற்று அமைச்சர் அவர்கள் சொன்ன காரணம் இன்றைக்கு அது மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த பொது நிதி அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு பொது நிதி ஆலய ஊழியர்களுக்கு என்று இருக்கிறது. அதுவும் மாண்புமிகு நம்முடைய சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஆலய ஊழியர்கள் சங்கம் ஒன்று இருக்கிறது. அவர்கள் காலையில் எனக்கு மனு கொடுத்து இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் நிச்சயமாக ஆராய்ந்து அப்படி பொது நிதி வைத்தால் தான் அவர்களுடைய குறையை போக்க முடியும், தேவைகளை நிவர்த்தி செய்ய முடியும் என்றால் அதற்கு நிரந்தர வைப்பு நிதி வைக்கப்படும்.

**திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தியேட்டர்கள், டெம்பரரி தியேட்டர்கள் போன்றவைகளுக்கு அரசினுடைய லைசன்ஸ் வழங்குவதற்கு அனுமதியை கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் தற்போது வீடியோ தியேட்டர் ஓப்பன் செய்வதற்கு தென் இந்திய வர்த்தகர் வீடியோ சங்கம் என்ற ஒரு அமைப்பை வைத்துக்கொண்டு ஆங்காங்கே தியேட்டர் கட்டுகிறோம் என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வீடியோ தியேட்டர்களை கட்டுவதற்கு அரசு அனுமதி அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வீடியோ தியேட்டர் கட்டுவதற்கு சில நிபந்தனைகள் வைத்து அனுமதி





வழங்கலாம் என்று அதில் இருக்கிறது. இது கொள்கை பிரச்சினை. தியேட்டர்களில் சரியாக வருமானம் வராமல் அது நஷ்டத்தில் ஓடுமோ என்ற ஐயம் இருக்கிறபோது இதை தொடர்ந்து நாம் அனுமதிக்கலாமா என்பது கொள்கை முடிவு. தவிர ஏற்கனவே நாம் வீடியோ சம்பந்தமாக கொண்டு வந்த சட்டத்திலே சில நிபந்தனைகளை வைத்து இருக்கிறோம். அந்த நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டால் அதற்கு உரிமை கொடுக்கலாம்.

**திரு. எம். செல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவில்களில் பணி புரியக்கூடிய ஊழியர்களுக்கு சம்பளம் குறைவாக இருப்பதால் பல தவறுகள் நடைபெற வாய்ப்பு இருக்கிறது. உதாரணமாக குத்தகைகள் எல்லாம் வசூல் செய்வதற்கு அவர்கள்தான் போகிறார்கள். குத்தகைதாரர்களிடம் பேரம் பேசிக் கொண்டு குத்தகையை சரியாக வசூல் செய்யாமல் அதனால் குத்தகை பாக்கிகள் அதிகமாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்த கோவில் ஊழியர்களுக்கு எல்லாம் அதிகமாக சம்பளம் கொடுப்பதற்கு ஆவன செய்வீர்களா? இந்த கோவில் நிலங்களில் குத்தகை சாகுபடி செய்பவர்களுக்கே சொந்தமாக ஆக்கக்கூடிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அது அரசின் ஆய்வில் இருக்கிறது. பல்வேறு கோணங்களில் அதை நாம் ஆய்ந்து கொண்டிருக்கிறோம். ஆலய ஊழியர்கள் பற்றி நிச்சயமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு பரிகாரம் தேட நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக காடு வளர்க்கிற வகையில் பஞ்சாயத்து யூனியன்களில் ஆர்.எஸ். பதி மரத்தை ஆங்காங்கு இருக்கிற கிராமங்களில் வளர்க்கக்கூடாது என்று முன்னால் ஒரு தடை விதிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இப்போது மறுபடியும் வறட்சி இருக்கிற இந்த நிலையில் ஆங்காங்கு ஆர்.எஸ். பதி மரம்

[திரு. துரை. கோவிந்தராசன்] [1987 ஏப்ரல் 30

சமூக காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வளர்க்கலாம் என்று ஒரு அனுமதி வழங்கி இருப்பதாக சொல்லப்படுகிறது. அப்படி வழங்கப்படுமானால் அந்தப் பகுதியில் இருக்கிற கிணறுகள் அல்லது மற்ற மரங்கள் வளர முடியாத சூழ்நிலை இருக்கும் என்பதை அறிந்து அந்த ஆர். எஸ். பதி மரத்தை மேலும் வளர்க்காமல் இருக்க அரசு தடை விதிக்குமா என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். ஏற்கனவே இருந்த இடங்களைத் தவிர வேறு இடங்களில் இந்த யூக்கலிப்டஸ் மரம் வளர்க்கக்கூடாது என்பது தான் அரசின் கொள்கை ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிர்வாகம்.

திருவாளர்கள் கே. சுப்பராயன் மற்றும் மெ. ஆண்டி அம்பலம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,48,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



1987 ஏப்ரல் 30] [பேரவைத் துணைத் தலைவர்]

**கோரிக்கை எண் 25—சின்கோனா.**

திரு. கே. சுப்பராயன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

திரு. எஸ். என். இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,70,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 45—காட்டுவளத்துறை.**

திரு. கே. சுப்பராயன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,58,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது. கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.**

**திருவாளர்கள்** கே. சுப்பராயன், சோ. மா. இராமச்சந்திரன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,45,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

**திருவாளர் கே. சுப்பராயன்** அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள **கேள்வி**:

"மானியக் கோரிக்கை எண் 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,60,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 4—5—1987 (திங்கட்கிழமை) காலை 10.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.26 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

87. ஈரோட்டில் நகரப் பேருந்துகளாக ஓடிக்கொண்டிருக்கும் மோட்டார் வண்டிகள் தொடர்பாக ஏற்பட்ட இழப்புத் தொகையான 98,820 ரூபாய்க்கான வரியினை தள்ளுபடி செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 7—1—1987-ஆம் நாளிட்ட 42 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

88. பாண்டிச்சேரியைச் சுற்றியுள்ள தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அதிகார வரம்பெல்லைக்குட்பட்ட மூன்று சோதனைச் சாவடிகளுக்கான செயல்பாட்டினைக் கவனிக்கும் பொறுப்பினை விழுப்புரம் உதவி ஆணையருக்கு (செயல்படுத்தும் பிரிவு) வழங்குவது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைத் துறையின் 30—1—1987 ஆம் நாளிட்ட 78 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

89. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 11—12—1986 ஆம் நாளிட்ட 3436 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

200. கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

201. கோரிக்கை எண். 25—சின்கோனாத் துறைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

202. கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை மற்றும் கோரிக்கை எண். 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

203. கோரிக்கை எண். 47—செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

204. கோரிக்கை எண். 47—சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்)

205. சின்கோனாத் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1987-88. (ஆங்கிலம்)

206. சின்கோனாத் துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு-செலவுத் திட்டம், 1987-88. (ஆங்கிலம்)

207. வனத் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1987-88. (ஆங்கிலம்)

208. 'பொது பணித்துறை பணிகள் பற்றிய அறிக்கை. (தமிழ்)

209. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை).



## இணைப்பு I.

(38-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண். 12.

### தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

### 1987—88.

அறிமுகம் :

1925 ஆம் ஆண்டுக்கு முன் இந்து சமய அறநிலையங்கள் மற்றும் கட்டளைகள் நிர்வாகத்தைப் பொறுத்து பல செயல் முறைகள் அமுல்படுத்தப்பட்டாலும் ஒரு திட்டவட்டமான செயல்முறை உருவாக்கப்படவில்லை. 1925 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 1 ஆம் சட்டப்படி ஒரு தலைவரும் அவருடன் இரண்டு முதல் நான்கு ஆணையர்களும் அடங்கிய இந்து சமயக் கட்டளை வாரியம் (Hindu Religious Endowments Board) ஒன்று நிறுவப்பட்டு, இந்து சமய கோயில் கள், மடங்கள் முதலியவை கண்காணிக்கப்பட்டன. 1925 ஆம் ஆண்டு சட்டத்தை நீக்கி, இன்னொரு சட்டம் 1927-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. அதன் பிறகு பல திருத்தச் சட்டங்கள் 1927 முதல் 1951 வரை உருவாயின.

2. 1940-ல் தனி அதிகாரி ஒருவர் (திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர்) வாரியத்தின் நிர்வாக முறைகளில் உள்ள குறைபாடு களை நீக்கி வாரியத்தை சீர்படுத்தி அமைக்க நியமிக்கப் பட்டார். அவர் வாரியத்திற்குப் பதிலாக அரசே இப்பொறுப்பை ஏற்று நடத்தலாம் என்று கருத்துத் தெரிவித்தார். இந்து சமய வாரியத்தை ஒரு அரசாங்கத் துறையாக மாற்றி அமைக்க வேண்டுமென வாரியத்தினர் தங்களது ஆட்சி அறிக்கைகளில் ( Administration Report ) தொடர்ந்து வலியுறுத்தினர். எனவே, இந்நிர்வாகம், மேலும் சீரான முறையில் செயல்படுவதற்கும், அதன் நிதியைப் பெருக்கு வதற்கும், எவ்விதம் திருத்தியமைக்கலாம் என்று பரிந்துரை செய்ய 1942-ல் உயர் நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. பா. வெங்கட்ரமணராவ் நாயுடு தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு வாரியத்தின் நிர்வாகத்தினை மாற்றி அரசு நிர்வாகமாக மாற்றுதல் நல்லது என்பன போன்ற பரிந்துரைகளை செய்தது. இந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொண்டும், அன்று வரை அமுலில் இருந்த பல்வேறு சட்டங் களைத் தொகுத்தும் ஒரு தொகுப்புச் சட்டத்தை 1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இயற்றியது. மேலும், இச்சட்டம், 1959-ல் விரிவாக திருத்தி அமைக்கப்பட்டு இப்பொழுது 1960-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து செயலிலிருந்து வருகிறது.

2. சமய நிறுவனங்கள் :

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்தின் கீழ் தற்போதுள்ள மொத்த அறநிலையங்கள் 34,401. அவைகளின் விவரங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| திருக்கோயில்கள் | 32,363 |
| மடங்கள் | 56 |
| மடத்துக் கோயில்கள் | 55 |
| குறிப்பிட்ட கட்டளை | 1,721 |
| அறக்கட்டளை | 189 |
| சமண சமயக் கோயில்கள் | 17 |
| கூடுதல் | 34,401 |

இந்த அறநிலையங்களில் 26,033 அறநிலையங்கள் மட்டுமே உதவித் தொகை நிர்ணயம் செய்வதற்குரியவை. (ரூ. 200-க்கு மேல் வருமானம் பெறுபவை.) இவ்வறநிலையங்களின் மொத்த உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ. 25.98 கோடியாகும்.

2. நிர்வாக அமைப்பு :

1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 1960-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ் இந்து சமய அறநிலையத்துறைக்கு பொது நிர்வாகத்திற்காக ஆணையாளர் ஒருவர் உள்ளார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் மேம்பாட்டு பணிகள் காரணமாகவும், சட்டப்பூர்வமான பணிகளைச் செய்ய வேண்டியிருப்பதன் காரணமாகவும், ஆணையரின் பணி அதிகரித்து விட்டதனால் துறை அலுவலகங்கள் மற்றும் ஆலயங்களின் ஆய்வுப் பணிகள் மற்றும் சட்டப்பூர்வமான பணி களை மற்ற பணிகளுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் ஆணையரால் பணிபுரிய இயலாத காரணத்தாலும், ஆணையர் ஆக்கப்பூர்வமான டணிகள் மற்றும் கொள்கை முடிவுகள் எடுப்பதில் முழுக் கவனம் செலுத்தும் வகையில், அவருக்கு அடுத்த நிலையில் சுதந்திரமாக செயல்பட இணை ஆணையர் இருக்க வேண்டியது அவசியமாகியது. மேற்கண்ட சூழ்நிலையினாலும் துணை ஆணையர்கள் பதவி உயர்வில்லாது 15 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் நிலமையை மாற்றும் முகத்தானும் அரசு முதன்முறையாக துறை தலைமை இடத்தில் இருந்த இரு துணை ஆணையர் பதவிகளை இணை ஆணையர்கள் பதவிகளாக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.



மேலும் ஆணையருக்கு உதவியாக 7 துணை ஆணையர்களும், 17 உதவி ஆணையர்களும் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர்களும் (பல்வேறு பதவி தரத்தில்) உள்ளனர். அதைத் தவிர துணை ஆணையாளர் நிலையில் 2 நேர்முக உதவியாளர்கள் துறைத் தலைமையகத்தில் பணி புரிகிறார்கள். மேலும், திருவாரூர் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்திற்கென ஒரு உதவி ஆணையர் பதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான திருவாபரணங்களையும் மற்றும் விலை உயர்ந்த பொருட்களையும் ஆய்வு செய்து மதிப்பிடும் பணியை கவனிக்க உதவி ஆணையாளர் பதவித் தரத்தில் எட்டு நகை சரிபார்க்கும் அதிகாரிகள் அவர்களுக்குரிய துணை பணியாளர்களுடன் உள்ளனர்.

தலைமையகத்தில் பொறியியல் பிரிவில் மேற்பார்வைப் பொறியாளர் ஒருவரின் தலைமையில் கோட்டப் பொறியாளர் ஒருவரும், தொழில் நுட்ப அலுவலர்களும் மற்றும் துணை ஆணையர் மண்டலப் பிரிவில் உதவிக் கோட்டப் பொறியாளர்களும் மாவட்டங்களில் உதவி ஆணையர் பிரிவில் இளநிலைப் பொறியாளர்களும் சமய நிறுவனங்களின் திருப்பணி மதிப்பீடுகளை தயாரித்தும் மற்றும் அப்பணிகளையும் இதர கட்டிட வேலைகளையும் மேற்பார்வையிட்டும் கவனித்து வருகின்றனர்.

ஆணையர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் திருக்கோயில் நிலங்கள் தனி அலுவலர் ஒருவரும், தனி வட்டாட்சியர் நான்கு பேரும் அடங்கிய வருவாய் அலுவலர் தனிப்பிரிவு ஒன்று மாவட்டங்களில் உள்ள திருக்கோயில் நிலங்களை ஆய்வு செய்தல், அடிப்படை பதிவேடுகள் தயாரித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. 1984 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31 ஆம் நாள் முதல் ஒரு தனி வட்டாட்சியர் மற்றும் அவருக்குரிய துணைப் பணியாளர்களுடன் சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலின் சொத்துக்களை கண்டறியும் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

தலைமை அலுவலகத்தில் துறையின் அனைத்து வரவு-செலவு கணக்குகளில் ஆணையாளருக்கு உதவும் பொருட்டு 1984 ஆம் ஆண்டு முதல் கருவூலம் மற்றும் கணக்குத் துறையைச் சார்ந்த ஒரு முதுநிலை கணக்கு அலுவலரும் அவருக்கு உதவியாக ஒரு உதவிக் கணக்கு அலுவலரும் உள்ளனர்.

அறநிலையத் துறையைச் சேர்ந்த திருக்கோயில்கள் அறநிறுவனங்கள் திருமடங்கள் ஆகியவற்றின் கணக்குகளை தணிக்கை செய்யும் பணிக்காக மாநில கணக்காய்வுத் தலைவர் அலுவலகத்தைச் சார்ந்த கணக்கு அலுவலர் தரத்தில் உள்ள தலைமை தணிக்கை அதிகாரி ஒருவரின் கீழ் அவருக்குத் தேவையான சார்நிலை அலுவலர்கள் பணியாளர்களுடன் தணிக்கைப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

ஆணையாளர், துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளை சட்டத்தினை செயல்படுத்துவதற்கு சட்டத்தின்படி அமைந்த அலுவலர்களாவர்.

3. செயல் அலுவலர்கள் :

தற்போது தமிழ்நாட்டில் 1,801 திருக்கோயில்கள் செயல் அலுவலர்கள் பொறுப்பில் உள்ளன. இக்கோயில்களை 492 செயல் அலுவலர்கள் நிர்வகித்து வருகிறார்கள். இதில் 46 நிலை-1 செயல் அலுவலர்களும், 117 நிலை-2 செயல் அலுவலர்களும், 172 நிலை-3 செயல் அலுவலர்களும், 138 நிலை-4 செயல் அலுவலர்களும் அடங்குவர். நிலை-1 லிருந்து நிலை 4 வரையில் உள்ள செயல் அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 473 ஆகும். கீழ்க்கண்ட திருக்கோயில்களில் உதவி ஆணையர் நிலையில் செயல் அலுவலர்கள் செயல்பட்டு வருகின்றனர்:—

(1) அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை.

(2) அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம்.

(3) அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில்.

(4) இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம், சுசீந்திரம்.

(5) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர்.

(6) அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை.

(7) அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோயில், பன்னாரி, பெரியார் மாவட்டம்.

(8) அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை, வட ஆற்காடு மாவட்டம்.

(9) அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு, செங்கற்பட்டு மாவட்டம்.

(10) அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை.

(11) அருள்மிகு சங்கரநாராயணசாமி திருக்கோயில், சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.

(12) அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை, கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.





மேலும் கீழ்க்கண்ட திருக்கோயில்களில் துணை ஆணையர் நிலையில் செயல் அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள்:—

(1) அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.

(2) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி, செங்கற்பட்டு மாவட்டம்.

(3) அருள்மிகு ரெங்கநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம், திருச்சி.

(4) அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.

(5) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

(6) அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்.

(7) அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.

எனவே இன்றைய நிலையில் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் செயல் அலுவலர்கள் திருக்கோயில்களில் பணிபுரிந்து வருகின்றார்கள்:—

| | |
|---|---|
| துணை ஆணையர் நிலை .. .. | 7 |
| உதவி ஆணையர் நிலை .. .. .. | 12 |
| நிலை—1 .. .. .. .. .. | 46 |
| நிலை—2 .. .. .. .. | 117 |
| நிலை—3 .. .. .. .. .. | 172 |
| நிலை—4 .. .. .. .. .. | 138 |
| மொத்தம் .. | 492 |

3. (அ) இந்து அறநிறுவனங்களில் அறங்காவலர்கள் நியமனம் :

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்குட்பட்ட இந்து அறநிலையங்கள் அவைகட்கு உதவித் தொகை நிர்ணயிக்கத்தக்க ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் நான்கு பிரிவுகளாக கீழ்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன :—

1. ரூ. 10,000-க்குக் குறைவான வருமானமுள்ள அறநிலையங்கள் பட்டியலில் சேராத, உதவி ஆணையர்களால் அறங்காவலர்கள் நியமிக்கக் கூடிய அறநிறுவனங்களாகவும் ;

2. ரூ. 10,000 முதல் ரூ. 49,999 வரை வருமானமுள்ள அறநிறுவனங்கள் பட்டியலில் சட்டப் பிரிவு 46 (i)-ன்கீழ் சேர்த்து துணை ஆணையர்களால் அறங்காவலர்கள் நியமிக்கக்கூடிய அறநிறுவனங்களாகவும் ;

3. ரூ. 50,000-த்திலிருந்து ரூ. 99,999 வரை அறநிறுவனங்கள் பட்டியலில் சட்டப் பிரிவு 46 (ii)-ன்கீழ் சேர்த்து, ஆணையரால் அறங்காவலர்கள் நியமிக்கக் கூடியதாகவும் ;

4. ரூ. 1 இலட்சமும், அதற்கு மேலும் வருமானம் வரக்கூடிய அறநிறுவனங்கள் பட்டியலில் சட்டப் பிரிவு 46 (ii)-ன்கீழ் சேர்த்து அரசால் அறங்காவலர்கள் நியமிக்கப்படக்கூடிய அறநிறுவனங்களாகவும் சட்ட விதிகளின்படி வரைமுறை செய்யப்பட்டுள்ளது.

அறங்காவலர்கள் தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம்) 22/1959, சட்டப் பிரிவுகள் 47 மற்றும் 49 பிரிவுகளின்படி நியமனம் செய்யப்படவேண்டும். அந்தந்த நிறுவனங்களின் பழக்கவழக்கங்களுக்குட்பட்டும், சட்ட ரீதியாக இத்துறை அதிகாரிகளால் அவ்வப்பொழுது கொடுக்கப்படும் உத்தரவுகளைக் கடைப்பிடித்து ஒரு தனிமனிதன் தம்முடைய சொந்த சொத்துக்களை எவ்வளவு பாதுகாப்பாக நிர்வாகம் செய்வாரோ, அந்த மாதிரி அறநிலையத்தின் சொத்துக்களையும், நிதிகளையும் மிகக் கவனமாக நிர்வாகம் செய்து வரவேண்டும். அறநிறுவனங்களின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களும் அறங்காவலர்கள் குழுக் கூட்டத்தில் வைக்கப்பட்டு அறங்காவலர்கள் பெரும்பான்மையான வாக்குகள் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அத்தீர்மானங்களின்படி இத்துறையின் முன் அனுமதிபெற வேண்டிய இனங்களில் அனுமதியும் பெறப்பட்டு நிர்வாகம் நடத்தப்பட வேண்டும்.

திருமடங்களின் மேற்பார்வையில் உள்ள திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர் நியமனம் செய்வது குறித்து :

4. திருமடங்களின் மேற்பார்வையில் உள்ள திருக்கோயில்களின் நிர்வாக குறைபாடுகளை களையும் பொருட்டு சட்ட விதிமுறைகளின்படி மேற்படி திருக்கோயில்களுக்கு செயல் அலு



வலர்களை நியமிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையின்மேல் தருமபுரம் மற்றும் குன்றக்குடி ஆகிய திருமடங்களின் ஆதீன கர்த்தர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில், எண். 664/80, 665/80, 815/80 மற்றும் 816/80 நீதிப் பேராணை மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

சென்னை உயர்நீதிமன்றம் 5—3—1986 தேதியில் மேற்கண்ட நீதிப் பேராணைகள் அனைத்தையும் ஏற்று அடியிற்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது :—

'' அதாவது சட்ட விதிமுறைப்படி செயல் அலுவலர் நியமனம் வகைக்கு நோட்டீஸ் கொடுத்து ஆட்சேபணைகளை பெற்று அதனைப் பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க வேண்டும். ''

இத்தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமடங்களின் நிர்வாகம் :

தமிழகத்தில் அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் தற்போது 56 திருமடங்கள் உள்ளன. இவைகளின் நிர்வாக நலனை முன்னிட்டு ஆணையர் அலுவலகத்தில் ஆணையருக்கு உதவ, ஓர் ஆய்வுப் பிரிவு இயங்கி வருகிறது.

5. தணிக்கைப் பிரிவு :

இத்துறை ஆணையாளரின் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் அரசு ஆணை எண். 1826 வருவாய்த் துறை நாள்: 22–6–1972-ல் வழங்கப்பட்டுள்ள ஆணைகளின்படி அரசுப் பணியாளர்களைக் கொண்ட தணிக்கைப்பிரிவு ஒன்று 1–9–1972 முதல் இயங்கி வருகிறது. ஆணையரின் கண்காணிப்பில் இயங்கிவரும் இப்பிரிவின் பணிகள் திறம்பட செயல்பட ஆணையரின் பணியில் உதவும் பொருட்டு இந்திய அரசின் தமிழ்நாடு மாநில தணிக்கை அலுவலகத்தைச் சார்ந்த கணக்கு அலுவலர் ஒருவரை தலைமைத் தணிக்கை அலுவலராக கொண்டு இப்பிரிவு இத்துறையில் செயல்பட்டு வருகிறது. ஏழு மண்டலத் தணிக்கை அலுவலர்கள், இருபத்தி ஏழு உதவி தணிக்கை அலுவலர்கள், நாற்பத்தி நான்கு தணிக்கைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் நூற்று நாற்பத்து நான்கு தணிக்கை ஆய்வர்களும் இத்துறையின் தணிக்கைப் பிரிவில் பணிபுரிகின்றனர். பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆண்டு வருமானம் ஆண்டுக்காண்டு உயர்ந்து வரும் நிலையில் அத்திருக்கோயில் நிர்வாகத்தினைக் கண்காணிக்க ஆணையரது தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று இயங்கி வருவதுடன் அத்திருக்கோயில் கணக்குகளை தணிக்கை செய்ய தனியாக மண்டல தணிக்கை அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஒவ்வொரு துணை ஆணையர் பிராந்தி

யத்தில் ஒரு மண்டல தணிக்கை அலுவலர் மாவட்டத் தலை நகரிலும் மற்றும் உதவி தணிக்கை அலுவலர்கள் மாவட்ட மற்றும் வட்ட அளவில் பணிபுரிகின்றனர்.

தணிக்கை முடிக்கப்பெற்ற திருக்கோயில்களின் எண்ணிக்கை சென்ற ஆண்டு 5,520 ஆக இருந்தது. இவ்வாண்டு 8,664 ஆக உயர்ந்துள்ளது.

பங்களிப்புத் தொகை (Contribution) மற்றும் தணிக்கைக் கட்டண நிர்ணயம் :

தற்போது ரூ. 1,000-க்கு மேல் ஆண்டு வருமானமாக உள்ள திருக்கோயில்களில் வரி விதிப்பு வருமானத்தில் 1½ சதவிகிதம் தணிக்கைக் கட்டணமாக பெறப்படுகின்றது. தணிக்கைப் பணித்தொகுதி விரிவடைந்து வரும் நிலையில் 1951 ஆம் ஆண்டு நிர்ணயித்துள்ள இத்தணிக்கைக் கட்டணம் மிகவும் குறைவாக உள்ளதாலும் தணிக்கைப் பிரிவிற்கு ஆகும் செலவு தணிக்கைக் கட்டணத்தைக் காட்டிலும் அதிகமாக இருந்ததினாலும் இதனை சரிகட்டும் வகையில் இவ்விகிதம் 4 சதவிகிதமாக உயர்த்தி சட்டத் திருத்தங்கள் செய்யப்பெற்றுள்ளன.

இந்து சமய அறநிலைய நிர்வாகத் துறையிலுள்ள அரசுப் பணியாளர்களின் சம்பள விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டதன் விளைவாகவும், ஆய்வாளர்கள் முதலிய கூடுதல் பதவிகள் உருவாக்கப்பட்டிருப்பதன் விளைவாகவும், சமய நிறுவனங்களால் இந்து சமய அறநிலையக் கட்டளைகள் நிர்வாகத் துறைக்கு செலுத்தப்பட வேண்டிய ஆண்டுப் பங்களிப்புத் தொகையின் ( Annual Contribution ) உச்ச வரம்பு அளவு வீதத்தை நூற்றுக்கு ஏழு விழுக்காட்டிலிருந்து நூற்றுக்கு பத்து விழுக்காட்டுக்கு உயர்த்தி சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் திருக்கோயில்களில் நித்தம் ஒருகால பூசைக்காகும் செலவையாவது அக்கோயிலின் ஆண்டு வருமானத்திலிருந்து மற்ற அத்தியாவசிய செலவுகளோடு கழித்தபின்னரே உதவித் தொகை நிர்ணய வருமானம் கணக்கிடப்பட வேண்டும் என்ற கருத்து ஆணையருடன் கலந்தாலோசிக்கப்பட்டு அதன் விளைவாக கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன :—

(1) ரூ. 200 முதல் ரூ. 5,000 வரை வருமானம் வரும் கோயில்களில் ஒரு கால பூசைக்காகும் செலவோ அல்லது உதவித் தொகை நிர்ணய வருமானத்தில் 30 சதவிகிதம் (முப்பது சதவிகிதம்) இதில் எது குறைவோ அதைக் கழித்து நிகர தொகைக்கு உதவித் தொகை தணிக்கைக் கட்டணம் கணக்கிடப்பட வேண்டும்.

(2) ரூ. 5,001 முதல் ரூ. 2 லட்சம் வரை வருமானம் பெறும் திருக்கோயில்களுக்கு இலாகாவினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டப்படி தினமும் ஒரு கால பூஜைக்கு ஏற்படும் செலவுத் தொகை அல்லது மொத்த வருமானத்தில் சட்ட விதிகளின்படி



கழிக்கப்படவேண்டிய தொகைகளை கழித்து வரப்பெறும் உதவித் தொகை நிர்ணய வருமானத்தில் 5 சதவிகிதம் (ஐந்து சதவிகிதம்) இதில் எது குறைவோ, அத்தொகையினை உதவித்தொகை நிர்ணய வருமானத்தில் கழித்து நிகரத்தொகைக்கு உதவித் தொகை தணிக்கைக் கட்டணம் கணக்கிடப்படவேண்டும்.

3. ரூ. 2 லட்சம் அதற்கு மேல் வருமானம் வரும் அறநிலையங்களுக்கு உதவித்தொகை நிர்ணய வருமானத்தில் 0.5 சதவிகிதம் (அரை சதவிகிதம்) அல்லது ஒரு கால பூசை செலவு இதில் எது குறைவோ அதனை உதவித்தொகை நிர்ணய வருமானத்தில் கழித்து நிகரத் தொகைக்கு உதவித்தொகை தணிக்கை கட்டணம் கணக்கிடப்படவேண்டும்.

6. திருக்கோயில் பணியாளர்கள் :

இத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்களில் சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

(i) ஆலயப் பணியாளர்களின் ஊதிய விகிதம் மாற்றியமைத்தல்

ஆலயப் பணியாளர்களின் பணி நியமனத்திற்காக கல்வித் தகுதிகள் ஆகியவை அரசு பணியாளரைப் போன்று வரையறுக்கப் பட்டவை அல்ல. மேலும், அவர்களது பணியின் தன்மையும் அரசு பணியாளரைப் போன்றவையல்ல. மேலும், அவர்களது கல்வித் தகுதி, பணியின் தரம் வெகுவாக அரசுப் பணியாளர் களிடமிருந்து மாறுபட்டுள்ளன. ஆனால் ஆலய ஊழியர்கள் வேறு பல சலுகைகள் பெறுகின்றனர். உதாரணமாக திருவிழாக்காலங்களில் மரியாதை பெறுதல், ஓய்வு பெறும் வயது 60 போன்றவையாகும். இது தவிர, ஆலயப் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் ஒரு மாத ஊதியம் போனசாக வழங்கப்பட்டு வருகிறது. எனினும், இந்த அரசு முதன் முறையாக இந்த நிலைமையை மாற்றி ஆலய ஊழியர்களுக்கும் சம்பள விகிதங்கள் நல்ல முறையில் அமைக்கப்படவேண்டும் என்று கருதி, வெவ் வேறாக இருக்கும் அவர்களது சம்பள விகிதங்கள் நன்முறை யில் அமைய வேண்டும் என்று கருதி துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் நிர்வாக அதிகாரிகள் உள்ள திருக் கோயில் பணியாளர்களின் 125 ஊதிய விகிதங்களை 20 ஆகக் குறைத்து, 1-4-1986 முதல் அமுல்படுத்தி அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. இவ்வாணைகளினால் சுமார் 2,944 ஆலயப் பணியாளர்கள் பயனடைகின்றனர். இதனால் இந்து சமய அற நிலையத் துறைக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ஆண்டொன் றுக்கு ரூ. 22.32 லட்சம் ஆகிறது.

தற்போது சீரமைக்கப்பட்டுள்ள திருத்திய சம்பள விகிதங்கள் முதல் நிலை முதல் நான்காம் நிலை வரையிலுள்ள திருக்கோயில் பணியாளர்களுக்குப் பொருந்தாது. ஆகையால் இப்பணி யாளர்கள் பயனடையும் வகையிலும், அவர்களது அவாவினை

[1987 ஏப்ரல் 30

நிவர்த்தி செய்யும் வகையிலும், கருணைப் பணிக்கொடையாக ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்) ஒரே தவணையாக அவர்களுக்கு வழங்கலாம் என்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையருக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

மேற்படி திருத்திய ஊதிய உயர்வு அருள்மிகு வடபழனி யாண்டவர் ஆலயம், வடபழனி, அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி ஆலயம், திருவல்லிக்கேணி, அருள்மிகு மாரியம்மன் ஆலயம், சமயபுரம் மற்றும் அருள்மிகு சுப்பிரமணிய ஸ்வாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம் ஆகிய திருக்கோயில் பணியாளர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இவை அல்லாமல், திருக்கோயில் பணியாளர்களுக்கு 1-3-1986 மற்றும் 1-5-1986 தேதிகளில் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அகவிலைப் படி தவணைகளை முறையே 1-9-1986 மற்றும் 1-11-1986 தேதிகளிலும் 1-7-1986 முதல் 4 விழுக்காடாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அகவிலைப்படி தவணையினை 1-1-1987-லிருந்தும் முதுநிலை ஆலயப் பணியாளர்களுக்கு வழங்கப் பெறலாம் என்றும் அரசு அறிவித்துள்ளது.

மேலும் ஊதியத்தை நிர்ணயிக்கும்போது ரூ. 20 குறைந்த பட்ச பயனாக (Minimum Fixation Benefit) அனுமதித்து அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு அவ்வப்போது அகவிலைப்படி அனுமதிக்கப்பட்டுள்ளது :

| அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்ட தேதி. (1) | ரூ. 400 வரை ஊதியம்பெறும் பணியாளர்களுக்கு. (2) | ரூ. 400-க்கு மேல் ஊதியம்பெறும் பணியாளர்களுக்கு. (3) |
|---|---|---|
| 1-2-1984 முதல் .. | 165 | 185 |
| 1-3-1984 ,, .. | 175 | 195 |
| 1-5-1984 ,, .. | 185 | 205 |
| 1-6-1984 ,, .. | 195 | 215 |
| 1-8-1984 ,, .. | 205 | 225 |
| 1-10-1984 ,, .. | 215 | 235 |
| 1-12-1984 ,, .. | 225 | 245 |
| 1-3-1985 ,, .. | 235 | 255 |
| 1-11-1985 ,, .. | 245 | 265 |
| 1-4-1986 ,, .. | 265 | 285 |
| 1-9-1986 ,, .. | 275 | 295 |
| 1-11-1986 ,, .. | 285 | 305 |
| 1-1-1987 ,, .. | 305 | 325 |



1987 ஏப்ரல் 30]

(ii) திருக்கோயில் வருமானத்தில் 40 சதவீதத்திற்கு உட்பட்டு பணியாளர்களின் சம்பள செலவினம் கட்டுப்படுத்தப்படுகிறது.

(iii) திருக்கோயிலின் பணியாளர் பணியில் இருக்கும்போது மரணம் அடைந்தால் அன்னாரின் சேம நல நிதிக்கணக்கிலிருந்து ஈமச்சடங்கு செலவுக்காக ரூ. 250 வழங்கப்படுகிறது. இந்தத் தொகை திரும்பப்பெறப்படுகிறது.

(iv) முதுநிலைத் திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு திருவிழா நாட்களில் கூடுதலாகப் பணிபுரிவதனைக் கருத்தில்கொண்டு ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாத அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படிகளுடன் கூடிய தொகை சிறப்பு ஊதியமாக வழங்கப்படுகிறது.

(v) திருக்கோயில்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தீபாவளி அல்லது பொங்கல் பண்டிகையின்போது முன்பணமாக ரூ. 500 அல்லது இரண்டு மாத அடிப்படைச்சம்பளம் இதில் எது குறைவாக உள்ளதோ, அதனை வட்டியில்லாத முன்பணமாகக் கொடுத்து அது 10 தவணைகளில் திரும்ப வசூலிக்கப்படுகிறது.

(vi) புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளிலுள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு வெள்ள நிவாரணம் முன்பணம் ரூ. 400 வட்டியில்லாமல் வழங்கப்பட்டு தவணை முறையில் திரும்ப வசூலிக்கப்படுகிறது.

(vii) ஆலயப்பணியாளர்களின் அல்லது திருமணமான பணியாளர்களின் குழந்தைகள் ஆகியவர்களின் திருமணத்திற்காக திருக்கோயிலின் நிதி வசதியினைப் பொறுத்து பணியாளர்களின் சம்பள விகிதத்திற்கேற்ப வட்டியுடன் கூடிய திருமண முன்பணம் வழங்கப்படுகிறது.

viii) ரூ. 10,000-க்கு மேல் ஆண்டு வருவாய் பெறும் திருக்கோயிலில் பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்களுக்கு ஈடுசெய் வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் அமுலில் இல்லா திருக்கோயில்களில் ரூ. 10,000 அல்லது அதற்கு மேல் ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில்களில் 10 ஆண்டு பணியாற்றிய பணியாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலோ அல்லது இறந்தாலோ அவர் பணியாற்றிய ஒவ்வொரு முழு ஆண்டிற்கும் $1\frac{1}{2}$ மாத சம்பள வீதம் 15 மாத அடிப்படை சம்பளத்திற்கு மிகைப்படாமல் திருக்கோயில் நிதிநிலையைப் பொறுத்து பணிக்கொடை வழங்கப்படுகிறது.

(ix) திருக்கோயில் பணியாளர்கள் தற்காலிக பணி நீக்கத்திலிருக்கும்போது மற்றும் விசாரணை நிலுவையில் இருக்கும் பொழுது அவர்களுக்கு பிழைப்பு ஊதியம் வழங்க துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் பணிபுரியும் செயல் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(x) குரூப் இன்சூரன்ஸ் திட்டம்—திருக்கோயில் பணியாளர்களுக்கு ஆயுட்காப்பீட்டுத் திட்டம் 1–7–1982 முதல் அமுலில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாதம ரூ. 100-க்கு கீழ் ஊதியம் பெறும் ஆலய ஊழியர்கள் பிரீமியம் செலுத்த வேண்டியதில்லை. மற்ற ஊழியர்களிடம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25 வீதம் பிரீமியம் வசூலிக்கப்படுகிறது. வசூலிக்கப்படும் தொகையிலிருந்தும் முன்பணமாக செலுத்திய திருக்கோயில் நிதியிலிருந்தும் ஆயுட் காப்பீட்டுக் கழகத்திற்கு இன்சூரன்ஸ் பிரீமியம் செலுத்தப்படுகிறது. பிரீமியம் செலுத்தப்பட்ட பாலிஸி ஆண்டுக்குள் இறந்த பணியாளர்களின் குடும்பத்திற்கு ரூ. 5,000 வீதம் ஆயுட் காப்பீட்டுக் கழகம் வழங்கி வருகிறது.

இத் திட்டம் தொடங்கியதிலிருந்து இதுவரை 170 திருப்கோயில் பணியாளர்கள் குடும்பத்திற்கு தலா ரூ. 5,000 வீதம் கொடுக்க ஆயுட் காப்பீட்டுக் கழகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டு 126 இனங்களுக்கு தொகை வரப்பெற்று பட்டுவாடாவும் செய்யப்பட்டு விட்டது.

இந்த குரூப் இன்சூரன்ஸ் திட்டத்தினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் மாற்றி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

7. திருக்கோயில்களுக்குச் சொந்தமான செப்பு மற்றும் இதர உலோக திருமேனிகள் மற்றும் உயர் மதிப்புடையவைகளை பாதுகாத்தல் குறித்த ஏற்பாடுகள்:—

தமிழ்நாட்டிற்குத் தனிப் பெயரும், புகழும், பெருமையும் அளிக்கும் விலை மதிக்க முடியாத கலைப் பொருட்களான சிலைகளைப் பாதுகாக்க இவ்வரசு சிறப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. அவைகள் பின்வருமாறு:—

338 அறநிலையங்களுக்குச் சொந்தமான 2,329 திருவுலாத் திருமேனிகள் போதிய பாதுகாப்பு வசதியுள்ள பக்கத்துத் திருக்கோயில்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசுச் சட்டம் (எண் 52/1972)-ன் கீழ் தொன்மை வாய்ந்த திருவுலாத் திருமேனிகள் தொல் பொருள் ஆய்வுத் துறையினரிடம் பதிவு செய்யப்படுகின்றன. இதுவரை 5,410 அறநிலையங்களுக்குச் சொந்தமான 31,120 திருவுலாத் திருமேனிகள் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பதிவு அதிகாரிகளிடம் பதிவு செய்





யப்பட்டுள்ளன. செப்புத் திருவுலாத் திருமேனிகள் ஒவ்வொன்றும் நான்கு கோணங்களில் புகைப்படம் எடுக்கப்பட்டு புகைப்படத் தொகுப்பு தயாரிக்கப்பட்டு இவ்வலுவலகத்தில் பெறப்படுகின்றன. இதுவரை 4,715 அறநிலையங்களுக்குச் சொந்தமான திருவுலாத் திருமேனிகள் புகைப்படத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு உள்ளன. புதுடில்லி, இந்திய தேசிய கலை மற்றும் கலாச்சார பாரம்பரிய பொறுப்புக் கழகம் (INTACH) சார்பில், தமிழக தொல்பொருள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். நாகசாமி அவர்களை தமிழக ஆலயங்களில் உள்ள திருவாபரணங்களை ஆய்வு செய்வதற்காக அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆய்வு செய்து தொகுக்கப் பெறும் ஆவணங்கள் அரசு ஆவணங்களாகப் பாதுகாக்கப் பெறும்.

1. எச்சரிக்கை மணி உபயோகித்தல் :

விலை மதிப்புள்ள சிலைகள் மற்றும் நகைகள் உள்ள துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலைத் திருக்கோயில்களில் எச்சரிக்கை மணிகள் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

2. காவலர்களுக்கு பயிற்சி அளித்தல் :

(1) திருக்கோயில்களில் உள்ள காவலர்க்கு அதுவும் 45 வயதுக்குக்கீழ் உள்ள காவலர்களுக்கு துப்பாக்கிகளை உபயோகிக்கவும் நவீன முறைகளை பயன்படுத்தித் திருடர்களைப் பிடிக்கவும், காவல் துறையினரால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(2) இனி நியமனம் செய்யப்படும் காவலர்கள் (1) கூர்க்கா அல்லது ஓய்வு பெற்ற இராணுவத்தில் ஹவில்தார் நிலையில் உள்ளவர்களை நியமனம் செய்ய வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது.

3. பூசையில் இல்லாத சிலைகளை பாதுகாப்பு வசதியுள்ள அருகாமையில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடத்தில் வைத்தல் :—

1. திருவாரூர் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்:—

இடவசதி உள்ள திருக்கோயில்களில் பாதுகாப்பு வசதியுடன் கூடிய புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பு வசதி இல்லாத திருக்கோயில்களில் உள்ள சிலைகள் மேற்படி கட்டிடங்களில் பாதுகாப்பாக வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பூஜையில் இல்லாத மற்றும் பாதுகாப்பில் இல்லாத உலோகத் திருமேனிகள் பாதுகாக்க திருவாரூர் பாதுகாப்பு மையத்தினை ரூ. 12,90,000 செலவில் கட்டப்பட்டு 11–10–1986-ல் திறக்கப்பட்டு முதற் கட்டமாக 281 திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

2. இந்த மையத்தில் அடுத்த கட்டமாக தஞ்சை வட்டத்தில் உள்ள சுமார் 1,244 பாதுகாப்பில் இல்லாத மற்றும் பூஜையில் இல்லாத விக்கிரகங்களை பாதுகாப்பின் பொருட்டு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3. இந்த பாதுகாப்பு மையத்தில் மின்சார எச்சரிக்கை மணி பொருத்தியும் காவல்துறை காவலர்களை நியமனம் செய்தும் நவீன பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு வைக்கப்படும் உலோகத் திருமேனிகளுக்கு தினசரி முறையான பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

4. களவு போன செப்புத் திருமேனிகள் மற்றும் விலை மதிப்பு வாய்ந்த பொருள்கள் பற்றி துப்பு அளிப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் அளிக்க [ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை] அரசு ஆணையருக்கு அனுமதி அளித்துள்ளது.

5. கிராமப்புறங்களில் உள்ள திருக்கோயில்களிலிருந்து சிலைகள் திருட்டுப் போவதைத் தடுக்க புதுக்கோட்டை, மதுரை, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் விழிப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்த விழிப்புக் குழுக்களின் உறுப்பினர்கள் பின்வருமாறு:—

1. கிராமத்தில் உள்ள நான்கு பெரியோர்கள்.
2. நான்கு முன்னாள் இராணுவத்தினர்கள்.
3. அங்குள்ள காவல்துறை அதிகாரி.
4. பிர்க்கா வருவாய்த்துறை ஆய்வர்.
5. அறநிலையத்துறை பிரிவு ஆய்வர்.

குழுவின் வேலையை மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியும், அறநிலையத்துறை துணை ஆணையரும் மேலாய்வு செய்ய வேண்டும்.

எஞ்சிய மாவட்டங்களில் இக்குழுக்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6. சிலை திருட்டைத் தடுக்க இந்திய குற்றவியல் தடுப்புச் சட்டத்தில் போதுமான சட்டத் திருத்தம் மேற்கொள்ள மைய அரசின் இசைவிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் ஏற்பிற்குப் பிறகு மேல் நடவடிக்கை தொடரும்.

8. ஆலய நிலங்கள்:—

இம்மாநிலத்தில் இந்து சமய அறநிலையங்களுக்குச் சொந்தமான சுமார் 5.25 லட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. பசலி 1395 வரை இந்த நிலங்களிலிருந்து பெற வேண்டிய குத்தகை வாடகை பாக்கி சுமார் ரூ. 37.25 கோடியாகும். குத்தகை



தாரர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுவது போன்ற நடவடிக்கைகளிலிருந்து விதிவிலக்கு அளித்து பாதுகாப்பு கொடுக்கும் பல சட்டங்கள் காரணமாக மேற்படி நிலுவைகளை வசூலிக்க முடியவில்லை. இதனால் கோயில்களின் வருமானம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சில திருக்கோயில்களில் தினப்படி பூஜைகள் செய்வதும் வேலையாட்களுக்கு ஊதியம் கொடுப்பதும் இயலாததாக உள்ளது.

பெரும்பாலான திருக்கோயில்கள், நிலங்களையே வருமான வழியாகக் கொண்டிருக்கின்றன. அந்நிலங்களில் உள்ள குத்தகைதாரர்கள் பல ஆண்டுகளாகக் குத்தகை பாக்கிகளை தராத காரணத்தால் தினசரி பூஜைகள், சிப்பந்திகள் சம்பளம் மற்றும் இதர இனங்களுக்கான செலவுகளை சமாளிக்க முடியாமல் இடர் உண்டாகியுள்ளது. வேளாண்மை நிலங்களில் இயற்கை சீற்றங்களினால் விளைச்சல் அவ்வப்போது பாதிக்கப்படும்போது தொகை செலுத்தாமல் இருந்ததால் அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் பாதுகாக்கும் வகையில் அவ்வப்போது நிவாரணச் சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்த நிவாரணச் சட்டங்கள் நீடிக்கப்பட்டன. தற்போது நீடிக்கப்பட்ட காலம் காலாவதி ஆகிவிட்டது. இதைத் தொடர்ந்து குத்தகைதாரர்கள் சமய நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையை வசூலிக்க வருவாய் நீதிமன்றங்கள் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது மொத்தம் 11 வருவாய் நீதிமன்றங்கள் (தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சி, லால்குடி, மதுரை, கடலூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, கோவில்பட்டி) ஏற்படுத்தப்பட்டு குத்தகை பாக்கிக்காக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

1986ஆம் வருடத்தில் திருக்கோயிலுக்குச் சொந்தமான விவசாய நிலங்களில் குறைந்த குத்தகை உள்ள 2,048 ஏக்கர் நிலங்களில் குத்தகை உயர்த்தியதின் மூலம் ரூ. 6,21,518 வருவாய் வரப்பெற்று உள்ளது. இவ்வாண்டில் 192.05 ஏக்கர் தரிசு நிலத்தை விவசாயம் மற்றும் கட்டிடம் கட்டி விடப்பட்டதில் ரூ. 43,217 கூடுதலாக வருவாய் வரப் பெற்றுள்ளது.

அனுமதியின்றி உடமையாக்கிய விவசாய நிலம் 330.64 ஏக்கரை திருக்கோயில் சுவாதீனத்திற்குக் கொண்டு வந்து குத்தகைக்கு விட்டதில் ரூ. 78,868 கூடுதலாக வருவாய் வரப் பெற்றுள்ளது.

9. ஆலய நிலங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணை :

திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் குறித்த நடவடிக்கை எடுக்க தனி வருவாய் அலுவலர் அலுவலகம் அரசாணை எண். 837, நாள் 18–3–1970-ன்படி நியமனம் செய்

யப்பட்டது. 1–4–1970 முதல் மாவட்ட வருவாய் அதிகாரியின் பார்வையில் திருக்கோயில் நிலங்கள் குறித்த ஆய்வுப் பணி தொடங்கப்பட்டது.

பட்டியலில் சேர்க்கப்பட்ட, பட்டியலில் சேர்க்கப்படாத திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் அமைந்துள்ள இடங்களை பார்வையிட்டும், வருவாய்த்துறை கணக்குகளை சரி பார்த்தும் 1 முதல் 15 பதிவேடுகள் தயார் செய்யப்பட்டன.

தற்போது இச்சிறப்புப் பதிவேடுகள் மாற்றம் செய்யப்பட்டு 1 முதல் 3 சிறப்புப் பதிவேடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

1 முதல் 3 சிறப்புப் பதிவேடுகள் 28–2–1987 வரை தயார் செய்யப்பட்ட மாவட்டங்களின் விவரங்கள் :—

| | | |
|---|---|---|
| 1. | சென்னை .. .. .. | 101 |
| 2. | செங்கற்பட்டு .. .. .. | 50 |
| 3. | தென்னாற்காடு .. .. | 130 |
| 4. | தஞ்சாவூர் .. .. .. | 245 |
| 5. | மதுரை .. .. .. | 197 |
| | மொத்தம் .. | 723 |

தனி அலுவலர் (திருக்கோயில் நிலங்கள்) ஆய்வு மேற்கொள்ளும்போது 10,275 (பட்டியலில் சேர்க்கப்பட்ட திருக்கோயில்கள் 328-ம், பட்டியலில் சேர்க்கப்படாத திருக்கோயில்கள் 9,947-ம்) திருக்கோயில்களுக்கு 4.1 இலட்சம் நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் இருந்தன. திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டபின் மொத்தம் 41,306 இனங்களுக்கு 2,01,343 ஏக்கர் நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் அறநிலையங்களுக்கு சொந்தமானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டது. இக்குறிப்புகள் சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் அலுவலகத்திற்கு தக்க மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது.

10,526 திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் குறித்து அனைத்து விபரங்கள் சேகரித்து 1 முதல் 15 பதிவேடுகள் தயாரித்து தொடர் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு முதலில் சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் தற்போது மாற்றப்பட்டுள்ளவாறு சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியா





குமரி, கோயம்புத்தூர், பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள திருக்கோயில்களுக்கு 1 முதல் 3 பதிவேடுகள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

தனி வட்டாட்சியர்களால் தயார் செய்து அனுப்பப்படும் 1 முதல் 3 வரையுள்ள தனிப் பதிவேடுகளின் முன்னேற்றம் ஆய்வு செய்யப்படுகின்றன.

41,306 இனங்கள் குறித்து நாளதுவரை புலனாய்வு செய்ததில் 19,127 இனங்கள் திருக்கோயில்களுக்குச் சொந்தமாக்கப்பட்டு பாக்கியுள்ள 22,179 இனங்களின் ஆய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திருக்கோயில் நிலங்களைப் பற்றி ஆய்வு செய்து அவைகளைப் பற்றிய ஆவணங்கள் தயார் செய்தல், அறநிலையங்களுக்கு பயனளிக்கத்தக்கதாகும். ஆக்கிரமிப்பிலிருந்து திரும்பப்பெறப்பட்டு, திருப்பி எடுக்கப்பட்ட பெருமளவிலான நிலங்கள், அறநிலையங்களுக்குச் சொந்தமான பல வீட்டு மனைகள் மற்றும் வீடுகள் மூலம் இப்போது கூடுதல் வருவாய் பெறப்படுகிறது.

குறிப்பாக சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்கும், அதன் கட்டளைக்கும் சொந்தமான சுமார் 2,000 ஏக்கர் நிலங்களில் 187.28 ஏக்கர் நன்செய் மற்றும் 247.39 ஏக்கர் நஞ்சை நிலங்கள் மூலம் தற்போது வருவாய் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயிலுக்குப் பாத்தியப்பட்ட 115 குறிப்பிட்ட அறக்கட்டளைகள் ஆய்வு செய்யப்பட்டு அவைகள் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு அவைகளுக்காக பசலி 1394-க்கான உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திலுள்ள அருள்மிகு சபாநாயகர் கோயிலுக்கு வருட வருவாய் ரூ. 23,803 அடிப்படையில் பசலி 1395-க்கு உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

10. கட்டிடங்கள், மனைகள் :

கட்டிடங்களின் வாடகையை உயர்வு செய்ததின் விளைவாக ரூ. 4,13,378 கிடைக்கப்பெற்றது. தற்போது உயர்வு செய்யப்பட்ட விகிதத்தின் மூலம் கூடுதலாக இவ்வினத்தில் ரூ. 14,16,123 கிடைத்து உள்ளது. குத்தகையினைப் புதுப்பிக்கும்போது 50 சதவீதம் கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்டு வாடகை உயர்த்தப்பட்டு உள்ளது.

சென்னை நகரில் சில திருக்கோயில்களுக்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்கள் 99 ஆண்டுகளுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. குத்தகைதாரர்கள் பல இலட்சம் மதிப்புள்ள கட்டிடங்களைக் கட்டிக்

கொண்டு திருக்கோயிலுக்கு மிகக் குறைந்த வாடகைக் கொடுப்பதுடன் மேற்படி இடத்தினை உள் வாடகைக்கு விட்டு அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள்.

மேற்படி நிலங்கள் அக்கால நிலவரத்திற்குத் தக்கவாறு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. தற்போது கால நிலைக்குத் தக்கவாறு நில மதிப்பு பல மடங்கு உயர்ந்து உள்ளதால் அதற்குத் தக்கவாறு வாடகை உயர்த்தப் பெறுவதில் சட்டச் சிக்கல் உள்ளது. அரசு தற்போது நிர்ணயம் செய்யும் விலைக்கு விற்பனை செய்து அத்தொகையை முதலீடு செய்தால் கோயிலுக்குத் தற்போது கிடைக்கும் வாடகையை விட பல மடங்கு தொகை கூடுதலாக வர சாத்தியக்கூறு உள்ளதால் அதற்குத் தக்கவாறு சட்டம் இயற்ற அரசு பரிசீலனை செய்து வருகிறது.

11. திருப்பணிகளுக்கு மானியம் :

திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ள வேண்டுமென்பது தலையாய பணியாகும். 1985–86 ஆம் ஆண்டில் 29 ஆலயங்களில் திருப்பணிக்கு ரூ. 35 இலட்சமும், 1986–87க்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் 45 இலட்சமும், 83 ஆலயங்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாமன்னன் இராஜராஜ சோழனின் ஆயிரமாவது ஆண்டு முடிசூட்டு விழா நினைவினைப் போற்றும் வகையில் 60 தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டதில், இதுவரை 36 திருக்கோயில்களில் திருப்பணிகள் முடிந்து குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. ஏனைய திருக்கோயில்கள் பலவற்றின் திருப்பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. திருப்பணிகள் முடிவுற்றவுடன் இத்திருக்கோயில்களில் குடமுழுக்கு செய்யப்படும்.

திருக்கோயில்கள் செப்பனிடுதலும், திருப்பணிகளும் :

1–1–1986 முதல் 31–12–1986 முடிய கீழ்க்காணும் விபரப்படி பல்வேறு திருப்பணிகள் மற்றும் கட்டுமான வேலைகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும் வேலை விபரமும். | வேலைகளின் எண்ணிக்கை. | வேலைகளின் மதிப்பீட்டு தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1. திருப்பணி வேலைகள் .. | 245 | 3,64,29,830 |
| 2. இதர கட்டுமான வேலைகள் | 92 | 5,33,48,100 |
| மொத்தம் .. | 337 | 8,97,77,930 |



1–1–1986 முதல் 31–12–1986 முடிய கீழ்க்காணும் விபரப்படி பல்வேறு திருப்பணிகள் மற்றும் கட்டுமான வேலைகளுக்கு மதிப்பீடுகள் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும் வேலை விபரமும். | வேலைகளின் எண்ணிக்கை. | வேலைகளின் மதிப்பீட்டுத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1. திருப்பணி வேலைகள் .. | 202 | 2,38,92,900 |
| 2. இதர கட்டுமான வேலைகள் | 102 | 1,85,77,300 |
| மொத்தம் .. | 304 | 4,24,70,200 |

இத்துறையின் உதவி கோட்டப் பொறியாளர்களால் தயாரிக்கப்படும் ரூ. 15,000 மதிப்பீட்டிற்குள் உள்ள பணி மதிப்பீடுகள் துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்களால் அங்கீகாரம் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்படுகின்றன.

1986 ஆம் ஆண்டில் முடிவடைந்த பணிகள் கீழ்வருமாறு :—

| வரிசை எண். | வேலைகளின் விபரம். | வேலைகளின் எண்ணிக்கை. | மதிப்பீட்டுத் தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ரூ. |
| 1. | திருப்பணி வேலைகள் .. | 93 | 51,56,610 |
| 2. | இதர கட்டுமான வேலைகள் | 157 | 72,29,425 |
| | மொத்தம் .. | 250 | 1,23,86,035 |

[1987 ஏப்ரல் 30

ரூபாய் 5 இலட்சத்திற்கு மேல் உள்ள திருப்பணி வேலைகள் நடைபெறும் திருக்கோயில்கள் :

| வரிசை எண். (1) | திருக்கோயில் மற்றும் வேலை விபரம். (2) | தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில், சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்—வெளி திருமதில் பழுதுபார்த்தல் .. | 19.20 |
| 2 | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சி மாவட்டம்—ஆர்.சி.சி. மண்டபம் கட்டுதல் .. .. .. | 15.00 |
| 3 | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்—மலைச் சாலைப் பணி .. .. .. | 55.00 |
| 4 | அருள்மிகு அமரபாலீஸ்வரர் திருக்கோயில், பாரியூர், கோபி தாலுக்கா—மகாமண்டபம், பிரகார மண்டபம் கட்டுதல் .. | 11.25 |
| 5 | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம்—ராஜகோபுரம் கட்டுதல் .. .. .. .. | 17.00 |
| 6 | அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி திருக்கோயில், தென்காசி—9 நிலை ராஜ கோபுரம் கட்டுதல் .. .. .. | 90.00 |
| 7 | அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், தெற்கு ராஜகோபுரம் கட்டுதல் | 100.00 |
| 8 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி—சின்னகலையமுத்தூரில் பெண்கள் தங்கும் விடுதி கட்டுதல் .. | 20.00 |
| 9 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி—கோசாலையில் 80 ஒற்றை அறைகள் கட்டுதல் .. .. | 17.00 |
| 10 | அருள்மிகு குறிஞ்சி ஆண்டவர் திருக்கோயில், கொடைக்கானல்—கல்யாண மண்டபம் கட்டுதல் .. .. | |



1987 ஏப்ரல் 30]

| வரிசை எண். (1) | திருக்கோயில் மற்றும் வேலை விபரம். (2) | தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 11 | அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயில், ராமேஸ்வரம்—பர்வதவர்த்தனி அம்பாள் சன்னதி முன்பு கருங்கல் மண்டபம் கட்டுதல். .. .. | 26.00 |
| 12 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை—மருதம் காம்ப்ளக்ஸ் கட்டுதல். | 11.30 |
| 13 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி—அங்காடி கட்டுதல். .. | 36.55 |
| 14 | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு—ராஜகோபுரம் கட்டுதல் .. | 8.00 |
| 15 | அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை—வடக்கு கோபுரம் பழுது பார்த்தல் .. .. .. | 6.25 |
| 16 | அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், தேனாம்பேட்டை, சென்னை—அங்காடி கட்டிடம் கட்டுதல் .. .. | 9.00 |
| 17 | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம்—ராஜகோபுரம் பழுது பார்த்தல் .. .. .. .. .. | 6.00 |
| 18 | அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை—மண்டபம் கட்டுதல் .. .. .. .. | 6.25 |
| 19 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, பெரியார் மாவட்டம்—மலைச் சாலைப்பணி செய்தல் .. .. | 7.50 |
| 20 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர் மாவட்டம்,—மருதம் காம்ப்ளக்ஸ் கட்டுதல். .. | 8.10 |
| 21 | அருள்மிகு நாராயணபெருமாள் திருக்கோயில் (இணைப்பு) அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர் பெரியார் மாவட்டம்—மதில் சுவர் மற்றும் மண்டபம் கட்டுதல் .. .. | 5.00 |
| 22 | அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி திருக்கோயில், பெரியநெகமம், பொள்ளாச்சி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்—கல்யாண மண்டபம் கட்டுதல் .. .. | 6.00 |

[1987 ஏப்ரல் 30

| வரிசை எண். (1) | திருக்கோயில் மற்றும் வேலை விபரம். (2) | தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 23 | அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயில், துறையூர், திருச்சி மாவட்டம்—பெருமாள்மலை அடிவாரத்திலிருந்து மலை மேல் திருக்கோயிலுக்கு மலைச்சாலை அமைத்தல் .. .. .. | 5.00 |
| 24 | அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர், தென்னாற்காடு மாவட்டம்—ராஜகோபுரம் கட்டுதல் .. | 9.80 |
| 25 | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், நார்த்தாமலை, புதுக்கோட்டை மாவட்டம்—முடிக் கொட்டகை மண்டபம் அபிவிருத்தி வேலைகள் .. .. .. | 7.15 |
| 26 | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், நார்த்தாமலை, புதுக்கோட்டை மாவட்டம், 5 நிலை ராஜகோபுரம் கட்டுதல். | 5.25 |
| 27 | அருள்மிகு மங்களநாதசுவாமி திருக்கோயில், உத்திரகோசமங்கை, ராமநாதபுரம் மாவட்டம்—சுவாமி சன்னதிக்கு முதல் பிரகாரம் கட்டுதல் .. .. .. | 9.50 |
| 28 | அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல்—26 கடைகள் கட்டுதல் .. .. .. .. | 5.15 |
| 29 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்—மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இரண்டாவது மாடி கட்டிடம் கட்டுதல் .. .. .. .. | 5.00 |
| 30 | அருள்மிகு ஜனகநாராயண பெருமாள் திருக்கோயில், சோழவந்தான், மதுரை மாவட்டம்—கல்யாண மண்டபம் கட்டுதல் .. .. .. .. | 5.00 |
| 31 | அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் திருக்கோயில், காரைக்குடி—கல்யாண மண்டபம் கட்டுதல் .. .. | 5.20 |
| 32 | அருள்மிகு குற்றாலநாதசுவாமி திருக்கோயில், குற்றாலம்—கல்யாண மண்டபம் கட்டுதல். | 6.50 |



1987 ஏப்ரல் 30]

| வரிசை எண். | திருக்கோயில் மற்றும் வேலை விபரம். | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 33 | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு—வசந்தமண்டபம் கட்டுதல் .. .. .. .. | 10.00 |
| 34 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி—அருள்மிகு பழனி ஆண்டவர் மெட்ரிக்குலேஷன் பள்ளிக் கூடம் கட்டுதல் .. .. .. | 5.60 |
| 35 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி—கலைக் கல்லூரிக்கு கீழ் வரிசையில் முதல் மாடி கட்டுதல் .. | 6.00 |
| 36 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி—கலையமுத்தூர் பெண்கள் கலைக் கல்லூரியில் கிழக்கு, மேற்கு வரிசையில் முதல் மாடி கட்டுதல் .. | 8.00 |
| 37 | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி—ஊழியர் குடியிருப்பு கட்டுதல் .. .. .. | 8.40 |
| 38 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி—இடும்பன் மலையில் இடும்பன் மண்டபம் கட்டுதல் .. .. | 6.00 |
| 39 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி—வெளிப்பிரகாரம் விஸ்தரித்தல் மற்றும் ஸ்டோர் ரூம் கட்டுதல். | 5.40 |
| 40 | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை—பிர்லாவிஷ்ரத்திற்கு பின் பக்கத்தில் 19 அறைகள் கொண்ட ஓய்வு அறைகள் கட்டுதல் .. .. | 6.50 |
| 41 | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை—கல்யாணசுந்தரேஸ்வரர் சன்னதியில் (கரியமாணிக்கப்பெருமாள் சன்னதி) சலவைக் கற்கள் பதித்தல் | 5.00 |
| 42 | அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயில், ராமேஸ்வரம்—இரண்டாவது பிரகாரம் கட்டுதல் .. .. .. .. | 5.35 |

[1987 ஏப்ரல் 30

| வரிசை எண். | திருக்கோயில் மற்றும் வேலை விபரம். | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 43 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்— ஊழியர் குடியிருப்பு கட்டுதல். .. .. .. .. | 9.00 |
| 44 | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு—புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுதல் .. .. .. | 8.50 |
| 45 | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு—அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில் ராஜகோபுரம் கட்டுதல் .. .. .. .. | 5.00 |
| 46 | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி—மெட்ரிக்குலேஷன் பள்ளிக் கட்டிடத்தில் முதல் மாடி கட்டுதல். | 7.50 |
| 47 | அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர்—கிழக்கு முதல் கோபுரம் கட்டுதல் .. .. .. .. | 5.80 |
| 48 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்—துணை ஆணையர்/செயல் அலுவலர்—அலுவலகக் கட்டிடம் கட்டுதல் .. .. .. .. | 10.00 |
| 49 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்—திருநெல்வேலி துணை ஆணையர் அலுவலகக் கட்டிடம் கட்டுதல். | 9.50 |

திருவரங்கம் அருள்மிகு ரெங்கநாதசுவாமி திருக்கோயிலின் இராஜகோபுரத் திருப்பணி.

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் அச்சுதராயர் என்னும் மன்னர் தமது வெற்றியின் சின்னமாக திருச்சிராப்பள்ளி அருள்மிகு ரெங்கநாதசுவாமி திருக்கோயிலின் தெற்கு வாசலில் ஒரு கோபுரத்தினை எழுப்பத் திட்டமிட்டார். ஆனால், கோபுரத்தின் அடிப்பகுதியான கல்காரம் மட்டிலும் எழுப்பப்பட்டு முடிவுறாமல் மொட்டைக் கோபுரமாக நின்றது. இதனை 13 நிலைகளுடன் 235 அடி உயரம் உள்ள கோபுரமாக தவத்திரு அகோபில மடத்து ஜீயர் சுவாமி அவர்களால் உபயமாகக் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு அரசு அனுமதி அளித்தது.



1987 ஏப்ரல் 30]

இக் கோபுரத்தின் கல்காரம் 164 அடி நீளமும், 97 அடி அகலமும் கொண்டதும் சிற்ப வேலைப்பாடு மிக்கதும், தொன்மையும் நேர்த்தியானதுமாகும். 13 நிலைகளுடன் கூடிய இந்த இராஜகோபுரத்தின் ஸ்திரத் தன்மையை அறிய வேண்டி அரசு, பொறியாளர்கள் அடங்கிய ஒரு வல்லுநர் குழுவை அமைத்தது. அக்குழு அளித்த அறிக்கையில் இக்கோபுரத்தின் ஸ்திரத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கோபுரத்தின் திருப்பணி முதலில் ரூ. 43,00,000 மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது. ஆனால் அதன் தற்போதைய திருத்திய மதிப்பீடு ரூ. 1,21,00,000 (ஒரு கோடியே இருபத்து ஒன்று இலட்சம் ஆகும்). இந்த திருப்பணி 20–5–1979-ல் துவங்கப்பட்டு தற்போது பதின்மூன்று நிலைகளில் வேலைகள் முடிவுற்றன. குடமுழுக்கு 25–3–1987 அன்று நடைபெற்றது.

இந்த இராஜகோபுரம் மட்டும் மிகப் பெரிய பணிக்காக கர்நாடக மற்றும் ஆந்திர அரசுகளும் நிதி உதவி செய்துள்ளன. தனிப்பட்டோரும் நிதி உதவி செய்துள்ளனர். 13 ஆம் நிலைக்கு தமிழக அரசு ரூ. 7 இலட்சம் நிதி உதவி செய்துள்ளது.

அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு சேலம்.

பழமை வாய்ந்த இத் திருக்கோயில் மலை மீது அமைந்துள்ளது. இதற்கு மலைச்சாலை ஒன்று ரூ. 55 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு இப்பணி தமிழ்நாடு கட்டுமானப் பணிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு சிறப்பு மானியமாக ரூ. 10 இலட்சம் (இரு தவணைகளில் 1985–86-ல் ரூ. 5,00,000–மும், 1986–87-ல் ரூ. 5,00,000-மும் ஆக மொத்தம் ரூ. 10 இலட்சம்) வழங்கப்பட்டது.

மலைப்பாதை வேலை முடிவுறும் தருவாயில் உள்ளது.

அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி திருக்கோயில், தென்காசி.

தென்காசி அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி திருக்கோவிலில் தற்போது உள்ள கல்காரத்தின் மீது இராஜகோபுரம் ஒன்று அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு அதற்கான மதிப்பீடு ரூ. 90 இலட்சத்திற்கு அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இராஜகோபுரத் திருப்பணியில் மூன்றாம் நிலை கட்டி முடிக்கப்பட்டு, நான்காம் நிலை வேலை நடைபெற்று வருகிறது

[1987 ஏப்ரல் 30

ஸ்ரீவில்லிப்புத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலின் ஆடிப் பூரத் தேர்த்திருவிழா.

ஸ்ரீகாமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர், அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலின் பெரிய திருத்தேருக்கு ரூபாய் இரண்டு இலட்சத்தில் மராமத்து செய்து 21–7–1985 ஆம் தேதி ஆடிப் பூரத்தன்று தேர்த் திருவிழா நடத்தப்பட்டது.

மேற்படி திருக்கோயிலில் வடபத்ரசயனர் இராஜகோபுரத் திருப்பணியை தொடருவதற்கு முதற் கட்டமாக, இராஜகோபுரத்தின் ஸ்திரத்தன்மையை ஆய்வு செய்வதற்கு அரசினால் வல்லுநர் குழு ஒன்று அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளது. வல்லுநர் குழு தனது பணியை தொடங்கி உள்ளது.

இவ்வரசு தமது நிதியிலிருந்தும், திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்தும், வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் உள்ள திருக்கோயில் பணிகளுக்கு மானியம் வழங்கியுள்ளது. அதற்கான விவரம் வருமாறு:—

| வரிசை எண்ணும், திருக்கோயிலின் பெயரும் விபரமும். | வழங்கப்பட்ட தொகை. |
|---|---|
| | ரூ. |
| **அரசு மானியம்:** | |
| 1 அருள்மிகு உத்திர சிதம்பர நடராச மந்திர் டிரஸ்ட், சதாரா (மகாராஷ்டிர மாநிலம்) இராஜகோபுரம் கட்டுமான வேலைகள். | 1,00,000 |
| 2 அருள்மிகு ஆதி சங்கரர் விமான மண்டபம் திருப்பணி, அலகாபாத், திரிவேணி சங்கமம், உத்திரபிரதேச மாநிலம். | 1,00,000 |
| 3 அருள்மிகு மத்திய சுவாமிமலை திருக்கோயில் திருமணி மண்டபம், போபால். | 1,00,000 |
| **ஆலய உபரி நிதி:** | |
| 4 அருள்மிகு அலகாபாத் ஆதி சங்கரர் விமானம் கட்ட— | |
| பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம். | 1,00,000 |
| திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் .. .. | 1,00,000 |



1987 ஏப்ரல் 30]

| வரிசை எண்ணும். | திருக்கோயிலின் பெயரும் விபரமும். | வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| 5 | அருள்மிகு ஸ்ரீலங்காதிருகேதீஸ்வரர் திருக்கோயில் திருப்பணி— | ரூ. |
| | அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி .. .. .. .. | 25,000 |
| | அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் .. .. .. .. | 25,000 |
| | அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி. .. .. .. | 1,00,000 |
| | அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் .. .. .. .. | 25,000 |
| | அருள்மிகு பன்னாரி மாரியம்மன் திருக்கோயில், பன்னாரி. .. .. .. .. | 25,000 |
| 6 | மகாராஷ்டிர மாநிலம், செம்பூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்— (அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்) .. .. .. | 25,000 |
| 7 | கலிபோர்னியா சான்பிரான்சிஸ்கோ இந்து கோயிலுக்கு— | |
| | அருள்மிகு மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. .. .. | 1,06,975 |
| | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு .. .. .. .. | 9,354 |
| | (பூஜைக்கு வேண்டிய பொருட்கள், விக்ரகங்கள், உலோக சிலைகள்.) | |
| 8 | அருள்மிகு சதார உத்திர சிதம்பரம் நடராஜர் கோயில். .. .. .. | 3,53,000 |

திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா :

பல திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு நன்னீராட்டு விழாவும் நடைபெற்றது. 1986 ஆம் ஆண்டு மற்றும் 1987 மார்ச் முடிய 64 திருக்கோயில்களுக்கு திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றுள்ளது. அவ்வாறு திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றவைகளுள் கீழ்க்கண்ட திருக்கோயில்கள் முக்கியமானவையாகும் :

| வரிசை எண். | திருக்கோயிலின் பெயர் விபரம். | குடமுழுக்கு நடைபெற்ற நாள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அருள்மிகு சுப்பிரமணிய சித்தி விநாயகர் ஆலயம், சென்னிமலை, பெரியார் மாவட்டம். | 22—1—86 |
| 2 | அருள்மிகு வரசித்தி விநாயகர் ஆலயம், குத்தாலம் தஞ்சை மாவட்டம். | 10—2—86 |
| 3 | அருள்மிகு கல்யாண விகிர்தீசுவரர் ஆலயம் வெஞ்சமாறு கூடல், கரூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 26—2—86 |
| 4 | அருள்மிகு ஆறுமுக நாயனார் ஆலயம், கீழ்த்தொட்டி தொப்பம்பட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 19—2—86 |
| 5 | காஞ்சி வட்டம், கூரம் அருள்மிகு வித்யா வனி பல்லவ பரமேஸ்வரர் சிவன் ஆலயம், செங்கற்பட்டு மாவட்டம். | 20— 3—86 |
| 6 | தஞ்சாவூர் மாவட்டம், திருக்கருகாவூர் அருள்மிகு காவியங்கன்னி அம்பாள் உடனாகிய அருள்மிகு வெண்ணிநடநாத சுவாமி ஆலயம். | 18— 6—86 |
| 7 | கும்பகோணம் அருள்மிகு சக்கரபாணி சுவாமி ஆலயம். | 25—6—86 |
| 8 | அருள்மிகு சுந்தரேஸ்வரசுவாமி ஆலயம், வாளமர் கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம். | 16— 7—86 |
| 9 | அருள்மிகு ஒப்பிலியப்பன் ஆலயம், ஒப்பிலியப்பன் கோவில் தஞ்சாவூர் மாவட்டம். | 27—8—86 |
| 10 | அருள்மிகு அரியநாயகியம்மன் ஆலயம், கீழாநிலைக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம். | 15—9—86 |
| 11 | அள்ருமிகு அட்சயலிங்கசுவாமி ஆலயம், கீழ வேளூர், திருவாரூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | 14—11—86 |
| 12 | அருள்மிகு பவானிசுவரர் திருக்கோயில், சத்தியமங்கலம், பெரியார் மாவட்டம். | 2—2—87 |
| 13 | அருள்மிகு சபாநாயகர் திருக்கோவில், சிதம்பரம், தென்னார்க்காடு மாவட்டம். | 11—2—87 |
| 14 | அருள்மிகு மார்கபந்தீஸ்வரர் திருக்கோயில் விருஞ்சிபுரம். | 11—3—87 |
| 15 | அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், [illegible]ங்கம். | 25—3—87 |



**12. திருமண மண்டபங்கள் மற்றும் பக்தர்களுக்கான வசதிகள்.**

பக்தர்களின் வசதிக்காக ரூ. 94,56,500 செலவில் கட்டப்பட்ட 110 திருமண மண்டபங்கள் தற்போது, திருக்கோயில்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு திருக்கோயில்களில், தற்போது ரூ. 1,40,21,000 மதிப்பீட்டில் 36 திருமண மண்டப கட்டுமான வேலை நடைபெற்று வருகிறது. திருக்கோயில் களுக்கு வரும் சேவார்த்திகளுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 58 ஓய்வு விடுதிகள், 231 குடில்கள், 951 அறைகள் மற்றும் 110 திருமண மண்டபங்கள் உள்ளன.

**13. ஆலய பாதுகாப்பு மற்றும் ஊழியர் நலம் காக்கும் திட்டங்கள்**

**அ. தமிழ்நாடு ஆலய பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்டம் :—**

1984-ல் தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்களில் ஒரு கால பூஜை கூட நடத்த இயலாத ஆலயங்களில் ஒரு கால பூஜையாவது நடைபெற வழிவகை செய்யும் பொருட்டு, ஆலயங்களின் உபரி நிதியைக் கொண்டு ரூபாய் ஐந்து கோடிக்கு ஒரு நிலையான வைப்பு நிதி ஏற்படுத்த அரசு உத்திரவிட்டது. இத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் நிதி வசதியுள்ள ஆலயங்களிலிருந்து உபரி நிதியாக ரூ. 5 கோடி சென்னை, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, ஆணையர் பதவிப் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆலய பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்டம் சம்பந்தமான செலவுகள் மேற்கண்ட நிலையான வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து செய்யப்பட்டு வருகின்றன. இந்த வைப்பு நிதியிலிருந்து கீழ்க் கண்டவாறு ஒரு கால பூஜை நடத்தக் கூட வசதியற்ற ஆலயங்களுக்கு ஒரு கால பூஜை நடத்துவதற்காக பிரதி ஆலயத்திற்கும் ரூ. 5,000 வீதம் வழங்கப்பட்டுள்ளது.

ஜூலை 1985-ல் 32 ஆலயங்கள் ரூ. 1.60 லட்சம்.

ஆகஸ்ட் 1986-ல் 1,30 ஆலயங்கள் ரூ. 65.00 லட்சம்.

இந்த வைப்பு நிதியிலிருந்து வங்கிகளில் முதலீடு செய்வதனால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 50 லட்சம் கிடைக்கப் பெறுகிறது. ஒரு கால பூஜை கூட நடத்த இயலாத திருக்கோயில்களை அனைத்து மாவட்டங்களிலும் தேர்ந்தெடுத்து அங்கு பூஜைகள் மீண்டும் நடைபெற இந்நிதியில் இருந்து தொடர்ந்து நிதியுதவி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. தற்போது கைவசமுள்ள வட்டித் தொகையில் இருந்து சுமார் 500 திருக்கோயில்களுக்கு இந்நிதியாண்டில் (1986–87) மேற்சொன்னவாறு தேர்ந்தெடுத்து ரூ. 25 லட்சம் வரை நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.

இவ்வைப்பு நிதியின் வட்டியினைக் கொண்டு ஒவ்வொரு நிதி ஆண்டிலும் சுமார் 1,000 நிதிவசதியற்ற கோயில்களுக்கு ரூ. 5,000 வீதம் ஒரு கால பூஜைத் தொகை வழங்கப்படும்.

[1987 ஏப்ரல் 30

ஆ. தமழ்நாடு திருக்கோயில்கள் திருப்பணி நிதி உதவித் திட்டம்:

தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்கள் பல பழுதடைந்து திருப்பணி செய்ய நிதி வசதி இல்லாமல் உள்ளன. இக்கோயில்களைப் பழுது பார்த்து திருப் பணி செய்வதற்கு பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து ரூ. 1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரந்தர வைப்பு நிதியாக வங்கிகளில் மூலதனம் செய்யப்பட்டு அதினின்று கிடைக்கும் வட்டி வருவாயினின்றும் கிராமப்புறக் கோயில்களின் திருப்பணிக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஏற்கெனவே 1985 ஆம் ஆண்டு அங்கீ கரிக்கப்பட்டுள்ள 85 திருக்கோயில்களுடன் மேலும் 65 திருக் கோயில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மொத்தம் 150 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ. 15 லட்சம் வழங்கப் பட்டது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பயனடையத்தக்க ஆலயங்களைக் கணக்கிட்டு தொடர்ந்து நிதி உதவி அளித்து திருப் பணி செய்ய நடவடிக்கைகள் உள்ளன.

இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக திருநெல்வேலி மாவட்டத் திலுள்ள கோயில்களில் 44 நலிந்த நிதி வசதியற்ற கோயில் களைத் தேர்வு செய்து கோயில் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 10,000 வீதம் 44 கோயில்களுக்கு ரூ. 3,53,700 வழங்க உத் தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைச் சிறப்புற நிறைவேற்றிட திருப்பணிக்குழு அமைத்து, கோயிலுக்கான மதிப்பீட்டினை அங்கீகாரம் செய்து, திருப்பணி செய்திட உரிய அறிவுரைகள் சார்நிலை அலுவலர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் செயல் பாடுகளை சம்பந்தப்பட்ட துறை ஆணையர்கள் கவனித்து வரு கின்றனர்.

இ. தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் நலம் காக்கும் திட்டம் :

1984 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நலிவுற்ற நிலையில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் மிகக் குறைந்த ஊதியம் பெறும் திருக்கோயில் ஊழியர்களின் நலனைக் கருதி அவர்களுக்கு கடன் உதவி மற்றும் குடும்பத்திற்குக் கல்வி, மருத்துவத்திற்கு நிதி உதவி செய்யும் பொருட்டு பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடிக்கு



1987 ஏப்ரல் 30]

ஒரு நிலையான வைப்பு நிதி ஏற்படுத்தவும் இவ்வமைப்பு நிதியில் இருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து மேற்படி ஆலய ஊழியர் களுக்கு நிதி உதவி செய்வதற்கும் அரசு உத்திரவிட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தற்போது பழநி திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடிக்கான நிலையான வைப்பு நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிலையான வைப்பு நிதியின் வட்டி வருமானத்திலிருந்து மிக குறைந்த ஊதியம் பெறும் ஆலய ஊழியர்களின் சிறார்களுக்கும் குடும்பத்தினருக்கும் கல்வி உதவி, மருத்துவ உதவிச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் மேற்கண்ட வைப்பு நிதியில் வட்டியிலிருந்து ஆலய ஊழியர்களின் நீண்டகால சம்பள நிலுவைகளைத் தீர்ப்பதற் காக கீழ்க்கண்டவாறு தொகை வழங்கபபட்டுள்ளது—

| சம்பள பாக்கிக்கான காலம். | வழங்கப் பட்ட தேதி. | ஆலயங் களின் எண் ணிக்கை. | சிப்பந்தி களின் எண் ணிக்கை. | வழங்கப் பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 31–3–1985 வரை. | 20–7–1985 | 145 | 827 | 5,65 |
| 31–12–1985 | 12–8–1986 | 406 | 1,603 | 9,79 |

மீண்டும் 30–6–1986 முடிய உள்ள காலத்தில் ஏற்பட்டுள்ள ஆலயப் பணியாளர்களின் சம்பள நிலுவைகளைப் பட்டுவாடா செய்யப்படவுள்ளது.

14. சமூக நலப் பணிகள் :

இந்து ஆதி திராவிடர், பிற்பட்டோர் வகுப்பினைச் சேர்ந்த இந்துக்கள் ஆகியோர் திருமணங்கள் :

இந்து ஆதி திராவிடர், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஏழை எளிய இந்துக்கள் ஆகியவர்கள் திருமணம் ஒவ்வொன்றிற்கும் அரசின் உதவித் தொகையாக அரசின் கொள்கைக்கிணங்க நிதி வசதி படைத்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 750.00 முதல் ரூ. 1,000,00 வரை செலவிடப்படுகிறது.

[1987 ஏப்ரல் 30

இந்தத் திட்டம் முதன் முதலாக அங்கீகரிக்கப்பட்டபோது 15–8–1981-லிருந்து நாளதுவரை 1,454 திருமணங்கள் ரூ. 10,42,280.58 செலவில் நடத்தப்பட்டுள்ளன. இதில் 1,148 திருமணங்கள் ஆதி திராவிட மணமக்களுக்கு நடத்தி வைக்கப்பட்ட திருமணங்களாகும்.

15. 1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15, சுதந்திர நாள் அன்று நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து :

தமிழகத்திலுள்ள இந்துக்கள் அனைவரும் சாதி வேறுபாடின்றி திருக்கோயில்களில் வழிபாடு செய்வதற்கு எந்த இடையூறுமில்லை இந்த நிலையை எடுத்துக் காட்டும் வகையில் ஆதி திராவிட மக்கள் இந்து சமய நிகழ்ச்சியில் அதிக அளவில் பங்கு கொள்வதற்கான வழி வகைகளை உயர்த்தும் பொருட்டும், சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தும் தமிழகம் முழுவதும் 2,507 திருக்கோயில்களில் ரூ. 11.41 இலட்சம் செலவில் 15–8–1986 சுதந்திர நாள் அன்று நடத்தப்பட்டது. இதில் 6.3 இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர். பல்வேறு திருக்கோயில்களில் நடந்த இந்த விழாக் ளில் மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது வாழ்வில் உள்ள தலைவர்களும் கலந்துக் கொண்டனர்.

16. அன்பு இல்லங்களைப் பராமரித்தல் :

திருக்கோயில்களின் ஆதரவில் 1,125 சிறுவர்கள் மற்றும் 163 சிறுமிகள் ஆகியோர்களைக் கொண்ட 29 அன்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களை நடத்துவதற்கு ஆகும் தொடர் செலவில் 75 சதவீதம் தொகையைத் திருக்கோயில்களும், 25 சதவீதம் தொகையை அரசும் ஏற்கிறது. சென்ற 1985–86 நிதி ஆண்டில் சுமார் ரூ. 11 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இதைத் தவிர, திருக்கோயில்கள் முழுமையாகத் தங்கள் நிதியைக் கொண்டு ஏழு அன்பு இல்லங்களைப் பராமரித்து வருகின்றன. இந்த ஏழு அன்பு இல்லங்களில் தற்போது 360 நபர்கள் உள்ளனர்.

17. பொருட்காட்சி :

மாவட்ட தலைமையிடத்திலும், சென்னையிலும் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் அரசுப் பொருட்காட்சிகளில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கலந்துக் கொண்டு மிகச் சிறப்பான முறையில் அரங்குகள் அமைத்து, தமிழ்நாடு அரசின் பரிசுகளையும் பெற்று வருகின்றன.



1987 ஏப்ரல் 30]

| | | |
|---|---|---|
| 1 அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி. | 9–1–1986 முதல் 20–4–1986 முடிய. | முதற் பரிசு |
| 2 அரசு பொருட்காட்சி, திருச்சிராப்பள்ளி. | 7–3–1986 முதல் 28–4–1986 முடிய. | ஷை |
| 3 அரசுப் பொருட்காட்சி, மதுரை. | 12–4–1986 முதல் 1–6–1986 முடிய. | ஷை |
| 4 அரசுப் பொருட்காட்சி, திண்டுக்கல் (அண்ணா மாவட்டம்). | 15–9–1986 முதல் 27–10–1986 முடிய. | ஷை |
| 5 கோடைவிழாப் பொருட்காட்சி, உதகமண்டலம். | 11–5–1986 | இரண்டாம் பரிசு. |

18. '' திருக்கோயில் '' இதழ் வெளியீடு :

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, 1958 ஆம் ஆண்டிலிருந்து '' திருக்கோயில் '' என்ற பெயரில் தலை சிறந்த ஆன்மீகத் திங்கள் இதழ் ஒன்றையும் வெளியிட்டு வருகிறது. இந்தியாவிலும், வெளிநாட்டிலுமாக 4,500 உறுப்பினர்கள் இப்பொழுது திருக்கோயிலின் இதழ் படித்து வருகின்றனர். மிகச் சிறந்த சமயப் பேரறிஞர்கள் ஒப்பற்ற சமயக் கட்டுரைகளை இவ்விதழில் வழங்கி வருகின்றனர். இந்து சமயத் தத்துவங்களையும் அதன் கொள்கைகளையும் பரப்புகின்ற ஒப்பற்ற பணியைத் திருக்கோயில் மிகச் சிறப்பாக ஆற்றி வருகின்றது.

திருக்கோயில் இதழின் தரம், மற்றும் அதனுடைய வளர்ச்சி முதலியவற்றை அவ்வப்போது கண்காணித்து உயர்த்தவும், அதற்கான தம் ஆலோசனைகளை வழங்கவும் ஓர் ஆசிரியர் குழாம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

19. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி— ஆற்றிவரும் பணிகள் :

கல்வி, மருத்துவம், கலாச்சாரம், சமூகநலம் ஆகியவற்றைப் பற்றிய கல்வி நிலையங்கள் பல சமய நிறுவனங்களால் நிருவகிக்கப்படுகின்றன. தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் அதிக வருமானம்பெறும் திருக்கோயிலாகும். நாட்டின் பல பாகங்களினின்றும் பெரும்பான்மையான சேவார்த்திகள் கூடும் திருத்தலமாக விளங்குவது பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் 1395 ஆம் பசலி வருமானம் ரூ. 3,74,62,387 ஆகும். இதில் 33 சதவிகிதம் உண்டியல் மூலம் பெறப்படும் வருவாயாகும். இத்திருக்கோயிலின்

[1987 ஏப்ரல் 30

பல முதலீட்டுகளில் ரூ. 7,19,76,177.98 அளவில் உபரி நிதி சேமிப்பாக உள்ளது. இவை நீங்கலாக கிராமப்புறத் திருக்கோயிலின் திருப்பணித் திட்டத்திற்காக இத்திருக்கோயில் நிதியினின்று ரூ. 1 கோடி தனி நிதியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. மற்றும் தமிழ்நாடு ஆலய மேம்பாட்டுத் திட்ட நிதி, தமிழக திருக்கோயில் பணியாளர்கள் நல நிதித்திட்டம் ஆகிய இரு திட்டங்களுக்குமாக இத்திருக்கோவில் நிதியினின்றும் ரூ. 1,68,00,000-க்கான தொகை அளிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலினின்று சமுதாய நலப்பணிகளாக கீழ்க்கண்ட கல்வி நிலையங்கள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன :—

1. அருள்மிகு பழநியாண்டவர் ஆண்கள் கலைக்கல்லூரி.
2. அருள்மிகு பழநியாண்டவர் பெண்கள் கலைக்கல்லூரி.
3. அருள்மிகு பழநியாண்டவர் ஆண்கள் பாலிடெக்னிக்.
4. அருள்மிகு பழநியாண்டவர் பெண்கள் பாலிடெக்னிக்.
5. அருள்மிகு பழநியாண்டவர் மெட்ரிக் பள்ளி.
6. அருள்மிகு பழநியாண்டவர் போதனா பள்ளி.
7. அருள்மிகு பழநியாண்டவர் செவிடர் ஊமையர் பள்ளி.
8. அன்பு இல்லம்.
9. பாலர் காப்பகம்.
10. நாதஸ்வரப் பள்ளி.
11. தவில் பள்ளி.
12. வேதசிவ ஆகம பாடசாலை.
13. ஆங்கில மருத்துவமனை.
14. சித்த மருத்துவமனை.
15. நூலகம்.
16. சிறு குடில்கள் மற்றும் சத்திரங்கள்.

கல்லூரிகளுக்கும் பாலிடெக்னிக்குகளுக்கும் ஒரு பகுதி அரசு மானியம் கிடைக்கப்பெறுகிறது. ஏனையப் பள்ளிகள் அனைத்திற்கும் ஆகும் செலவுகள் இத்திருக்கோயில் நிதியினின்றும் செலவிடப்படுகின்றது. உபயதாரர்கள் சிறுகுடில்கள் திட்டத்தின் கீழ் திருக்கோயிலில் இதுவரை 44 சிறு குடில்கள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் இக்குடில்கள் கட்டுவதற்காகவும் பாதித் தொகை உபயதாரர்களாலும், மறுபாதி திருக்கோயில் மூலமும் செலவிடப்படுகின்றது. மேலும், 3 குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயிலின் தக்கார் தனது செலவில் (ரூ. 2.10 இலட்சம்) ஒரு குடில் கட்ட முன் வந்துள்ளார். அதன் வேலை நடைபெற்று வருகிறது. தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரம் ஆகிய முக்கிய திருவிழாக்களுக்குத் தமிழகத்தின் முக்கிய பல பகுதிகளிலிருந்தும் நடந்தே முருகனைத்



1987 ஏப்ரல் 30]

தரிசிக்க பழனிக்கு வரும் யாத்ரீகர்களுக்கு ஆங்காங்கு தங்கி இளைப்பாருவதற்காக 10 கிலோ மீட்டர் தூரத்தில் திண்டுக்கல், தாராபுரம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய ஊர்களுக்கு இடையில் பல தங்கும் மண்டபங்கள் கட்டும் திட்டத்தினை இத்திருக்கோயில் நிர்வாகம் மேற்கொள்ள திட்டமிட்டு அதனைச் செயல்படுத்த பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித் துறையின் வையாபுரி கண்மாய் புறம்போக்கு பகுதியில் உள்ள 12 ஏக்கர் நிலத்தினை '' திருமண மண்டபம் '' சிறு குடில்கள், சத்திரங்கள், பொதுக் கழிவறைகள், வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகியவை கட்டுவதற்காக அவ்விடத்தில் உரிமையினை திருக்கோயிலுக்குப் பெற அரசுக்கு தெரிவிக்கப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகிறது. இத்திட்டத்தினால் பழனி நகரம் அழகு பெறுவதுடன், மேற்குப் புறமுள்ள குளமும் ஆழப்படுத்தப்படும். இதற்கு ரூ. 30 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

12 அடி உயரமுள்ள இடும்பன் சிலை ரூ. 83,000 செலவில் வடிக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது. இச்சிலை இடும்பன் மலையில் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. மலைமீது செல்வதற்கு படிகள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மலையில் கைப்பிடிச் சுவர்கள் மற்றும் மண்டபம் அமைக்க ரூ. 13,60,000 செலவில் பணி விரைவில் துவக்கப்பட உள்ளது. இது முற்றிலும் புதிய பணியாகும். பழனியின் சுற்றுப்புறங்களில் உள்ள சிறிய திருக்கோயில்கள் பழனி திருக்கோயிலுடன் நிர்வாகத்தின் பொருட்டு இணைக்கப்பட்டுள்ளன. அத்தகைய சிறு திருக்கோயில்கள் 39, இத்திருக்கோயிலின் நிர்வாகத்தின்கீழ் உள்ளன.

ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள இரண்டு மின் இழுவை இரயில்களுடன் மூன்றாவது இழுவை ரயில் ரூ. 40 இலட்சம் செலவில் பக்தர்களின் வசதிக்காக அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் துவங்கப்பட உள்ளது. மேலும், இத்திருக்கோயிலின் மூலம் கட்டிட வேலைகள் ராஜகோபுரம், திருமதில், கல்யாண மண்டபங்கள், சத்திரங்கள், குடில்கள் மற்றும் கல்வி நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டும் பணி ரூ. 651.59 இலட்சம் செலவில் பின்வருமாறு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. தற்போது நடைபெற்று வரும் 31 கட்டுமானப் பணிகளின் மதிப்பு .. .. | 169.02 |
| 2. அனுமதிக்கப்பட்டு, எடுத்துக்கொள்ளப்பட உள்ள வேலைகள் மதிப்பு .. .. | 94.57 |
| 3. புதிய திட்டங்கள் அனுமதிக்கப்பட்டவை .. | 378.00 |
| 4. காலமுறை பராமரிப்பு .. .. .. | 10.00 |
| கூடுதல் .. | 651.59 |

[1987 ஏப்ரல் 30

20. அர்ச்சகர் பயிற்சி ஆலோசனைக் குழு :

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் பூசை செய்யும் பூசாரிகள் பரம்பரை உரிமையை நீக்கும் பொருட்டு 1959 ஆம் ஆண்டு 22-வது சட்டமாகிய இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 55-வது பிரிவு—தமிழ்நாடு அரசின் 1971 ஆம் ஆண்டு 2-வது சட்டமாகிய இந்து சமய அறநிலையச் சட்டத்தின் திருத்தச் சட்டம் மூலம் திருத்தப்பட்டது. எல்லோருக்கும் வேலை வாய்ப்பு சமமாக இருக்க வேண்டுமென்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதையும், உச்ச நீதி மன்றத் தீர்ப்பினையும் கருத்தில் கொண்டு சாதி, இன வேறுபாடின்றி பூசகரையும் இதர உள் துறை பணியாளர்களையும், நியமனம் செய்வது குறித்து அரசுக்குத் தக்க ஆலோசனை கூறுமாறு நீதிபதி மகராஜன் தலைமையில் அரசாணை (பல்வகை) எண். 1573, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை நாள் : 24–9–1979 மூலம் அமைத்தது. இந்த வல்லுநர் குழு சூலை 1982 ஆம் ஆண்டில் தனது பரிந்துரைகளை அரசுக்குச் சமர்ப்பித்தது.

மேற்படி. வல்லுனர் குழு பரிந்துரைகளைச் செயல்படுத்த உரிய வழிமுறைகளை வகுத்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்க 14 நபர்கள் கொண்ட குழுவை நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் அரசாணை எண். 582, வணிக வரி மற்றும் அறநிலையத்துறை, நாள் : 2–6–1984 மற்றும் அரசாணை எண். 762, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் : 28–6–1984 இல் அரசு நியமித்தது.

இக்குழுவினை அரசு நியமித்ததின் நோக்கம் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் சேர்க்கப்படுகிறவர்களுக்கு வயது வரம்பு தேவையான கல்வி பயிற்சி, பாடத் திட்டம், தேர்வுத்திட்டம், பாடப்புத்தகங்கள், செயல்முறைப் பயிற்சி, பயிற்சி கால மாத உதவித் தொகை பயிற்சிக்குப்பின் கொடுக்கப்பட வேண்டிய மாத ஊதியம் பயிற்சி நடத்த வசதியான இடம் ஆகியவற்றை ஆராய்ந்து பரிந்துரைகள் வழங்க வேண்டுவது.

இக்குழு 7 முறைகள் கூடி ஆய்வு செய்தது. அரசாணை எண். 1058, நாள் : 20–11–1985இல் பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் செலவில் அர்ச்சகர் பயிற்சிப்பள்ளி ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டது.

தற்போதுள்ள அர்ச்சகர்களில் சிலருக்கு ஆகம விதிகளிலும் பூசை முறைகளிலும் போதுமான பயிற்சி இல்லாமலும் உள்ள குறையைப் போக்க முதற்கட்டமாக சைவ அர்ச்சகர்களுக்கு குறுகிய கால (45 நாட்கள்) பயிற்சித் திட்டம் ஒன்றை வகுத்து முதலில் திருப்பரங்குன்றத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது முடிந்த உடன் சென்னை மற்றும் இதர இடங்களில் நடத்தப்படும். அதுபோலவே வைணவ அர்ச்சகர்களுக்கும் தனியே பயிற்சி அளிக்கப்படும்.



1987 ஏப்ரல் 30]

திருக்கோயிலிலுள்ள பள்ளிகளில் விடுமுறை கால வகுப்புகள் :

திருக்கோயிலில் நடத்தப்படும் பள்ளிகளில் விடுமுறைகால வகுப்புகள் 25–12–1986 முதல் 3–1–1987 முடிய நடத்துவது பற்றி திட்டம் மற்றும் அறிவுரைகள் எல்லா சார்நிலை அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டது. அதன்படி விடுமுறை கால வகுப்புகள் கீழ்க்கண்ட ஆலயங்களினால் நடத்தப்படும் பள்ளிகளில் நடத்தப்பட்டது:—

| வரிசை எண்ணும், ஆலயத்தின் பெயரும். | பள்ளியின் பெயர். | மாணவர்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. திருவாரூர் வட்டம், கீழ்வேளூர் அருள்மிகு அட்சயலிங்கேஸ்வரர் ஆலயம். | அஞ்சுவட்டத்தம்மன் பெண்கள் உயர்நிலைப் பள்ளி. | 25 |
| 2. திருவெண்காடு அருள்மிகு வேதாரண்ய ஸ்வாமி ஆலயம். | ஆண்கள் உயர்நிலைப் பள்ளி. | 30 |
| | பெண்கள் உயர்நிலைப் பள்ளி. | 30 |
| 3. கோயிலூர் அருள்மிகு மந்திரபுரீஸ்வரர் ஆலயம். | முத்துப்பேட்டை அருள்மிகு பெரிய நாயகி மகளிர் மேல் நிலைப்பள்ளி. | 50 |
| 4. திருச்சி மாவட்டம், கல்லங்குறிச்சி, அருள்மிகு கலியுக வரதராசப்பெருமாள் ஆலயம். | பெண்கள் உயர்நிலைப் பள்ளி. | 40 |
| 5. மேலூர் வட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில். | சுந்தரராஜா நடுநிலைப் பள்ளி. | 50 |
| 6. திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம். | ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி. | 50 |

| வரிசை எண்ணும் ஆலயத்தின் பெயரும். (1) | பள்ளியின் பெயர். (2) | மாணவர் கள். (3) |
| --- | --- | --- |
| 7. நெல்லை, அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி திருக் கோயில். | காந்திமதியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி. | 50 |
| 8. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ் வரர் திருக்கோயில். | மீனாட்சி சுந்தரேஸ்வரரீ பெண்கள் மேல்நிலைப் பள்ளி. | 50 |
| 9. இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாத சுவாமி ஆலயம். | பர்வதவர்த்தினி பெண்கள் மேல்நிலைப் பள்ளி. | 68 |

மேற்கண்ட விடுமுறை கால வகுப்புகளில் மாணவ-மாணவி யருக்குப் '' பன்னிரு திருமுறை '', '' நன்னெறி ஒழுக்கம், '' வைணவ நெறி '' '' சைவ நெறி '' ஆகியவை கற்பிக்கப்பட் டன. கூட்டு வழிபாடு, தேகப் பயிற்சி, விளையாட்டுப் பயிற்சி பேச்சுப் போட்டி, சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், பட்டி மன்றங்கள், சுற்றுலா, சான்றிதழ் வழங்குதல், பரிசு வழங்குதல் ஆகியவை நடைபெற்றன.

21. திருக்கோயில் வழிபாட்டில் விஞ்ஞான அடிப்படை :

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் சொல்லப்படும் பாக் கள், மந்திரங்கள் மற்றும் வழிபாட்டு விக்கிரகங்களுக்குத் தண்ணீர், எண்ணெய் முதலியவற்றால் செய்யப்படும் அபிஷேகங் கள், அவைகளுக்குப் பழங்கள் இலை இவைகளை உபயோகித் தல் ஆகியன அறிவியல் அடிப்படையிலானக என்பது பற்றியும் வழிபாட்டின் போது உச்சரிக்கப்படும் ''ஓம்'' என்ற மந்திர மும், அபிஷேகத்தின்போது விக்கிரகம்ளிலிருந்து அபிஷேகப் பொருள்களுக்கு ஏற்ப மாறுபடும் மின் அதிர்வுகளும் வழிபடும் பக்தர்கள் உடல் ஆரோக்கியம் பெற உதவுகிறது என்பது பற் றிக் கூறப்படும் கூற்றுகளுக்கு விஞ்ஞான பூர்வமாக ஏதாவது அடிப்படை உள்ளதா எனக் கண்டறிய இயற்பியலும், மின் கருவி இயக்கங்கள் மற்றும் மின் சுற்றுகளிலும் வல்லுநர்களைக் கொண்டு சென்னை கிண்டி பொறியியல் கல்லூரி பவர்சிஸ்டம்ஸ் பேராசிரியர் டாக்டர் பா. இளங்கோ அவர்களைத் தலைவராகக் கொண்ட ஏழு பேர்கள் அடங்கிய வல்லுநர் குழு ஒன்றை அரசு 27–10–1984 இல் அமைத்துள்ளது. இந்தக் குழு வழிபாட்டு முறைகளைச் சோதனைகள் மூலம் பரிசீலிக்க மனோதத்துவ மருத்துவர் மற்றும் ஆகம விதிகளில் தேர்ச்சி பெற்ற வல்லுநர் ஒருவரையும் குழுவில் சேர்த்து பின் ஆய்வுகளை நடத்தி கருத்துக்களைத் திரட்டி அறிக்கை அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகிறது.



இந்தக் குழு தமிழ்நாட்டில் உள்ள மேலும் சில திருக்கோயில் களுக்கு விஜயம் செய்து ஆராய்ச்சி செய்ய உள்ளது. குழுவின் அறிக்கை பெறப்பட்ட உடன் மேல் நடவடிக்கை தொடரும்.

22. ஆணையாளரின் பொது நலநிதி :

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் 97 ஆம் பிரிவின்படி இந்து சமய அறக் கட்டளைகள் பொதுநல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமய நிறுவனங்கள் தங்கள் உபரி நிதியிலிருந்தும் அல்லது வேறு எவரேனும் மனமுவந்து கொடுக் கும் தொகையைக் கொண்டும் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து இந்து சமய அறநிலையங்களுக்கும் அல்லது யாதொரு வகைசமய நிறுவனங்களுக்கும் பொதுவாக உள்ள சமய நெறி களைப் பரப்பவும், திருக்கோயில்களையும் அதில் உள்ள சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் ஆகியவற்றைப் புதுப்பிக்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் ஆகிய பணிகளுக்கு இத்தொகையில் இருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது. இந்நிதி ஆணையாளரின் பொறுப் பில் உள்ளது. 1–4–1986 ஆரம்ப இருப்புடன் 28–2–1987 வரை இந்நிதியில் இருந்த மொத்தத் தொகை ரூ. 19.97 இலட்சம். இந்நிதியில் இருந்து 1986 ஆம் ஆண்டில் ரூ. 9,90,260.26 தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.—

| | |
| --- | --- |
| 1. திருப்பணி வேலைகள் .. | ரூ. 4,09,696.00 |
| 2. பத்தூர் விஸ்வநாதசாமி திருக் கோயில் நடராஜர் சிலை களவு லண்டன் விசாரணை. | ரூ. 2,99,462.70 (இஃது அரசால் திரும்ப துறைக்கு செலுத்தப் பட உள்ளது.) |
| 3. சேக்கிழார் விழா .. .. | ரூ. 1,00,000,00 |
| 4. விழாவிற்கான விளம்பரச் செலவுகள். | ரூ. 67,399.19 |
| 5. தமிழக திருக்கோவில்கள் திரு விழா சம்பந்தமான திரைப் படம் எடுக்க தமிழக அரசு திரைப்பட நிறுவனத்திற்கு வழங்கிய தொகை. | ரூ. 1,12,579.37 |
| 6. தொழில் நுட்ப வல்லுநர் குழு விற்கு பயணப்படி. | ரூ. 1,123.00 |
| | ரூ. 9,90,260.26 |

[1987 ஏப்ரல் 30

23. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத் திருத்தம்.

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் பிரிவுகள் 6 (13), 23, 36, 59 59ஏ, 60 மற்றும் 60ஏ ஆகியவற்றிற்கு சட்டத் திருத்தம் தமிழ்நாடு சட்டம் 64/1981-ல் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள திருமடங்களில் மடாதிபதிகள் நியமன முறை, மற்றும் கட்டுப்பாடு குறித்து முக்கிய அம்சங்கள் அடங்கிய இந்த சட்டத் திருத்தத்துக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

2. 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் பல்வேறு பிரிவுகளுக்கு சட்டத் திருத்தங்கள் அரசின் தீவ்ர பரிசீலனையில் உள்ளன.

**24.** தங்கம் வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களை சரி பார்க்கும் குழு.—

திருக்கோவில்களில் உள்ள நகைகளை சரி பார்த்தல் மற்றும் மறு மதிப்பீடு செய்தல் போன்றவற்றில் தற்போதுள்ள நடைமுறைகளை இன்னும் பயன் அளிக்கும் வகையில் செயல்படுத்த ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் தங்கம், மற்றும் வைர நகைகளை சரி பார்ப்பதில் நிபுணர்கள் ஆன்மீகத்துறையில் ஈடுபாடுகொண்ட பொறுப்பு வாய்ந்த 4 பிரமுகர்கள் அடங்கிய ஒரு வல்லுநர் குழுவை அரசு நியமித்துள்ளது.

தமிழக திருக்கோயில்களில் நகைகளை சரி பார்ப்பதன் பொருட்டு தேவையான பொழுதும், சந்தேகம் அல்லது புகார்கள் வரும் போதும் சம்பந்தப்பட்ட திருக்கோவிலுக்குச் சென்று ஆய்வு செய்வதும், தங்கம், வெள்ளி, வைரம் மற்றும் இதர மதிப்பு வாய்ந்த கற்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வதும் இக்குழுவினர் பணிகள் ஆகும்.

பெரிய திருக்கோவில்களில் உள்ள விலையுயர்ந்த நகைகளும் மற்றும் விலையுயர்ந்த பொருட்களையும் சிறந்த முறையில் பாதுகாக்கும் பொருட்டு தற்போது காவல் பணியில் உள்ள சாதாரண காவலர்களைத் தவிர்த்து அவர்களுக்குப் பதில் முன்னாள் ராணுவ வீரர்களை ஆயுதத்துடன் காவல் பணியில் நியமனம் செய்து பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துவது அத்தியாவசியம் எனவும், தற்போது திருக்கோவில்களில் உள்ள பாதுகாப்பு முறைகள் எவ்வாறு உள்ளது என்பதை ஆராயவும், அங்குள்ள திருவாபரணங்களை பரீட்சார்த்தமாக 13–9–1986, 5–11–1986 மற்றும் 3/4–2–1987 ஆகிய நாட்களில் முறையே மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில் மற்றும் திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசாமி திருக்கோயில் ஆலயங்களின் நகைகளையும், விலையுயர்ந்த பொருட்களையும் சரி பார்த்தது.



1987 ஏப்ரல் 30]

மேற்படி குழு மேலும் பல முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் விலையுயர்ந்த நகைகள் உள்ள திருக்கோயில்களுக்கும் சென்று நகைகளைப் பார்வையிட உத்தேசித்துள்ளது.

25. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் கணிப்பகப் பொறி ( computer ) நிறுவுதல் :

திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள், இதர விலை மதிப்பற்ற ஆபரணங்கள் இன்னோரன்ன பொருட்கள் மற்றும் நிர்வாகம் குறித்து தகவல்களைச் சேகரித்து வைக்க, இந்து சமயஅறநிலைய ஆட்சித்துறையில் கணிப்பகப்பொறி (Computer) நிறுவ அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துப் பரிசீலித்து வருகிறது. இது குறித்து விவாதிக்கப்பட்டு முதலில் உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர் நிலையிலுள்ள கோயில்களுக்குண்டான அடிப்படைப் புள்ளி விவரங்களைச் சேகரித்து கணிப்பகப்பொறி நிறுவுதல் குறித்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்க இந்து சமய அறநிலைய ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். ஆணையரது அறிக்கை கிடைக்கப் பெற்றதும் பரிசீலிக்கப்பட்டு செயல் வடிவம் கொடுக்கப்படும்.

26. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குதல்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையில் உள்ள பணியாளர்கள் ஆலய சொத்துக்களை நிர்வகித்தல், ஆலய வருமானத்தைப் பாதுகாத்தல், மற்றும் பெருக்குதல், ஆலய பண்பாடு மற்றும் பாரம்பரியத்தைப் பேணிக் காத்தல், அனைத்துப் பிரிவு மக்களின் உணர்வுகளை மதித்து ஆலய நிர்வாகத்தை நிர்வகிக்கும் பொறுப்பு போன்ற பல தரப்பட்ட பொறுப்புகளை நிர்வகிக்க வேண்டியுள்ளது. அன்னார் ஏற்க வேண்டிய பொறுப்புகளுக்கு ஏற்ற வகையில் தற்போதுள்ள பயிற்சி போதுமானதாக இல்லையாதலால் மேற்படி பொறுப்புகளின் பேரில் தக்க பயிற்சி அளிப்பது இன்றியமையாததாகும்.

எனவே நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் உதவி ஆணையர்கள் மற்றும் முதுநிலைச் செயல் அலுவலர்களுக்கு அறிமுகப் பயிற்சியும் ( Inductian Course ) ஏற்கெனவே பணியிலிருந்து வரும் பணியாளர்களுக்கு மறு பயிற்சியும் ( Refresher Course ) அளிப்பதற்கான ஆணைகளை அரசு வெளியிட்டுள்ளது. இதன்படி நேரடி நியமனம் பெறும் உதவி ஆணையர் மற்றும் செயல் அலுவலர் நிலை-1 ஆகியவர்கள் 5 திங்கள் பல்வேறு நிலைப் பணிகளில் முறையான பயிற்சி பெறுவதுடன் ஆலயங்களிலுள்ள சிலை மற்றும் சிற்பங்கள் பாதுகாப்பு மற்றும் தொல்பொருள் துறையில் பதிவு செய்யப்படுவது பற்றியும் அந்தத்துறை வல்லுநர்களிடம் பயிற்சி பெறுவதும் இந்து மதத்தின் முக்கியக் கூறுகளாகத் திகழும் சைவம், வைணவம், சாக்தம், கணபதியும், கௌமாரம் ஆகியவற்றின் அடிப்படைக் கோட்பாடுகள் குறித்து இப் பொருள்களில் சிறப்புத் தகுதி வாய்ந்தவர்களிடம் பயிற்சி பெறுவதும் அடங்கும்.

[1987 ஏப்ரல் 30

27. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை பணி முன்னேற்றம் பற்றிய ஆய்வு—

அரசின் கீழ் உள்ள பல்வேறு துறைகளின் பணிகளை விரைவாக முடிக்க ஏதுவாக அரசால் அத்துறை சம்பந்தப்பட்ட இனங்களுக்கு ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விலக்கிற்கேற்ப அடையப்பெற்ற முன்னேற்றம் ஒவ்வொரு திங்களும் அடையப் பெற்ற முன்னேற்றங்கள் துல்லியமாக சீராய்வு செய்யப்பட்டு அவ்வப்போது மதிப்புரைகள் அரசால் வழங்கப்படுகிறது. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையைப் பொறுத்த மட்டில் 1986–87 ஆம் ஆண்டிற்கு நிலம் மற்றும் கட்டிடங்களில் இருந்து பெறப்படும் வருமானங்களைச் சீரிய முறையில் வசூலித்தல், திருக்கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்தல், வங்கிகளில் திருக்கோயில்களின் வைப்புநிதி அதிகரித்தல், கோயில்களை ஆய்வு செய்தல், கும்பாபிஷேகம் வழிபாடுகளை மேம்படுத்துதல் போன்ற இனங்களுக்கு அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

1987–88 ஆம் ஆண்டிற்கு இத்தகைய குறியீடு நிர்ணயிக்கப்படவுள்ளது.

முடிவுரை :

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, திருக்கோயில்களின் பரிபாலனம் செம்மையான முறையில் நடத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. திருக்கோயில்களின் வருமானங்களை உயர்த்துதல், அக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பாதுகாத்தல், அவைகளிடத்தேயுள்ள விலை மதிப்பிடமுடியாத சிற்பங்கள், உலோகத் திருமேனிகள் இவைகளைச் சீரிய முறையில் பாதுகாத்தல் ஆகிய பணிகளை மேற் கொண்டுள்ளது. மேலும் நம் திருக்கோயில்கள் அனைத்தும், சிறந்த கட்டிடக்கலை மற்றும் உலோக வார்ப்பு போன்ற துறைகளில் அடைந்திருந்த நமது முன்னோர்களின் முன்னேற்றத்தை எடுத்து இயம்புவதாக அமைந்துள்ளன. இவைகளைப் பாதுகாத்து, ஆலய நெறிமுறைகள் செழித்தோங்கி வழிபாடுகள் செவ்வனே நடைமுறைப்படுத்தப்படுவதை இத்துறையைப் பொறுத்தமட்டில் நமது தலையாய கடமையாகக் கொண்டு இவ்வரசு செயல்பட்டு வருகிறது. மேலும் ஆலயப் பணியாளர்களின் நலன் குறித்து இவ்வரசு பரிவோடு அணுகுகிறது.



1987 ஏப்ரல் 30]

## இணைப்பு II.

(....38ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

சின்கோனாத் துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1987–88 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்.

கோரிக்கை எண். 25 சின்கோனா மற்றும் 56 மூலதனச் செலவு.

1. முன்னுரை :

1.1. தமிழ்நாடு அரசின் வணிகத்துறையான சின்கோனாத் துறையின் வயது 126 ஆண்டுகளாகும், இத்துறையானது 1950ஆம் ஆண்டு வரை மலேரியாவைக் குணப்படுத்த உதவும் கொய்னாப் பொருட்களை மட்டும் தயாரித்து வந்தது. கொய்னாப் பொருட்களின் தேவை குறைந்ததாலும், அதன் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்தும், மருந்து மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிடுவதிலும், பல்வேறு இயற்கை நறுமண எண்ணெய்களைத் தயாரிப்பதிலும் தனது நடவடிக்கையை விரிவுபடுத்திக்கொண்டது. வணிக அடிப்படையில் இத்துறை இயங்கி வந்தாலும், மலைப் பகுதிகளில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்கு முக்கியத்துவத்தை அளித்து வருகிறது.

1986 டிசம்பர் 31ஆம் தேதியில் இத்துறையில் 1,911 நிரந்தரத் தொழிலாளர்களும் 343 தற்காலிகத் தொழிலாளர்களும் ஆக மொத்தம் 2,254 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இத்துறை தயாரிக்கும் பொருட்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், நீலகிரி, கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலை மற்றும் அண்ணா மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் தாலுக்காவில் மேல் பழனிமலை ஆகிய இடங்களில் உள்ள இத்துறையின் தோட்டங்களிலேயே பயிரிடப்படுகின்றன. கோயமுத்தூர் மாவட்டம் ஆனைமலையிலுள்ள தொழிற்சாலையில் கொய்னாப் பொருட்களுக்கான மூலப் பொருட்களும், நீலகிரி மாவட்டம் நடுவட்டத்திலுள்ள தொழிற்சாலையில் வாசனை எண்ணெய் பொருட்களுக்கான மூலப் பொருட்களும் பதனிடப்படுகின்றன. நறுமண பொருட்களான தைலங்கள் தோட்டங்களில் உள்ள கலங்களில் வடிக்கப்பட்டு, அதன் பிறகு அவ்வாறு வடிக்கப்பட்ட கச்சா எண்ணெய் நடுவட்டத்தில் உள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலத் தொழிற்சாலைக்கு சுத்திகரிப்பு செய்து தரக் கட்டுப்பாட்டுடன் விற்பனைக்கு அனுப்புவதற்கு அனுப்பப்படுகின்றது.

1.2. துறையின் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் ஆதி திராவிடர்கள் ( Adi Dravidar Scheduled caste) பின்தங்கிய வகுப்பினர் (Backward classes) ஆவர் என்பதைக் குறிப்பிடுவதில் இத்துறை பெருமையடைகிறது. சின்கோனாத் துறையின் நடவடிக்கைகள் இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்

[1987 ஏப்ரல் 30

தப்படுகின்றன. ஒரு பிரிவு மலேரியா நோயை தடுத்து உயிர்
காக்க பயன்படுத்தப்படும் குனைன் சல்பேட் மருந்தையும், மற்
றொரு பிரிவு, மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைத் தயாரிக்
கிறது. மருந்து மற்றும் நறுமணத் தைல வகைத் தாவரங்களைப்
பயிரிடும் பணியை 1950-ஆம் ஆண்டு முதல் இத்துறை மேற்
கொண்டுள்ளது. துறையின் பணிகளைப் பலதிறப்படுத்துவதற்
கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இத்துறை, மாணவர்கட்கு இலவசமாக பற்பொடி வழங்கும்
முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பற்பொடி தயாரித்து கிராமப்புறக்
குழந்தைகளுக்கு வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது. பற்
பொடி 30 கிராம் எடையுள்ள பைகளில் நீலகிரி, கோயமுத்தூர்,
பெரியார், சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும்
அண்ணா மாவட்டங்களிலுள்ள கிராமப்புற குழந்தைகளுக்கு
வழங்கப்படுகிறது. இதன் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட மாவட்
டங்களில் ஏறக்குறைய எட்டு இலட்சம் பள்ளி செல்லும்
முன்னிலை (Pre-School clidren) குழந்தைகள் சுத்தமான பற்
பொடியினால் ஒவ்வொரு மாதமும் பயனடைகின்றனர்.

2. தயாரிப்பு :

சின்கோனாப் பொருட்கள்

2.1. ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுத் தேவைகளுக்கேற்ப
கொய்னாப் பொருட்களின் விற்பனை அமைந்துள்ளது. இரண்
டாம் உலகப் போரின் போது, இப்பொருட்களுக்கான
தேவை அதிகமாக இருந்தது. போர் முடிந்ததும், இப்பொருட்
களுக்கான தேவை குறைந்துவிட்டது. ஆனால் 1960ஆம் ஆண்டி
டிற்கும் 1970ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இப்
பொருட்களின் தேவை அதிகரித்தது. உலக நாடுகளில் கொய்
னாப் பொருட்களின் விற்பனை சீராக அதிகரித்து வரும் நிலையில்
நம் நாட்டில் மலேரியா நோய் மீண்டும் தோன்றி பரவி வருவ
தால், இந்திய அரசு 1978-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் கொய்
னாப் பொருட்களின் வெளிநாட்டு ஏற்றுமதிக்கு தடை விதித்தது.
மாநில அரசு பல முறை வேண்டியதற்கிணங்க, 1978–79,
1979–80, 1980–81, 1981–82 ஆண்டுகளில் மத்திய அரசு
இப்பொருட்களை ஓரளவிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்தது.
ஆனால் இத்தகைய கொய்னாப் பொருட்கள் தடையேதுமின்றி
நிலையாகக் கிடைக்க வேண்டுமென்று அனைத்து நாடுகளும்
கருதுவதால், இவற்றை ஏற்றுமதி செய்வதற்கு திடீரென்று
தடை விதிக்கப்பட்டதன் காரணமாக நீண்டகாலமாக நிலவிய
அனைத்து நாடுகளுக்கான விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டது.
மேலும் தொடர்ந்து ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்ட காலத்
தில் அனைத்து நாடுகளிலும் விற்பனை செய்ய இயலாததால்,
ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வது கடினமாகிவிட்டது. தற்போது
மத்திய அரசு கொய்னாப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன்
பேரிலிருந்த தடையை நீக்கி ''பொது அனுமதியின்'' பேரில்
ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்துள்ளது.



1987 ஏப்ரல் 30]

2.2. விற்பனை செய்யப்பட்ட கொய்னாப் பொருட்களின் அளவு மற்றும் அவற்றின் மூலம் கிடைத்த வருவாய் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. (2) | விவரம். (2) | அளவு. (3) (கிலோ கிராமில்) | வருவாய் (4) (ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1983-84 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை .. | 660 | 5.10 |
| | வெளிநாட்டு விற்பனை .. | 1,900 | 14.50 |
| | மொத்தம் .. | 2,560 | 19.60 |
| 1984–85 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை .. | 757 | 5.79 |
| | வெளிநாட்டு விற்பனை .. (உப பொருட்கள்). | 6,000 | 0.48* |
| | மொத்தம் | 6,757 | 6,27 |
| 1985–86 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை .. | 3,174 | 8.84 |
| | கொய்னா சல்பேட் மற்றும் (உப பொருட்கள்). வெளிநாட் டு விற்பனை | 3,000 | 26.45 |
| | மொத்தம் .. | 6,174 | 35.29 |
| 1986–87 (மதிப்பிடப் பட்டது). | உள்நாட்டு விற்பனை .. | 1,000 | 7.88 |
| | வெளிநாட்டு விற்பனை .. | 2,500 | 20.81 |
| | மொத்தம் .. | 3,500 | 28.69 |
| 1987–88 (மதிப்பிடப் பட்டது). | உள்நாட்டு விற்பனை .. | 1,000 | 7.88 |
| | வெளிநாட்டு விற்பனை .. | 8,000 | 71.00 |
| | மொத்தம் .. | 9,000 | 78.88 |

* 1 கிலோவிற்கு ரூ. 8 என்ற விலையில் சின்கோனா அல்கலாய்டு விற்பனை.

தற்சமயம் கொய்னாப் பொருட்கள் எதுவும் இருப்பில் இல்லை. கடந்த ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டு இருப்பில் இருந்த கொய்னாப் பொருட்கள் முழுவதும் 1986–87ஆம் ஆண்டில் விற்கப்பட்டுவிட்டன.

2.3. கொய்னாப் பொருட்களின் விற்பனை விலையை மருந்துகள் விலை கட்டுப்பாட்டு ஆணையின்படி இந்திய அரசு நிர்ணயிக்கிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலை துரதிருஷ்டவசமாக கொய்னாப் பொருட்களின் உற்பத்தி விலையைவிட குறைவாக உள்ளதால், விற்பனை விலையை உயர்த்த வேண்டுமென்று மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுள்ளது. விலையை நிர்ணயிக்கும் பணியானது, தொழில்களின் உற்பத்தியை மதிப்பிடலும், விலையை நிர்ணயித்தலும் செய்யும் குழுவின் ஆய்வில் உள்ளது.

| பொருட்களின் பெயர். | உற்பத்தி விலை 1983–84 | இந்திய அரசு நிர்ணயித்துள்ள விலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (விலைகள் கிலோகிராம் ஒன்றிற்கு ரூபாய்.) | |
| 1. குனைன் சல்பேட் .. .. | 868.76 | 788.00 |
| 2. குனிடின் சல்பேட் .. .. | உற்பத்தி இல்லை. | 1,313.00 |
| 3. குனைன் ஹைட்ரோகுளோரைடு. | ஷை | 1,088.00 |
| 4. சின்கோனா பெப்ரியூஜ் .. | ஷை | .. |

தற்சமயம் இதய சிகிச்சைகளுக்கு மருந்தாகப் பயன்படும் குனிடினின் தேவை அதிகரித்து வருகிறது என்ற அறிகுறி தென்படுகிறது. தேவைப்படும் பெருமளவிலான குனிடின் கொய்னா சல்பேட்டிலிருந்து மட்டுமே தயாரிக்கப்படுகிறது. குனைன் உப்புகள் சாராயம் மற்றும் சாராயமில்லாத மதுபானங்களில் ஒரு கூட்டுப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே எதிர்காலத்தில் பெரும்பாலும் கொய்னா சல்பேட்டின் தேவை தொடர்ந்து இருக்குமென தோன்றுகிறது. ஆகையால் இத்துறை சின்கோனாத் தோட்டங்களை அதிகரிக்கவும், அதன் மூலம் அதிக அளவில் கொய்னாப் பொருட்களை உற்பத்தி செய்யவும் திட்டங்கள் வகுத்துள்ளது.

1987–88-ஆம் ஆண்டு ஏற்றுமதி மூலம் இத்துறை ஒரு கிலோவிற்கு ரூ. 887.50 என்ற விலை பெறக்கூடும்.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் :

2.4. (அ) மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் விற்பனை வாயிலாக இத்துறை குறிப்பிடத் தகுந்த வருவாயை ஈட்டி வருகிறது. மேற்குறிப்பிடப்பட்ட வருவாய் சீராக வளர்ந்து வருவதோடு வரும் ஆண்டுகளில் அதிகரிக்கும் எனவும் நம்பப்படுகிறது.

(ஆ) சின்பிரஸ், சினோமாஸ், சின்ஸ்பிரே மற்றும் புதிய தயாரிப்பான சினோரமா போன்ற பொருட்களின் தேவை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இத்துறையில் விற்பனை





செய்யப்படும் மிகசுத்தமான யூகலிப்டஸ் தைலத்திற்கான தேவையும் அதிகரித்துள்ளது. மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் தேவை மக்களிடையே ஒரே சீராக இருந்து வருகிறது. இத்துறையால் அண்மையில் கோரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளின்படி நறுமணத் தைலங்களுக்கான விலைக்கு நிறுவனங்களிடம் இருந்து நல்ல எதிர்பார்ப்பு உள்ளது. இது தேவை அதிகரிக்கும் போக்கைக் காட்டுகிறது.

(இ) 1985–86ஆம் ஆண்டில் ரூபாய் 65 ஆயிரம் மதிப்புள்ள பொருட்கள் கோவை மற்றும் சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற சுற்றுலா மற்றும் தொழில் கண்காட்சிகளில் விற்பனை செய்யப்பட்டன.

(ஈ) 1984–85 ஆம் ஆண்டிலிருந்து மருந்து நறுமணத் தைல விற்பனை மூலம் துறைக்குக் கிடைத்த வருவாயின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1984–85 (உள்ளபடி) .. .. .. | 51.54 |
| 1985–86 (உள்ளபடி) .. .. .. | 60.64 |
| 1986–87 (எதிர்பார்க்கப்படுகிறது) .. .. | 62.00 |
| 1987–88 (எதிர்பார்க்கப்படுகிறது) .. | 62.00 |

2. துறையில் தயாரிக்கப்படும் பொருட்களின் விவரங்கள் பின்வருமாறு :—

| பொருட்களின் பெயர். | 1984–85 (உள்ள படி). | 1985–86 (உள்ள படி). | 1986–87 (திருத்திய மதிப்பீடு) | 1987–88 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (அளவுகள் கிலோகிராமில்) | | | |
| 1. யூகலிப்டஸ் தைலம் (சினியோல் அளவு 70 சதவீதத்திற்கு மேல்). | 3,779 | 2,259 | 6,000 | 6,000 (1 and 2) |
| 2. யூகலிப்டஸ் தைலம் ஐ.பி. | 5,527 | 3,340 | .. | |
| 3. ஜெரேனியம் தைலம் | 2,471 | 2,698 | 3,600 | 6,600 |
| 4. யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம். | 6,340 | 5,176 | 4,590 | 4,600 |
| 5. ஜாவா சிட்ரோனெல்லா தைலம். | 6,251 | 5,959 | 8,945 | 10,000 |
| 6. பச்சோலி தைலம் | 2 | 2 | 5 | 5 |
| 7. தொட்ட பெட்டா மிஸ்ட். | 11 | 13 | 15 | 15 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. சினோராமா .. | 13 | 9 | 15 | 15 |
| 9. சினோபாஸ் .. (25 கிராம்) எண்ணிக்கையில். | 4,560 | 2,480 | 5,000 | 5,000 |
| 10. சிங்ஸ்பிரே (லிட்டர்களில்). .. | 900 | 775 | 1,500 | 1,500 |
| 11. சின்பிரஷ் .. (ஆயிரம் லிட்டர்களில்). | 55 | 81 | 100 | 100 |

கற்பூரத் தைலம், கற்பூர வில்லைகளின் தயாரிப்பு :

2.5. சின்கோனாத்துறையில் பலதிறத் திட்டத்தின் ஒரு பகுதியாக, நீலகிரி மாவட்டம், நடுவட்டம் என்னும் இடத்தி ஆள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் கற்பூரத் தைலம் மற்றும் கற்பூர வில்லைகள் தயாரிக்கப்படுகின்றன. இவைகளின் உற்பத்தி விவரங்களை பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| பொருட்களின் பெயர். (1) | 1984–85 (உள்ளபடி) (2) | 1985–86 (உள்ளபடி) (3) | 1986–87 (திருத்திய மதிப்பீடு) (4) | 1987–88 (திட்ட மதிப்பீடு) (5) |
|---|---|---|---|---|
| கற்பூரத் தைலம் .. (கிலோகிராமில்). | 184 | 181 | 128 | 130 |
| கற்பூர வில்லைகள் .. (எண்கள் ஆயிரத்தில்). | 285 | 299 | 250 | 250 |

2.6. மாநிலத்தின் இந்து சமய அறக்கட்டளைத் துறையின் கீழ் இயங்கிவரும் திருக்கோவில்களுக்கு இத்துறையில் தயாரிக்கப் படும் கற்பூர வில்லைகள் வினியோகம் செய்யப்படுகின்றன. துறை யில் தயாரிக்கப்படும் இந்த இயற்கை கற்பூரம் மிக நல்ல தரத்தை சேர்ந்ததுடன், மருத்துவத் தயாரிப்பிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் இது செயற்கை கற்பூரத்தின் விலையை விட அதிகமாக உள்ளது.

3. மலைத் தோட்டங்கள் :

பல்வேறு உற்பத்திப் பொருட்களைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களைப் பெற இத்துறையின் மலைத் தோட்டங் களில் அப்பயிர்களைப் பயிரிடுவதற்கு பல்வேறு பணிகளை இத் துறையே மேற்கொண்டுள்ளது. 1986 டிசம்பர் 31-ம் நாளன்றின் படி 2,142 ஹெக்டேர் பரப்புள்ள சின்கோனா நிலங்களையும் மற்றும் 1,643 ஹெக்டேர் பரப்புள்ள மருந்து மற்றும் நறுமணத்



தைல வகைப் பயிர்கள் கொண்ட நிலங்களையும் இத்துறை தனது நேரடி மேற்பார்வையில் கொண்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

| பயிர்கள். (1) | நீலகிரி. (2) | கோவை மாவட்டத்திலுள்ள ஆனைமலை. (3) | அண்ணா மாவட்டத்திலுள்ள கொடைக்கானல். (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| (நிலப் பரப்பு ஹெக்டேர்களில்.) | | | | |
| சின்கோனா .. .. | 492 | 1,650 | .. | 2,142 |
| மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள். | 925 | 478 | 240 | 1,643 |
| மொத்தம் .. | 1,417 | 2,128 | 240 | 3,785 |

4. மலைத் தோட்டத் திட்டங்கள் :

1985–86-ல் சின்கோனா புதியதாக பயிரிடப்படவில்லை என்றாலும் கொய்னாப் பொருட்களின் தேவை பெருகி வருவ தால் இத்துறை சின்கோனாவை புதியதாக பயிரிடுவது ஏற்ற முடையதென்று மதிப்பீடு செய்து வருகிறது. 1986–87 ஆம் ஆண்டில் 100 ஹெக்டேர் நிலப்பரப்பில் மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் புதிதாக சாகுபடி செய்யப்படும். 1987–88-ல் 100 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படும்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஜாவா சிட்ரோனெல்லாப் புல் என்னும் நறுமணத் தைலப் புல் நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் தாலுக்காவில் சாகுபடி செய்யும் பணி 1980-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் மேற்கொள்ளப் பட்டது. இதுவரை 80 ஹெக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டது.

5. ஆராய்ச்சி :

அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடிய மருந்து, நறுமணத் தைலப் பயிர்களையும் ஏனைய மருந்து மற்றும் நறுமண செடி வகைகளையும் வளர்க்கும் முறைகளை மேம்படுத்துவதில் ஆராய்ச்சி கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சின்கோனா மற்றும் நறு

மணத் தைலப் பயிர்கள் ஆகியவற்றைக் குறித்து முறையான
தீவிர ஆராய்ச்சிகள் நடத்த, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு
நிலையம் ஒன்றும் 1976-ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து
சின்கோனா மற்றும் நறுமணத் தைலப் பயிர்களைப் பயிரிடுதல்
குறித்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளும் தொடர்ந்து
நடைபெற்று வருகிறது. குனைனிலிருந்து குவினிடின் தயாரிப்பது
பற்றிய ஆராய்ச்சிப்பணி ஆய்வில் உள்ளது.

6. தொழிலாளர் நலன் :

6.1. தொழிலாளர்கள் இத்துறையின் உற்பத்திப் பணிகளில்
பெரும் பங்காற்றி வருகின்றனர். மலைத் தோட்டங்கள் அமைக்
கும் திட்டங்கள் ஆகியவை செவ்விய வகையில் செயல்படுவதில்
நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு
நிலவுவதற்கும், தொழிலாளர் நலனைக் காப்பதற்கும் அதிக
கவனம் செலுத்தப்படுகிறது. ஆடவர், மகளிர் ஆகிய இருபால்
தொழிலாளர்களுக்கும் சமமான ஊதியம் வழங்கப்படுவதோடு,
விலைவாசிப் புள்ளியின் அடிப்படையில் அகவிலைப்படி வழங்கப்
படுகிறது. வயது வந்த தொழிலாளர்களுக்கு, நாளொன்றுக்கு
கூலியாக ரூ. 12.65 (ரூபாய் பன்னிரண்டு மற்றும் பைசா அறுபத்
தைந்து மட்டும்) வழங்கப்படுகிறது. 1,281 தரமான தொழி
லாளர்கள் குடியிருப்புகள் தற்போதுள்ள தொழிலாளர்களுக்கு
வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, புதிய குடி
யிருப்புகளைக் கட்டுவது மற்றும் பழைய குடியிருப்புகளைப் புதுப்
பித்தல் போன்ற பணிகளை முறையாக மேற்கொண்டு முடிக்கப்
பட்டு வருகிறது. தரமான தொழிலாளர் குடியிருப்புகள் கட்டும்
பணி மாநில திட்டப் பணிகளின்கீழ் தொடங்கப்பட்டது. 1985
—86-ம் ஆண்டின் இறுதி வரையில் மொத்தம் 471 தரமான
தொழிலாளர் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. அவற்றின்
விவரங்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1976—77-ம் ஆண்டு இறுதிவரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள். | 141 | |
| 1977—78 முதல் 1985—86 வரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள். | 330 | 471 |
| 1986—87-ம் ஆண்டில் கட்டிமுடிக்கும் பணிமேற்கொண்டுள்ள குடியிருப்புகள் | 210* | |
| 1987—88-ம் ஆண்டு முதல் கட்டப்படவுள்ள குடியிருப்புகள். | 600 | |
| | | 810 |
| மொத்தம் .. | | 1,281 |

*1986—87-ல் முன்னேற்ற நிலையில் 190 வீடுகளும் மேற்கொண்டு
20 வீடுகளும் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டன.





1986-87ஆம் ஆண்டில் 20 புதிய தொழிலாளர் குடியிருப்பு
கள் கட்டும் பணி மேற்கொள்ள ரூ. 8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ. 2.20 இலட்சம் செலவில் 256
தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கு மின்வசதி செய்துகொடுக்கும்
பணி, பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, மேற்கண்ட
பணியும் நல்ல முன்னேற்ற நிலையில் உள்ளது. 1986—87-ம்
ஆண்டில் 20 தொழிலாளர்கள் குடியிருப்புகள் கட்ட ரூ. 7.00
இலட்சம் மற்றும் 25 குடியிருப்புகளுக்கு மின்வசதி பொருத்த
ரூ. 0.75 இலட்சங்கள் என பகுதி—2 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது. இதுவரை 471 தரமான தொழிலாளர்
குடியிருப்புகளை இத்துறை கட்டி முடித்துள்ளதோடு மேலும்
210 குடியிருப்புகள் கட்டும் பணி செவ்வனே நடைபெற்று வரு
கின்றன. புதிய தொழிலாளர் குடியிருப்புகளில் மின்வசதி, பாது
காக்கப்பட்ட குடிநீர் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்
டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பழுது பார்க்கும் பணிகள் மேற்
கொள்ளப்பட்டு, தொழிலாளர் குடியிருப்புகள் பராமரிக்கப்பட்டு
வருகின்றன. ஆண்டு பழுது பார்க்கும் பணிகள் (Annual Repairs)
அல்லாமல் தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுது
பார்க்கும் பணிகள் (Special Repairs) குடியிருப்புகளில் உள்ள
பழுதடைந்த பொருட்களைப் புதுப்பித்தல் போன்ற பணிகளும்
காலவாரியாக மேற்கொள்ளப்படுகிறது.

6.2. பல்வேறு பிரிவுகளில் உள்ள துறையின் மருந்தகங்கள்,
மற்றும் ஆனைமலை பிரிவிலுள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய
மருத்துவமனை ஆகியவற்றின் வாயிலாக மருத்துவ வசதிகளும்
இத்துறையின் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.
நீலகிரியில் கூடலூரில் உள்ள அரசு மருத்துவமனையில் சின்கோனா
தொழிலாளர்களுக்கென்றே 5 படுக்கைகள் தனியாக ஒதுக்கப்
பட்டு உள்ளன. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆரம்ப சுகாதார
நிலையங்களில் நடமாடும் பிரிவு தொழிலாளர்களுக்குத் தேவை
யான நல்வாழ்வு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுக்கின்றன.
ஆனைமலை மற்றும் நீலகிரியில் நோயாளிகளை மருத்துவமனை
களுக்குக் கொண்டு செல்ல நோயாளி ஊர்தியும் ஒதுக்கப்பட்
டுள்ளது.

6.3. அரசு சின்கோனாத் தோட்டங்களில் உள்ள குழந்தைகள்
காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ள இத்துறையின் தொழிலாளர்
களது குழந்தைகளின் உணவளிக்கும் தொகை இரண்டு வயதிற்கு
மேற்பட்ட குழந்தைக்கு நாளொன்றுக்கு 0.50 பைசாவாக
இருந்தது ரூ. 1 எனவும், இரண்டு வயதிற்குக் குறைவாக உள்ள
குழந்தைக்கு நாளொன்றுக்கு 0.30 பைசாவிலிருந்து 0.80 பைசா
விற்கும் 1983ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

6.4. தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் இடத்
திலேயே தினமும் இலவச தேநீர் வழங்கப்படுகிறது.

6.5. இத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு
தொழிலாளர் நலன் சட்டங்களும் அவற்றின் கீழ் வரும் விதிகளும்
பொருந்தும், ஆண்டுதோறும் தொழிலாளர்களுக்கு சம்பளத்
துடன் கூடிய விடுப்பு, பேறுகாலச் சலுகைகள், சம்பளத்துடன்

[1987 ஏப்ரல் 3

கூடிய நோய்க்கால விடுப்பு, ஓய்வுக்கால நன்கொடை, வருங்கா
சேமநல நிதியில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு அரசு சந்தாத்
தொகை அளித்தல், கம்பளியும் (cumbly) மற்றும் மழைக்கம்பளி
யும் (rain cumbly) அளித்தல், இலவச வீட்டுவசதி அளித்
தல் போன்ற சலுகைகளுக்காக இத்துறை கணிசமான தொகையை
செலவு செய்கிறது. மாநிலத் திட்டப் பணிகளிலும் மத்திய அரய
பொறுப்பேற்கும் திட்டங்களிலும், தொழிலாளர் சட்டப்
படி கட்டப்பட வேண்டிய தொழிலாளர் குடியிருப்புகளும் தற்போ
துள்ள குடியிருப்புகளை புதுப்பித்தல் மற்றும் பாதுகாக்கப்பட்ட
குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த பொங்கல் பண்டிகையின்போது அனைத்து நிரந்தர
தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 300 என்ற அளவில்
கருணைத் தொகை (ex-gratia) இத்துறையால் வழங்கப்
பட்டது.

7. துறையின் நிதி நிலைமை :

அனைத்து நாடுகள் சந்தைகளில் விலை ஏற்ற இறக்கம்,
மற்றும் கொய்னாப் பொருட்களின் ஏற்றுமதிக்கு இந்திய அரசு
விதித்த தடை ஆகியவற்றின் விளைவாக இத்துறையின் பொருளா
தாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. 1984–85-ம் ஆண்டில்
மூலதனத்தின் மீதான வட்டித் தொகை ரூ. 128.63 இலட்சங்கள்
செலுத்தப்பட்ட பிறகு ரூ. 38.98 இலட்சங்கள் இழப்பு ஏற்பட்
டுள்ளது. 1985–86-ம் ஆண்டில் மூலதனத்தின் மீதான உயர்ந்த
பட்ச வட்டித் தொகை ரூ. 159.34 இலட்சங்கள் செலுத்தப்பட்ட
பிறகு ரூ. 42.08 இலட்சங்கள் (சென்னை மாநில கணக்கரால்
ஆய்வு செய்யப்பட வேண்டிய 1985-86-ம் ஆண்டின் அமைந்த
படிவக் கணக்குகளின்படி) துறைக்கு இழப்பு ஏற்படும். 1986—
87-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி மூலதனத்தின்
மீதான வட்டி ரூ. 180.37 இலட்சங்கள் செலுத்திய பின்னர்
ரூ. 45.00 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) இழப்பாகவும்
இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதைப்போன்று 1987
–88-ம் ஆண்டின் திட்ட மதிப்பீட்டின்படி மூலதனத்தின் மீதான
வட்டி ரூ. 207.64 இலட்சங்கள் செலுத்திய பின்னர் ரூ. 45.00
இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) இழப்பு ஏற்படும் என்று எதிர்
பார்க்கப்படுகிறது. இத்துறை ஒரு கழகமாக இல்லாமல் அரசுத்
துறையாக இருப்பதால் பங்கு மூலதனம் புத்தக மதிப்பீட்டில்
காட்டப்படவில்லை. மொத்த முதலீடும் கடனாகவே கருதப்
படுகிறது. எனவே பெருமளவிலான வட்டி செலுத்துவதால்
புத்தக மதிப்பில் இழப்பாகக் காட்டப்படுகிறது. இருப்பினும்
இத்துறை எடுத்துக்கொண்ட தொடர்ந்த முயற்சியின் பயனாக
இத்துறை தேவையான சொத்துக்களை பெற்றுள்ளது பாராட்டுக்
குரிய ஒன்றாகும்.

1986-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளின்படி நிலையான
சொத்துக்கள் ரூ. 9.94 கோடி, பண்டகசாலை இருப்புகள்,
முடிக்கப்பட்ட பொருட்கள், நடைபெற்று வரும் பணிகள்,
சில்லரைக் கடன்கள் ஆகியவற்றின் வாயிலாக ரூ. 7.59 கோடி
உட்பட இத்துறையின் சொத்துக்களின் மதிப்பு ரூ. 17.53 கோடி
யாகும்.



1987 ஏப்ரல் 30]

இத்துறையின் வளர்ச்சித் திட்டங்கள் :

8. இத்துறையின் பெப்ரிபியூஜிலிருந்து குனைன் சல்பேட்
8.1. சின்கோனா தேயிலை கழிவிலிருந்து 'கபீன்' தயாரித்தல்
தயாரித்தல், இத்துறையின் அண்மைக்கால முக்கிய சாதனை
போன்ற பணிகள் குடும்ப நலத் திட்டத்திற்காகத் தயாரிக்கப்படும்
களாகும். மாத்திரைகளில் உள்ள கார்டிசான் ஸ்டிராய்டு ஹார்
கருத்தடை மோன் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொரு
ளான 'டயஸ்ஜெனின்' என்ற பொருளைத் தயாரிக்க மாதிரி
உற்பத்தி செய்தல், கொசுக்களை விரட்டும் 'சினோமாஸ்' என்ற
களிம்பையும், 'சின்ஸ்ப்ரே' என்ற தெளிப்பான் மருந்தையும்
தயாரித்து விற்பனை செய்தல், 'சினோரமா', 'தொட்டபெட்டா
மிஸ்ட்' ஆகிய வாசனைத் திரவியங்களைத் தயாரித்தல் போன்
றவை இத்துறையின் பணிகளாகும்.

8.2. (அ) கொய்னா பொருட்களின் தேவையைக் கருத்திற்
கொண்டு ஆனைமலையிலுள்ள கொய்னாத் தொழிற்சாலையில்
தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சின்கோனாப் பட்டை
பதனிடப்படும் பணி 1987 ஜனவரி முதல் மீண்டும் செயல்பட்டு
வருகிறது.

(ஆ) நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், சேலம், தர்மபுரி,
திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்களில்,
உள்ள கிராமியக் குழந்தைகளுக்கு இலவசமாக பற்பொடி வழங்கு
வதற்காக பற்பொடி தயாரிக்கும் பணிமேற்கொள்ளப்பட்டுள்ளது.
1984–85-ம் ஆண்டில், ரூ. 39.64 இலட்சங்கள் மதிப்புள்ள
பற்பொடி தயாரிக்கப்பட்டு நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார்,
சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கு விநியோகம் செய்யப்
பட்டுள்ளது. 1985–86-ல் பற்பொடி விநியோகம் மூலம்
ரூ. 69.56 இலட்சம் வருவாய் கிடைத்தது.

(இ) நடப்பு நிதியாண்டில் பற்பொடி தயாரிக்கப்பட்டு விநி
யோகம் செய்வதன் மூலமாக வருவாய் ரூ. 54.25 இலட்சங்கள்
கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்துறையில் தயாரித்து
விநியோகம் செய்யப்படும் பற்பொடியின் தரம் சம்பந்தப்பட்ட
அனைவரும் போற்றும் வகையில் உள்ளது.

8.3 இத்துறையின் தோட்டப் பணிகளை மாற்றியமைத்
தலின் மூலம் வேறு வணிகப் பயிர்களை பயிர் செய்ய பூர்வாங்க
நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

8.4. மேற்கூறிய அபிவிருத்திப் பணிகள் யாவும் கீழே குறிப்
பிடப்பட்டுள்ள திட்டப்பணிகளின் கீழ் அமுலாக்கப்பட்டு வரு
கின்றன.

மாநிலத் திட்டப் பணிகள் :

1. சின்கோனாப் பயிரை முனைப்பு சாகுபடி மற்றும் பதியன்
முறையில் பயிரிடுதல்.

2. மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகள் வாணிப
முறையில் பயிரிடுதல்.

3. மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகளின் வளர்ச்சிக்காக, முனைப்பு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

4. தொழிற்சாலையில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தொழிற்சாலைக்கு தேவையான கருவிகள் வாங்குதல்.

5. தேயிலைக் கழிவிலிருந்து (கபீன்) தயாரித்தல்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (1985–86-ம் ஆண்டு முதல் மாநிலத் திட்டத்திற்கு மாற்றப்பட்டது).

8.5. இத்திட்டத்தின்கீழ் ஜாவா சிட்ரோனல்லா புல் பயிரிட்டு அதனின்று தைலம் எடுக்கும் பணி செயல்படுத்தப்படுகிறது. 1983–84-ம் ஆண்டு வரை 80 எக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் :

8.6. 1985–86-ம் ஆண்டு முதல் மத்திய அரசு பொறுப்பேற்கும் மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இருந்து சில திட்டங்கள் மாநிலத் திட்டங்களின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

அவைகள் வருமாறு :

(1) டயஸ்கோரியா பயிரிடுதல் மற்றும் அதிலிருந்து ஆண்டொன்றுக்கு 3 டன் டயஸ்ஜெனின் தயாரித்து பதப்படுத்துவதற்கு தொழிற்சாலை நிறுவுதல். 1986–87-ம் ஆண்டில் இது வரை 155 எக்டேர் நிலப்பரப்பில் டயஸ்கோரியா பயிரிடப்பட்டுள்ளது. 1987–88-ம் ஆண்டில் சுமார் 20 எக்டேர் நிலப்பரப்பில் டயஸ்கோரியா பயிரிடப்படும். ஸ்டிராய்டு தொழிற்சாலையில் சோதனை அளவில் டயஸ்ஜெனின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 1987–88-ம் ஆண்டு முதல் ஒழுங்கான உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(2) அண்ணா மாவட்டம் கொடைக்கானல் தாலுக்கா மேல் பழநிமலைப் பகுதியில் உள்ள பேரிஜம் மற்றும் பெருமாள் மலை (பெரும்பள்ளம்) ஆகிய இடங்களில் ஜெரேனியம் பயிரிடுதல்; மொத்தம் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் விவரங்கள் வருமாறு :—

1. பெருமாள் மலை .. 200 ஹெக்டேர்.
2. மேல் பழநிக்குன்று (பேரிஜம்). .. 40.25 ஹெக்டேர்.

இத்திட்டத்தின்கீழ் திட்டமிட்டபடி பயிர் செய்யும் வேலைகள் பெருமாள்மலைப் பகுதியில் முடிக்கப்பட்டன. போதுமான நிலப்பரப்பு இல்லாமையால் பேரிஜம் பகுதியில் மேற்



கொண்டு பயிரிடும் பணி மேற்கொள்ள இயலவில்லை. ஜெரேனியம் தைலத்தை வடித்தெடுப்பதற்காக, மேற்கண்ட நிலப் பரப்புகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

9. திட்டப்பணிகளின் கீழ் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையின் விவரம் வருமாறு :

| ஆண்டு. | மாநிலத் திட்டப் பணிகள். | மலைப் பகுதிமேம் பாட்டுத் திட்டம். | மேற்கு மலைத் தொடர் மேம் பாட்டுத் திட்டம். | மொத் தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1984–85 (உள்ளபடி) | 36.52 | 3.13 | 40.73 | 80.38 |
| 1985–86 .. (உள்ளபடி). | 47.00 | 3.28 | 0.54 | 50.82 |
| 1986–87 .. (திட்ட மதிப்பீடு). | 49.29 | 6.26 | 2.02 | 57.57 |
| 1986–87 .. (திருத்திய மதிப்பீடு.) | 54.49 | 2.92 | 0.12 | 57.53 |
| 1987–88 .. (திட்ட மதிப்பீடு.) | 49.79 | 3.12 | 0.03 | 52.94 |

10. வரவு-செலவுத் திட்டம் :

| விவரங்கள். | 1985–86 (உள்ளபடி) | 1986–87 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 1986–87 (திருத்திய மதிப்பீடு) | 1987–88 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| கோரிக்கை எண் 25— சின்கோனா— 320 தொழில்கள் : | | | | |
| நெறிமுறைப்படுத்துதல் டி 2 எ 70—30 | 16.58 | 16.52 | 16.26 | 17.20 |

[1987 ஏப்ரல் 30

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலைத் தோட்டங்கள் (நீலகிரி மற்றும் ஆனைமலை). | | 73.64 | 73.62 | 68.97 | 68.10 |
| தொழிற்சாலைகள் (மருந்து மற்றும் நறுமணத் தைலத் தொழிற்சாலை, நடுவட்டம்—அரசு கொய்னாத் தொழிற்சாலை, ஆனைமலை). | | 68.23 | 66.27 | 48.60 | 42.80 |
| விற்பனை | .. | 2.99 | 2.68 | 2.62 | 2.59 |
| திட்டங்கள் (ஆராய்ச்சித் திட்டங்கள், மாநிலத் திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்பவை). | | 77.91 | 73.11 | 69.09 | 70.20 |
| வட்டி | .. | 150.68 | 150.00 | 155.00 | 160.90 |
| மொத்தம் | .. | 390.03 | 382.27 | 360.54 | 360.89 |

கோரிக்கை எண். 56

526—மூலதனச் செலவு—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கட்டிடங்கள் | .. | 8.67 | 6.22 | 11.32 | 10.90 |
| இயந்திரத் தளவாடங்கள் | .. | | 2.00 | 5.84 | 2.00 |
| மொத்தம் 526—மூலதனச் செலவு. | .. | 8.67 | 8.22 | 17.16 | 12.90 |
| பெரு மொத்தம் | .. | 398.70 | 390.49 | 377.70 | 373.79 |



1987 ஏப்ரல் 30]

## இணைப்பு III.

[38 ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

கொள்கை விளக்கக் குறிப்பு.

வனத்துறை.

1987—88.

1. இயற்கை நமக்களித்துள்ள அரிய பல செல்வங்களுள்
காடுகள் முக்கியமானதொன்றாகும். இயற்கை அமைப்பில்
காடுகள் அடிப்படையான ஒரு அங்கமாக உள்ளது. மனித
வாழ்விற்கு ஆதாரமான அடிப்படைத் தேவைகளை நல்குவது
காடுகளாகும். நீரூற்றுகளில் தண்ணீர் வற்றாமலும், வெள்ளச்
சேதத்தைத் தடுக்கவும், நிலவளத்தைக் காத்து நமது நல
வாழ்விற்குப் பயன்படுத்தத்தக்க நிலப்பரப்பினை அதிகப்
படுத்த தேவைப்படும் மரங்களைப் பாதுகாக்கவும் காடுகள்
வழி செய்கின்றன. வெப்பநிலை, சுத்தமான காற்று, இவை
களையும் தக்கபடி பெற காடுகள் உதவுகின்றன.

(அ) எனவே, காடு வளர்ப்பில் நமது தலையாய
குறிக்கோள், முதலாவதாக ஒதுக்கக்காடுகளில் தற்போதுள்ள
பசுமைமாறாத காடுகளைப் பாதுகாப்பதும், அடுத்து தரிசு
நிலங்களையும், மற்ற பொதுநிலங்களையும் மரங்கள் வளர்த்து
பசுமை ஏற்படுத்துவதுமாகும். கடந்த ஆண்டு (1985—86)
14,200 எக்டேர் பரப்பில் ஒதுக்கக்காடுகளில் மரங்கள் வளர்க்
கப்பட்டன. அதே போல காடுகளல்லாத மற்ற நிலங்களிலும்
18,500 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்பட்டன.
இந்த நல்ல முயற்சிக்கென மேலும் அதிகமான நிதி ஒதுக்க
நாம் முயலுவோம்.

(ஆ) தாவரங்கள், விலங்கினங்கள் போன்ற அனைத்து
உயிரினங்களும் வாழப் பாதுகாப்பான உறைவிடமாக காடுகள்
விளங்குகின்றன. ஒதுக்கக் காடுகளாகவும், வனவிலங்குப்
புகலிடங்களாகவும் உள்ள ஏறத்தாழ 2,18,000 எக்டேர்
பகுதி இன்னும் பசுமை மாறாத இயற்கைக் காடுகளாகவே
உள்ளன என்பது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். இந்தப்
பகுதிகள் கூடுமான வரை எவ்வித இடையூறுகளுக்கும் ஆளா
வதில்லை. இருப்பினும், இந்தப் பகுதிகளிலுள்ள உயிரின
சூழலை தக்கபடி, பாதுகாக்கவும், மேம்படுத்தவும் திட்ட
மிட்டுள்ளோம்.

(இ) மரம் வளர்ப்பினை விரிவாக்கம் செய்வது தரம்
தாழ்ந்த காட்டுப் பகுதிகளில் தான் சாத்தியமாகும். அதே
சமயத்தில் தற்போதுள்ள மரங்கள் நிறைந்த காட்டுப்பகுதி
களிலேயே அதிக மரங்களை நடுவதோடு, ஆங்காங்கு வளரும்
தகுந்த இன மரங்களையும் நட்டு வளர்த்து அதிகமான
மரங்களை வளர்ப்பதும் தேவையாகிறது.

[1987 ஏப்ரல் 30

(ஈ) மரங்களடர்ந்த பகுதிகளின் பரப்பினை அதிகரிப்பது தான் நமது முதற்கண் நோக்கு எனினும், காடுகளைப் பாது காக்கவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

(உ) கிராமப்புற மக்களின் எரிபொருள் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு ''வனவிரிவாக்கப் பணிகள்'' மேற்கொள்ளப்படுகின்றன. சமூக நலக் காடுகள் திட்டம் இதற் கான வாய்ப்பினை நல்குகிறது.

(ஊ) வனப்பகுதிகளை ஒட்டியுள்ள கிராமப் புறங்களில் சமூகநலக் காடுகள் திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் பழங்குடி மக்களும் ஈடுபாட்டுடன் பங்கு கொள்ளவும், கிராமப்புற மக்களும் பயன்பெறும் வண்ணம் வனப்பணி களை நிறைவேற்றுவதன் வாயிலாக இதுநாள் வரை பயன் படுத்தப்படாத மனித சக்தியினை ஆக்கவேலைகளுக்கு பயன்படுத்தவும், அவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2. வனப்பரப்பு :

2.1. 1985–86-ல் காடுகளின் மொத்தப் பரப்பு 22,379 சதுர கிலோ மீட்டர் (அல்லது 2.2 மிலியன் எக்டேர்). இது நமது மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 17.22 விழுக் காடாகும். ஒதுக்கக்காடுகளின் பரப்பு 18,375 சதுர கிலோ மீட்டர், ஒதுக்க நிலம் 3,390 சதுர கிலோ மீட்டர், வகைப் படுத்தப்படாத காடுகள் 614 சதுர கிலோ மீட்டர்.

2.2. சட்டப்படி அறிவிப்பு செய்து அதிக அளவு நிலப் பரப்பினை ஒதுக்கக்காடுகளாக மாற்ற ஒவ்வொரு ஆண்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1985–86-ல் 63 சதுர கிலோ மீட்டர் பரப்பு ஒதுக்கக் காடுகளாக மாற்றப் பட்டது.

2.3. விமானம் மூலம் நில ஆய்வு செய்யும் நவீனயுத்தி நம்மிடமுள்ள வனவளம்பற்றி மேலும் தெளிவான கணிப் பினை பெற உதவுகிறது. இதன் துணை கொண்டு வனவள ஆய்வு நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.4. விண்வெளி ஆய்வுக்கலம் மூலம் பெறப்பட்ட தொகுப்பு நிழற்படங்கள் மற்றும் விமானத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப் படங்களின் துணையும் கொண்டு காடுகளின் நிலைபற்றி கணிப்பு செய்வது அவசியம். இவ்விரண்டு முறைகளும் நமக்கு காடு களின் நிலைபற்றி பரந்த ஒரு கண்ணோட்டம் கிடைக்க உதவு கிறது. இதைத் தொடர்ந்த களத்தில் நடத்தும் கணிப்புகள் நமக்கு உண்மை நிலை பற்றி தெள்ளத்தெளிய அறிய உதவும்.



1987 ஏப்ரல் 30]

2.5. நாம் இதுவரை 6 கோட்டங்களில் வனவளம் பற்றிய களக் கணிப்பு நடத்தி, தோராயமாக விபரங்களும் சேகரித்துள் ளோம். அதன்படி இக்கோட்டங்களிலுள்ள மொத்த நிலப் பரப்பான 3.42 இலட்சம் எக்டேரில், 2.15 இலட்சம் எக்டேர் மரங்கள் அடர்ந்துள்ள பகுதியாக உள்ளன என்பது நமக்கு மிக்க மகிழ்ச்சி தருகிறது.

2.6. 1980-ல் வனப் பாதுகாப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் வனவளம் சாராத பணிகளுக்கு 337 எக்டேர் காட்டு நிலங்கள் அணை கட்டவும், மின்கம்பி வரிசை நிறுவவும் குடிநீர்த் திட்டங்களுக்கும், விண்வெளி ஆராய்ச்சிக்கும் தரப் பட்டுள்ளன. இது பற்றி நாம் மிகவும் கண்காணிப்பாகவுள்ள தால், காட்டு நிலங்கள் மேலும் குறைவுபடுவதைத் தடுக்க இயலுகிறது.

3. வருவாயும், செலவும் :

3.1. வருவாய்—

1986–87-ல் 28.49 கோடி ரூபாய் வருவாய் எதிர் பார்க்கப்படுகிறது. வருவாயில் பெரும்பங்கு சந்தனக்கட்டை மற்றும் தொழிற் துறைகளுக்கு மூலப் பொருட்கள் வழங்குவதன் மூலமாக கிடைக்கிறது. விபரம் வருமாறு :—

| வருவாய் விபரம். | கோடி ரூபாய். |
|---|---|
| (அ) சந்தனக்கட்டை ... | 14.00 |
| (ஆ) தொழிற் துறைகளுக்கு பொருட்கள் வழங் குதல். | 6.18 |
| (இ) காடுபடு சிறு பொருட்கள் .. | 0.98 |
| (ஈ) மூங்கில், முந்திரி, சவுக்கு, மென் மரம், சமூக நலக் காடுகள் மற்றவை. .. | 7.33 |
| | 28.49 |

1987–88-ல் 26.75 கோடி ரூபாய் வருவாய் எதிர் பார்க்கப்படுகிறது.

3.2. செலவினம்—

1986–87-ல் செலவு 34.40 கோடி ரூபாய் ஆகும்.

1987–88-ல் 39.05 கோடி ரூபாய் செலவிட ஒதுக்கப் பட்டுள்ளது. இச்செலவில் பெரும் பகுதி காடுகளின் உற் பத்தித் திறனைப் பெருக்க அவற்றின் மேம்பாட்டுப் பணி களுக்கான முதலீடாகும்.

[1987 ஏப்ரல் 30.

4. வன மேம்பாடு :

4.1. கடந்த முப்பது முதல் நாற்பது ஆண்டு காலமாக வனத்
துறை உற்பத்தி நோக்குடன் இசைந்த மரம் வளர்ப்புத்
திட்டங்களை செயல் படுத்தி வருகிறது. காட்டுப் பகுதியினுள்
இதுவரை 3.65 இலட்சம் எக்டேர் மரங்கள் வளர்க்கப்பட்டுள்
ளன. மரம் மற்றும் மரக் கூழ் சார்ந்த தொழிற் துறைகளுக்கு
இது பெரிதும் உதவும்.

4.2. காடுகளுக்கு வெளியே மரம் நடும் திட்டத்தை
செயல் படுத்துவதில் இம்மாநிலம்தான் முன்னோடியாக விளங்கு
கிறது. 1975–76 வரை 64,427 எக்டேர் பரப்பில் காடுகளுக்கு
வெளியே மரங்கள் வளர்க்கப்பட்டன. தொடர்ந்து வந்த
பத்தாண்டுகளில் காடுகளுக்கு வெளியே உள்ள அரசு தரிசு
நிலங்கள், ஆறு மற்றும் கால்வாய் பகுதிகளிலும், ஏரிக்கரை
களிலும், 2,42,592 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்
பட்டுள்ளன.

4.3. மரம் சார்ந்த தொழிற்சாலைகளில் தேவை மற்றும்
வாணிக முக்கியத்துவம் வாய்ந்த வனப் பொருட்களின் தேவை
போன்றவை பெருகி வந்தபோதும், வாணிக ரீதியில் பயன்
படும் மரங்கள் வளர்ப்பதற்கு முக்கியத்துவம் தரப்படு
வதில்லை. இயற்கைச் சூழலைப் பேண வேண்டுவதன் அவ
சியம் கருதி, இப்போது உள்ள அளவிலேயே இது போன்ற வாணிக
முக்கியத்துவம் வாய்ந்த தோட்டங்கள் வைத்துக் கொள்ளப்
படுகின்றன. சீகை, தைல மரம், தேயிலை, ரப்பர் போன்ற
வணிக முக்கியத்துவம் உள்ள மரங்கள் இதுவரை 1.85
இலட்சம் எக்டேரில் வளர்க்கப்பட்டுள்ளன. இது மொத்த
வனப் பரப்பில் 8 விழுக்காடு மட்டுமே என்பதைக் கவனத்திற்
கொள்ள வேண்டும். இயற்கைச் சூழல் அமைப்பினை நீக்கு
கவனத்தோடு வன அறிவியல் வல்லுநர்கள் வகுத்துள்ள நவீன
தொழில் நுட்பத்தின் உதவி கொண்டு சீரிய முறையில் பணி
புரிவது வன நிர்வாகம் சம்பந்தப்பட்ட நமது சமீப கால உத்தி
யாகும்.

5. மூலப்பொருட்கள் வழங்குதல் :

காகிதம், ரயான் என்னும் செயற்கை நூல், தோல் பதனிடும்
டானின் போன்ற பொருட்கள் தயாரிக்கும் தொழிற் சாலைகள்
தங்களுக்கு தேவையான மூலப் பொருட்களுக்கு காடுகளை நம்பி
யிருக்கின்றன.

தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் முக்கிய மூலப்
பொருட்கள் யூகலிப்டஸ், குளோபுலஸ், கிராண்டிஸ், ஹைபிரிட்,
தோல் உரிக்கப்பட்ட மிலாறு மரம், மூங்கில், மிலாறு பட்டை,
சத்தல், தனுக்கு, லெமன்கிராஸ் முதலியன.



1987 ஏப்ரல் 30]

5.1. ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் டன் மூலப்
பொருட்கள், தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்
றன. 1985–86 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் டன்
மூலப் பொருட்கள் விற்பனை செய்ததின் மூலம் கிட்டிய
வருவாய் ரூ. 6.06 கோடியாகும். (இது வனத்துறையின்
மொத்த வருவாயில் 21 விழுக்காடு).

5.2. 1986–87 ஆம் ஆண்டில் 2.13 டன் மூலப் பொருட்கள்
வழங்குவதன் மூலம் ரூ. 6.43 கோடி வருவாய் பெறப்
படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1987–88 ஆம் ஆண்டில்
2.50 டன் மூலப் பொருட்கள் வழங்குவதன் மூலம் ரூ. 6.50
கோடி வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

6. விறகு மர உற்பத்தி :

தமிழ்நாட்டில் வருடத்தில் விறகுமர தேவை எட்டு மில்லியன்
டன்கள் என கணிக்கப்பட்டுள்ளது. இத்தேவையில் ஒரு சிறு
பகுதிதான் வனங்களில் இருந்து கிடைக்கப் பெறுகிறது. வரு
டத்தில் மூன்று இலட்சம் டன் விறகுமரம் வழங்கப்பட்டுள்ளது.

இயற்கைச் சூழ்நிலையினை கவனத்தில் கொண்டு 1982 ஆம்
ஆண்டு முதல் விறகு மர காடுகளை வெட்டுவதை முழுமையாக
தடை செய்யப்பட்டுள்ளது.

விறகு மரத் தேவை குறிப்பாக சமூக நலக் காடுகள்
வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வனப் பரப்பு அல்லாத இடங்களில்
ஏற்படுத்தப்படும் தோட்டங்களில் இருந்து அளிக்கப்பட்டு வரு
கிறது.

7. சந்தன மரம் :

சந்தன மரங்கள் இயற்கையாக வட ஆற்காடு, தர்மபுரி,
சேலம், பெரியார், கோவை மாவட்டங்களில் உள்ள பீட
பூமிகளிலும், மலைப் பகுதிகளிலும், நீலகிரி, தென்னாற்காடு,
திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் குறைந்த அளவிலும்
வளர்கின்றன. பட்டுப்போன சந்தன மரங்கள் மட்டுமே வெட்டி
எடுக்கப்படுகின்றன. வெட்டப்படும் சந்தன மரங்கள் கிடங்கு
களுக்கு கொண்டு வரப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு பொது ஏலத்தில்
விற்கப்படுகின்றன.

7.1. சந்தன மர விற்பனை :

| ஆண்டு. | விற்கப்பட்ட சந்தன மரங்களின் எடை மற்றும் அளவு. (மெட்ரிக் டன்னில்.) | வருவாய் (இலட்சம் ரூபாய்). | ஒரு மெட்ரிக் டன்னுக்கு சராசரி விலை (ஆயிரம் ரூபாய்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1982 .. .. | 1,947 | 658.2 | 33.8 |
| 1983 .. .. | 1,907 | 691.6 | 36.3 |
| 1984 .. .. | 2,000 | 811.4 | 40.6 |
| 1985 .. .. | 2,089 | 1,331.8 | 63.7 |
| 1986 .. .. | 1,919 | 1,501.0 | 78.1 |

8. காடுபடு சிறு பொருட்கள் :

காடுபடு சிறு பொருட்களை வியாபார நோக்கோடு மகசூல்
செய்வது நமது முக்கிய நோக்கமல்ல. இயற்கைச் சூழலோடு
பிரிக்க முடியாவண்ணம் வாழும் பழங்குடி மக்களின் நலனையே
முக்கியக் குறிக்கோளாக கருதி காடுபடு சிறு பொருட்கள் அடங்
கிய பகுதிகளை நிர்வகிப்பது நமது நோக்கமாகும். புளி, கரு
வேப்பிலை, கடுக்காய், பிரம்பு போன்ற காடுபடு சிறு பொருட்
களை சேகரிக்கும் உரிமை பழங்குடியினர் கூட்டுறவு சங்கங்
களுக்கு குத்தகைக்கு விடப்படுகின்றது. குத்தகை தொகையில்
பத்து சதம் சலுகையும் தரப்படுகிறது. கூட்டுறவு சங்கங்களுக்கு
குத்தகை உரிமை தேவைப்படாதபோது பொது ஏலத்தில்
விற்கப்படுகிறது. அல்லது துறையே இப்பணியை செய்ய
எடுத்துக் கொள்கிறது. 1986–87 ஆம் ஆண்டில் காடுபடு சிறு
பொருட்கள் விற்பனை மூலம் 97.9 இலட்சம் ரூபாய் வருவாய்
கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது சமீப காலத்தில் தர்மபுரி,
சேலம், வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் புளிய
மரத் தோட்டங்களை தோட்ட நிர்வாக முறையின்கீழ் கொண்டு
வந்து தீவிர வனக்கலைப் பணிகள் மூலம் மேம்பாடு செய்ய
துவங்கியுள்ளோம். இதனால் புளியமரத் தோட்டங்களில்
இருந்து கிடைக்கும் வருவாய் இனிவரும் காலங்களில் கணிசமாக
உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



9. திட்டங்கள் செயல்படுத்துதல் :

மொத்த நிலப் பரப்பில் 17.22 விழுக்காடு மட்டுமே காடு
களாக உள்ளன. 22,379 சதுர கிலோ மீட்டர் அளவிலேயே
இக்காடுகள் அடங்கியுள்ளன. வனத்துறை மேம்பாட்டுத் திட்டங்
கள் அனைத்துமே வனங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும்
வன விலங்குகளையும் இயற்கைச் சூழ்நிலையும் பாதுகாக்கவும்
பெரும் அளவில் செயல்படும் மரம் வளர்ப்பு திட்டங்களின் மூலம்
கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு நல்குவதும் பழங்குடி
மக்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்தவும் பயன்படும் நல்ல
பல திட்டங்களாகும்.

9.1. நிதி ஒதுக்கீடு :

மாநில திட்டங்களான காடுகள் மற்றும் வன விலங்கு திட்டங்
களுக்கு ஏழாவது திட்ட காலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட
தொகை 68 கோடி ரூபாயாகும். 1985–86 ஆம் ஆண்டில்
செலவிடப்பட்ட தொகை 18.18 கோடி ரூபாயாகும்.
1986–87 ஆம் ஆண்டில் செலவு 20.27 கோடி ரூபாயாகும்.
1987–88 ஆம் ஆண்டில் 25.56 கோடி ரூபாய் செலவிட
உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9.2.

1985–86 மற்றும் 1986–87 ஆம் ஆண்டு செலவழிக்கப்பட்ட தொகை, 1987–88 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ஆகிய விபரங்கள் கீழே அளிக்கப்படுகின்றன :—

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | ஏழாவது திட்ட ஒதுக்கீடு. | செலவு. 1985—86. | செலவு. 1986—87. | 1987–88 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| மாநிலத் திட்டங்கள்— | | | | |
| 1. நெறிபடுத்துதலும், நிர்வாகமும் .. | 10.00 | 8.06 | 16.01 | 15.62 |
| 2. வன ஆராய்ச்சி, கல்வி மற்றும் பயிற்சி .. | 140.00 | 16.48 | 25.76 | 34.35 |
| 3. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்— காடுகள் உற்பத்தி : | | | | |
| (அ) விரைவாக வளரும் மர இன வகைகள் | 1,415.00 | 369.14 | 461.12 | 598.90 |
| (ஆ) பொருளாதார மற்றும் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த மர இன வகைகள் .. | 150.00 | 46.32 | 49.89 | 54.99 |
| (இ) சமூகக் காடுகள் .. .. | 4,805.00 | 898.59 | 991.03 | 1,207.86 |
| 4. வனப் பொருட்கள் .. .. .. | 110.00 | 43.35 | 55.20 | 56.8[1] |
| 5. சாலைகளும் கட்டிடங்களும் .. .. | 150.00 | 80.97 | 118.78 | 151.91 |
| 6. வனவிலங்கு பாதுகாப்பு .. .. | 420.00 | 263.41 | 202.64 | 274.12 |
| 7. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் | 200.00 | 62.48 | 93.00 | 125.22 |
| 8. ஏனைய செலவு .. .. .. | 100.00 | 29.69 | 23.96 | 36.13 |
| மொத்தம் .. | 7,500.00 | 1,818.49 | 2,027.39 | 2,555.91 |

1987 ஏப்ரல் 30]

| தொடர் என்னும் திட்டத்தின் பெயரும். | | ஏழாவது திட்ட ஒதுக்கீடு. | செலவு. | | 1987–88 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு. |
|---|---|---|---|---|---|
| | | | 1985–86 | 1986–87 | |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் : | | | | | |
| 1. ஊரக விறகு மரத்தோட்டம் | .. | 704.00 | 125.18 | 120.00 | 93.43 |
| 2. ஆராய்ச்சி .. .. .. | .. | .. | 0.28 | 0.01 | 0.01 |
| 3. வன விலங்குத் திட்டங்கள் .. | .. | 130.00 | 43.06 | 36.08 | 94.80 |
| 4. மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தி திட்டங்கள். | | 471.75 | 34.79 | 78.76 | 107.64 |
| மொத்தம் | .. | 1,305.75 | 203.31 | 234.85 | 295.88 |



செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்களின் விவரம் சுருக்கமாக தரப்படுகிறது.

9.3. காடுகள் உற்பத்தித் திட்டங்கள் :

(அ) கூழ்மரம் மற்றும் விறகு மரத் தோட்டத் திட்டங்கள்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறையே "தீவிர காடு வளர்ப்பாகும்". இதில் எல்லா வன வளங்களின் உற்பத்தியைப் பெருக்க முடுக்கி விடப்படுகிறது. காடுகள் உற்பத்தித் திட்டத் தின்கீழ் சீகை, விறகு மரம், கூழ்மரம் போன்ற மர வகைகளை தகுந்த இடங்களில் வளர்த்தலும், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தரந்தாழ்ந்த காடுகளில் விறகு மற்றும் இதர மர வகை தோட்டங்கள் உண்டாக்குதலுமாகும்.

1986-87 ஆம் ஆண்டில் 16,355 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்புதல் மற்றும் 1,700 எக்டேர் பரப்பு சீகை தோட்டங்களில் அடர்த்தி குறைத்தலோடு மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பொது மக்களுக்கு ஒரு லட்சம் மரக் கன்றுகள் வழங்கவும் 451.12 லட்சம் ரூபாய் செலவிடப்படும்.

1987-88 ஆம் ஆண்டில் 16,000 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூழ்மரத் தோட்டங்களில் 300 எக்டேர் பரப்பில் தீவிர களைப்பணிகள் செய்யவும் திட்டமிடப்பட்டு செயல்படுத்த உள்ளது. இப்பணிகளுக்கெல்லாம் 1987-88 ஆம் ஆண்டிற்கு 598.90 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மர வகைகள்.

(1) துறையின் கட்டுப்பாட்டில் உள்ள முந்திரி தோட்டப் பகுதிகளில் புதிய தோட்டங்கள் ஏற்படுத்துதல், மகசூலை அதிகரிக்க மிகப் பழைய முந்திரி தோட்டங்களில் உயர் விளைச்சலை அளிக்கக்கூடிய பதியன் முறைப் பணிகள் மேற்கொண்டு புதிய நடவு வேலைகள் செய்பவை போன்றவையாகும். (2) மாநிலத்தில் தேக்கு மற்றும் கடின மர வளத்தினை நிறைவு செய்ய புதிய தோட்டங்கள் ஏற்படுத்தலும், உற்பத்தி திறனில்லா வனப் பகுதிகளில் தேக்குமர தோட்டங்களை ஏற்படுத்தி இதனால் மாநிலத்தின் சொத்தினை அதிகரித்தல். (3) எங்கெல்லாம் தக்க சூழ்நிலை உள்ளதோ அங்கெல்லாம் மென் மரங்களை வளர்த்தல். (4) தீவிர களைப் பணிகள் செய்து சந்தனமர செல்வத்தினைப் பெருக்குதல் போன்றவை இத்தலைப்பின் கீழ் செய்யப்படும் பணிகளாகும்.

9.4. 1986-87-ல் எய்திய சாதனையும், 1987-88 ஆம் ஆண்டின் திட்ட இலக்கும் அடியிற் கண்டவாறு:—

| திட்டத்தின் பெயர். | சாதனை 1986-87 வேலை (எக்டேர்) | | நிதி (ரூபாய் லட்சத்தில்). | 1987-88ம் வருட செயற்குறிப்பு இலக்கு. வேலை (எக்டேர்) | | நிதி (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | | (5) |
| 1. முந்திரி | தோட்டங்கள் எழுப்புதல் | 50 | 10.46 | தோட்டங்கள் எழுப்புதல் | 50 | 10.24 |
| | தீவிர கலைப்பணி | 925 | | தீவிர கலைப்பணி | 925 | |
| 2. தேக்கு மற்றும் செம்மரம் | தோட்டங்கள் எழுப்புதல் | 407 | 8.87 | தோட்டங்கள் எழுப்புதல் | 276 | 9.01 |
| | | | | தீவிர கலைப்பணி | 20 | |
| | | | | மண்வளப் பாதுகாப்பு பணி | 255 | |
| 3. மென்மரத் தோட்டங்கள் | தோட்டங்கள் எழுப்புதல். | 105 | 2.89 | தோட்டங்கள் எழுப்புதல். | 80 | 2.84 |
| 4. சந்தன மரத் தோட்டங்கள் | தோட்டங்கள் எழுப்புதல். | 30 | 27.97 | அடர்த்தி குறைத்தல். | 290 | 32.90 |
| | | | 49.89 | | | 54.99 |



9.5. வளர்ச்சி அடையாத காடுகளை மேம்படுத்தும் திட்டம்:

இயற்கைச் சூழல் பாதுகாக்கப்படவும் மற்றும் பொருளாதார நெருக்கடியினை தவிர்க்கவும் மக்கள் அதிக அளவில் மரம் வளர்ப்பில் பங்கேற்க முன்வர வேண்டும் என்று பாரதப் பிரதமர் அறைகூவல் விடுத்தது மிகவும் முக்கியமானது, வரவேற்கத்தக்கது. மேலும் இந்த அழைப்பு, புதிய கொள்கைகளை உருவாக்கவும், புதிய உத்திகளை (Strategy) வகுக்கவும் தகுந்த வழிகோலுகிறது. ஒவ்வொரு மனிதனும் மரம் வளர்ப்பதை தன்னுடைய தலையாய கடமையெனக் கருதி தக்க முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் பசுமைப் புரட்சியின் இரண்டாவது கட்டமாகும்.

5 லட்சம் எக்டேர் காப்புக் காடுகள் பகுதியில் மரங்கள் அடர்த்தி குறைந்த பகுதிகள் இங்கும் அங்குமாய் உள்ளன. மிகவும் வளர்ச்சி குன்றிய வனப்பகுதியும் இதில் உள்ளது. மிகவும் விரைவாக, ஆனால் படிப்படியாக மேற்படி வனப்பகுதிகளை அபிவிருத்தி செய்வது அவசியமாகிறது. இத்திட்டத்தை அமுலாக்குவதற்காக முதல் கட்டமாக அண்ணா, தர்மபுரி மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மூன்று புதிய தோட்டங்கள் ஏற்படுத்தப் படவுள்ளன.

முன்னர் ஏரிப் படுகைகளில் 11,000 எக்டேர் பரப்பில் 'சிடா' உதவியுடன் சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் எழுப்பப்பட்ட தோட்டங்களில் மரங்கள் நடப்படும் பணி மேற்கொள்ளப்படும். மரங்கள் நடும் மேற்படி பணி தவிர 'சிடா' உதவியுடன் இயங்கும் 17 சமூகக் காடுகள் கோட்டங்கள் மற்றும் 4 ஊரக விறகு காடுகள் கோட்டங்கள் எழுப்பிய 20,500 எக்டேர் தோட்டங்கள் பராமரிப்பதற்காக எடுத்துக் கொள்ளப்படும். செடி கொடிகளே இல்லாத வருவாய் துறைக்குச் சொந்தமான வெற்று நிலங்களும் மரம் வளர்ப்பிற்காக எடுத்துக் கொள்ளப்படும். மேலும் 'சிடா' உதவியுடன் செயல்படும் சமூக வனவியல் திட்டத்தின்கீழ் மரம் வளர்ப்பு விரிவாக்கத் திட்டம் மற்றும் மரம் வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டங்களின் கீழ் 47.10 மில்லியன் மரக் கன்றுகள் பொது மக்களுக்கு அவர்களுடைய நிலங்களில் நடுவதற்காக வழங்கப்படும்.

மேற்கூறிய மூன்று புதிய தோட்டங்களில் மேற்கொள்ளப்படும் பணி மற்றும் சமூகக் காடு திட்டம் தவிர ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதர மரம் வளர்ப்பு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பரப்பு மற்றும் மண் மரம் வளர்ப்பு திட்டங்கள் ஆகியவையும் இத்திட்டத்தின் வளப் பாதுகாப்பு கீழ் கொண்டு வரப்படும். மொத்தத்தில் 1987-88 ஆம் ஆண்டில் 9.4 கோடி மரக் கன்றுகள் இத்திட்டத்தின்கீழ் நட உத்தேசிக்கப்பட்டுள்ளன.

[1987 ஏப்ரல் 30

### 9.6. மரம் வளர்ப்புப் பற்றிய கல்வித் திட்டம் :

மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுரைப்படி தமிழக அரசு புதுமையான ஒரு திட்டத்தை நாட்டிலேயே முதன் முறையாக அறிமுகப்படுத்த உள்ளது. மரம் வளர்ப்புப் பற்றிய முக்கியத்துவத்தை மக்களிடையே பரப்ப புதிய மரம் வளர்ப்பு விழிப்புணர்வு திட்டம் ஒன்றினை செயல்படுத்த உள்ளோம்.

இத்திட்டத்தின்கீழ் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவர்கட்கும் மரம் வளர்ப்புப் பற்றிய ஓர் பாடத்திட்டத்தை புகுத்த உள்ளோம். இதன்படி மரம் வளர்ப்புத் திட்டம் ஒரு மக்கள் இயக்கமாக உருவாக்கப்பட்டு விவசாய பெருங்குடி மக்களும், மாணவர்களும், மகளிரும், இளைஞர்களும் இப்பணியில் ஈடுபாடு கொள்வர். சமூக நலக் காடு வளர்ப்பு, நில வளப் பயன்பாடு, நில வளம் குன்றுவதற்கான காரணங்கள், தரிசு நில மேம்பாடு மற்றும் புதிய காடு வளர்த்தல் முதலிய பல்வேறு பொருள்கள் பற்றி பள்ளிச் சிறுவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்படவிருக்கின்றன. மாண்புமிகு முதல்வரின் புதுமையான இத்திட்டம் சமுதாயத்திற்கு நன்மை பல நல்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

### 9.7. 'சிடா' உதவியுடன் செயல்படும் சமூக நலக்காடு வளர்க்கும் திட்டம் :

9.7.1. பொது நிலங்களில் காடு வளர்க்கும் திட்டத்தினை செயல் படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. 1960 ஆம் ஆண்டில் சோதனை முறையில் சிறு அளவில் செடி நட மேற்கொண்ட திட்டம் வெற்றிகரமான முடிவுகளை கொடுத்து சமுதாய நிலங்களில் இடைவிடாத முறையில் காடு வளர்க்கும் திட்டம் மேற்கொள்ள வழி காட்டியது. சமுதாய நிலங்களிலும், பஞ்சாயத்து நிலங்களிலும் ''வன பண்ணைத் தோட்டங்கள்'', ''வன விஸ்தரிப்பு'', ''கிராம நலக் காடு'', ''கலப்பு தோட்டங்கள்'' போன்ற பலவகை திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன. 1981 ஆம் ஆண்டில் மேற்கண்ட எல்லா வகை திட்டங்களையும் ஒருங்கிணைத்து சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் சமூக நலக்காடுகள் திட்டம் செயல்பட ஆரம்பித்தது. இந்த திட்டத்தின் முதல் கட்டப்பணி 1981-ல் துவக்கப்பட்டு, ஐந்தாண்டு காலத்தில் 45 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு 31-3-1986 வரை அமுல்படுத்தப்பட்டது. இந்த



1987 ஏப்ரல் 30]

திட்டம் இந்திய அரசு, தமிழக அரசு மற்றும் சுவீடன் நாடு ஏற்றுக் கொண்டுள்ள மதிப்பீடு திட்ட பத்திரத்தின்படி அமுல்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

9.7.2. இந்த திட்டத்திற்கான இரண்டாவது கட்ட திட்ட கணிப்பு வேலை சுவீடன் நாட்டுக்குழு செப்டம்பர் 1985-ல் தொடங்கியது. திட்ட கணிப்பு பிரேரணை ஜூன் 1986-ல் இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த திட்ட கணிப்பு பிரேரணையை மத்திய அரசும் மாநில அரசும் கலந்தாலோசித்து, பிரேரணையில் திருத்தங்கள் செய்து, விரிவுபடுத்தி, திருத்தி அமைக்கப்பட்டது. ஜனவரி 1987-ல் திருத்திய பிரேரணை இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இந்த திட்ட பிரேரணை 1987 ஆம் ஆண்டு சுவீடன் நாட்டுக்கு போய் சேர்ந்து திட்ட நடைமுறைகள் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

9.7.3. இதற்கிடையில் முதல் கட்ட வேலை மேலும் ஓராண்டுக்கு அதாவது 31-3-1988 வரை நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் முதல் கட்ட திட்ட பிரேரணை பத்திரத்தில் தெரிவித்துள்ளபடியே, காடு வளர்க்க கிடைக்கக் கூடிய சமுதாய நிலங்களின் அளவுக்கு தக்கபடி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. 1987-88-ல் இத்திட்டத்தில் செயல்படுத்தவுள்ள இரண்டு முக்கிய பகுதிகள் :—

(1) புறம்போக்கு மற்றும் பஞ்சாயத்து நிலங்களில் காடு வளர்த்தல்.

(2) மரக் கன்றுகள் வளர்த்து பொது மக்களுக்கு விநியோகித்தல்.

9.7.4. 1987-88—ல் கீழ் குறித்தபடி திட்ட வேலைகள் எடுத்துக் கொள்ள உள்ளன :—

(1) புறம்போக்கு மற்றும் பஞ்சாயத்து நிலங்களில் காடு வளர்த்தல் (பொய்த்துப்போன பழைய தோட்டங்களில் போக்குச் செடிகள் நடுதல் உட்பட).

(2) புதிய புறம்போக்கு நிலங்கள், அதாவது குளக்கரை, சாதாரண புறம்போக்கு, மலை புறம்போக்கு இடங்கள் போன்றவைகளில் இடம் கிடைத்தால் சமூக நலக்காடுகள் வளர்த்து பொது மக்களை ஈடுபடச் செய்து வருவாயை சமமாக பகிர்ந்து கொள்ளுவது. முடிந்தவரை பெண் விளம்பரதார்களை ஊக்கத் தொகை கொடுக்கும் அடிப்படையில் நியமித்து, செடிகள் விற்பனை செய்யவும், விநியோகம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டது.

9.7.5. வேலை மற்றும் நிதி இலக்கு—

1987–88 ஆம் ஆண்டில் சமூக நலக்காடு திட்டத்தில் செயல் படவுள்ள வேலை மற்றும் நிதி இலக்கு விவரங்கள் கீழே தரப் பட்டுள்ளன :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| தோட்டங்கள்— | |
| (1) தொகுதி தோட்டங்கள்— | |
| குளக்கரை மற்றும் வருவாய் மலை புறம் போக்குகளில் மீண்டும் செடி நடுதல்/பட்டுப்போன தோட்டங்களில் செடி நடுதல் (11,000 எக்டேர் செடி நடவும் 20,500 எக்டேர் பராமரிப்பு வேலையும்). (2) வரிசை நடவு தோட்டங்கள்— 100 கி.மீ. தூரம் வரிசை நடவு தோட்டங்கள் உண்டாக்கவும், 610 கி.மீ. பழைய தோட்டங்கள் பராமரித்தல், வனப் பண்ணைத் தோட்டங்கள். | 925.14 |
| (3) சிப்பந்திகள் செலவு— | |
| கட்டிடம் வாடகை, வாகன பராமரிப்பு, அறை கலன்கள், கருவிகள், ஆராய்ச்சி பயிற்சி விளம்பரம் மற்றும் கணிப்பாய்வு. | 233.71 |
| ஆக மொத்தம் .. | 1,158.85 |

9.8. நீர்வள மேம்பாட்டுத் திட்டம் :

தமிழ்நாட்டில் ஒவ்வொரு வருடமும் தண்ணீர் பற்றாக்குறை அதிகரித்து வருகின்றது. இப்புதிய நீர்வள மேம்பாட்டுத் திட்ட வாயிலாக தண்ணீர் பற்றாக்குறையை நீக்க வேண்டிய பணியில் வனத்துறை ஒரு முக்கிய அங்கம் வகிக்க இருக்கிறது.

தற்போது உள்ள புள்ளி விவரத்தின்படி நமது நாட்டில் 2.31 லட்சம் கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டியுள்ளது. தண்ணீர்





முறையாகக் கிடைக்க வாய்ப்பில்லாத கிராமங்கள் ''பிரச்சனை நிறைந்த கிராமங்கள்'' எனக் கருதப்படுகின்றன. எனவே, நிலத்தடி நீர்வளத்தினை அறிவியல் பூர்வமாக ''தாவர வளர்ப்பு'' மற்றும் பொறியியல் பணிகள் வாயிலாக மேம் படுத்துவது அத்தியாவசியமாகிறது.

தண்ணீர் பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ள இந்த மோச மான நிலையைத் தவிர்க்க மலைப் பகுதிகளில் உள்ள நீர்பிடிப்பு பகுதிகளில் முறையான பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நீர்வள மேம்பாட்டுப் பணி இப்போது முக்கியத்துவம் பெறத் துவங்கியுள்ளது. நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து வற்றாத நீரோட்டம் இருப்பின் அதுவே நல்ல நீர்வள நிர்வாகத்தின் சான்றாகும். மேற்கு மலைத்தொடரின் கிழக்கு சரிவு பகுதி களில் உள்ள நிலச்சரிவுகள் பெரியதும் சிறியதுமான பல நீர்பிடிப்பு பகுதிகளை கொண்டதாகும். இப்பகுதிகள் நீர்வள மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள உகந்தவையாகும். இத் திட்டப் பணிகளுக்கு ஒரு லட்சத்து எண்பதாயிரம் எக்டேர் ஒதுக்கக் காடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் ஆரம்ப கட்டமாக ரூ. 23.50 லட்சம் செலவில் அண்ணா மாவட்டத்தில் உள்ள காமராஜ் சாகர் என்னும் இடத்தில் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீர்வள மேம்பாட்டுத் திட்டம் செயல் படுத்தப்படவுள்ளது.

9.9. மண்வளப் பாதுகாப்புப் பணிகள் :

மரம் வளர்ப்புப் பணிகள் தவிர, மண்வளப் பாதுகாப்புப் பணிகள் தேவைப்படும் பகுதிகளில், மண் அரிப்பினைத் தடுக்கவும், வண்டல் படிவினை குறைக்கவும், தடுப்பு அணை கள் (Check Dams) கசிவு நீர்க்குட்டைகள் (Percolation Ponds) கட்டுவது மற்றும் நீரோட்டத்தால் ஏற்பட்ட பள்ளங்களை அடைப்பது ( Gully Plugg ng ) போன்ற மண்வளப் பொறியியல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வைகை நீர்பிடிப்பு பகுதியில் வரும் நீர்ப்பிரி முகடுகளில் (Wate Shed) 1,033 தடுப்பு அணைகள் கட்டப்பட்டுள்ளன. 488 எக்டர் பரப்பிற்கு காண்டூர் ட்ரென்ச்சிங் பணியும் மேற்கொள் ளப்பட்டிருக்கிறது. அதே போல் மேட்டூர் நீர்பிடிப்பு பகுதியில் வரும் நீர்ப்பிரி முகடுகளில் 19 தடுப்பு அணைகளும், 5 கசிவு நீர்க்குட்டைகளும் கட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள நீர்ப்பிரி முகடுகளில் ஆய்வுப் பணி மற்றும் நீர்த்தேக்கப் பகுதிகளில் வண்டற்படிவு ஆய்வுப் பணியினையும் பூண்டியிலுள்ள ஹைடிராலிக்ஸ் மற்றும் ஹைடிரா லஜி கழகம் மேற்கொண்டு வருகிறது. மேற்படி கழகத்தின் பரிந்துரைகளின்படி தக்க நடவடிக்கைகள் தேவைப்ப பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[1987 ஏப்ரல் 30

வை கைநீர்பிடிப்பு பகுதிகளிலும் மேட்டூர் ஸ்டான்லி நீர்பிடிப்பு பகுதிகளிலும் மண் வளப்பாதுகாப்பு திட்டங்கள்:

வைகை நீர்த்தேக்கம் மற்றும் மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்க நீர்பிடிப்பு பகுதிகளில் ஏற்படும் மண் அரிப்பை குறைப்பதே இத்திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டங்களின்கீழ் காப்புக் காடுகள் மற்றும் காப்பு நிலங்களில் பொதுப்பணித் துறை நிலங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் மேட்டூர் மற்றும் வைகை அணைகளில் நீரில் மூழ்கும் பகுதிகளிலும் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் இவ்வருடத்தில் இருந்து நீர்பிடிப்பு பகுதிகளில் உள்ள தனியாருக்குச் சொந்தமான நிலப்பகுதிகளில் மரவளர்ப்பினை ஊக்குவிப்பதற்கென்று மரக்கன்றுகளை அதன் அடக்க விலைக்கே விநியோகிப்பதற்காக புதிய திட்டம் அமுலாக்கப்படவுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிவரை 45,943 எக்டேர் பரப்பில் மேற்கூறிய இரு மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழும் காடு வளர்ப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மண்வளப் பாதுகாப்பு திட்டங்களை மேற்கொள்வதற்கென்றே 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. திட்ட காலத்தில் காடு வளர்ப்பிற்கென இலக்கு 18,000 எக்டேர் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மரம் நடும் பணி தவிர பொறியியல் பணிகளும் மண் அரிப்பு தடுப்புகள் (கல்லி ப்ளகிங்) சம உயர மண் அரிப்புத் தடுப்புகள் (காண்ட்டூர் பண்டிங்) சம உயர மண் அரிப்பு தடுப்பு குழிகள் (காண்ட்டூர் டிரென்ச்சஸ்) தடுப்பு அணை நீர்க்கசிவு குட்டைகள் கட்டுதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.

1986-87 ஆம் வருடத்தில் மேற்கூறிய இரு மண் வளப் பாதுகாப்பு திட்டங்களின் கீழும் ரூ. 79.63 லட்சம் செலவில் 2,050 எக்டேர் நிலப்பரப்பில் காடு வளர்ப்பு பணிகளும் மண் வளப் பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

1987–88 ஆம் வருடத்தில் மேற்கூறிய இரு நீர்த்தேக்க நீர்பிடிப்புப் பகுதிகளிலும் 89.33 லட்சம் ரூபாய் செலவில் 1,450 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் மற்றும் மண் வளப்பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9.10. பொன்னையாறு நதிப்படுகையில் மண் வளப்பாதுகாப்புப் பணிகள் :

நீர்ப்பிரி முகடுகளில் ஏற்படும் மண் அரிப்பு மற்றும் வண்டற்படிவினால் நதிப்படுகைகளின் உயரம் அதிகமாகிறது. அதனால் நதியில் வெள்ளம் வரும்போது உயர்ந்து கரைகளை மீறி வெளியே செல்கிறது. கால்வாய்களின் வழியாக செல்லாததால் பாசனத்திற்கு பயன்படுத்த இயலாது போய்விடுகிறது. முக்கிய



1987 ஏப்ரல் 30]

மாக நீர்த்தேக்கங்களில் வண்டற்படிவு ஏற்படுவதால் நீர் தேக்கக் கொள்ளளவு அதிக அளவில் குறைந்து விடுகிறது. அதோடு மட்டுமல்லாமல் அணையின் ஆயுட்காலத்தை குறைக்கவும் வழிகோலுகிறது.

பொன்னையாற்றுப் படுகையில் இரு அணைக்கட்டுகள் நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளன. அவை : 1. கிருட்டிணகிரி நீர்தேக்கம் மற்றும் 2. சாத்தனூர் நீர்த்தேக்கம்.

பொன்னையாறு நதி செல்லும் தர்மபுரி, தென்னாற்காடு மற்றும் வடாற்காடு ஆகிய மாவட்டங்களில் வறட்சிப் பகுதிகளில் என்னென்ன இயற்கை வளங்கள் உள்ளன என்று கண்டறிந்து அவற்றை அபிவிருத்தி செய்வதற்காக பொதுப்பணித்துறையின் நிலத்தடி நீர்ப்பிரிவு இந்திய அரசின் விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் ஒத்துழைப்புடனும் மற்றும் பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புடனும் ஒரு ஒருங்கிணைந்த ஆய்வினை மேற்கொண்டு ஆய்வறிக்கை தயாரித்துள்ளது. கிருட்டிணகிரி நீர்த் தேக்கத்தில் வண்டற்படிவு குறித்து நடத்திய ஆய்வில் 24 வருடங்களில் அணையின் நீர்த்தேக்கக் கொள்ளளவு 29.52 விழுக்காடாக குறைந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் ஆய்வின்போது அணையின் நீர்த்தேக்க கொள்ளளவு கடந்த 19 வருடத்தில் 9.87 விழுக்காடாக குறைந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. வண்டற்படிவினை தடுக்க நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தக்கவாறு மரம் வளர்ப்பு பணிகளும் மண் வளப்பாதுகாப்புப் பணிகளும் மேற்கூறப்பட்ட நீர்த்தேக்கப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆய்வறிக்கையில் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

பொன்னையாறு நதிப் படுகையின் 22,200 எக்டேர் வளர்ச்சி குன்றிய வனப்பகுதியில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் மரம் வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளலாம். 22,200 எக்டேர் பரப்புள்ள வளர்ச்சி குன்றிய வனப்பகுதியினை ஐந்து வருட காலத்தில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென முதல் கட்டமாக 1987–88-ல் பொன்னையாறு நதிப்படுகையில் மண்வளப்பாதுகாப்புப் பணிகளையும் மரம் வளர்ப்பு பணியினையும் ரூ. 30.00 லட்சம் செலவில் செய்ய ஒரு கோட்டம் ஏற்படுத்தப்படவுள்ளது.

9.11. வனவிலங்கு பாதுகாப்பு திட்டங்கள் :

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வனவிலங்கு சரணாலயங்களை அபிவிருத்தி செய்வதையும் மிருகங்களுக்கு தேவையான வசதிகளை செய்வதையும் நோக்கமாக கொண்டது. இதில் ஐந்து மாநில திட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது:—

1. இயற்கை பாதுகாப்புத் திட்டம்.

2. மன்னார் வளைகுடாவில் கடலுறை உயிரினப் பூங்கா

[1987 ஏப்ரல் 30

3. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர்.

4. வன மனமகிழ்மன்றம், குரும்பப்பட்டி.

5. கிண்டியில் நிரந்தர பொருட்காட்சி அமைத்தல்.

மத்திய அரசு உதவியுடன் பின்வரும் வனவிலங்கு சரணாலயங்கள் மற்றும் தேசிய பூங்காவிலும் மேம்பாட்டுப் பணிகள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன:—

1. களக்காடு சிங்கவால் குரங்கு சரணாலயம்.

2. சாத்தனூர் முதலை வளர்ப்பு பண்ணை.

3. கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம்.

4. முதுமலை வனவிலங்கு சரணாலயம்.

5. நீலகிரி மாவட்டத்திலுள்ள முகர்தி (தார்) சரணாலயம்.

6. கிண்டி தேசிய பூங்கா.

7. ஆனைமலை வனவிலங்கு சரணாலயம்.

8. முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம்.

9. வனவிலங்கு பொருட்காட்சி அமைத்தல்.

இத்துறையினால் ஆறு வனவிலங்கு சரணாலயம் மற்றும் ஒரு தேசிய பூங்காவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்திய அரசின் உதவிபெறும் திட்டத்தின்படி மிருகங்கள் வாழும் இடங்களை பராமரித்தல், மிருகங்களுக்கு தீவனமும் உணவும் போதிய அளவு கிடைத்திட தேவையான உதவிகள் மேற்கொள்ளுதல், மிருகங்களை இடம் மாற்றுதல், குடிதண்ணீர் வசதி அபிவிருத்தி செய்ய குளங்கள், குட்டைகள், தடுப்பு அணைகள், கிணறுகள் போன்றவைகள் அமைத்தலும் செப்பனிடுதலும் போன்ற வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

1987–88-ல் மாநில மற்றும் மத்திய உதவிபெறும் திட்டங்கள் தொடர்ந்து முறையே ரூ. 226.71 இலட்சம் மற்றும் .9460 இலட்சம் செலவிட உள்ளது.



1987 ஏப்ரல் 30]

9.1 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மலைபபகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம்
(அ) இயற்கைச் சூழல் பாதுகாப்பு, (ஆ) இயற்கைச் சூழல்
சீரமைப்பு, (இ) இயற்கைச் சூழல் மேம்பாடு ஆகியவை
நிலப்பயன்பாட்டு முறையை ஒழுங்குபடுத்தவும், அறிவியல்
பூர்வமான திட்டங்களின் மூலம் அபிவிருத்திப் பணிகளை செயல்
படுத்துவதாகும். நீர்பிடிப்பு பகுதிகளில் மண்மளம் மற்றும்
நீர்வளப் பாதுகாப்பு புகலிடங்களில் வன விலங்குகளின்
வாழ்க்கை முறையினை ஒட்டி அதற்கேற்றபடி மேம்பாட்டுப்
பணிகள், சிறிய மற்றும் தொடர் திட்டம் மூலம் மேற்கொள்ளு
தலும் ஆகும். இத்திட்டத்தின் மூலம் மலைவாழ் பழங்குடி
மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், இதர மக்களின்
வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டம் செயல்படுத்தப்
படுகிறது. மரங்களின் அடர்த்தியை அதிகப்படுத்தும் நோக்கோடு
வனத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இக்குறிக்
கோளுடன் சில புதிய திட்டங்களும் 1986–87-ல் ஏற்கெனவே
அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை 1987–88-லும்
தொடர்ந்து செயல்படுத்தப்படும். இயற்கைச் சூழலை மேம்படுத்த
ஒருமித்த அணுகுமுறையை வகுத்து நீர்பிரிமுகடுகளில் உள்ள
காடுகளினை மேம்படுத்துவது நமது உத்தியாகும். தரம்தாழ்ந்த
மலைச்சரிவுகளில் மரம் வளர்ப்பதும் மக்களுக்கு நாற்றுகள்
வழங்குவதும் இத்திட்டத்தில் அடங்கும்.

அழிவுபட்டு வரும் மர இனவகை உள்ள சோலைக் காடு
களின் இயற்கைச் சூழல் பாதுகாப்புக்கென கம்பிவலை வேலி
அமைத்தல் பணி மேற்கொள்ளப்படுகிறது.

மாநிலங்களுக்கு இடையே எல்லைகளிலும், தேர்ந்தெடுக்கப்
பட்ட அடர்ந்த காடுகளிலும் இதர பிரச்சனைக்குட்பட்ட பகுதி
களைச் சுற்றிலும் கற்றாழை வேலி அமைத்தல் மற்றும் காடு
களை அழிக்கும் தீயிலிருந்து இயற்கைச் சூழல் பாதுகாப்புப்
பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வனச் செல்வத்தை தீயிலிருந்தும், கடத்தல்காரர்களிட
மிருந்தும், வனவிலங்கு வேட்டையாடுபவர்களிடமிருந்தும் பாது
காக்க, கம்பியில்லாத் தந்தி போன்ற முன்னேற்ற வசதிகளை
மேற்கொள்வதும் இத்திட்டத்தில் வரும் பணிகளாகும்.

இவ்வியற்கைச் சூழல் பாதுகாப்புத் திட்டத்தில், இயற்கை
அடர்காடுகளை அபிவிருத்தி செய்யும் வகையில் ஈட்டி முதலிய
நல்ல மரங்களை பாதுகாத்தல் மற்றும் அவற்றிற்கு புகலிடம்
அளித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 30

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் ஈட்டி மற்றும்
இதர இனங்களை வனப் பகுதிகளில் மற்றும் இவ்வினங்கட்கு
தேர்வு செய்யப்பட்ட புகலிடங்களில் வளர்க்கும் பணி மேற்
கொள்ளப்படுகிறது. ஈட்டி மரம் பாதுகாக்கப்பட தனி இடம்
அமைத்து, அவற்றின் வளர்ச்சியையும், உற்பத்தி திறனையும்
ஆய்வு செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து மத்திய
அரசு திட்டக் குழுவினர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இயற்கைச் சூழல் மேம்பாடு திட்டத்தின்கீழ், உதகமண்டலம்,
கூனூர் மற்றும் கோத்தகிரி ஆகிய ஊர்களின் நகராட்சிப்
பகுதிகளில் மண் சரிவு தடுத்தல் மற்றும் சுற்றுப்புற சூழல்
சுகாதார பாதுகாப்பு மேம்படுத்த தரிசுப் பகுதிகளில் மண்பானை
யில் செடிகள் நடும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

இயற்கைச் சூழல் அமைப்பில் பழங்குடியினர் முக்கிய
அங்கம் வகிக்கின்றனர். தீ விபத்தின்போது தகவல் தெரிவிக்கும்
வேலை, வனப்பொருட்களை கள்ளக்கடத்தல் செய்வதைத்
தடுத்தல், வனவிலங்கு வேட்டையைத் தடுத்தல் போன்ற முக்கிய
பணிகளிலும் ஏனைய வன மேம்பாட்டுப் பணிகளிலும் பழங்
குடியினர் ஈடுபடுத்தப்படுவதால், அவர்களின் வறுமை நிலை
மாறவும், வருவாய் பெருகவும் வழி ஏற்படுகிறது.

இயற்கைச் சூழல் விழிப்புணர்வுத் திட்டமாக நடை வழிப்
பாதைகளும் குதிரைப்பாதைகளும் அமைத்தல், ஓய்வுக்கூடங்
கள் ஆங்காங்கே அமைத்தல் போன்ற பணிகள் செய்யப்படு
கின்றன. இயற்கை விரும்பிகளுக்கு ஏற்றவகையில் படகுத்
துறையில் ''இயற்கைச் சூழல் தியான மையம்'' அமைக்கப்
பட்டு வருகிறது. இம்மையத்தில் வனங்கள் மற்றும் வன விலங்கு
கள் பற்றிய திரைப்படங்கள் காட்ட தொலைக்காட்சி வசதியும்
ஏற்படுத்தப்படுகின்றன.

யானை போன்ற பெரிய பாலூட்டி வன விலங்குகள் மட்டும்
கோடை காலங்களில் நீர் அருந்தத்தக்க வகையில் நீர்நிலைகள்
அமைக்கப்படுகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் முதுமலை வனவிலங்கு சரணாலயத்
தினைச் சுற்றியும் மற்றும் நெடுஞ்சாலை சந்திப்புகளிலும் சுகா
தார கழிப்பிட வசதிகள் சரிவர இல்லையென்பதால், சுற்றுலா
பயணிகளின் நலன்களை கருத்திற்கொண்டு, அவ்வாறான இடங்
களில் கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.



1987 ஏப்ரல் 30]

இம்மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உதக
மண்டலம் ஏரியை அடுத்துள்ள வனப்பகுதியில் விலங்குப் பூங்கா
அமைக்கப்பட்டு இயற்கை அழகு பேணிகாக்கப்படுகிறது.

இத்திட்டப் பணிகள் 1986–87-ம் ஆண்டில் ரூ. 97.14 லட்சம்
செலவில் நடைபெறுகிறது. 1987–88-ம் ஆண்டில் ரூ. 122.55
லட்சம் செலவில் திட்டம் செயல்படவுள்ளது.

9.13. மத்திய அரசு சார்புத் திட்டங்கள் :

(அ) மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் :

மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்,
இயற்கைச் சூழல் பாதுகாப்பு, இயற்கைச் சூழல் சீரமைப்பு,
இயற்கைச் சூழல் மேம்பாடு ஆகிய குறிக்கோள்களுடன், மேற்கு
மலைத்தொடர் பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று
வருகின்றன. 1986–87-ம் ஆண்டில் செயல்படும் திட்டங்கள்
1987–88-ம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற உள்ளது.

(1) வாழ்க்கைக்குத் தேவையான காடுபடு பொருட்கள் உற்
பத்தி செய்யும் மர இனவகைகள் மற்றும் வனத் தோட்டங்கள்
வளர்த்தல்.

(2) கோவை மாவட்டத்தில் பழங்குடியினர் வாழும் பகுதி
களில் மண்வளப் பாதுகாப்பு, நீர் வழங்குதல், குடியிருப்பு வசதி
செய்தல், கன்னியாகுமரி மாவட்டத்தில் மாசுபதி ஆற்றுப்படுகை
யில் மண்வளப் பாதுகாப்பு மற்றும் அப்பகுதியின் ஈரத்தன்மையை
பாதுகாத்தல்.

(3) தரங்குன்றிய பகுதிகளில் மீண்டும் மரம் வளர்த்தல்
மற்றும் மதுரை, கோவை மற்றும் நெல்லை மாவட்டங்களில்
தடுப்பு அணைகள் கட்டுதல்.

(4) ''இயற்கைச் சூழல் சீரமைப்புத் திட்டத்தின்கீழ்''
நீர்த் தேக்கக் குட்டைகள் ஏற்படுத்தி, மரங்களை வளர்த்து
அண்ணா, மதுரை, கோவை, திருநெல்வேலி, கன்னியாகுமரி
மாவட்டங்களில் உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர்வளத்தினை
மேம்பாடு செய்தல்.

(5) மதுரை, கோவை, நெல்லை மாவட்டங்களில் உள்ள
காட்டுப் பகுதிகளில் எல்லை அடையாளக் கற்கள் நட்டு வைப்
பதின் மூலம், கையகப்படுத்தலை தடுத்தல்.

(6) 'இயற்கைச் சூழல் விழிப்புணர்வுத் திட்டத்தின்கீழ்'
நடைவழிப்பாதைகள் ஏற்படுத்தலும், வைகை அணைப்பகுதியில்
வனவிலங்கு பூங்கா அமைத்தலும்.

மேற்கு மலைத்தொடர் பகுதிகளில் இயற்கை வளங்களை பாதுகாக்க தீ தடுப்பு நடவடிக்கையாக, கத்தாழை பயிரிடுதல் மேற்கொள்ளுதலும் மற்றும் பாதுகாப்புக்கு இடற்பாடான பகுதிகளில் வேலி அமைத்தலும்.

(8) ஆனைமலை வனவிலங்கு புகலிடத்தில் பழவகை மரங்களை பயிரிடுதல், கால்நடைகட்கு தேவையான புல் வளர்த்தல், மிருகங்கட்கு தேவையான தண்ணீர் வசதி செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளுதல்.

(9) வைகை நதி நீர்பிடிப்புப் பகுதியிலுள்ள வருசநாடு வனப் பகுதிகளில் காடுகள் உண்டாக்குதல் மற்றும் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல் மூலம் ஆற்றுப்படுகையில் மண் அரிப்பு தடுக்கப்பட்டு, வளமற்ற பகுதிகள் வளமாக்கப்படுகின்றன.

(10) கோவை மாவட்டத்தில் மலை அடிவார பகுதிகள், மண் அரிப்பு தடுப்பு மூலம் காப்பாற்றப்பட்ட கத்தாழை பயிரிடப்படுகிறது. கத்தாழை குடிசைத் தொழிலுக்கு தேவையான மூலப் பொருட்களை வழங்க ஏற்றது.

1986–87-ம் ஆண்டில் மேற்படி திட்டம் ரூ. 78.76 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு நடைமுறையில் உள்ளது.

1987–88-ல் இத்திட்டத்தின்கீழ் ரூ. 107.64 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மத்திய அரசு சார்பு திட்டம் ஊரக விறகு மர உற்பத்தி திட்டம் மற்றும் இமயமலை சாராத பகுதிகளில் மரம் வளர்ப்புத்திட்டம்.

செங்கற்பட்டு, திருச்சி, மதுரை மற்றும் தர்மபுரி முதலிய மாவட்டங்களில், மத்திய அரசு உதவியுடன் ஊரக விறகு மரத் தோட்டம் மற்றும் காடு உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் விறகு மர இன உற்பத்தியும் கால்நடைகட்கு தேவையான மர இன உற்பத்தியும் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் இதர பணிகளாக, கிராமங்களிலுள்ள தரிசு நிலங்களிலும், வளர்ச்சி குறைந்த காடுகளிலும், கடற்கரைப் பகுதி நிலங்களிலும் சாலைகள், கால்வாய்க் கரைகள், குளங்கள், ரயில் வழித்தடங்கள் முதலியவற்றின் அருகாமையிலும் விறகு மரத்தோட்டங்கள் வளர்க்கப்படுகின்றன. இத்திட்டம் இமயமலை பகுதியில் முதலில் துவக்கப்பட்ட பணியினை ஒத்ததாகும்.

மத்திய அரசு இத்திட்டத்திற்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 386 லட்சம் (திட்டத்தின் 50 சதவீதம் பகுதி) செலவு மேற்கொள்ளவும் அதன் மூலம் 15,600 எக்டேர் தோட்டம் உற்பத்தி செய்யவும் பணித்துள்ளது.



1986–87ஆம் ஆண்டில் ரூ. 120.00 லட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ் 3,500 எக்டேர் தொகுதி தோட்டங்கள், 157 கி.மீ. தொடர் தோட்டங்கள் மற்றும் 160 லட்சம் கன்றுகள் உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்குதல் போன்ற பணிகள் செய்யப்பட்டன.

1987–88-ம் ஆண்டில் ரூ. 93.43 லட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ் 2,830 எக்டேர் தொகுதி தோட்டங்கள் எழுப்புதல், 15 கி.மீ. புயல் தடுப்பு மரத்தோட்டங்கள் மற்றும் 2,530 எக்டேரில் மண்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மற்றொரு திட்டத்தில் புயல் தடுப்பு மர வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. 1986–87 ஆம் ஆண்டில் 40 எக்டேர் பரப்பில் ரூபாய் 2.30 லட்சம் செலவில் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 2.30 லட்சம் செலவில் மேற்கண்ட பணி 17 கி.மீ. நீளத்தில் நான்கு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

9.14. வறட்சிக்குள்ளாகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

தர்மபுரி, புதுக்கோட்டை., இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் காமராசர் மாவட்டங்களில் மத்திய அரசு பொறுப்பேற்கும் வறட்சிக்குள்ளாகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காடு வளர்ப்பு, மேய்ச்சல் நில அபிவிருத்தி ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய பணியாகும். 1986–87 ஆம் ஆண்டில் ரூ. 42.40 லட்சம் செலவில் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :

1. காடு வளர்ப்பு—1,023 எக்டேர்.

2. கால்நடைக்கான புல் பண்ணைகள் மேம்படுத்தல் மற்றும் மேய்ச்சல் தரை அபிவிருத்தி—220 எக்டேர்.

3. நாற்றுகள் உற்பத்தி—2 இலட்சம்.

10. அபிவிருத்தித் திட்டப் பணிகளில் முன்னேற்றம், மத்திய திட்டக் குழுவின் குறிப்புரை.

திட்டப் பணிகள் செயல்படுவதிலும், திட்டங்களில் சில சாதனைகள் குறித்தும் மத்திய திட்டக் குழு பாராட்டியுள்ளது. விபரம் வருமாறு :

(அ) மாறுபட்ட ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொண்டுள்ளது பற்றியும், மற்ற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்புப் பணிகள் மேற்கொண்டுள்ளது குறித்தும்.

(ஆ) புளிய மரத் தோட்டங்களில் தீவிர பணிகள் மேற்கொண்டுள்ளதால் பலன் தருவது ஊக்கமளிப்பதாயுள்ளது பற்றி.

(இ) ஈட்டி மரங்கள் போன்ற உயர்ந்த இன மரங்களைப் பாதுகாக்க தனி பாதுகாப்பிடம் அமைத்து அதன் வளர்ச்சி மற்றும் பலன்களை ஆய்வு செய்தல் குறித்து.

(ஈ) 1985–86 ஆம் ஆண்டில் காணப்பட்ட முன்னேற்றம், 1986–87 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம் மற்றும் 1987–88 ஆம் ஆண்டில் காணப்படும் நிதி ஒதுக்கீடு இவைகளை காணும்போது ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எஞ்சியுள்ள இரண்டு ஆண்டு காலத்திற்கும் அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்து தரப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய திட்டக் குழு வலியுறுத்தியுள்ளது.

11. (அ) சுற்றுலா வளர்ச்சியில் வனத்துறையின் பங்கு :

மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சியில் வனத்துறையும் பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது. அதில் சில திட்டங்கள் வருமாறு :

தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் கோட்டம், பிச்சாவரம் 'மேங்கரோவ்' காடுகள் அபிவிருத்தி திட்டம் :

பிச்சாவரம் காப்புக்காடு கடல்நீர் ஏற்றம் இறக்கம் உள்ள சதுப்பு நிலம். இதில் கணக்கிலடங்காத கால்வாய்களும் மிகச் சிறிய தீவுகளும் பக்கங்களில் கொண்டு 'மேங்கரோவ்' எனப்படும் மரங்களினால் சூழப்பட்டது. 'மேங்கரோவ்' காடுகள் எப்பொழுதும் பசுமையான தோலுடன் கூடிய இலைகளைக் கொண்டது. இது உயிருள்ளதும், தன்னைத்தானே தொடர்ந்து துளிர்க்கக் கூடிய தன்மையுடையதும் தொடர்ந்து வளர்ச்சியடையக் கூடியதாகும். அங்குள்ள மக்களுக்கு இது சிறு தடிகள், எரிபொருள், தீவனம் மற்றும் பதனிடும் தொழிலுக்கும் உதவுகிறது. தவிர தண்ணீரில் குறைந்த ஆழத்தில் வளர்ந்து இரால் மீன் மற்றும் கடற்கரையோரங்களுக்கு அருகாமையில் காணப்படும் மீன் வகைகள் ஆகியவற்றை வேட்டையாடப் படுவதிலிருந்து காப்பாற்றுகிறது.

'மேங்கரோவ்' காடுகளால் மேற்காணும் பலன்கள் கிடைப்பதால் அவை அழிக்கப்படுவதை காப்பாற்ற அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வேறு எரிபொருளும் தீவனத்திற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியம். எனவே ரூபாய் 20 இலட்சம் செலவில்





'மேங்கரோவ்' வளர்க்கவும், மேய்ச்சலுக்கு இதனைப் பயன் படுத்தாமல் வேறு இடங்களில் தீவனங்களை வளர்க்கவும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது ஐந்தாண்டு காலத்திற்குள் படிப்படியாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1972 வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் விதி 18-ன் கீழ் இந்தப் பகுதியினை 'மேங்குரோவ்' சரணாலயம் என அறிவிக்கை செய்வது குறித்து தனிக் கருத்தும் பரிசீலனையில் உள்ளது. சுற்றுலா பயணிகளுக்கு இது மகிழ்ச்சியளிக்கும் இடமாக அமையுமென்பதில் சந்தேகமில்லை.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள அழகிய இடங்களை மேம் படுத்துதல்.

சுற்றுலா வளர்ச்சியின் ஒரு அங்கமாக நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள சில வசதிகளை மேலும் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொட்டபெட்டா, களம்பஸ் பாறை, டால்பின் நோஸ், கோடநாடு, கள்ளாட்டி நீர்வீழ்ச்சி போன்ற இடங்களை அழகு படுத்த ரூ. 5.50 லட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. காமராசர், கன்னியாகுமரி, மதுரை, நீலகிரி மாவட்டங்களில் நான்கு ஒய்வு விடுதிகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1986-87-ல் வனத்துரையினரால் கீழ்க்கண்ட பணிகள் 8.00 லட்சம் ரூபாய் செலவில் நீலகிரி மாவட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளன :

| | | எக்டேர். |
|---|---|---|
| 1. | சோலை மரங்கள் மற்றும் உள்ளூர் மரங்கள் வளர்த்தல். | 10 |
| 2. | நிலச் சரிவைத் தடுக்க மண்வளப் பாதுகாப்பு .. | .. |
| 3. | 'ஈக் ஹில்' ஒதுக்கக் காடுகளில் கம்பி வேலி அமைத்தல். | .. |
| 4. | எல்லைக் கற்கள் கட்டுதல் .. .. .. | .. |

(இ) இயற்கைச் சூழல் விழிப்புணர்வு திட்டத்தின் கீழ் இயற்கை நடைபாதை அமைத்தல்.

மேற்கு மலைத் தொடரில் நீலகிரி, மதுரை மற்றும் சில மாவட்டங்கள் இயற்கையழகை ரசிக்கும் வண்ணம் நடைபாதைகள் அமைக்கவும், சுற்றுப்புற இயற்கை சூழல் பற்றி படித்தறியவும், விலங்கினம் பற்றி கற்றுத் தெரியவும், மலையேறும் பயிற்சி பெறவும் நல்ல வாய்ப்புகள் உள்ள இடங்களாகக் கொண்டுள்ளது. இயற்கைச் சூழல் அமைப்புப் பற்றிய ஓர் விழிப்புணர்வு இப்போது மாணவர்களிடையேயும், மக்களிடையேயும், அதிகரித்து வருகிறது. இவ்வுணர்வினை தீவிரப்படுத்தி பயன் துய்க்க எல்லா வசதிகளையும் செய்து தரும் கடமை நமக்கு

உள்ளது. இதனை மனதிற் கொண்டு மரக்குடில்கள், இயற்கை நடைபாதைகள், நூலகம் ,இயற்கை சூழல் தகவல் மையம் போன்றவை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**12. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா :**

வண்டலூரில் நவீனமான உயிரியல் பூங்காவினை 510 எக்டேர் பரப்பில் 7 கோடி ரூபாய் செலவில் அமைக்கும் பணியினை நாம் மேற்கொண்டுள்ளோம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவீர்கள். இத்திட்டத்தின் முதல் கட்ட வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. இரண்டாவது கட்ட வேலைகள் முன்னேறி வருகின்றன. வேலைகள் யாவும் முடிக்கப்பட்டவுடன் இந்த உயிரியல் பூங்கா நம் நாட்டிலேயே, ஏன், தென் கிழக்கு ஆசியாவிலேயே பெரிய விலங்ககமாக அமையக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டு வருகிறது. அடுத்துள்ள குன்றுகளில் சஃபாரி (Safari) பூங்காவினை இந்த விலங்ககத்தில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பலவித விலங்கினங்களும், பறவையினங்களும், அயல்நாடுகளிலிருந்தும், நம்நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும் வரவழைக்கப்பட்டு இப்பூங்காவில் வைக்கப்பட்டுள்ளன.

விரிவான மற்றும் இயற்கை சூழலில் இப்பூங்கா அமைக்கப்பட்டமையால் சில விலங்கினங்கள் இப்பூங்காவிற்கு வந்தபின் தன் இனத்தைப் பெருக்கியுள்ளது. சமீபத்தில் நீர் யானைக் குட்டி ஒன்று இங்கு பிறந்தது. மிருகக் காட்சி சாலையில் இவ்வாறு குட்டி பிறந்தது ஒரு அதிசய நிகழ்ச்சியாகும்.

தற்போது 305 விலங்குகள் (47 வகைகள்) 416 பறவைகள் (60 இனங்கள்) மற்றும் 50 ஊர்வன (16 வகைகள்) ஆகியவை இப்பூங்காவில் நன்கு வளர்ந்து வருகின்றன.

இப்பூங்கா அதிகமாக மக்கள் கூட்டத்தினை ஈர்த்து வருகிறது. சென்ற பிப்ரவரி 1986 முதல் ஜனவரி 1987 வரை இப்பூங்காவிற்கு ரூமார் 8.2 லட்சம் பேர் வருகை தந்துள்ளனர். இதன் மூலம் ரூபாய் 7 லட்சம் வசூலாகி இருக்கிறது.

பார்வையாளர்கள் வசதிக்காக 4 பாட்டரியினால் இயங்கும் வாகனங்கள் ரூபாய் 7.1 லட்சம் செலவில் வாங்கப்பட்டன.

இவைகளை பார்வையாளர்கள் பயன்படுத்திய வகையில் ரூபாய் 6.9 லட்சம் வசூலாகியிருக்கிறது.

1986-87 ஆம் ஆண்டில் ரூபாய் 218.84 லட்சம் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த ஜனவரி 1987 வரை ரூ. 179.35 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இம்மிருகக் காட்சிசாலை அனைவரையும் கவரத்தக்க வகையில் அமைக்கப்பட எல்லாவித முயற்சிகளும், நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.



**13. பழங்குடியினர் வன இயல் திட்டம்.**

13. பழங்குடியினர் வன இயல் திட்டம்.
13. பழங்குடியினர் வன இயல் திட்டம்.

13:1. மேற்குமலைத் தொடர்ச்சி மற்றும் கிழக்கு மலைத்
தொடர்ச்சி ஆகிய பகுதிகளில் பழங்குடி மக்கள் மிகுதியாய்
வசித்து வருகிறார்கள். இவர்களுடைய வாழ்க்கை காடுகளோடு
மிகவும் ஒருங்கிணைந்ததாகும். தொடக்கம் முதல் அவர்களின்
நலனுக்காக வனத்துறை செயலாற்றி வருகிறது. பழங்குடியினர்
வனத் துறையில் பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.
துறை வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டதைத் தவிர வனப் பகுதி
களில் வசிக்கும் பழங்குடியினரின் வாழ்க்கை தரத்தை உயர்த்து
வதற்காக வனத்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்
டுள்ளது. வனத்துறை மேற்கொண்ட பல்வேறு நல நடவடிக்கை
கள் பற்றிய விவரம் பின் வருமாறு :—

பயிரிடுவதற்காக 1,990 எக்டேர் நிலங்கள் குத்தகைக்கு
விடப்பட்டிருக்கின்றன.

வேலூர், தர்மபுரி, திருப்பத்தூர், சேலம் ஆகிய வனப்
பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர் தங்களுடைய கால்நடை
களை மேய்ச்சல் நிலங்களில் இலவசமாக மேய்ப்பதற்கு அனுமதி
வழங்கப்பட்டிருக்கிறது.

அவர்கள் வனத்துறையில் தொழிலாளர்களாக நியமிக்கப்
படுகின்றனர். தகுதியுடைய பழங்குடியினர், வனப் பணியாளர்,
வனக்காப்பாளர், வனக் காவலாள், யானைப் பாகன், காவடி
போன்ற அரசுப் பணிகளில் இத்துறையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வட ஆற்காடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில்
பழங்குடியினருக்காக 16 தொடக்கப் பள்ளிகளையும், 2 உயர்
நிலைப் பள்ளிகளையும் வனத்துறை நடத்தி வருகிறது. இப்பள்ளி
களில மொத்தம் 2,395 மாணவர்களும் ,46 ஆசிரியர்களும்
உள்ளனர். வட ஆற்காடு மாவட்டம், வேலூர் கோட்டம்,
ஜவ்வாது மலையிலுள்ள ஜம்னாமரத்தூர் என்ற பழங்குடியினர்
வசிக்குமிடத்தில் ஒரு உயர் செகன்டரி பள்ளி நடப்பு ஆண்டு
முதல் செயல்படத் தொடங்கியிருக்கிறது.

டாப்சிலிப்பில் உள்ள மருத்துவ மனை ஒரு உதவி மருத்துவர்
தலைமையில் இதர மருத்துவ பணியாளர்களைக் கொண்டு
செயல்பட்டு வருகிறது. முதுமலையிலுள்ள மருத்துவ மனை,
மருந்தாளுநர் மற்றும் இதர பணியாளர்கள் உதவியுடன் செயல்
பட்டு வருகிறது.

காடுபடு பொருள்கள் பழங்குடியினர் கூட்டுறவு சங்கங்
களுக்கு 10 சதவீதம் சலுகை வீதத்தில் குத்தகைக்கு விடப்பட்
டுள்ளன.

பழங்குடியினருக்கு பயனளிக்கும் வகையில் 19 தொழி
லாளர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதலமைச்சர் சத்துணவு திட்டத்தின் கீழ் 5 வயது
முதல் 15 வயது வரையிலும் பயிலும் 2,395 பழங்குடியினரின்
பிள்ளைகளுக்கு வனத்துறையால் நடத்தப்படும் எல்லாப் பள்ளி

களிலும் சத்துணவு வழங்கப்படுகிறது. பள்ளிச் சீருடைகள் எழுது பலகைகள் மற்றும் புத்தகங்கள் இலவசமாக வழங்கப் பட்டிருக்கின்றன.

பழங்குடியினரின் குடிசைத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களான மூங்கில், பிரம்பு மற்றும் சிறிய மரங்கள் முதலியன சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. மேலும் விவசாயம் செய்வதற்குத் தேவையான சிறிய மரம் மற்றும் வனப் பொருட்கள் இலவசமாக பழங்குடியினருக்கு வழங்கப் படுகின்றன. காப்புக் காட்டிலுள்ள தங்கள் இருப்பிடங்களி லிருந்து பழங்குடியினர் வெளியேற்றப்படுவதில்லை.

13.2. பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டத்தின் கீழ், அவர்கள் வாழும் பகுதிகளில், இத்துறையி னரால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன:—

1. மலைத் தோட்டங்களை வளர்த்தல் — வருடத்திற்கு சுமார் 1,500 எக்டேர்.

2. பழங்குடியினரின் பகுதிகளில் சாலை போடுதல்—வரு டந்திற்கு சுமார் 5 முதல் 10 கி.மீ. வரை.

3. பள்ளிக் கட்டிடங்கள், ஆசிரியர்களுக்கு மற்றும் பாது காப்பு வனப் பணியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் வருடத்திற்கு 5 முதல் 10 வரை குடியிருப்பு இல்லங்களும் ஒன்று அல்லது இரண்டு பள்ளி கட்டிடங்களும்.

13.3 இவற்றை தவிர, தென்னாற்காடு, வடாற்காடு சேலம். திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, மாவட்டங்களில் பழங்குடி யினர் வாழும் பகுதிகளில் (வனப் பகுதிக்கு வெளியே) சமூகக் காடுகள் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பயன்தரும் செடிகளான பழ வகைகள் மற்றும் புல் வகைகள் 500 நாற்றுகள் தங்களுடைய சொந்த நிலங்களில் பயிரிட இலவச மாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

13.4. பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட் டத்திற்காக 1980-81 முதல் 1986-87 ஆம் ஆண்டு வரை திட்டப்பணிகளுக்காக செலவிடப்பட்ட விவரங்கள்கீழே கப்படுகின்றன :—

| வருடம். | சாதனை. (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1984-85 .. .. .. .. .. | 46.68 |
| 1985-86 .. .. .. .. .. | 62.48 |
| 1986-87 .. .. .. .. .. | 93.00 |
| 1987-88 (இலக்கு) .. .. .. | 125.22 |

ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (1985-90) பழங் குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்திற்காக 200 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



13.5. பழங்குடியினர் கிராம நல வன இயல் திட்டம் :

பழங்குடியினருக்கு மேலும் அதிக வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்தும் வகையிலும், அதிக விலை மதிப்புள்ள சந்தன மரங்களை தக்க முறையில் பாதுகாக்கவும் கீழ்கண்ட ஐந்து இடங்களில் சந்தன மரத் தோட்டங்கள் தோற்றுவிக்க 1986-87-ல் 44.02 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடை பெற்று வருகின்றன.

| இடம், மாவட்டம். | பயன் பெறும் கிராமங் களின் எண். ணிக்கை. | பயனடை யும் குடும்பங் களின் எண் ணிக்கை. | பயனடை யும் மனிதர் களின் எண் ணிக்கை. | மொத்த மனித நாட்கள் (ஆயி ரத்தில்). |
|---|---|---|---|---|
| 1 ஜவ்வாது-வேலூர் கோட்டம், வட ஆற்காடு மாவட்டம். | 6 | 170 | 186 | 46·6 |
| 2 ஜவ்வாது-திருப்பத் தூர் கோட்டம் வடாற்காடு மாவட்டம். | 2 | 101 | 186 | 46.6 |
| 3 சேர்வராயன்-சேலம் கோட்டம்-சேலம் மாவட்டம். | 10 | 688 | 288 | 70.0 |
| 4 சித்தேரி-தர்மபுரி கோட்டம்-தர்மபுரி மாவட்டம். | 20 | 946 | 242 | 60.5 |
| 5 பச்சமலை-திருச்சி கோட்டம், திருச்சி மாவட்டம். | 4 | 157 | 244 | 61.3 |
| | 42 | 2,062 | 1,146 | 285.0 |

[1987 ஏப்ரல் 30

14. புதிய இருபது அம்ச திட்டம் மரம் வளர்ப்பு :

14.1. கிராமப்புற ஏழை மக்களையும் நலிந்த பிரிவினரையும் மேம்படுத்துவதற்காக புதிய இருபது அம்ச திட்டத்தை தமிழ்நாடு மிகவும் தீவிரமாக செயல்படுத்தி வருகின்றது. 1981-82-ஆம் ஆண்டிலிருந்து 1986-87 ஆம் ஆண்டு வரை இத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு மரம் நடும் வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளது :—

| விவரம். | 1981-82. | 1982-83. | 1983-84. | 1984-85. | 1985-86. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| (1) காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப் பட்ட மரக் கன்றுகள் (லட்சத்தில்). | 7.5 | 1,161.7 | 4,192.5 | 1,106.8 | 1,214.[illegible] |
| (2) சமூகக் காடு வளர்ப்பு (மரம் நடப் பட்ட பரப் பளவு எக் டேரில்). | 35,434 | 38,212 | 28,768 | 38,24 | 29,9609 |
| (3) வனப் பண்ணைத் திட்டத்தின் கீழ் பொது மக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவர்களுக்கு அளிக்கப் பட்டுள்ள மரக்கன்றுகள் (லட்சத்தில்). | 65.3 | 173.0 | 459.8 | 443.5 | 531.[illegible] |



1987 ஏப்ரல் 30]

14.2. 1986–87-ல் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு மற்றும் செய்து முடிக்கப்பட்ட பணிகள் விவரம் கீழ்க்கண்டவாறு:—

| விவரம் | அலகு | 1986–87-ற்கான இலக்கு. | 1986–87 இல் செய்து முடிக்கப் பட்ட பணி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (அ) நடப்பட்ட மரக் கன்றுகள். | இலட்சம் | 940 | 795.751 |
| (ஆ) சமூகக் காடு வளர்ப்பு. | 1,000 எக்டேரில். | 36,321 | 33.227 |

14.3. 1987–88-ம் ஆண்டில் இந்தத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. வனத்துறைக்கு உத்தேசமாக கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| இனம் எண். | இனம். | அலகு. | 1987–88-இல் இலக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 16 | வனவியல் மரம் வளர்ப்பில் புதிய அணுகுமுறைகள். | | |
| (1) | விநியோகிக்கப்படவுள்ள மரக் கன்றுகள். | லட்சம் | 462 |
| (2) | நடப்பட வேண்டிய மரங்கள் | லட்சம் | 940 |
| (3) | மரம் நடப்படவுள்ள பரப்பு | 1,000 எக்டேர். | 36 |

14.4. இருபது அம்ச திட்டத்தின் கீழ் மாநிலத்தில் ஏற்படும் முன்னேற்றத்தினை தமிழ்நாடு அரசு வளர்ச்சித்துறை கண்காணிக்கும்.

15. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் :

15.1 தென்னாற்காடு, வட ஆற்காடு மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள வனத்தோட்டங்களிலிருந்து வணிக முறையில் பலன் அடையும் நோக்கம் கொண்டு 13–6–1974-ல் திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் துவக்கப்பட்டது.

15.2. பரப்பு :

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் 73,215 எக்டேர் வன நிலம் குத்தகை அடிப்படையில் உள்ளது.

15.3. மூலதன முதலீடு :

வரையறுக்கப்பட்ட மூலதனம் 2 கோடி ரூபாயாகும். இந் நாள் வரை ஈட்டிய மூலதனம் 72.06 லட்ச ரூபாயாகும். இது முழுவதும் தமிழக அரசால் அளிக்கப்பட்டது.

15.4. வருவாய் மற்றும் செலவு :

வருவாய் செலவு மற்றும் நிகர வருமானம் கீழ்க் கண்டவாறு:

| வருடம். | | | மொத்த செலவு. | மொத்த வருவாய். | நிகர. லாபம் |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் கோடியில்.) | | |
| 1985–86 | .. | .. | 3.89 | 4.35 | 0.46 |
| 1986–87 | .. | .. | 7.33 | 7.92 | 0.59 |

15.5. தோட்டம் ஏற்படுத்தும் பணிகள் :

1986-ம் ஆண்டு வரை இக்கழகம் 27,305 எக்டேர் பரப்பில் யூகலிப்டஸ் ஹைபிர்டு வகை மரத்தோட்டங்களும், 4,125 எக்டேர் பரப்பில் யூகலிப்டஸ் கமால்டு லென்சிஸ் தோட்டங்களும், 4,545 எக்டேர் பரப்பில் முந்திரி தோட்டங்களும், 1,20[illegible] எக்டேர் பரப்பில் சவுக்கு மரத்தோட்டங்களும், 1,063 எக்டேர் பரப்பில் பல்வகை தோட்டங்களும் ஏற்படுத்தியுள்ளது. 1986–87-ம் ஆண்டில் இது தவிர 3,582 எக்டேர் பரப்பில் சவுக்கு



யூகலிப்டஸ் மற்றும் முந்திரி தோட்டங்கள் எழுப்புவதுடன் 6,881 எக்டேர் பரப்பில் தீவிர களைப்பணிகள் செய்யப்படும். சந்தன எண்ணை மற்றும் சந்தன மரச் செதுக்கல்கள் தயாரிக்கும் வகையில் 400 டன்கள் சந்தன மரத்தை, பதனிடுவதற்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சாராவி மற்றும் சாரா வியற்றதனை அடிப்படையாக கொண்டுள்ள பல்வகை பொருட்கள் 32.00 லட்ச ரூபாய் செலவில் தயாரிக்கப்படும்.

15.6. மாறுபட்ட பணிகள்.

சந்தனப் பொருட்கள் தொழிற்சாலை.

30–6–1986 உடன் முடிந்த ஆண்டில் தெக்குப்பட்டில் உள்ள சந்தனப் பொருட்கள் தொழிற்சாலையில் 4,712 கிலோ கிராம் சந்தன எண்ணை தயாரிக்கப்பட்டது. இந்த ஆண்டு இந்த தொழிற்சாலையில் மொத்தமாக ரூபாய் 81.82 லட்சம் மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

16. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் :

16.1. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் குன்னூரைத் தலைமை அலுவலமாகக் கொண்டு 1–8–1976 முதல் துவக்கப்பட்டுள்ளது.

16.2. கட்டுப்பாட்டில் உள்ள பரப்பு :

இக்கழக[illegible] கட்டுப்பாட்டில் வனத்துறையின் 2,747 எக்டேர் நிலப்பரப்பு குத்தகை அடிப்படையில் உள்ளது. 2,445.04 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளது.

16.3. மூலதன முதலீடு :

பங்கு மூலதனம் ஐந்து கோடி ரூபாயாகும். செலுத்தப் பட்ட மூலதனம் 3.28 கோடி ரூபாயாகும்.

16.4. வருவாயும் செலவும் :

| வருடம் | | | செலவு. | வருவாய். |
|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) |
| | | | (ரூபாய் கோடியில்). | |
| 1986–87 வருவாய் | .. | .. | 10.69 | 10.86 |
| மூலதனம் | .. | .. | 3.45 | 3.28 |

[1987 ஏப்ரல் 30

16.5. உற்பத்தி :

உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை விவரம் வருமாறு :

(அ) பதனிட்ட தேயிலை (லட்சம் கிலோ கிராமில்.)

| தொழிற்சாலை. | 1–7–1986 முதல் 31–12–1986 வரை உற்பத்தி. | 1986–87 இலக்கு. | 1987–88 இலக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சேரன்கோடு (சீடிசீ) .. | 11.3 | 9.7 | 24.00 |
| சேரம்பாடி (சீடிசீ) .. | 11.2 | 22.0 | 23.6 |
| டைகர்ஹில் (ஆர்த்தாடக்ஸ்) | 4.3 | 21.2 | 10.8 |
| | 26.8 | 52.9 | 58.4 |

(ஆ) பசுமைத் தேயிலை மகசூல் (லட்சம் கிலோ கிராமில்.)

| கட்டம். | 1–7–1986 முதல் 31–12–1986 வரை மகசூல். | 1986–87 இலக்கு. | 1987–88 இலக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| I. .. .. .. | 101.92 | 193 | 207 |
| II. .. .. .. | 16.00 | 32 | 40 |
| III. .. .. .. | 2.70 | 5 | 7 |
| | 120.62 | 230 | 254 |

தேயிலை ஏற்றுமதி :

இக்கழகம் டிசம்பர் 1986 வரை 2,680 கிலோ கிராம் தேயிலையை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து 47,000 ரூபாய் ஈட்டியுள்ளது. மேலும் உள்ளூர் சந்தையில் 4.63 இலட்சம் கிலோ தேயிலை விற்கப்பட்டு 95.63 லட்சம் ஈட்டியுள்ளது.



1987 ஏப்ரல் 30]

16.6. தொழிலாளர்க்கு வசதிகள்.

மொத்தம் 2,678 குடியிருப்புகள் கட்டப்பட வேண்டியுள்ளது. அதில் டிசம்பர் 1986 வரை 2,461 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

16.7. மற்ற நடவடிக்கைகள்.

பசுமைத் தேயிலையை டைகர்ஹில், சேரன்கோடு, சேரன்பாடி ஆகிய இடங்களில் உள்ள தேயிலைத் தொழிற்சாலைகளில் பதப்படுத்தப்படுகிறது.

உற்பத்தித் திறன், தோட்டங்களின் முதுநிலை ஆகியவற்றை ஒட்டுமொத்தமாக கருத்தில் கொண்டு கூடலூரில் 15 லட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்யக் கூடிய ஓர் தேயிலைத் தொழிற்சாலை உருவாக இருக்கிறது. இதன் கட்டுமான வேலைகள் முடியும் தருவாயில் உள்ளது.

16.8. விரிவாக்கத் திட்டங்கள்.

இக்கழகம் தனது இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டத் திட்ட வேலைகளை இப்போது திருத்தி அமைத்துள்ளது. அரசும் ''நாபார்டு'' (NABARD) நிறுவனமும் இக்கருத்துருவினை ஒப்பளித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

17. அரசு ரப்பர் கழகம்.

17.1. நாகர்கோவிலை தலைமையிடமாகக் கொண்டு அரசு ரப்பர் கழகம் 1–10–1984 முதல் ஆரம்பிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டங்களை வணிக முறையில் பராமரிப்பது தான் இதன் நோக்கம்.

17.2. பரப்பளவு.

4,785 எக்டேர் ரப்பர் தோட்டங்கள் இக்கழகத்தின் பொறுப்பிலிருக்கின்றன.

17.3. மூலதனம்.

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 1 கோடியாகும். செலுத்தப்பட்ட மூலதனத் தொகை இது வரை நிர்ணயம் செய்யப்படவில்லை.

17.4. வரவு-செலவு :

| வருடம். | ரெவின்யூ செலவு. | மூலதனச் செலவு. | நிகர இலாபம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் கோடியில்.) | | |
| 1986-87 .. .. | 1.82 | 0.58 | 0.11 |
| 1987-88 (உத்தேசம்) .. | [illegible] | 0.40 | — |

17.5. உற்பத்தி :

பல வகை இன ரப்பர் உற்பத்தி இலக்கும், உற்பத்தி செய்யப்பட்டதும், அவை விற்கப்பட்ட விவரங்களும் கீழ் வருமாறு :—

1986–87

| | |
|---|---|
| அ. இலக்கு (டன்னில்) .. .. .. .. | 2,400 |
| ஆ. எதிர்பார்த்த மதிப்பு (கோடி ரூபாய்) .. | 3.60 |
| இ. டிசம்பர் முடிய விற்பனை செய்யப்பட்ட அளவு (டன்னில்) .. .. .. .. | 1,410 |
| ஈ. வசூலிக்கப்பட்ட தொகை (கோடி ரூபாய்) .. | 2.40 |

1987–88

| | |
|---|---|
| அ. இலக்கு (டன்னில்) .. .. .. .. | 2,550 |
| ஆ. எதிர் பார்க்கும் வருவாய் (கோடி ரூபாய்) .. | 4.60 |

17.6. தொழிலாளர்களுக்கான வசதிகள் :

அரசு ரப்பர் கழக தொழிலாளர்களுக்கு பலவிதமான வசதிகள் சட்டப்படி செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் சில ஊதியத்துடன் கூடிய விடுப்பு, மருத்துவ வசதி, பேறுகாலப் படி, மனமகிழ் மன்றங்கள், குழந்தைகள் காப்பகம், குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி, குடிநீர் வசதி போன்றவை.

கழக நிர்வாகத்திலுள்ள எல்லா பள்ளிக்கூடங்களிலும் குழந்தைகளுக்கான முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டம் அமுல் படுத்தப்படுகின்றது. இதற்கான கட்டிடங்கள் கழகத்தால் கட்டப்பட்டிருக்கின்றன.

தொழிலாளர்களின் நலன்களை பேணுதலுக்காக, 1986-87 நிதி ஆண்டிற்கு ரூ. 36.89 லட்சம் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. 31–12–1986 முடிய ரூ. 21.01 லட்சம் இவ்வகையில் செலவிடப்பட்டிருக்கிறது. 1987–88-ல் இவ்வகையில் ரூ. 38.11 லட்சம் செலவழிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

கீரிப்பாறை, பரளியார், மைலார், சித்தார் மற்றும் குத்தியார் ஆகிய இடங்களில் 5 ஆரம்பப் பள்ளிக் கூடங்களை இக்கழகம்



நடத்தி வருகிறது. இவைகளில் சுமார் 760 தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயிலுகிறார்கள். கல்வி பயிலும் அனைத்து குழந்தைகளும் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தினால் பயனடைந்து வருகிறார்கள். மருதம்பாறை தோட்டத்தில் ஒரு புதிய பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த கல்வி ஆண்டிலிருந்து இது செயல்பட தொடங்கும்.

கீரிப்பாறையில் 10 படுக்கைகளும், சித்தாரில் 6 படுக்கைகளும் கொண்ட தோட்ட மருத்துவ மனைகள் தனித்தனி மருத்துவ அதிகாரிகளின்கீழ் போதுமான இதர சிப்பந்திகளுடன் செயல்பட்டு வருகின்றன. இதைத்தவிர 7 மருத்துவ விடுதிகள் போதுமான சிப்பந்திகளுடன் இயங்கி வருகின்றன. வாரத்தில் ஒரு நாள் மருத்துவ அதிகாரிகள் சிகிச்சை தருவதற்காக வருகிறார்கள். தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்திற்கும் இவ்வாறு மருத்துவ வசதிகள் கிடைக்கின்றன.

1984–85 ஆம் வருடத்தில் ரூ. 15.07 லட்சம் போனஸ் ஆக தொழிலாளர்கள் மற்றும் சிப்பந்திகளுக்கு பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. 1985–86 ஆம் ஆண்டிற்கு குறைந்த பட்ச குறீயீடு போனஸ் 8.33 சதவீதமாக ரூ. 16.65 லட்சம் தொழிலாளர்கள் மற்றும் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

17.7. ஊதியம்:

தினக் கூலியாக ரூ. 21.41 முதல் ரூ. 22.16 வரை தொழிலாளர்களுக்கு அவர்களின் தர அடிப்படையில் கொடுக்கப்படுகின்றது. பால் வெட்டும் தொழிலாளர்களுக்கு அவர்கள் கொண்டு வரும் அதிக ரப்பர் பால் (Latex) அளவைப் பொறுத்து கூலி கொடுக்கப்படுகின்றது.

17.8. இதர இனங்கள்:

காட்டு விலங்கினங்களாலும் முக்கியமாக காட்டு யானைகளால் சிறிய ரப்பர் செடிகளுக்கு பெரிதும் சேதம் எற்படுகின்றது. எனவே மருதம்பாறை, சித்தார், கல்லார் மற்றும் குத்தியார் கோட்டங்களில் 30 கி. மீ. தூரத்திற்கு மின் வேலி ரூ. 2.30 லட்சம் செலவில் போடப்பட்டிருக்கிறது. மலேசியாவில் எண்ணெய் தோட்டங்களில் செய்து இருப்பது போன்று வனவிலங்குகள் காப்புக் காட்டிலிருந்து ரப்பர் தோட்டத்திற்கு வர முடியாதபடி மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. யானைகளால் ஏற்படும் சேதம் மின் வேலி அமைக்கப்பட்டபின் வெகுவாக குறைந்திருக்கிறது. மைலார் கோட்டத்தில் மேலும் 15 கி. மீட்டர் தூரத்திற்கு மின் வேலி போடப்பட இருக்கிறது. இதனால் யானைகளால் ஏற்படும் சேதம் அறவே தவிர்க்கப்படும்.

[1987 ஏப்ரல் 30

## 18. வனவளத்தைப் பாதுகாத்தல்:

நமது வனம் மற்றும் வனவிலங்குகளின் செழிப்பான மரபுரிமை யானது (1) ஆக்கிரமிப்பு, (2) அதிக அளவு அறுவடை., (3) களவு கள் மற்றும் (4) திருட்டு வேட்டை போன்றவற்றின் காரணமாக மிகுதியான கஷ்டத்திற்கு உட்படுவதோடு தொடர்ந்து உயிரினம் வாழ ஆதாரமாக உள்ளதையே பாதிக்கும் வகையில் பின் விளைவுகளை ஏற்படுத்துகிறது. பலதரப்பட்ட பாதுகாப்பு பிரச்சினைகளை சமாளிக்க நடப்பிலுள்ள சட்டங்கள் மற்றும் விதிகளை கட்டாயமான முறையில் செயல்படுத்த கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 18.1. சட்ட வடிவம்:

தமிழகத்தில் உள்ள வனச் செல்வத்தினைப் பேணிக்காக்கும் பெரும் பொறுப்பு வனத்துறையிடம் உள்ளது. இப்பணியை சிறப்பாக செயல்படுத்த பல்வேறு சட்டங்களும் விதி முறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சட்டங்களையும் விதி முறைகளை யும் அவ்வப்போது நடைமுறைக்கு தக்கபடி புதுப்பித்து செயல் படுத்துவதற்கு நாம் இடைவிடாத முயற்சி மேற்கொண்டு வருகிறோம். மேலும் தக்க திருத்தங்களை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு செயற் குறிப்பு அரசின் பரிசீலனை யில் உள்ளது.

### 18.2. கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருட்கள் சட்டத்தின் கீழ் குற்றம் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாக பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள் அபாயகரமான செயல்களை தடுக்கும் 1982 ஆம் ஆண்டு சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982):

சந்தன மரக் கடத்தல் மற்றும் தந்தங்களுக்காக யானையை திருட்டு வேட்டையாடுதல் போன்ற குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. சந்தன மரம் மற்றும் காடுகளில் போன்ற விலை மதிப்புள்ள வனப் பொருட்களை தந்தங்கள் குற்றவாளிகளை தண்டிக்க மேற்படி சட்டத்தின்கீழ் கடத்தும் எடுக்க முடிவாகியுள்ளது. நடவடிக்கை

### 18.3. துறை உள்ளமைப்பினை வலுப்படுத்துதல்:

மதிப்பு வாய்ந்த சந்தன மரமும், தடி மரங்களும் நிறைந்து விளங்கும் நமது வனச்செல்வத்தினைப் பாதுகாக்கும் பொருட்டு, 1977 ஆம் ஆண்டுக்கு முன் 7வனப் பாதுகாப்புப் படைகளும், ஒரு தனித்தியங்கும் ரோந்து படையும் செயல்பட்டு வந்தன.



1987 ஏப்ரல் 30]

**1977-க்குப் பின்**னர் பாதுகாப்புப் பணியினைத் தீவிரப்படுத்தும் பொருட்டு மேலும் ஐந்து வனப் பாதுகாப்புப் படைகள் தோற்றுவிக்கப்பட்டன. இந்தப் பாதுகாப்புப் படைகள் மாநிலம் முழுவதும் தீவிரமாக, குறிப்பாக தொல்லைக்காளாகும் பகுதிகளில் மிகத் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. 1986–87-ல் இந்தப் படைகள், 3,170 வனக் குற்றங்களைக் கண்டு பிடித்தன. 1986 டிசம்பர் வரை ரூ. 8.99 லட்சம் குற்றத் தொகையாக வசூலிக்கப் பட்டது. ரூ. 1.75 லட்சம் மதிப்புள்ள சந்தன மரம் பிடிக்கப் பட்டது.

மாநிலம் முழுவதும், குற்றம் நிகழத்தக்க சூழல் நிலவும் பகுதி களில் 89 சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன.

### 18.4. வனக் குற்ற புலனாய்வு பிரிவு :

குற்றப் புலனாய்வுத் துறையின் ஒரு பிரிவு வனத்துறையில் சிறப்புக் குழுவாக 1983–84-ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. முக்கியமான வனக் குற்றங்கள் பற்றியும், வனச் செல்வங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கவும் புலனாய்வு மேற்கொள்ளுவது இக்குழுவின் பணியாகும். ஜுன் 1984 முதல் காவல் துறைத் துணைத் தலைவர் தகுதியில் ஓர் அலுவலரும் (1986 ஏப்ரல் முதல் காவல் துறை தலைவராக பதவி உயர்த்தப்பட்டது). இரண்டு காவல் கண்காணிப்பாளர் மற்றும் 50 சார் நிலை பணி யாளர்களுடன் இக்குழு இயங்கி வருகிறது. வனத்துறையுடன் இணைந்து பிடிக்கப்பட்ட 33 வழக்குகளையும் உள்ளிட்டு இது வரை 128 குற்ற வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ரூபாய் 40.25 லட்சம் மதிப்புள்ள வனப் பொருட்கள் இக் குற்றங்களில் கைப்பற்றப்பட்டுள்ளன. ரூ. 6.08 லட்சம் மதிப்புள்ள சந்தன மரமும், ரூ. 32.42 லட்சம் மதிப்புள்ள பாம்புத் தோல்களும், ரூ. 1.75 லட்சம் மதிப்புள்ள இதர வனப் பொருட்களும் இதில் அடங்கும்.

மதிப்பு குறைவாகவுள்ள சிறிய வழக்குகள் விசாரணையை தொடர்ந்து நடத்தி நடவடிக்கை மேற்கொள்ள வனத்துறை யிடம் ஒப்படைக்கப்பட்டன. அதே போல வனத் துறையில் இருந்து 13 வழக்குகள் இக்குழுவிற்கு மாற்றப்பட்டுள்ளன. இதில் 8 வழக்குகள் விசாரணையில் உள்ளன. 5 வழக்குகளில் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது. புலனாய்வு தவிர கீழ்க்கண்ட வேலைகளும் இப்பிரிவினால் செய்யப்படுகின்றன:—

(அ) வனக் குற்றவாளிகள் பற்றிய ரகசிய விசாரணை செய்யப்பட்டு 26 ஆதார அறிக்கைகள் வனத்துறைத் தலைவருக்கு அனுப்பப்பட்டன.

(ஆ) யானைகளை வேட்டையாடுவோர், சந்தன மர திரு டர்கள், பாம்புத் தோல் வியாபாரிகள் முதலியோரை வனப் பணி யாளர் விசாரிக்க எளிதாக இருக்கும் வகையில் விரிவான கேள்விப் படிவம் தயாரிக்கப்பட்டது.

[1987 ஏப்ரல் 30

(இ) ஏறத்தாழ 800 வனக் குற்றவாளிகள் பற்றிய குற்றப் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஈ) வனத்துறையில் செய்தித் தொடர்பு சாதனங்கள் நிறுவ (VHF Sets ) ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.

(உ) வனப் பணியாளர்களின் பயிற்சி பாடத் திட்டத்தை ஆய்வு செய்து திருத்தி அமைக்கப்பட்டது.

(ஊ) வனப் பணியாளர்கள் துப்பாக்கிகளை பயன்படுத்துவது பற்றியும் அதன் பின் விளைவுகள் பற்றியும் பரிசீலனை செய்யப்படுகிறது.

(எ) ஆயுதம் தாங்கி வனப் பணியாளர்களுடன், தமிழக காவல் துறையினரும் ஆயுதப்படையினரும் காவல் ரோந்து செய்து உரிமம் இல்லாமல் வைத்திருந்த பதினேழு ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

18.5. செய்தி தொடர்பு அமைப்புக்களை நவீனப்படுத்துதல்:

பாதுகாப்புப் பணிகளை மேலும் சிறப்பாக செய்ய ஓர் ஒருங்கிணைந்த செய்தி தொடர்பு அமைப்பு ஏற்படுத்தப்பட உள்ளது. நீலகிரியில் சமீபத்தில் உயர்வேக மின் அலை தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேலூர், சேலம் வன மண்டலங்களில் ரூபாய் 70 லட்சம் செலவில் கம்பியில்லா தந்தி தொடர்பு அமைப்பு ஏற்படுத்த உத்தேசம் உள்ளது. நமது நிதி நிலையை பொறுத்து தகவல் தொடர்பு வசதியினை நவீனப் படுத்தும் பணி ஒவ்வொரு கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் மாநிலம் முழுவதும் முழுமையான, முற்றிலும் நவீன செய்தி தொடர்பு நிறுவப்படும்.

வேலூர் போன்ற முக்கிய பகுதிகளில் சந்தன மரக் குற்றங் களுக்கு என தனி நீதிமன்றங்கள் நிறுவும் கருத்துரு பரிசீலனை யில் உள்ளது. இத்தனி நீதிமன்றங்கள் சந்தன மரக் குற்றங் களை விரைவில் விசாரித்து குற்றவாளிகளைத் தண்டிக்க உதவும்.

மாவட்ட அளவில் வழக்குகளை விரைவில் முடிக்கவும், குற்ற வாளிகள் தண்டனையை அனுபவித்து உணரவும் இது வகை செய்யும். இந்த ஆண்டில் குற்றவாளிகளைப் பிடிக்க உதவிய 32 நபருக்கு சன்மானம் வழங்கப்பட்டது.

18.6. சந்தன மரக் கடத்தல்:

சந்தன மரம் விலை உயர்ந்த ஓர் பொருளாகும். அதன் உயர்ந்த மதிப்பு காரணமாக சந்தன மரக் கடத்தல் அதிகரித்து வருகிறது. 1986–87-ல் (ஜனவரி 1987 வரை) 40.06 லட்சம்



1987 ஏப்ரல் 30]

ரூபாய் மதிப்புள்ள 100.4 டன் சந்தன மரம் மொத்தம் 457 குற்ற வழக்குகளில் பிடிபட்டது. இந்த வழக்குகளில் பிடிபட்ட வர் 856 பேர். 40 வாகனங்களும் பிடிக்கப்பட்டன.

18.7. பாம்புத் தோல் கடத்தல் மற்றும் பாம்புத் தோல் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தல்:

பாம்புகள் தான் பயிர்களையும் தானியங்களையும் எலிகளிட மிருந்து பாதுகாக்கின்றன என்பதைப் பலர் உணர்வதில்லை. இந்த முக்கியத்துவத்தைக் கருதியே, ராஜ நாகம் மற்றும் கட்டு விரியன் போன்ற பாம்பு வகைகளை வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972 அட்டவணை 2-ன் கீழும் மற்ற பாம்பு வகை களை அட்டவணை 4-ன் கீழும் சேர்க்கப்பட்டுள்ளது. இடுப்புப் பட்டைகள், காலணிகள் மற்றும் பைகள் போன்ற அழகிய பொருட்கள் பாம்புத் தோல்களால் செய்யப்படுகின்றன. பாம்புகளைத் திருட்டுத்தனமாக கொல்லுதலை தடுப்பதற்காக வும் பாம்புத் தோல் வியாபாரத்தை ஒழுங்கு முறைப் படுத்தவும் அரசு வன விலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972-ன் கீழ் பாம்பு பிடிக்கும் உரிமம், தோல் பதனிடும் உரிமம் மற்றும் வியாபார உரிமங்களை வழங்கி வந்துள்ளது.

வனப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை, வனவிலங்கு காப் பாளர், சென்னை, மற்றும் உதவி வனப் பாதுகாவலர், வனப் பாதுகாப்புப் படை, சென்னை ஆகியோர் பாம்புத் தோல்விற் பனையை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். தோல் பதனிடும் சாலை, கிடங்குகள், இரயில் நிலையங்களிலும் நட மாடும் தனிக்குழு திடீர் தணிக்கை செய்து, சட்டத்திற்கு புறம்பாக வியாபாரம் செய்தலை கண்டுபிடித்து தோல்களை பறி முதல் செய்தும் குற்றவாளிகளை கைது செய்தும் வருகின்ற றனர்.

1986–87 ஆம் ஆண்டில் (15—1—1987 வரை) சுமார் 57,500 ரூபாய் மதிப்புள்ள தோல்கள் குற்றங்களில் பிடித்து பறி முதல் செய்யப்பட்டுள்ளன. பறிமுதல் செய்யப்பட்ட தோல் கள் அனைத்தும், இந்திய அரசின் அறிவுரைகளின்படி சென்னையி லுள்ள இந்திய அரசு நிறுவனமாகிய பாரத் லெதர் கார்ப்ப ரேஷனிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

தவிர 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சென்னையில் ரூ. 20 லட்சம் மதிப்புள்ள 1.22 லட்சம் பாம்புத் தோல் கடத்தல் வழக்கு ஒன்றும் காவல்துறை (வனப் பிரிவு–குற்றப் புலனாய்வு துறையால்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரே கடத்தலில் மிக அதிக அளவு பாம்புத் தோல் கடத்திய இந்த வழக்கே தமிழ் நாட்டில் ஒரு பெரிய குற்ற வழக்காகும் என்று கருதப் படுகிறது.

[1987 ஏப்ரல் 30

**18.8.** கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள்:

1986–87-ல் ஜனவரி 1987 வரை 29,113 குற்ற வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு குற்றத் தொகையாக 33.12 லட்ச ரூபாய் வசூலிக்கப்பட்டது. 1,262 குற்றவாளிகள் மீது வழக்கு தொடரப்பட்டு இதுவரை 37 பேர் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

**18.9.** ஆயுதங்களும் படைக்கலன்களும்:

வெகு காலமாகவே வனத்துறைக்கு ஆயுதங்களும் படைக்கலங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் வனப் பணியாளர்கள் தங்களை காத்துக் கொள்ளவோ வனச் செல்வத்தைக் காக்கும் பொருட்டோ ஆயுதங்களை பயன்படுத்தும் அதிகாரம் காவல் துறையினருக்கு உள்ளது போல் வழங்கப்படவில்லை. கள்ளக் கடத்தலும் வேட்டையாடுதலும் அதிகமாக உள்ள இந்நாட்களில் குற்றவாளிகள் நவீனமான ஆயுதங்களையும் வாகனங்களையும் பயன்படுத்தி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர். எனவே குற்றவாளிகளை தக்கபடி சந்தித்து எதிர்த்து நிற்க நவீன ஆயுதங்களும், தக்க அதிகாரங்களும் வனத் துறை பணியாளர்களுக்கு வழங்குதல் பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**19.** வனப் பணியாளர்களின் திறமைமிக்க பணிகள்:

மதிப்பு வாய்ந்த நமது வனச் செல்வத்தை சமூக விரோத சக்திகளிடமிருந்து காப்பதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்க நாம் தயங்குவதில்லை. குற்றவாளிகளிடமிருந்து காடுகளைப் பாதுகாப்பதில் பணியாளர்கள் தங்களுடைய உயிரையும் தந்த நிகழ்ச்சிகளும் பல உண்டு.

வனத்துறை பணியாளர்கள் குற்றவாளிகளைப் பிடிக்கப் போகும்போது கண்மூடித்தனமாக தாக்கப்படுவது வழக்கமாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாக உள்ளது. களப்பணியாளர்கள் குற்றவாளியுடன் கடுமையான கைகலப்பில் ஈடுபடும்போது உடல் ஊனம் ஏற்பட்டதும் உண்டு. சமீப காலத்தில் இதுபோன்ற அரக்கத்தனமான தாக்குதலால் 12 வனப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டனர். அவற்றுள் இரண்டு பேருக்கு உடல் ஊனம் அடையும் பரிதாப நிலையும் ஏற்பட்டது.



1987 ஏப்ரல் 30]

**20.** வரவு-செலவு திட்ட மதிப்பீடு.

துறையின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு :

| | | நிதி ஆதாரம். | 1985–86 கணக்குகள். | 1986–87 வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1986–87 திருத்திய மதிப்பீடு. | 1987–88 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|---|
| | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. | 259A | பொதுப்பணிகள் .. | 0.17 | 0.40 | 0.40 | 0.40 |
| 2. | 268 | பல்வகைப் பொதுவான பணிகள். | .. | 110.00 | .. | .. |
| 3. | 2075 | பல்வகைப் பொதுவான பணிகள். | .. | .. | .. | 183.33 |
| 4. | 288 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 8.22 | 8.30 | 7.42 | .. |
| 5. | 2235 | சமூகப்பாதுகாப்பும் நலனும் | .. | .. | .. | 0.01 |
| 6. | 2225 | ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்பட்ட வகுப்பினர் நலன். | .. | .. | .. | 0.07 |
| 7. | 307 | மண்வள-நீர்வளப் பாதுகாப்பு | 27.96 | 29.00 | 29.16 | .. |
| 8. | 2402 | .. | .. | .. | .. | 41.33 |
| 9. | 308A | பகுதி மேம்பாடு .. | 13.45 | 16.66 | 22.57 | .. |

| | | நிதி ஆதாரம். | 1985–86 கணக்குகள். | 1986–87 வரவு செலவு திட்ட மதிப்பீடு. | 1986–87 திருத்திய மதிப்பீடு. | 1987–88 வரவு, செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|---|
| | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 10. | 2551 | மலைப்பகுதிகள் .. | .. | .. | .. | 22.32 |
| | 60. | ஏனைய மலைப்பகுதிகள் .. | | | | |
| 11. | 313 | காட்டுவளம் .. | 1,255.67 | 1,334.14 | 1,391.38 | .. |
| 12. | 2406 | காடுவளர்ப்பும் வனவிலங்கும் | .. | .. | .. | 1,359.08 |
| 13. | 2415 | வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி. | .. | .. | .. | 23.47 |
| 14. | 2407 | மலைத்தோட்டங்கள் | | | | |
| | 60. | ஏனையவை .. | .. | .. | .. | 1.44 |
| 15. | 2402 | மண்வள-நீர்வளப் பாதுகாப்பு | .. | .. | .. | 7.22 |
| 16. | 2551 | மலைப்பகுதிகள் 01. .. மேற்கு மலைத்தொடர் 101. காடு வளர்ப்பும் வனவிலங்கும் | .. | .. | .. | 10.84 |
| 17. | 488 | சமூகப்பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு. | .. | 0.01 | 0.01 | — |
| 18. | 4235 | .. | .. | .. | .. | 0.01 |
| 19. | 506. | சிறுபாசனம், மண்வளப் பாது காப்பு பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு. | 125.92 | 67.87 | 142.43 | .. |
| 20. | 4402 | மண்வள-நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. | 94.64 |
| 21. | 4551. | மலைப்பகுதிகள் குறித்த மூல தனச் செலவு. | .. | .. | .. | 171.73 |
| 22. | 513. | காட்டுவளம் குறித்த மூல தனச் செலவு. | 1,447.05 | 1,730.02 | 1,846.94 | .. |
| 23. | 4406. | காட்டுவளம் வனவிலங்கு குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. | 1,936.47 |
| 24. | 4402. | மண்வள-நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. | 18.08 |
| 25. | 4407. | மலைத்தோட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. | 8.80 |
| 26. | 4415. | வேளாண்மை ஆராய்ச்சிக் கல்வி குறித்த மூலதனச் செலவு. | .. | .. | .. | 17.60 |
| 27. | 330JD | சந்தன தைல வடிசாலை .. | 0.21 | .. | .. | .. |
| | | | 2,878.65 | 3,296.40 | 3,440.31 | 3,905.84 |

## 21. முடிவுரை.

தமிழ்நாட்டில் காடுகள் மிகவும் குறைவாகவே உள்ளன. எனவே, காடுகள் மிதமிஞ்சிய அளவில் வெட்டப்படாமலும், தவறாகப் பயன்படுத்தப்படாமலும் காக்க தக்க கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம்.

பாரம்பரியமாகவுள்ள நமது அரிய வனவிலங்குகளைக் காக்கவும், மேம்படுத்தவும் நாம் எல்லாவித முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம். பெருமைப்படத்தக்க சமூக நலகாடுகள் திட்டத்தை நாம் கவனத்துடன் செயல்படுத்தி வருகிறோம். நல்ல பலன்பெறும் நோக்கோடு வனத்தோட்டங்களை, தோட்ட நிர்வாக முறையின் ( estate management கீழ் கொண்டு வருதல், தீவிர வனவியல் பணிகள், பழங்குடியினர் மேம்பாட்டிற்கென கிராமபுற தோட்டத் திட்டங்கள், அழிந்து படும் சோலைகளை உயிர்ப்பித்தல், ஈட்டி மரங்களைக் காக்க அவற்றிற்கென காப்பிடங்கள் அமைத்தல் போன்றவை நமது திட்டங்களின் சில சிறப்பு அம்சங்களாகும்.

சமுதாயத்தின் நலவாழ்வுகளில் காடுகளின் அரிய பங்குபற்றி மக்களிடையே ஒரு நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டு அவ்வுணர்வு பெருகியும் வருகிறது. அவ்வுணர்வினை தக்க முறையில் பயன்படுத்திக் கொண்டு இயற்கை வல்லுநர் மற்றும் அறிஞர்களின் அறிவுரைப்படி அவர்களின் கோட்பாடுகளை பரப்பவும், செயல்படுத்தவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இயற்கைச் சூழல் சீரமைப்பு, பாதுகாப்பு மற்றும் மேம்பாடு போன்ற சீரிய பணிகள் செவ்வனே நடைபெற வனத் துறை தொடர்ந்து பணிபுரியவுள்ளது.



## இணைப்பு

(38-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை எண். 47.

### செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்க குறிப்பு, 1987-88.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மேன்மேலும் முன்னேற்றம் அடைந்துள்ள இந்நாளில், உலக நாடுகள் அனைத்திலும் புதுவகையான மக்கள் தொடர்பு சாதனங்கள் கையாளப்பட்டு வருகின்றன. மக்களின் கலாச்சார மேம்பாட்டிற்கும் பொதுவாக அவர்களின் வாழ்க்கைத் தரம் மேன்மை அடைவதற்கும் செய்தித் தொடர்பு பெரிதும் துணைபுரிகிறது. அரசின் சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டுக் கொள்கைகளையும், திட்டங்களையும், சீரிய முறையில் மக்களுக்கு எடுத்துரைப்பதில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை முக்கியப் பங்கேற்கிறது.

இம்மாநில அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதில் மக்கள் நேரடியாகப் பங்கேற்றிட செய்தி-மக்கள் தொடர்புத் துறை தக்கதொரு தூண்டுகோலாக விளங்கி வருகிறது.

**பத்திரிகைத் தொடர்பு :**

இத்துறை, அரசின் சார்பில் பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டு, பொது முக்கியத்துவம் வாய்ந்த அரசின் செய்திகளையும் நிழற்படங்களையும் பத்திரிகைகளுக்கு அளித்து வருகிறது. மேலும், அமைச்சர்களுடனும் மற்றும் முக்கிய பிரமுகர்களுடனும் தொடர்பு கொள்ள செய்தியாளர்கள் கூட்டங்களையும் அவ்வப்போது ஏற்பாடு செய்கிறது. மாவட்டங்களில், இத்துறைச் செய்தி-மக்கள் தொடர்ப அலுவலர்கள் பத்திரிகைத் தொடர்பு அலுவலர்களாகவும் பணிபுரிகிறார்கள்.

அரசின் திட்டங்கள் செயற்படுவதைப் பார்வையிட இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு வெளிநாட்டு பத்திரிகையாளர்களையும், வெளிநாட்டுத் தொலைக்காட்சி, வானொலிக் குழுவினரையும் பிற மாநிலங்களிலிருந்து வருகிற பத்திரிகையாளர்களையும் இத்துறை அழைத்துச் செல்வதிலும் உறுதுணை புரிகின்றது.

வானொலியில் மாதம் 2 முறை ஒலிபரப்பாகும் வகையில் "வளரும் தமிழகம்" என்ற நிகழ்ச்சியினை இத்துறை ஏற்பாடு செய்து அமைச்சர்கள், அரசு செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகியோர் அரசின் சாதனைகளை விளக்கி உரையாற்ற துணை புரிந்து வருகிறது.

அகில இந்திய வானொலி :

புதிதாக மூன்று அகில இந்திய வானொலி நிலையங்கள், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் நிறுவ மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 2 100 கிலோவாட் கொண்ட இடைஒலி அலை ஒலிபரப்பு மையம் ஒன்று தூத்துக்குடியில் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக அண்டை நாடுகளில் உள்ளோரும் பயனடைவர்.

தொலைக்காட்சி மையம் :

சென்னை தொலைக்காட்சி நிலையத்துடன் 1987 ஜனவரி, 14-ஆம் தேதி முதல் கொடைக்கானல் ஒளி மையம் நுண் அலைக் கருவி மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இம் மாநிலத்தில் 70 விழுக்காடு மக்கள் சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் மூலம் அஞ்சல் செய்யப்படும் நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குறைந்த சக்தி நிலையங்களையும் நுண் அலைக்கருவி மூலம் சென்னைத் தொலைக்காட்சியுடன் இணைக்கப்பட வேண்டும் எனவும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்வரசு, 10 குறைந்தழுத்த தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்களை திருச்சி, கோவை, சேலம் (ஏற்காடு), கும்பகோணம், வேலூர், நெய்வேலி, திருநெல்வேலி, தர்மபுரி, உதகமண்டலம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் நிறுவ மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. இவற்றுள் முதல் 6 இடங்களில் குறைந்தழுத்த தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் அமைக்கப்பட்டன.



ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தருமபுரி, நாகர்கோயில் மற்றும் கடலூர் ஆகிய மூன்று இடங்களில் குறைந்தழுத்தம் உள்ள டிரான்ஸ்மிட்டர் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. இது தவிர இராமேஸ்வரத்தில் 10 கிலோவாட். கொண்ட. ஒரு உயர் சக்தி டிரான்ஸ்மிட்டர் நிலையம் அமைக்கவும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கான நிலங்களைக் கையகப்படுத்துவதில் வானொலி மற்றும் தொலைக்காட்சி பொறியாளர்களுக்கு இவ்வரசு ஒத்துழைப்பு நல்கி வருகிறது.

இராமேஸ்வரத்தில் உயர் சக்தி கொண்ட தொலைக்காட்சி நிலையம் அமைக்க நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதர குறைந்த சக்தி கொண்ட அஞ்சல் நிலையங்களை தனியார் கட்டிடங்களில் அமைக்க தொலைக்காட்சி நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நிழற்படப் பிரிவு :

தலைமைச் செயலகத்தில் இத்துறையின் நிழற்படப் பிரிவு நவீன முறையில் இயங்கி வருகிறது. இப்பிரிவிற்கு 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 2 இலட்சம் செலவில் சீர்வளி வசதி ஏற்படுத்தவும், படம் பிரதிகளை முறைப்படுத்தி வைக்க (புரோமைடு பிரிண்டர் மற்றும் இன்டக்சர்) புரோமைடு படச் சுருள் தொகுப்பாளர் என்ற புதிய பதவி ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. எல்லா மாவட்டங்களிலும் நிழற்படப் பிரிவுகள் அமைக்கும் வகையில் நிழற்படப் பணிகள் விரிவாக்கப்பட்டுள்ளன. 1985—86 ஆம் ஆண்டில் சேலம், தஞ்சாவூர் மற்றும் வட ஆற்காடு மாவட்டத்திற்கு 3 உதவி நிழற்படப் பிடிப்பாளர் பதவிகளும், 1986—87 ஆம் ஆண்டு தென்னார்க்காடு, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு 3 உதவி நிழற்படப் பிடிப்பாளர் பதவிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. 1987—88-ம் ஆண்டில் ரூ. 1.50 இலட்சம் செலவில் செங்கற்பட்டு, தருமபுரி மற்றும் அண்ணா மாவட்டங்களுக்கு 3 உதவி நிழற்படப் பிடிப்பாளர் பதவி ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

**விளம்பரங்கள் :**

அரசின் பல்வேறு துறைகளும், அரசின் பொறுப்பில் உள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவையும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும் ஒருமுகப்படுத்தப் பெற்று, இத்துறையின் வாயிலாக பத்திரிகைகளுக்கு வழங்கப்படுகின்றன. அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் முறையில் செய்தி-மக்கள் தொடர்புத் துறையே பல விளம்பரங்களைத் தாமே தயாரித்து வெளியிடுகிறது.

**கள விளம்பரம் :**

சமூகக் கல்வியை மேம்படுத்தவும் அரசின் அனைத்து நலப் பணிகளிலும் மக்கள் பங்கு கொண்டு ஒத்துழைப்பை நல்கவும் ஏற்றவகையில் களவிளம்பரப் பணிகள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

இத்துறையைச் சேர்ந்த மாவட்ட செய்தி--மக்கள் தொடர்பு அலுவலர்களின்கீழ் 71 திரைப்படப் பணியாளர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் சராசரி 30 திரைப்படக் காட்சிகள் நடத்தித் தொலை தூரத்தில் உள்ள கிராம மக்களும் அரசின் திட்டங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவுகின்றனர். வில்லுப்பாட்டு, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் மூலமும், பொதுக்கூட்டங்கள், சிறிய பொருட்காட்சிகள் மூலமும் சிறு சேமிப்பு, குடும்ப நலம், வறுமை ஒழிப்பு பற்றியும் தீண்டாமையினால் வரும் தீங்குகள் பற்றியும் மக்களுக்கு இத்துறை எடுத்துரைத்து வருகின்றது.

அரசின் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், கொள்கைகள் ஆகியவற்றை மக்களிடையே பரப்பிடும் நோக்கத்துடன் இம் மாநிலத்தில் புதிதாகத் தொடங்கிய பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், அண்ணா, வ. உ. சிதம்பரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் நிலையான பொருட்காட்சிகள் ஏற்படுத்த 1987—88 ஆம் ஆண்டில் ரூ. 60 ஆயிரம் செலவிடப்படும்.



**பல்துறை விளக்கப் பணி விழா :**

சென்னையில் ஒவ்வொரு மாதமும் பல்நோக்கு விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இந்திய அரசின் சார்பில் நடைபெறுகிறது. அக்கூட்டத்தில் புதிய 20 அம்ச திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள வளர்ச்சிப் பணிகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏழை எளிய மக்களும் கிராமப்புற மக்களும் அரசின் திட்டங்களை எளிதில் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கிராமியக் கலைகள் உட்பட பல்வேறு செய்தி தொடர்பு சாதனங்கள் மூலம் இத்துறை விளம்பரப் பணிகளை மாவட்டச் செய்தி—மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் செயற்படுத்தி வருகிறது. எல்லா மாவட்டங்களிலும் விளம்பரப் பணிகள் மேற்கொள்ள இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் 1986—87 ஆம் ஆண்டில் முதன் முறையாக பல்வேறு தகவல் பரப்புப் பணி விழா 9 நாட்கள் நடைபெற்றது.

**மக்கள் தகவல் தொடர்புப் பயிற்சி நிலையம்:**

மக்கள் தகவல் தொடர்புப் பயிற்சி மற்றும் கல்வி வசதி இல்லாத காரணத்தால் 7 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 7 இலட்சம் செலவில் மக்கள்--தகவல் தொடர்புப் பயிற்சி நிலையம் ஒன்றை சென்னையில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. திரு. சி. ஜி. கே. ரெட்டி என்பவர் தலைமையின்கீழ் தனி நபர் குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, இந்நிறுவனம் நிறுவுவதற்குத் தேவையான திட்ட அறிக்கை, பாடத் திட்டம் போன்றவற்றை அளிக்கும், அவருடைய அறிக்கை பெறப்பட்டு, அது அரசின் பரிசீலனையில உள்ளது.

**விழாக்கள் :**

வரலாற்று நிகழ்ச்சிகள், பெருந்தலைவர்களின் சிறப்புகள், தியாகங்கள் பற்றி மக்களுக்குத் தெரிவிக்கவும், நெறிப்படுத்தவும் தலைவர்களின் பிறந்த நாள், நினைவுநாளில் விழாக்களையும் பிற நிகழ்ச்சிகளையும் இத்துறை நடத்தி வருகிறது.

மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆண்டு நினைவு நாள் தேசிய மறு சமர்ப்பண நாளாக சென்னையில் 1986 அக்டோபர் 31-ம் நாளன்று அனுசரிக்கப்பட்டது. எல்லா மாவட்டங்களிலும் தேசிய ஒருமைப்பாட்டு வாரம் கொண்டாடப்பட்டது. மேலும், சென்னையில் 1986 டிசம்பர் 19 ஆம் நாள் முதல் 25 ஆம் நாள் வரை தேசிய அளவிலான விழா ஒன்றும் நடத்தப்பட்டது. புகழ்பெற்ற சமூகப் பணியாளர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் நினைவாக சிறப்பு அஞ்சல் தலை ஒன்றும் சிறப்பு அஞ்சல் உறையும் 1986 ஜூன் 30 ஆம் நாளன்று சென்னையில் வெளியிடப்பட்டது.

1987 பிப்ரவரி 4-ம் நாளன்று புதுடில்லியில் உள்ள பாரதி நகரில் 10 அடி உயரமுள்ள மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் சிலை ஒன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டு, பாரதப் பிரதமர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. தமிழக முதல்வர் பங்கேற்ற இவ்விழாவில், மேதகு இந்திய குடியரசுத் துணைத்தலைவர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் டில்லி தமிழ்ச் சங்கத்தால் நிறுவப்படவிருக்கும் கலையரங்கத்திற்காக ரூ. 5 இலட்சம் நன்கொடையாக முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது. புகழ்பெற்ற சமூகப் பணியாளர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களுக்கும், சுதந்திரப் போராட்ட வீரர் சத்தியமூர்த்தி அவர்களுக்கும் நூற்றாண்டு விழா இவ்வாண்டில் கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது.

**பொருட்காட்சி:**

அரசின் பல்வேறு பணிகளையும், சாதனைகளையும் பொது மக்களுக்கு விளக்குவதுடன், அவர்களுக்கு அறிவும், தெளிவும், ஆவலும் ஊட்டிடும் பயனுள்ள பொழுது போக்காகவும் பொருட்காட்சி விளங்குகிறது.

அரசு செய்தித்துறை 1973 ஆம் ஆண்டு முதல் மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சிகளை நடத்தி வருகிறது. ஒவ்வொரு பொருட்காட்சியையும் 5 இலட்சம் முதல் 10 இலட்சம் மக்கள் வரை கண்டு களிக்கிறார்கள். அகில இந்திய அளவில், பொருட்காட்சி நடத்துவதன் வாயிலாக அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் ஒரே துறை இதுவாகும்.



இதுவரை மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, ஈரோடு, வேலூர், திண்டுக்கல் ஆகிய நகரங்களில் 36 பொருட்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருட்காட்சிகளை நடத்த மொத்தம் செலவிடப்பட்ட தொகை ரூ. 363.47 இலட்சம் ஆகும். இதனால் அரசுக்கு ரூ. 151.35 இலட்சம் வருவாய் கிட்டியுள்ளது.

**கலைவாணர் அரங்கம்:**

சென்னையில் அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்கம், சீர்வளி வசதி கொண்ட அரங்கமாகும். அரசு நிகழ்ச்சிகள், தனியார் நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன. தனியார்களுக்குக் கட்டணத்தின் பேரில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரசுத் துறைகளுக்குச் சலுகை வீதத்தில் வாடகைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டில் இந்த அரங்கத்தின் மூலம் ரூ. 3.36 இலட்சம் வாடகை போன்றவற்றால் அரசுக்கு வரவு வந்துள்ளது கலைவாணர் அரங்கில் மின்வசதி தொடர்ந்து கிடைப்பதற்கு "மின் உற்பத்தி இயந்திரம்" நிறுவப்பட்டுள்ளது. நவீன ஒலி வசதிக்கான நவீனக் கருவிகள் ரூ. 2.44 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. கலைவாணர் அரங்கத்தில் உள்ள குளிர் சாதன கூலிங் டவரினைப் புதுப்பிக்க ரூ. 75,000 ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ. 24.50 இலட்சம் செலவில் கலைவாணர் அரங்கம் 2-ஆவது தளத்தில் அவைக் கூடம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**அண்ணா கலையரங்கம், வேலூர்:**

வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரில் அமைந்துள்ள அண்ணா கலையரங்கத்தில் அரசு விழாக்களும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. தினமும் திரைப்படக் காட்சிகளும் நடத்தப்படுகின்றன. 1986—87-ம் ஆண்டில் இவ்வரங்கத்தின் மூலம் ரூ. 4.92 இலட்சம் அரசுக்கு முழு நீளத் திரைப்படங்கள், திரையிடல் மற்றும் வாடகை போன்றவற்றால் வரவு வந்துள்ளது எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் செய்தி நிலையங்களை இணைத்து கலையரங்குகள் கட்டும் திட்டத்தை அரசு எடுத்துக் கொண்டுள்ளது. மேலும், திண்டுக்கல் மற்றும் மதுரையில் கலை

அரங்கம் கட்டும் திட்டத்திற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. புதிதாகத் தொடங்கப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், இராமநாதபுரம் மாவட்டங்களில் கலை அரங்கம் கட்டுதல் மாவட்டப் பெருந்திட்டத்தில் சேர்க்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

நினைவகங்கள் :

செய்தி-மக்கள் தொடர்புத் துறை—(1) வள்ளுவர் கோட்டம், (2) அண்ணா சதுக்கம், (3) காமராசர் இல்லம், (4) இராசாசி நினைவாலயம், (5) சென்னை கிண்டியிலுள்ள காமராசர் நினைவாலயம், (6) கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபம், (7) எட்டயபுரத்திலுள்ள பாரதியார் மணி மண்டபம், (8) ஓட்டப்பிடாரத்திலுள்ள வ.உ.சி. இல்லம், (9) விருதுநகரிலுள்ள காமராசர் நினைவகம், (10) ஈரோட்டிலுள்ள பெரியார்—அண்ணா நினைவகம், (11) தில்லையாடியிலுள்ள வள்ளியம்மை நினைவகம், (12) தருமபுரி மாவட்டம் தொரப்பள்ளியில் உள்ள இராசாசி நினைவகம், (13) காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா நினைவகம் ஆகிய அனைத்தையும் பராமரித்து வருகிறது.

சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்திற்கு எழில் கூட்டும் பணிகள், பார்வையாளர்களுக்குப் புதிய வசதிகள், அங்காடி வளாகம், சிற்றுண்டியகம், சுற்றுலாப் பேருந்துகள் நிற்க நிழலகம், தோரணவாயில் தோற்றப் பொலிவைக் கூட்ட சுற்றுச் சுவர், பூங்கா அமைத்தல் ஆகிய மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அரசால் வள்ளுவர் கோட்டத்தில் அங்காடி வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து சென்னை வரும் சாலையில் கத்திப்பாரா சந்திப்பில் ரூ. 11.25 இலட்சம் செலவில் இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுக்குச் சிலை நிறுவி சீரிய நினைவுச் சின்னம் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. சிலை விரைவில் இந்தியப் பிரதமரால் திறந்து வைக்கப்படவுள்ளது.





திருச்சியில் வ.வே.சு. ஐயர் வாழ்ந்த இல்லம், குற்றாலத்தில் இரசிகமணி டி. கே. சிதம்பரநாதர் வாழ்ந்த இல்லம், திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம், நாகர்கோவிலில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வாழ்ந்த இல்லம் ஆகியவற்றை அரசு ஏற்று நினைவகங்களாகப் பராமரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. கன்னியாகுமரியில் காந்தி மண்டபத்தை மேம்படுத்தும் திட்டமும் ஆய்வில் உள்ளது. திருப்பூரில் திருப்பூர்க் குமரனுக்கு ரூ. 5 இலட்சம் செலவில் நினைவு மண்டபம் அமைக்கும் பணி திருப்பூர் நகராட்சியால் இடம் ஒப்படைக்கப்பட்டபின் தொடங்கப்பட உள்ளது.

வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம் கட்ட தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்களிடமிருந்து ரூ. 15 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. இந்நினைவு வளாகத்தில் தந்தை பெரியார் சிலை, மற்றும் வைக்கம் போராட்டத்தில் பங்கு பெற்ற கேரள மாநில நான்கு தலைவர்களின் சிலைகள் நூலகம், சிறுவர் பூங்காவுடன் கூடிய தோட்டம், பொழுதுபோக்குத் திடல் ஆகியவை இடம் பெறும். இதற்கான திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை:

கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறை அருகில் உள்ள சிறிய பாறை மீது ரூ. 432 இலட்சம் செலவில் திருவள்ளுவர் சிலை ஒன்றை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இச்சிலை, 45 அடி உயரமுள்ள பீடத்தில், 75 அடி உயரமுள்ளதாக செப்புச் சிலையாக கடற்கரையில் வடமேற்குத் திசையை நோக்குவது போல் அமைக்கப்படும். இத்திட்டம் 2 ஆண்டுகளில் முடிக்கப்படவுள்ளது.

தமிழரசு :

தமிழிலும் (மாதம் இருமுறை), ஆங்கிலத்திலும் (மாதம் ஒருமுறை) வெளியிடப்படும் “தமிழரசு” ஏடு மூலம், அரசின் கொள்கைகளும் திட்டங்களும், சாதனைகளும், மக்களுக்கு விளக்கப்படுகின்றன. மாதம் இருமுறை வெளிவரும் தமிழ் இதழ் சராசரி 44,000 பிரதிகளும், மாதம் ஒரு முறை வெளிவரும் ஆங்கில இதழ் 3,800 பிரதிகளும் அச்சிடப்பட்டு விற்பனையாகின்றன.

1987-ல் தமிழரசு பொங்கல் மலர் வண்ணப் பொலிவுடன் வெளியிடப்பட்டது. சிறப்பு மலர் வெளியீட்டில் இது முதன் முயற்சியாகும். 250 பக்கங்கள் கொண்ட இம்மலர், 45 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பொங்கல் வாழ்த்துச் செய்தியும் தமிழகத்தின் புகழ்மிக்க எழுத்தாளர்களும் அறிஞர் பெருமக்களும் இம்மலரில் கட்டுரைகள், கவிதைகள், கதைகள் எழுதி வழங்கி புதிய பொலிவினை இதழுக்கு அளித்தனர்.

வெளியீட்டுப் பிரிவு :

தமிழரசின் சிறப்பு வெளியீட்டுப் பிரிவு, சிறிய சிறப்பு வெளியீடுகளையும், சுவரொட்டிகளையும் வெளியிட்டு அரசின் திட்டங்களை மக்களுக்கு விளக்குகிறது (இப்பிரிவு செய்தி மக்கள்-தொடர்புத் துறையின்கீழ் இயங்கும் தமிழரசு அலுவலகத்தில் அமைந்துள்ளது). 1986-ல் உலகத் தமிழ்ச் சங்கம், சுற்றுப் புற சுகாதாரப் பாதுகாப்பு, தமிழக அரசின் 9 ஆண்டு சாதனைகள் பற்றிய கையேடுகளும் பல்துறை விளக்கப் பணி விழா சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டன. வ. உ. சிதம்பரனார், இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர் முதலானோர் பற்றி குறிப்பேடுகள் வெளியிடப்பட்டன. "மக்கள் கவிஞர்" என்ற தலைப்பில் மகாகவி பாரதியார் பற்றி அறிஞர் அண்ணா ஆற்றிய ஆங்கில உரை அடங்கிய சிறப்பு ஏடும் வெளியிடப்பட்டது.

புது டில்லியில் அமைக்கப்பட்ட பாரதியார் சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறப்பு வெளியீடாக வந்துள்ளது.

தமிழரசு அச்சகம் :

தமிழரசு அச்சகத்தில் "தமிழரசு" தமிழ் ஆங்கில இதழ்கள் வெளியிடப்படுகின்றன. இவ்வச்சகத்தில் அச்சிடப்படும் ஏனைய ஏடுகள்—

1. திட்டம் (மாத இதழ்—மத்திய அரசு செய்தித்துறை வெளியீடு).
2. உழைப்பவர் உலகம் (மாத இதழ்—தொழிலாளர் துறை வெளியீடு).



3. திருக்கோயில் (மாத இதழ்—இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு).
4. தமிழகக் கல்வி (காலாண்டு இதழ்—கல்வித் துறை வெளியீடு).
5. தமிழர் விளையாட்டு மடல் (மாத இதழ்—விளையாட்டுப் பயிற்சித் துறை).

இங்கு அரசின் சாதனைகளை விளக்கும் சிறிய வெளியீடுகளும், மடல்களும், கையேடுகளும் அரசு நிகழ்ச்சிகளுக்குரிய அழைப்பிதழ்களும் அச்சிடப்படுகின்றன.

அச்சகத்தை நவீனப்படுத்தும் நோக்குடன் 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சத்தில் ஒரு "போட்டோ டைப் செட்டர்" அச்சு இயந்திரம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படம், தொலைக்காட்சி பயிற்சி நிலையம் :

திரைப்பட தயாரிப்பு, தொலைக்காட்சி மற்றும் இவை தொடர்பான படங்கள் ஆகிய எல்லா பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. சென்னையிலுள்ள தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் கீழ்க்கண்ட பயிற்சிப் பிரிவுகள் உள்ளன :—

| பயிற்சி, | காலவரையறை. | ஒவ்வோராண்டும் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. இயக்குதல், திரைக்கதை எழுதுதல். | 3 ஆண்டுகள் | 10 |
| 2. திரைப்படப் பதிவு | 3 ஆண்டுகள் | 15 |
| 3. ஒளிப்பதிவு ஒலிப்பொறியியல். | 3 ஆண்டுகள் | 10 |
| 4. படச் சுருள் கழுவுதல் | 3 ஆண்டுகள் | 10 |
| 5. படத் தொகுப்பு | 2 ஆண்டுகள் | 10 |
| 6. நடிப்பு (சான்றிதழ் பெறும் பயிற்சி) | 1 ஆண்டு | 20 [மாணவர்கள் 10 பேர் மாணவிகள் 10 பேர்] |

[1987 ஏப்ரல் 30

159 மாணவர்கள் பல்வேறு பிரிவுகளில் தற்போது பயில்கின்றனர். இந்தியாவிலேயே இந்த பயிற்சி நிறுவனத்தில்தான் படச்சுருள்கள் கழுவுதல் பயிற்சியும், நடிப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

திரைப்படமெடுக்கும் அரங்குகளும், இந்த நிறுவனத்திலுள்ள கருவிகளும் தனிப்பட்ட தயாரிப்பாளர்களுக்கு வாடகை முறையில் அளிக்கப்படுகின்றன. வருவாய் கிடைப்பதுடன், இந்த ஏற்பாட்டின்படி அனுபவம் மிக்க தொழில் நுட்பக் கலைஞர்கள் திரைப் படத்தயாரிப்பில் எவ்வாறு செயல்படுகின்றனர் என்பதை, இங்குப் பயிலும் மாணவர்கள் நேரில் கண்டறிவதற்கும் அவர்களுடன் இணைந்து பணி செய்வதற்கும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

1986-87 ஆம் ஆண்டில் பல்வேறு இடங்களுக்கும் எளிதாக எடுத்துச் செல்லத்தக்க வீடியோ படப்பிடிப்புக் கருவியும், செய்தி சேகரிக்கும் மின் அணுக்கருவியும் ரூ. 7.05 இலட்சம் செலவில் வாங்கப்படும். இது தவிர, வண்ணச் சுருள் கழிவுக் கூடத்திற்கு சீர்வளி வசதி செய்தல், மேல்நிலைத் தொட்டி கட்டுதல், திறந்த வெளி கழிவு நீர் வாய்க்கால் வசதி மற்றும் சைக்கிள் நிறுத்தும் இடம் கட்டுதல் போன்ற வசதிகள் 1987-88 ஆம் ஆண்டு ரூ. 3.51 இலட்சம் செலவில் செய்யப்படவுள்ளன.

**தமிழ்நாடு திரைப்படப் பிரிவு :**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு அரசின் ஆக்கப்பணிகளையும் அரசின் சார்பில் மக்கள் பங்கு ஏற்கும் எல்லா பொது நிகழ்ச்சிகளையும் செய்திப்படங்களாக எடுத்து, மத்திய அரசு திரைப்பட வெளியீட்டுப் பிரிவின் மூலம் இம்மாநிலத்தில் உள்ள திரையரங்குகளில் வெளியிடுகிறது. இதுவரை 316 செய்திப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 1986 நவம்பர் மாதத்தில் இருந்து செய்திப் படங்கள் வண்ணத்தில் எடுக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

கருத்து விளக்கப்படங்களையும் 16 மி.மீ. அளவில் சுருக்கி அரசின் மாவட்டச் செய்தி விளம்பரப் பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு பொது மக்களுக்கு கிராமப் புறங்களில் காட்டப்படுகின்றன.



1987 ஏப்ரல் 30]

1986-87-ல் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு கீழ்க்கண்ட கருத்து விளக்கப் படங்களைத் தயாரித்துள்ளது :—

1. பட்டு வளர்ப்பு.
2. கோதுமையும் அதன் உபயோகமும்.
3. சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு.
4. "33 வயதினிலே".

மேலும் கீழ்க்கண்ட படங்கள் தயாரிப்பில் உள்ளன :—

1. சுற்றுலா விளக்கப்படம்.
2. வனவிலங்குப் பாதுகாப்பு.
3. குடிமை உணர்வூட்டும் படங்கள்.
4. நிதி நிறுவனங்கள்.

குடும்பநலத்துறை தயாரித்த 10 துண்டுத் திரைப்படங்களில் 7 துண்டுத் திரைப்படங்கள் தமிழ்நாட்டிலுள்ள திரையரங்குகள் மற்றும் தொலைக்காட்சி மூலமாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வரசு, சமுதாயத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல்வேறு சிறப்பான சமூக, பொருளாதாரத் திட்டங்களைக் கடந்த பத்தாண்டுகளில் நிறைவேற்றியுள்ளது. இந்த மகத்தான பத்தாண்டு சாதனைகளை மக்களுக்கு ஒருங்கிணைத்து திரைப்படத்தின் மூலம் எடுத்துக் கூறும் மகத்தான கருத்துப் படம் ஒன்று வண்ணத்தில் தயாரிக்கலாம் என்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மேலும் இத்திரைப்படப் பிரிவில் 32.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு வீடியோ தயாரிப்புப் பிரிவு ஏற்படுத்த முடிவு செய்யப் பட்டுள்ளது. இதில் 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 14 இலட்சம் செலவில் இப்பிரிவிற்குத் தேவையான கருவிகள் வாங்குவதற்கும் ரூ. 7 இலட்சத்தில் கட்டிடம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 30

**திரைப்படங்களுக்கு உதவித் தொகை, சிறந்த திரைப்படங்கள் மற்றும் கலைஞர்களுக்குப் பரிசுகள் :**

தேசிய அளவில் மக்களின் நலத்தை அடிப்படையாகக்
கொண்டு, சமூக, பொருளாதார நிலைகளை முன்னேற்ற உதவும்
கருத்துகளான மதுவிலக்கு, சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு,
குடும்பநலம், நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவற்றை மையக் கருத்
தாக வைத்துச் சிறந்த திரைப்படம் தயாரிப்பவர்களுக்கு உதவு
வதற்கான "நிதி உதவித் திட்டம்" 1976-77 ஆம் ஆண்டு முதல்
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு
ஆண்டும் ஒரு சிறந்த படத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம்,
தேர்வு செய்யப்பட்ட 5 படங்களுக்கு அரசு உதவித் தொகை
அளித்து வருகிறது. இதற்கான உயர்நிலைக் குழு ஒன்று
அரசால் அமைக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் சிறந்த படங்கள்
தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

உயர்ந்த கலைத்திறனும், சிறந்த தொழில் நுணுக்கமும்
கொண்ட தமிழ்ப்படங்கள் தயாரிப்பதை ஊக்குவிப்பதற்காக
ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டம் 1977-78 ஆம் நிதி
ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்
சிறந்த திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லு
நர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்துடன், தமிழ்
நாட்டில் திரைப்பட வளர்ச்சிக்கு சிறந்த முறையில் பணிபுரிந்த
சிறந்த தயாரிப்பாளர், இயக்குநர், நடிகர்கள் மற்றும் தொழில்
நுட்ப வல்லுநர்களுக்கு, "இராஜா சாண்டோ நினைவுப் பரிசு"
ரூ. 25,000 ரொக்கமாகவும் மற்றும் ரூபாய் 850 மதிக்கத்தக்க
தங்கமுலாம் பூசிய வெள்ளிப் பதக்கமும் ஒவ்வொருவருக்கும்
பரிசுகளாக வழங்கப்படுகின்றன.

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் நினைவாக குழந்தை
கள் திரைப்படங்களில் சிறந்த படங்கள் மூன்றினுக்குப் பரிசுகள்
வழங்கப்படுகின்றன. முதல் பரிசாக ரூ. 10,000 ரொக்கமும்
ரூபாய் 5,000 மதிப்புள்ள தங்கப் பதக்கமும் மற்றும் 2 சிறந்த
குழந்தைகள் திரைப்படம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 மதிப்
புள்ள தங்கப் பதக்கங்களும் வழங்கப்படுகின்றன. இந்தியக்
குழந்தைகள் திரைப்படச் சங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள
படங்களும் இப்பரிசைப் பெறத்தகுதி உடையவையாகும்.



1987 ஏப்ரல் 30]

**தமிழ்நாடு திரையரங்குக் கழகம் :**

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப்
பட்ட அரசுத் தனி நிறுவனமாக 1972 ஆம் ஆண்டு தொடங்கப்
பட்டது. தமிழ்நாட்டில் பல பகுதி நிலைத் திரையரங்குகளைக்
கட்டவும், அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும்,
புதிதாக நிலையான திரையரங்குகள், டூரிங் திரையரங்குகள்,
திறந்தவெளித் திரையரங்குகள் கட்டவும், திரைப்படக் கருவிகள்
வாங்கவும் நிதி உதவி அளிப்பது இக்கழகத்தின் முக்கிய நோக்க
மாகும். பகுதி நிலைத் திரையரங்குகள் கட்டவும், நிலையான
திரையரங்குகளாக மாற்றவும் இக்கழகத்தினால் இதுவரை கடன்
அனுமதிக்கப்பட்டுள்ளது. இக்கழகத்திற்கு அரசு முழுவதுமாக
செலுத்திய மூலதனம் ரூ. 35 இலட்சம் ஆகும். மேலும் ரூ. 15
இலட்சமும் நீண்ட காலக் கடனாக அரசு அளித்துள்ளது
(31—1—1987 வரை ரூ. 11.50 இலட்சம் அரசுக்கு திரும்பச்
செலுத்தப்பட்டுள்ளது).

இக்கழகம் இதுவரை 80 நபர்களுக்கு ரூ. 93.03 இலட்சம்
கடனாக வழங்கியுள்ளது. இதுவரை 78 பகுதிநிலைத் திரை
யரங்குகள், படங்களைத் திரையிடத் தொடங்கியுள்ளன.

இக்கழகம் ஏற்காடு நகரியத்திற்கு ஒரு பகுதிநிலைத் திரை
யரங்கு கட்டுவதற்காக ரூ. 2.80 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.
இந்நகரியம் 15—2—1987 வரை ரூ. 0.92 இலட்சம் வட்டி உட்பட
ரூ. 2.64 இலட்சம் தொகையைத் திருப்பிச் செலுத்தியுள்ளது.
1—3—1986 அன்று மதிப்பிடப்பட்ட கடன்தொகை நிலுவையை,
கடன்தாரர்கள் 17 சதவிகிதம் சாதாரண வட்டியுடன், கட்ட
வேண்டிய நாளில் இருந்து 9 மாத காலத்திற்குள் திருப்பிச்
செலுத்தலாம் என்று அரசு உத்திரவிட்டுள்ளது. இதுவரை
கடன் நிலுவைதாரர்களிடமிருந்து ரூ. 8.04 இலட்சம் வசூல்
செய்யப்பட்டுள்ளது. இதில் கடன் தொகையை முழுமையாகத்
திருப்பிச் செலுத்திய மூன்று கடன்தாரர்களும் அடங்குவர்.

கடன் பெற்ற 80 பேரில், 39 பேர் தங்கள் கடன் தொகைகளை
முழுமையாகச் செலுத்திவிட்டனர். தமிழ்நாட்டில் பகுதி
நிலைத் திரையரங்கு கட்டும் திட்டத்திற்கு தனியார் ரூ. 2 கோடி

வரை முதலீடு செய்ய முன்வந்துள்ளனர். மேலும், இதன்மூலம் 1,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டமும், 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) விதிகளும் :**

தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலோருக்கு, குறிப்பாக மத்தியதர மக்களுக்குப் பொழுதுபோக்கு ஆதாரமாகத் திரைப்படத் தொழில் அமைவதுடன், ஊராட்சிகள், நகராட்சிகள், அரசாங்கம் ஆகியவற்றிற்கு வருவாய் தரும் ஆதாரமாகவும் உள்ளது. திரையரங்குகளை அதிகரிக்கவும், திரைப்படத் தொழிலின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கவும் விதிகளும் விதிமுறைகளும் எளிமையாக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இம்மாநிலத்தில் உள்ள முக்கிய நகரங்களிலும், மாநகரங்களிலும் நல்ல வசதியான திரையரங்குகள் பெருமளவில் கட்டப்பட்டுள்ளன. திரைப்படம் பார்க்கும் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், டூரிங் திரையரங்குகளில் அமைந்துள்ள எளிதில் தீப்பிடிக்கும் கூரைகளை நீக்கி தீப்பிடிக்காத மேம்பகுதிகளை அமைத்திடவும், பிற பாதுகாப்பு முறைகளை பின்பற்றிடவும் ஏற்றவகையில், டூரிங் திரையரங்குகள் கட்டுவதற்கான முன்நிபந்தனைகள் வகுக்கப்பட்டுள்ளன.

1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டத்தின்படி, தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் பிரிவு 5-எ திருத்தப்பட்டுள்ளது. அதன்மூலம், திரையரங்குகள் கட்டுவதற்கு தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டம் பொருந்துதல் நீக்கப்பட்டது. இவ்வாறு திருத்தப்பட்ட பகுதி 5-எ பிரிவின்படி, திரையரங்குகள் கட்டுவதற்கு சென்னைப் பெருநகர் திட்ட வளர்ச்சிக் குழுமம், நகர் ஊரமைப்புத் துறை ஆகியவற்றிடமிருந்து வரைபடம் ஒப்புதல் பெற வேண்டியதில்லை.



இம்மாநிலத்தின் தமிழ் பேசும் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இம்மாநிலத்தில் உள்ள திரைப்பட அரங்குகள் ஆண்டில் 9 மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்காவது தமிழ்த் திரைப்படங்களைத் திரையிடவேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உரிமம் பெற்ற திரையரங்குதாரர்கள் தங்கள் அரங்குகளில் ஒரு வருடத்திற்கு 12 வாரங்களுக்குக் குறையாமல் தமிழ்த் திரைப்படங்களைத் திரையிடவேண்டும் என்று அரசு பணித்துள்ளது. ஆபாசத் திரைப்பட விளம்பரங்கள், சுவரொட்டிகள், பேனர்கள் முதலியவற்றைத் தடுக்கும் பொருட்டு திரைப்பட விளம்பரச் சாதனங்களைத் தணிக்கை செய்ய சட்டம் இயற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டத்திற்கு விரிவான திருத்தம் கொண்டுவர சட்ட முன்வடிவு ஒன்றை நிறைவேற்ற அரசு கருதியுள்ளது. இச்சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டால் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் உள்ள விதிகளும், விதிமுறைகளும் மேலும் எளிமையாக்கப்படும்.

திரைப்பட அரங்குகளின் உரிமைதாரர்கள், திரையரங்குகளில் படம் பார்ப்பவர்களைக் காப்புறுதி செய்வதற்கான திட்டம் அரசால் ஏற்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு, சீர்வளி வசதியுள்ள திரையரங்குகளில் திடீர் சோதனை நடத்தி அங்கு சீர்வளி வசதி உரிய முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து அவ்வாறு இல்லையெனில், அத்தகைய திரையரங்குகளின் உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குபடுத்தல்) விதிகள் 1957-ன் படி கோரப்பட்டுள்ள 'சி' உரிமம் பெற்ற 3 மாத இடைவெளியுடன் ஒரு நபர் ஒரே இடத்தில் எத்தனைமுறை வேண்டுமானாலும் டூரிங் திரையரங்குகள் கட்டக் கோரினால், அதற்கு உரிமம் வழங்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது

[1987 ஏப்ரல் 30

**கிராம மக்களுக்காக திரைப்படம் திரையிடும் டூரிங் சினிமா அரங்குதாரர்கள் இவ்வாணையின் மூலம் வெகுவாகப் பயன் அடைகிறார்கள்.**

சினிமாவை ஒரு தொழிலாக நிர்ணயிக்கலாம் என்ற கருத்து வும் அரசின் சீரிய பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாட்டில் 31—12—1985 வரை உள்ள கணக்கின்படி 2,243 திரையரங்குகள்தான் செயல்பட்டு வந்தன. இதில் 81 திரை யரங்குகள் சீர்வளி வசதி பெற்றவை. ஆனால், 30—11—1986 வரையிலான புள்ளிவிவரப்படி தமிழ்நாட்டில் 2,287 அரங்குகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 119 திரையரங்குகள் சீர்வளி வசதி பெற்றவை.

**தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தொலைக்காட்சியில் வீடியோ ரிக்கார்டர்கள் மூலம் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப் படுத்தல்) சட்டம்:**

வீடியோ ஒழுங்கீனமாகப் பயன்படுத்துவதைத் தடுக்க தமிழக அரசு, தமிழ்நாடு வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) விதி 1984-ஐ இயற்றியது. உரிமம் இல்லாமல் வீடியோ நூலகம் நடத்துபவர்களுக்கு 4-வது பிரிவின்படி கடுமையான தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. சட்டத்தையும் அதன் கீழ் உள்ள விதிகளையும் முழுமையாகச் செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னை காவல் துறை ஆணைய ருக்கும் தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. 30—11—1986 வரை உள்ள கணக்கின்படி ஒரு வீடியோ திரையரங்கமும், 787 வீடியோ நூலகங்களும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.



1987 ஏப்ரல் 30]

## இணைப்பு

(38 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### சுற்றுலாத் துறை—கொள்கை விளக்கக் குறிப்பு.

சுற்றுலா இன்று அனைத்துலக அளவிலான முக்கியத் தொழி லாக வளர்ந்து எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்து வருகிறது. நமக்கு தேவைப்படுகிற அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவ தோடு, பொருளாதார வளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கிறது. மேலும் பல்வேறு நாட்டு மக்களிடையே நட்புறவையும், நேச மனப்பான் மையையும் வளர்த்து அவர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள சுற்றுலாத் தொழில் வாய்ப்பளிக்கிறது. இது உலக அமைதிக்கும், ஒற்றுமைக்கும் பெரிதும் உதவுகிறது.

சர்வதேச சுற்றுலாவினால் ஏற்படும் நன்மைகளைப்போலவே உள்நாட்டு சுற்றுலா வளர்ச்சி பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக் கும், வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்தவும், நாட்டு ஒற்று மைக்கும், மக்களிடையே ஒருமைப்பாட்டை வளர்க்கவும் உறுதுணையாக விளங்குகிறது.

நமது நாடு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் பத்து இலட்சம் எண்ணிக்கையினை எட்டியுள்ளது. 1990 ஆம் ஆண்டில் 25 இலட்சம் இலக்கினை அடைய நம் நாடு முனைந் துள்ளது.

கடந்த 1986 ஆம் ஆண்டு 10,80,050 அயல்நாட்டு சுற்று லாப் பயணிகள் இந்தியாவிற்கு வந்துள்ளனர். முந்தைய ஆண்டைவிட 29.1 சதவிகிதம் கூடுதலாகும். இது முன் எப்போதும் இல்லாத அளவு 1986 ஆம் ஆண்டில் அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகிறது. இதே ஆண்டில் தமிழகத்திற்கு 2,98,290 அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாக கணக்கிடப்பட்டிருக் கிறது. அதற்கு முந்தைய ஆண்டைவிட இது 21.8 சதவிகிதம் அதிகமாகும். 1985 ஆம் ஆண்டைவிட 1986 ஆம் ஆண்டு தமிழகம் வந்த அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தாலும் இந்தியாவிற்கு வந்த அயல்நாட்டுப் பயணி களில் 27.6 சதவிகிதமே தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

1985 ஆம் ஆண்டு தமிழகம் வந்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 433.6 இலட்சம். 1986 ஆம் ஆண்டு 479.6 இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழகம் வந்துள்ளனர் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இது முந்தைய ஆண்டை விட 10.6 சதவிகிதம் அதிகமாகும்.

கல்கத்தாவிலுள்ள இந்திய புள்ளிவிவர நிலையம் நடத்திய புள்ளிவிவர ஆய்வின்படி அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் விரும்பிப் பார்க்கும் இடங்களாக இந்தியாவில் 20 இடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள சென்னை, திருச்சிராப்பள்ளி, இராமேசுவரம், மதுரை ஆகிய நான்கு மையங்கள் இதில் இடம் பெற்றுள்ளன என்பது வேறு எந்த மாநிலத்திற்கும் இல்லாத தனிச் சிறப்பாகும். அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய சிறப்புமிக்க சுற்றுலா வளங்கள் தமிழகத்தில் நிறைய உண்டு என்பதையே இது காட்டுகிறது.

இந்தியாவிற்கு வரும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1990 ஆம் ஆண்டில் 25 இலட்சம் அளவை எட்ட வேண்டும் என்ற நமது குறிக்கோளை அடைய வேண்டுமானால் தங்கும் வசதி, போக்குவரத்து போன்ற துறைகளில் உள்ள பற்றாக்குறை, போதிய வசதியின்மை போன்ற பிரச்சினைகளை நாம் தீர்த்தாக வேண்டும். இதற்காக இந்திய அரசு மாநில அரசுகள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பதால் மாநிலங்களும் பயனடைகின்றன. எனவே, இந்த மிகப் பெரிய பிரச்சினையை தீர்ப்பதில் மாநில அரசுகளுக்கும் சமமான பங்குண்டு.

தமிழகம் முழுவதும் சுற்றுலா முக்கியத்துவம் பெற்ற இடங்கள் பரவிக்கிடக்கின்றன. இங்கே பழமைமிக்க கோயில்கள், சரித்திரச் சின்னங்கள், கடற்கரைகள், நீர்வீழ்ச்சிகள், குறிஞ்சி நகர்கள் என எல்லாவகையான சுற்றுலாச் சிறப்புமிக்க இடங்களும் உள்ளன. கைத்தறித்துணிகள், கைவினைப் பொருட்கள், பாரம்பரியம் மிக்க பரத நாட்டியக்கலை, கர்நாடக இசை மற்றும் சிராமியக் கலை ஆகியவற்றிலும் தமிழகம் சிறப்புற்று விளங்குகிறது. பார் புகழும் பண்பாடும், பாரம்பரியமும் நமக்குண்டு.



அதனைக் கட்டிக்காத்து காப்பாற்றி வருவதில் பெருமை அடைகிறோம். இவ்வளவு சிறப்புகள் நாம் பெற்றிருந்தாலும், சுற்றுலாவின் முழுப்பலனையும் அடைய வேண்டுமானால் நடைமுறைக்கேற்ற வகையில் அறிவியல் அடிப்படையில் சுற்றுலா வளர்ச்சிப்பணிகளை நாம் மேற்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. தமிழக அரசின் சுற்றுலா மேம்பாட்டுக் கொள்கை இந்த அடிப்படையில் திட்டப்பட்டுள்ளது.

சுற்றுலாத் தொழில் :

நமது நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கு அதிக அளவில் வாய்ப்பு இருப்பதால் சுற்றுலாவிற்கு தொழில் ரீதியான அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான அணுகு முறை விளக்கக் குறிப்பில் பரிந்துரை செய்யப்பட்டது. சுற்றுலா வளர்ச்சிக்குத் தனியார் துறை முதலீடு ஊக்குவிக்கப் படவேண்டும்; பொதுத் துறை முதலீடு சுற்றுலா வளர்ச்சிக்கு ஏதுவான அடிப்படை வசதிகள் வளர்ச்சிக்காக மட்டுமே பயன் படவேண்டும் என்பதற்காக அவ்வாறு பரிந்துரை செய்யப் பட்டது.

இந்தப் பரிந்துரையை மனதில் கொண்டு தற்போது பிற தொழில்களுக்குக் கிடைக்கப்பெறும் சலுகைகள் சுற்றுலா வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்படும் திட்ட முயற்சிகளுக்கும் வழங்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழக அரசு சுற்றுலாவினை ஒரு "தொழிலாக" அறிவித்து ஆணை பிறப்பித்துள்ளது. இந்த நடவடிக்கையால் சுற்றுலா வளர்ச்சிக்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதோடு, அப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படும் பகுதியில் உள்ள மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், குறிப்பாக நலிவுற்ற மக்களின் வாழ்வு வளம் பெறவும் வழி ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் அவை பொது நோக்க திட்டமாக இருந்தாலும் சரி அல்லது சுற்றுலாத் தொழிலில் ஒரு குறிப்பிட்ட துறையின் வளர்ச்சிக்கான திட்டமாக இருந்தாலும் சரி அவற்றை பரிசீலனை செய்து அவற்றிற்கான திட்ட அறிக்கை தயாரித்தல், முதலீட்டில் ஊக்க உதவித்தொகை, பயிற்சித் திட்ட உதவி, கடன் மற்றும் வட்டியில் சலுகை, வரிகள், தண்ணீர்,

[1987 ஏப்ரல் 30

மின்சாரம் வழங்குவதில் சலுகை, நிலம் ஒதுக்குவதில் உதவி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்த கூட்டுத் திட்டங்கள் போன்ற பல்வேறு கூறுகளை ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக தமிழகம் வரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்து வந்துள்ளது. எனவே, புதிய சுற்றுலா சிறப்பிடங்களை உண்டாக்குவது, இருப்பவற்றை பேணிக் காப்பது என்ற நோக்கத்தோடு மட்டுமல்லாமல், நமது சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் முனைப்பான கவனம் செலுத்த வேண்டும். இந்த நோக்கத்துடன் வளர்ச்சித் திட்டங்கள் யாவும் ஒருங்கிணைந்த முறையில் வகுக்கப்பட்டு சுற்றுலாத் தொழில் மாநிலம் முழுவதும் ஒரே சீராக வளர்ச்சி அடைய வழிவகை செய்து வருகிறோம்.

திட்டப் பணிகளுக்கான அணுகுமுறை :

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளை நினைவிற் கொண்டே சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன:—

1. சுற்றுப்புறச் சூழலுக்கு ஊறு நேராதவண்ணம் சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளை அதிகப்படுத்துதல்.

2. மக்களிடையே சுற்றுலா உணர்ச்சியை உண்டாக்கும் பொருட்டு உள்ளூர் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மேம்பாடு செய்தல்.

3. தனியார் துறை முதலீடு செய்ய முன்வராத இடங்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் முதலீடு செய்து மேம்பாடு செய்தல்.

4. தங்குமிட வசதி, போக்குவரத்து போன்ற எல்லா துறைகளிலும் குறுகிய கால மற்றும் நீண்டகாலத் தேவைகளை முன்கூட்டியே கணித்து அவற்றை அடைய தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.



1987 ஏப்ரல் 30]

5. அடிப்படை வசதிகளை விரைவில் பெருக்க வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களை தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளில் முதலீடு செய்ய அழைத்தல்.

6. சுற்றுலா வளர்ச்சிக்கு அறிவியல் அணுகுமுறையைப் பின்பற்றுதல்.

7. அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவர சுற்றுலா விளம்பரம் மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் நவீன முறைகளை கையாளுதல்.

8. ஒவ்வொரு முக்கிய சுற்றுலா மையத்திற்கும் புள்ளி விவரங்கள் சேகரித்து அதன் அடிப்படையில் ஒருங்கிணைந்த பெருந்திட்டங்கள் தயாரித்தல்.

சுற்றுலாவும் திட்ட ஒதுக்கீடும் :

இந்தியாவைப் போன்ற பெரிய நாட்டில் சுற்றுலா வளர்ச்சி என்பது ஒரு எளிதான காரியமல்ல. இருப்பினும் எந்த ஒரு பகுதியில் நிறைவேற்றப்படும் பணியாக இருந்தாலும் அந்த சுற்றுலா வளர்ச்சிப் பணியானது நாட்டின் வளர்ச்சிப் பணியில் ஒரு அங்கமாகும். நிதிப் பற்றாக்குறை காரணமாக தேவைக்கேற்ற முறையில் பெரிய அளவில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மாநில அரசுகளால் நிறைவேற்ற முடிவதில்லை. எனவேதான் சுற்றுலா மேம்பாட்டு வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்த தேவையான நிதி உதவி வழங்குமாறு மைய அரசினை கேட்டு வருகிறோம்.

மாமல்லபுரம், உதகமண்டலம், இராமேசுவரம், கன்னியாகுமரி, பிச்சாவரம் போன்ற இடங்களின் சுற்றுலா வளர்ச்சிக்காக படிப்படியாக நிறைவேற்றக்கூடிய வகையில் ஒருங்கிணைந்த நீண்டகால பெருந்திட்டங்களைத் தீட்டியுள்ளோம்.

தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை இன்னும் வேகமாக நிறைவேற்றவும் அதற்காக இந்தத் துறையில் ஏற்பட்டுள்ள அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றங்களை பயன்படுத்திக்

[1987 ஏப்ரல் 30

கொள்ளவும் நமது சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்க அயல்நாட்டில் வாழும் இந்தியர்களை அழைப்பது என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

முதற்கட்டமாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான மாமல்லபுரம் கடற்கரை வளாகம் அயல் நாட்டில் வாழும் இந்தியர்களின் பங்கேற்புடன் ஒரு கூட்டு நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது. சர்வதேச அளவிலான கடற்கரை வளாக அந்தஸ்திற்கு அதன் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. கிட விடந்தையில் மற்றொரு புதிய கடற்கரை வளாகமும், முட்டுக காட்டில் பொழுதுபோக்கு வளாகமும் கூட்டு முயற்சியில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. வள்ளுவர் கோட்டத்தின் அருகில் சர்வதேச சுற்றுலா மையம் அமைத்தல், வேப்பேரியில், முன்பு மிருகக்காட்சிசாலை இருந்த இடத்தைச் சேர்த்து கண்ணப்பர் திடல் அருகில் ஓட்டல் மற்றும் பொழுதுபோக்கு வளாகம் அமைத்தல் ஆகியவை அயல்நாட்டில் வாழும் இந்தியர்களின் பங்கேற்புடன் அரசு மேற்கொள்ளப்பட இருக்கும் கூட்டு திட்டங்களாகும். இந்தத் திட்டங்களுக்கு முதற்கட்டமாக ஆகும் செலவு சுமார் ரூ. 40.00 கோடி ஆகும். இந்தத் திட்டங்களால் வேலை வாய்ப்பு அதிகரிக்கப்படுவதோடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழகம் வர வாய்ப்பு ஏற்படும். மேலும் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும். சென்னை வாழ் மக்கள் இந்த புதிய திட்டங்களால் பெரிதும் பயன் அடைவர். இந்தத் திட்டங்களின் பயனாக தங்கும் இட வசதிகள் அதிகரிப்பதனால் "சார்ட்டர்" என்னும் சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு வரும் தனி விமானங்கள் சென்னைக்கு வருவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

தமிழக அரசு சுற்றுலாத் துறை இந்திய அரசு சுற்றுலாத் துறையின் நிதி உதவியுடன் ரூ. 1.80 கோடி மதிப்புள்ள பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. காஞ்சிபுரத்தில் சுற்றுலா இல்லம் (யாத்ரி நிவாஸ்) (ரூ. 40.00 இலட்சம்), மற்றும் பல்லவ புரம் சுற்றுலா வளாகம் (ரூ. 20.00 இலட்சம்), மாமல்லபுரத்தில் நிலச் சீரமைப்பு மற்றும் அழகுபடுத்துதல் (ரூ. 10.00 இலட்சம்), முட்டுக்காட்டில் புனல் விளையாட்டு வசதிகள் செய்தல் (ரூ. 7.00 இலட்சம்), திருக்கழுக்குன்றத்திலும், திருத்தணியிலும் சாலை



1987 ஏப்ரல் 30]

யோர வசதிகள் செய்ய (ஒவ்வொரு இடத்திற்கும் ரூ. 5.00
இலட்சம்), பழவேற்காடு ஏரியில்விட உல்லாச படகுகள்
வாங்குதல் (ரூ. 3.00 இலட்சம்), சிதம்பரத்தில் சுற்றுலாப் பயணி
களுக்கு வசதிகள் செய்தல் (ரூ. 12.00 இலட்சம்), பிச்சாவரத்தில்
சிற்றுண்டி விடுதி கட்டுதல் (ரூ. 8.00 இலட்சம்), கன்னியாகுமரி
யில் கடற்கரைக் குடில்கள் கட்டுதல் (ரூ. 18.00 இலட்சம்),
குற்றாலத்தில் சிற்றுண்டி விடுதி கட்டுதல் (ரூ. 7.00 இலட்சம்),
திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் ஒளி விளக்குகள்
அமைத்தல் (ரூ. 6.00 இலட்சம்), இராமேசுவரத்தில் சுற்றுலா
வரவேற்பு மையம் அமைத்தல் (ரூ. 20.00 இலட்சம்), உதக
மண்டலம் ஏரியில் விட உல்லாசப் படகுகள் வாங்குதல் (ரூ. 5.00
இலட்சம்), முதுமலை வனவிலங்கு உய்விடத்தை சுற்றிப் பார்க்க
இரண்டு சிறு பேருந்துகள் வாங்குதல் (ரூ. 3.00 இலட்சம்), மலை
யேறும் (Trekking equipments) பயிற்சிக்குத் தேவையான பொருள்
கள் வாங்குதல் (ரூ. 5.00 இலட்சம்) ஆகியவை இதில் அடங்கும்.

இவையல்லாமல் தமிழக அரசு மாநில திட்டப் பணிகள்,
**மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குமலை மேம்பாட்டுத்**
திட்டம் ஆகியவற்றின்கீழ் மேலும் பல பணிகளை ரூ. 2.17
கோடி செலவில் செயல்படுத்தி வருகிறது. மாமல்லபுரத்தில்
திறந்தவெளி அருங்காட்சியகம் அமைத்தல் (ரூ. 27.00 இலட்சம்),
மாமல்லபுரத்தில் சுற்றுலா அலுவலகம் கட்டுதல் (ரூ. 4.00
இலட்சம்), முட்டுக்காடு மேம்பாட்டுப் பணிகள் (ரூ. 5.00 இலட்
சம்), எம். ஜி. ஆர். திட்டு மற்றும் பிச்சாவரம் மேம்பாட்டுப்
பணிகள் (ரூ. 15.00 இலட்சம்). கன்னியாகுமரியில் ஓய்வு விடுதி
கட்டுதல் (ரூ. 13.00 இலட்சம்), திருச்செந்தூரில் துயில் கூடம்
கட்டுதல் (ரூ. 25.00 இலட்சம்). திருச்சிராப்பள்ளியில் இளைஞர்
விடுதி கட்டுதல் (ரூ. 10.00 இலட்சம்), இராமேசுவரத்தில் சுற்று
லாப் பயணிகளுக்கு வசதிகள் செய்தல் (ரூ. 22.00 இலட்சம்),
மண்டபத்தில் தங்கும் இட வசதிகளைப் பெருக்குதல் (ரூ. 40.00
இலட்சம்), கொல்லிமலையில் இளைஞர் விடுதி கட்டுதல் (ரூ. 5.00
இலட்சம்), ஒகேனக்கல்லில் தொங்கு பாலம் அமைத்தல்
(ரூ. 10.00 இலட்சம்), பூம்புகாரில் சுற்றுலாப் பயணிகளுக்கு
வசதிகள் செய்தல் (ரூ. 6.00 இலட்சம்), கொடைக்கானல் அருகில்

[1987 ஏப்ரல் 30

"சில்வர் கேஸ்கேடு" நீர்வீழ்ச்சி அருகில் வசதிகள் செய்தல்
(ரூ. 3.00 இலட்சம்), உதகமண்டத்தில் சுற்றுலாப் பயணி
களுக்கு வசதிகள் செய்தல் (ரூ. 10.00 இலட்சம்), நீலகிரி மலைத்
தொடரில் காட்சி முனைகளில் வசதிகள் செய்தல் (ரூ. 10.00
இலட்சம்), கோத்தகிரியிலும் குன்னூரிலும் இளைஞர் விடுதி
கட்டுதல் (ஒவ்வொன்றிற்கும் ரூ. 6.00 இலட்சம்) ஆகியவை இதில்
அடங்கும்.

ஆக ரூ. 4.00 கோடி மதிப்புள்ள சுற்றுலா வளர்ச்சித் திட்டங்
கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பல திட்டங்
கள் பல்வேறு நிலைகளில் இருக்கின்றன. சில திட்டங்கள்
நிறைவு பெறும் நிலையில் உள்ளன. மேலும், மாவட்ட உலாத்
தலங்கள் மேம்பாட்டிற்கு சுமார் ரூ. 50.00 இலட்சம் செலவிடப்
பட்டு வருகிறது.

**மாவட்ட உலாத்தலங்கள்:**

உள்ளூர் மக்கள் சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர
வேண்டும் என்ற நோக்கத்தோடு "மாவட்ட உலாத்தலம்"
திட்டத்தை உருவாக்கிய சிறப்பு தமிழகத்தைச் சாரும். அருகாமை
யில் உள்ள மக்களின் ஓய்விற்கும், பொழுதுபோக்கிற்கும் தேவை
யான வசதிகள் இந்த இடங்களில் செய்யப்பட்டு வருகின்றன.
இந்தத் திட்டத்திற்கான செலவினை சுற்றுலாத் துறை, அரசு
போக்குவரத்துக் கழகங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவைகள்
ஏற்கின்றன. இதுவரையில் அரசு போக்குவரத்துக்
கழகங்கள் இத் திட்டத்திற்கு ரூ. 15.50 இலட்சம் அளித்துள்ளன.
சித்தன்னவாசல், பவானி கூடுதுறை, கங்கைகொண்ட சோழ
புரம், திருமூர்த்திமலை, பாபநாசம், கொல்லிமலை, ஏலகிரி
மலை, கல்லணை, பிளவக்கல், கல்ராயன்மலை, பிரான்மலை,
தீர்த்தமலை, திருமலைக்கேணி மற்றும் கும்பக்கரை நீர்வீழ்ச்சி
ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக ரூ. 34.00 இலட்சம் சுற்றுலாத்
துறையினால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சில உலாத்தலங்
களின் மேம்பாட்டிற்காக 1987-88 ஆம் ஆண்டு ரூ. 5,00 இலட்சம்
ஒதுக்கப்பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 30]

முதல் கட்டமாக நடப்பு நிதி ஆண்டில் ரூ. 180.00 இலட்சம்
மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க
இந்திய அரசு சுற்றுலாத் துறை ஒப்புதல் அளித்துள்ளது. நாகப்
பட்டினத்தில் சுற்றுலா இல்லம் (யாத்திரி நிவாஸ்) அமைத்தல்
(ரூ. 40.00 இலட்சம்), கொடை ரோடு, மேல்மருவத்தூர், ஓசூர்,
புதுக்கோட்டை, பொள்ளாச்சி ஆகிய இடங்களில் சுற்றுலாப்
பயணிகளுக்கு சாலை ஓர வசதிகள் செய்தல் (ஒவ்வொன்றிற்கும்
ரூ. 14.00 இலட்சம்), பூம்புகாரில் சுற்றுலாப் பயணிகளுக்கு
வசதிகள் செய்தல் (ரூ. 10.00 இலட்சம்), ஒகேனக்கல்லில் சுற்று
லாப் பயணிகளுக்கு வசதிகள் செய்தல் (ரூ. 5.00 இலட்சம்),
கடலூரில் உல்லாசப் படகு வசதியுடன் சுற்றுலா வளாகம்
அமைத்தல் (ரூ. 25.00 இலட்சம்), முதுமலையில் விடுதி கட்டுதல்
(ரூ. 30.00 இலட்சம்) ஆகியவை இதில் அடங்கும். விரைவி
லேயே இத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

மேலும், கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்குமாறு
இந்திய அரசு சுற்றுலாத் துறையைக் கேட்டுள்ளோம். கன்னியா
குமரி விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் ஒளி விளக்கு
அமைத்தல் (ரூ. 16.00 இலட்சம்), ஆனைமலை, முண்டந்துறை,
வேடந்தாங்கல், களக்காடு ஆகிய வனவிலங்கு மற்றும் நீர்ப் பற
வைகள் உய்விடங்களுக்கு சிறுபேருந்துகள் வாங்குதல் (ரூ. 12.00
இலட்சம்). இராமேசுவரத்தில் ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்
பாட்டுத் திட்டம் (ரூ. 40.00 இலட்சம்), ஆனைமலை மற்றும்
குமுளியில் விடுதிகள் அமைத்தல் (ஒவ்வொன்றிற்கும் ரூ. 30.00
இலட்சம்), மதுரையில் உள்ள வண்டியூர் கண்மாயில் சுற்றுலா
கிராமம் அமைத்தல் (ரூ. 50.00 இலட்சம்), திருநெல்வேலியில்
சுற்றுலா இல்லம் கட்டுதல் (ரூ. 40.00 இலட்சம்), தூத்துக்குடி,
ஊத்து, பாலியார், உத்திரகோசமங்கை, மூன்றடைப்பு ஆகிய
இடங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு சாலை ஓர வசதிகள்
செய்தல் (ஒவ்வொன்றிற்கும் ரூ. 14.00 இலட்சம்), ஏற்காட்டில்
உல்லாசப் படகு வசதி மற்றும் சிற்றுண்டி விடுதி கட்டுதல்
(ரூ. 25.00 இலட்சம்), கன்னியாகுமரியில் சிற்றுண்டி விடுதி
அமைத்தல் (ரூ. 10.00 இலட்சம்), திருவையாறில் சுற்றுலாப்
பயணிகளுக்கு வசதிகள் செய்தல் (ரூ. 30.00 இலட்சம்). மதுரை
மீனாட்சி கோயில், திருப்பரங்குன்றம் முருகன் கோயில்,

[1987 ஏப்ரல் 30

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் ஆகிய இடங்
களில் ஒளிவிளக்கு அமைத்தல் (ரூ. 105.00 இலட்சம்), கன்னியா
குமரியில் விவேகானந்தர் பாறைக்குச் செல்ல படகு வாங்குதல்
(ரூ. 30.00 இலட்சம்), கன்னியாகுமரியில் ஆழ்கடல் சென்று வரும்
கப்பல் வாங்குதல் (ரூ. 52.00 இலட்சம்), சென்னை அண்ணா நகரில்
உள்ள பெரிய கூடலில் கிராம கலைக் கூடம் அமைத்தல் மற்றும்
மதுரை மாவட்டத்தில் கண்ணகி கோட்ட வளாகம் அமைத்தல்
ஆகியவை அடங்கும். மேற்குறிப்பிட்ட திட்டங்களின் மொத்த
மதிப்பீடு சுமார் ரூ. 6.00 கோடி ஆகும். இதுவரை மைய அரசு
அளித்துள்ள நிதி உதவிக்கு மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்ள
மாநில அரசு கடமைப்பட்டுள்ளது. அதே நேரத்தில் மைய அரசு
இனி வரும் ஆண்டுகளில் மேலே குறிப்பிட்ட திட்டங்களுக்கும்
நிச்சயம் நிதி உதவி அளிக்கும் என்று நம்புகிறது.

**சுற்றுலா புள்ளி இயல் :**

பரவலான முறையில் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சித்
திட்டங்கள் தீட்ட முற்படும்போது துல்லியமான புள்ளி விவ
ரங்கள் கிடைக்காமை பெருந்தடையாக உள்ளது. எனவே, அவ்
வப்போது மாநில சுற்றுலா அமைச்சர்கள் மாநாடுகளில், மாநில
அரசுகளின் சுற்றுலாத் துறைகளில் புள்ளி இயல் பிரிவு அமைக்க
வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டு வந்தது. இதற்கொப்ப, உள்
நாட்டு சுற்றுலாப் பயணிகள் புள்ளி விவர செயல் குழு அறிக்கை
யில் கண்டுள்ள அறிவுரைகளின் அடிப்படையில் தமிழகம் வரும்
உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் பற்றிய புள்ளி விவரங்கள்
சேகரிக்க தமிழக அரசு சுற்றுலாத் துறையில் புள்ளி இயல்
பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்துடன் இந்திய அரசு
சுற்றுலாத் துறையின் சுற்றுலா வளர்ச்சிக் கூறுகள் ஆய்வுப்
பிரிவின் Market Researche Division ஒத்துழைப்புடன் அயல் நாட்டு
சுற்றுலாப் பயணிகள் வருகை பற்றிய புள்ளி விவரங்களும்
சேகரிக்கப்படுகின்றன. 'தமிழகத்தில் தங்கும் இடவசதிகள்
பற்றிய தகவல்கள் அடங்கிய கையேடு (Directors) ஒன்றும்,
இப்பிரிவு தயாரித்து வருகிறது. தமிழகத்தின் நகரங்கள்
மற்றும் சுற்றுலா மையங்களில் உள்ள பல்வேறு தங்குமிட
வசதிகள் பற்றிய விவரங்களை இதன் வாயிலாக தெரிந்து



1987 ஏப்ரல் 30]

கொள்ளலாம். சுற்றுலா மையங்களில் தேவையான அடிப்படை
வசதிகளை நெறிப்படுத்தித் திட்டம் இடவும் இவ்விவரங்கள்
உதவியாக இருக்கும். தற்போது தமிழ்நாட்டில் நடைபெறும்
42-வது தேசிய மாதிரி கணக்கெடுப்பின் (National Sample
Survey) வாயிலாகக் கிடைக்கும் புள்ளி விவரங்களை ஆராய்ந்து
வகைப்படுத்தியபின் அதில் கிடைக்கும் தகவல்களின் அடிப்படை
யில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளைப் பற்றிய அறிக்கை
(Report on Domestic Tourist Profile) ஒன்று தயாரிக்கப்படும்.

**சுற்றுலர்ப் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டம் :**

சுற்றுலாவும் மற்றும் பயணத் தொழிலும், அதற்குத் தேவை
யான பயிற்சியும் அனுபவமும் பெற்றவர்களாலேயே கையாளப்
படவேண்டிய அளவிற்கு உயர்ந்து உள்ளது. எனவே சுற்றுலாத்
துறையிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலும்
பணியாற்றும் அலுவலர்களுக்கு அவ்வப்போது பயிற்சி அளிக்க
வேண்டியுள்ளது. இதற்கென மாநில அரசு ரூ. 1.00 இலட்சம்
ஒதுக்கியுள்ளது. 1986 ஆம் ஆண்டு இந்திய அரசு சுற்றுலாத்
துறை தமிழக அரசு சுற்றுலாத் துறையுடன் இணைந்து இரண்டு
பயிற்சித் திட்டங்களை நடத்தியது. சுற்றுலாத் துறை
வரவேற்பாளர்கள், சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா
வளர்ச்சிக் கழக அலுவலர்கள் இந்தப் பயிற்சித் திட்டத்தில்
கலந்து கொண்டனர்.

ஓட்டல்களின் தரம் பிரித்தல்:

ஒன்று மற்றும் இரண்டு நட்சத்திர ஓட்டல்களின் தரம்
பிரித்து ஆய்வு செய்ய தமிழக அரசு அமைத்த 'தமிழ்நாடு
ஓட்டல்கள் தரம் ஆய்வு செய்யும் குழு' 1986—87 ஆம் ஆண்டி
டிலிருந்து ஓட்டல்களைப் பார்வையிட்டு, தரம் பிரிக்கும் பணி
யினை செய்து வருகிறது. ஓட்டல்கள் ஆய்வு செய்யும் பணி
பரவலாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்திய அரசு
சுற்றுலாத் துறை மாநில அரசுகளின் சுற்றுலாத் துறைகளுக்கு
வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் இப்பணி மேற்கொள்
ளப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 30

மேலும், தமிழ்நாடு சுற்றுலாத் துறை தனிப்பட்ட முறை யிலும், இந்திய அரசு சுற்றுலாத் துறையுடன் இணைந்தும் தகுதி வாய்ந்த ஓட்டல் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க நிதி நிறுவனங்களுக்கு தொடர்ந்து பரிந்துரை செய்து வருகிறது. செலவினை ஏற்கும் விருந்தினர் திட்டம் (Paying Guest Scheme)

இந்திய அரசு சுற்றுலாத் துறையின் பரிந்துரைக்கிணங்க, தங்கும் இட வசதி பற்றாக்குறை உள்ள இடங்களில் குறிப் பாக நடுத்தர சுற்றுலாப் பயணிகளின் (Budget Tourists) வசதிக்கென 'செலவினை ஏற்கும் விருந்தினர் திட்டத்தை' தமிழகத்தில் அமுலாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்தியக் குடும்பங்களோடு சேர்ந்து வாழும் அனுபவத்தை அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகள் பெறும் வாய்ப்பினை இத்திட்டத்தினால் பெறலாம். நமது கலாச்சார பாரம்பரியத்தையும் அவர்கள் நன்கு புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கும். இத்திட்டத்தை அமுல் படுத்தத் தேவையான விதிமுறைகளை வரையறுக்கக் குழு ஒன்று நியமிக்கப்பட உள்ளது.

**உணவுக் கலை நிறுவனம் (Food Craft Institute)**

கல்வித் துறையின்கீழ் இயங்கி வந்த திருச்சிராப்பள்ளியில் இருக்கும் உணவுக் கலை நிறுவனம் 1986-87 ஆம் ஆண்டிலிருந்து சுற்றுலாத் துறையின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட் டுள்ளது. இந்த நிறுவனம் உணவு பரிமாறும் தொழில்நுட்பத் துறையின்கீழ் (Catering Technology) ஐந்து வகை பிரிவுகளில் ஓராண்டு சான்றிதழ் பயிற்சியினை (One Year Certificate Course வழங்கி வருகிறது. இந்த நிறுவனத்தின் நிர்வாகக் குழு, தமிழ்நாடு அரசு மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. இந்த நிறு வனத்தினை 'உணவக நிர்வாகம், உணவுப் பரிமாறும் தொழில்நுட்பம் மற்றும் சத்துணவு நிறுவனமாக' (Institute of Hotel Management Catering Techonology and applied Nutrition உயர்த்தி மூன்றாண்டு டிப்ளமோ படிப்பிற்கு வகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் மதுரையிலும், கோயம்புத் தூரிலும் உணவுக் கலை நிறுவனங்களை துவக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 30]

மாநில அரசு அளவில் சென்னையில் உள்ள உணவக நிர் வாகம், உணவுப் பரிமாறும் தொழில் நுட்பம் மற்றும் சத்துணவு நிறுவனமும் இத்துறையின்கீழ் இயங்கி வருகிறது.

**இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணியர் விடுதிகளை ஏற்றல் :**

தமிழக அரசு சுற்றுலாத் துறை எடுத்த முடிவிற்கேற்ப தஞ்சாவூர், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வந்த பயணியர் விடுதிகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது நிர்வாகத்தின்கீழ் எடுத்துக்கொண்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் ஓட்டல்களோடு இவை இணைக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவை யான சேவைகளைச் செய்து வரும்.

**இளைஞர் சுற்றுலா :**

முக்கிய சுற்றுலா மையங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக் கழகம் அமைத்துள்ள இளைஞர் விடுதிகள் இளைஞர்களுக் கும், மாணவர் குழுக்களுக்கும் குறைந்த வாடகையில் தங்கும் இட வசதிகளை அளித்து வருகிறது. ஒகனேக்கல், முதுமலை, கன்னியாகுமரி, மண்டபம், இராமேசுவரம், பிச்சாவரம், உதகமண்டலம், ஏற்காடு, கொடைக்கானல், மாமல்ல புரம் ஆகிய இடங்களில் உள்ள இளைஞர் விடுதிகள் இளை ஞர்கள் மற்றும் மாணவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற் றுள்ளது. கோத்தகிரி, ஏலகிரி, குன்னூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் விரைவிலேயே மேலும் இளைஞர் விடுதிகள் திறக்கப்பட உள்ளன. கொல்லிமலையிலும், கல்ராயன் மலை யிலும் இளைஞர் விடுதிகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அதிக இடவசதி அளிக்கும் வகையில் உதகமண்டலத்தில் உள்ள இளைஞர் விடுதி 1987-88 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்படும்.

**புனல் விளையாட்டுகள் :**

புனல் விளையாட்டுகளுக்கு ஏற்ற வகையில் தமிழகம் நீண்ட கடற்கரை, உப்பங்கழிகள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. படகு விடுதல், கட்டுமரம் விடு தல், ஓடங்கள் விடுதல் காற்றுந்து பாய்மர விளையாட்டு, நீர்ச்சறுக்கு விளையாட்டு ஆகியவை அனைவரும் விரும்பும்

புனல் விளையாட்டுகளில் முக்கியமானவையாகும். உதக
மண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, பழவேற்காடு, ஏலகிரி
ஆகிய இடங்களில் உள்ள ஏரிகளில் உல்லாசப் படகுகள் விட
வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பிச்சாவரம், கடலூர், முட்டுக்
காடு ஆகிய கழிமுகப் பகுதிகளிலும் இந்த வசதி செய்யப்பட்
டுள்ளது. இந்த வசதியை அதிகரிக்கும் பொருட்டு 1986-87 ஆம்
ஆண்டில் ரூ. 15.00 இலட்சம் செலவில் கூடுதல் படகுகளும்,
காற்றுந்து பாய்மரங்களும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்
டுள்ளது. விளையாட்டுத் துறை இயக்ககத்தின் ஒத்துழைப்புடன்
காற்றுந்து பாய்மரப் படகு விளையாட்டில் பயிற்சி அளிக்கவும்
ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோடைக்கால பருவத்தில்
குறிஞ்சிநகர்களில் படகுப்போட்டிகள் நடத்தப்பட்டு
வருகின்றன.

**மலைவளங்காணல் :**

இன்றைய இளைஞர்களிடையே மலை ஏறுவதிலும், இயற்கை
வளங்காணுவதிலும் ஆர்வம் அதிகரித்துள்ளது. எனவே
சுற்றுலாத் துறை அவ்வப்போது மலையேறுதல், கடற்கரையில்
நடத்தல், சைக்கிள் விடுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு
செய்து வருகிறது. அவற்றில் பள்ளி மற்றும் கல்லூரி மாண
வர்கள் பெருமளவில் கலந்து கொள்கிறார்கள். இந்திய இளைஞர்
இல்ல அமைப்பின் கூட்டு முயற்சியுடன் நீலகிரி (உதக
மண்டலம்) பழனிமலை (கொடைக்கானல்), பாபநாசம்,
குற்றாலம் ஆகிய இடங்களில் மலை ஏறும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு
செய்யப்பட்டன. மலை ஏறும் சாதனங்கள் வாங்கிட ரூ. 5.00
இலட்சம் ஒதுக்கப்பட்டது. பல்வேறு மலைப் பகுதிகளில் மலை
ஏறும் வழித்தடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு அவ்விடங்களில்
அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மலை ஏறும் வழித்
தடங்களில் கூடாரங்கள் அமைப்பதற்குத் தேவையான
சாதனங்கள் வாங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

**பயண எழுத்தாளர்களுக்கு விருந்தோம்பல் :**

இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்தும், அயல்நாடுகளிலிருந்தும்
வரும் பயண எழுத்தாளர்களுக்கு விருந்தோம்பல் திட்டத்தை
தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ்



பயண எழுத்தாளர்கள் தமிழகத்தின் பல்வேறு சுற்றுலா சிறப்புகளை நேரிடையாக சுற்றிப்பார்த்து அவற்றைப் பற்றிய தகவல்களை பல்வேறு மொழிகளில் தினசரிகளுக்கும், சஞ்சிகைகளுக்கும் எழுதும் கட்டுரைகள் வாயிலாகவும், புத்தகங்கள் வாயிலாகவும், பிறர் அறிந்து கொள்ள வகை செய்கின்றனர். ஆண்டுதோறும் இதற்காக ரூ. 25,000 ஒதுக்கப்படுகிறது. இந்த விருந்தோம்பல் திட்டத்தின்கீழ் 1986-87 ஆம் ஆண்டு ஏழு உள்நாட்டு, அயல்நாட்டு பயண எழுத்தாளர்கள் தமிழகத்திற்கு அழைக்கப்பட்டனர். இத்திட்டத்தினால் விளையும் பயனைக் கருதியும் இதற்கு நல்ல வரவேற்பு இருப்பதாலும் இதற்கான நிதி ஒதுக்கீட்டினை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலா மேம்பாடு மற்றும் விளம்பரம் :**

தமிழகத்தின் சுற்றுலா சிறப்புகளை தகுந்த முறையில் வெளிநாட்டாரும், அயல் மாநிலத்தாரும் அறியும் வண்ணம் செய்ய நல்லதொரு விளம்பர மேம்பாட்டுத் திட்டம் அவசியமாகும். சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் எல்லா நாடுகளும் தனிக் கவனம் செலுத்துவதால் இந்த முயற்சியில் போட்டி அதிகரித்துள்ளது. எனவே சுற்றுலா வளர்ச்சி, நமது திறமை மிக்க விற்பனை முறை மற்றும் விளம்பர உத்திகளைப் பொருத்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் மனதை மாற்றி ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு அவர்களை ஈர்ப்பதில் விளம்பர மேம்பாட்டு உத்திகள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்த வகையில் பார்த்தால் நாம் ஓரளவுக்கு நல்ல முறையில் விளம்பர உத்திகளைக் கையாண்டு வருகிறோம் என்று கூறலாம். ஆண்டுதோறும் வழக்கம்போல் வெளியிடும் சுற்றுலா வெளியீடுகள் அல்லாமல் அண்மையில் வேடந்தாங்கல் நீர்ப் பறவை உய்விடம் பற்றிய வண்ணப்புத்தகம் ஒன்று வெளியிடப் பட்டுள்ளது. வேடந்தாங்கலைப் பற்றி இத்தகைய ஆதார பூர்வமான வெளியீடு வெளியிடுவது இதுவே முதலாவதாகும். இதைப்போலவே நீலகிரியில் வாழும் பழங்குடி மக்களான தோடர்கள் பற்றிய சிறப்பு வண்ண வெளியீடு ஒன்றும் வெளியிடப்பட உள்ளது. ‘சுற்றுலாச் சோலைகள்’ என்ற தலைப்பில் வண்ண சுற்றுலாச் செய்திப்படம் ஒன்றும் எடுத்து முடிக்கப் பட்டுள்ளது. இந்தியாவிலும் வெளிநாட்டிலும் பயன்படுத்து

[1987 ஏப்ரல் 30

மூகாம்பிகை சுற்றுலாவில் பெங்களூர்—சரவணபெலகோலா — பேலூர் — அலபெட் — அசன் — சிருங்கேரி — மூகாம்பிகை (கொள்ளூர்) — உடுப்பி — தருமஸ்தலா — மைசூர் ஆகிய இடங்களைப் பார்க்கலாம்.

மந்திராலயம்—கோவா சுற்றுலாவில் அஹோபிலம்—மகாநந்தி—நந்தியால் — ஸ்ரீசைலம் — மந்திராலயம் — ஹம்பி — ஹோஸ்பட் — கோவா — பெங்களூர் ஆகிய இடங்களைப் பார்க்கலாம்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பல்வேறு சுற்றுலாக்களுக்கு மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் முகவர்கள் இருக்கின்றனர். அங்கு வாழும் இந்தியர்கள் குறிப்பாக தென்னிந்தியர்கள் அதிக அளவில் தமிழகம் வந்து செல்ல இது வகை செய்கிறது.

சொகுசுப் பேருந்துகளும், குளிர்சாதனம் பொருத்தப்பட்ட டாட்சன் கார்களும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் உள்ளன. இவை பொதுமக்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன.

இரண்டு சொகுசுப் பேருந்துகளோடு 1972-73 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு இன்று 24 சொகுசுப் பேருந்துகளைப் பெற்றுள்ளது.

போக்குவரத்துப் பிரிவின் மூலம் 1972-73 ஆம் ஆண்டு கிடைத்த வருமானம் ரூ. 1.75 இலட்சம் ஆகும். இது 1986--87 ஆம் ஆண்டு ரூ. 1.00 கோடி ஆக உயர்ந்துள்ளது. மேலும், சொகுசுப் பேருந்துகளும், கார்களும் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி:**

தமிழகத்திற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் காலத்தை ஒட்டியும், பொங்கல் விழாவினையொட்டியும் 1974 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை



136529

1987 ஏப்ரல் 30]

நடத்தி வருகிறது. தீவுத் திடலில் ஒரு பகுதியான போர் நினைவுச் சின்னம் அருகில் உள்ள பொருட்காட்சித் திடலில் இப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது.

மாநில அரசுத் துறைகள், மாநில பொது நிறுவனங்கள், இந்திய அரசுத் துறைகள் மற்றும் பொது நிறுவனங்கள், பிற மாநிலங்கள், தனியார்த் துறை நிறுவனங்கள் இப்பொருட்காட்சியில் கலந்து கொள்கின்றன.

இந்தியாவிலேயே 100 நாட்களுக்கு மேல் நடத்தப்படும் பொருட்காட்சி இது ஒன்றுதான். தில்லியில் இந்தியப் பொருட்காட்சிக் குழுமம் நடத்தும் சர்வதேசப் பொருட்காட்சிகளுக்கு அடுத்தபடியாக இதுவே நாட்டில் நடத்தப்படும் மிகப் பெரிய பொருட்காட்சி ஆகும்.

குழந்தைகள் உல்லாச உலகம், தோட்டக்கலைக் காட்சி, உணவுக் காட்சி, நாய்க் காட்சி, புத்தகக் காட்சி மற்றும் பல்வேறு மாநில கலை நிகழ்ச்சிகள் இப்பொருட்காட்சியின் சிறப்பு அம்சங்களாகும். இவை தவிர தினசரி நாடகம், நாட்டியம், கிராமியக் கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தப்படுகின்றன: திரைப்படங்களும் திரையிடப்படுகின்றன.

**நிரந்தரப் பொருட்காட்சி வளாகம்:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னையில் நிறுவ இருக்கும் நிரந்தரப் பொருட்காட்சி வளாகத்திற்கு 20—4—1987 அன்று அடிக்கல் நாட்டினார்கள். இதற்கான பணிகள் துவங்கப்பட்டு விட்டன.

**பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பணியாளர்களுக்கு 1—10—1985 முதல் அரசு நிர்ணயித்துள்ள சம்பளம் மற்றும் அகவிலைப்படி கொடுக்கப்படுகிறது. இதனால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ. 20.00 இலட்சம் கூடுதல் செலவாகும்.